

# விவேகானந்தர்

ரோமான் ரோலாண்ட்







# விவேகானந்தர்

# விவேகானந்தர்

ரோமான் ரோலாண்ட்

[கல்கத்தா அதத்வை ஆசிரமம் பதிப்பித்த இதே ஆசிரியரின் 'ராமகிருஷ்ணர் வரலாறு', 'விவேகானந்தர் வரலாறு' என்ற நூல்களிலிருந்து திரட்டிய பகுதிகள்.]



தமிழாக்கம்

ஏ. ஜி. வேங்கடாச்சாரி



நூற்றாண்டு விழா வெளியீடு

(இரண்டாம் பதிப்பு)

சாகித்திய அக்காதெமி

*Vivekanandar* (The life of Vivekananda): Tamil translation by A.G. Venkatachary of an edited version prepared from 'Life of Vivekananda' and 'Life of Ramakrishna'by Romain Rolland. Published as a Centenary Edition in Indian languages by Sahitya Akademi, New Delhi with kind permission of the Advaita Ashrama, Mayavati. Reprints 1963, 1986, 2001 Rs.60


முதல் வெளியீடு: 1963
இரண்டாம் பதிப்பு 1986
மூன்றாம் பதிப்பு 2001

ISBN 81-260-1247-1

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம்:
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை 600 113.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053.

விலை: ரூ. 60

அச்சகம்: சென்னை ஆர்ட் பிரண்டர்ஸ் சென்னை

73-3

# பொருளடக்கம்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிறபம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம், புது தில்லி.)

# எனது கீழ்த்திசை நண்பர்களுக்கு

நான் செய்திருக்கக்கூடிய தவறுகளைப் பெரியமனத்துடன் பொறுத்தருளுமாறு எனது இந்திய வாசகர்களை இறைஞ்சுகின்றேன். நான் எவ்வளவோ வேகத்துடன் இப்பணியில் இறங்கினேன். எனினும், மேலை நாட்டினரான ஒருவர், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகச் சிந்தனை செய்து அநுபவம் பெற்ற ஆசிய மக்களைப் பிறருக்கு விளக்கிக் கூறுவது அநேகமாக அசாத்தியமானது. அத்தகைய விளக்கம் தவறுகள் கூடியதாகத்தான் இருக்கமுடியும். வாழ்க்கையின் எல்லா வடிவங்களிலும் புகுந்து பார்ப்பது என்ற தூய முயற்சியில் என்னை உந்தியது உண்மையுணர்வு என்று மட்டும் நான் உறுதி கூற முடியும்.

மேலைநாட்டினன் என்ற வகையில், சுதந்தரமாகச் சீர் தூக்கிப் பார்த்து முடிவு கூறும் தன்மையை இம்மியளவும் நான் கைவிடவில்லை என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். நான் எல்லோரது மத நம்பிக்கைகளையும் மதித்து நடப்பவன். பெரும்பாலும் அவற்றை நேசிப்பவன். ஆனல் ஒருக்காலும் அது என்னுடைய நம்பிக்கையாகிவிடாது. ராமகிருஷ்ணர் என் இதயத்திற்கு மிக நெருங்கியவர். அதற்குக் காரணம் சீடர்கள் கண்டறிந்தபடி அவர் அவதார புருஷராக இருந்தது அல்ல. நான் அவரை மனிதனுகக் காண்கின்றேன். தெய்வம் ஆன்மாவுள் உறைகின்றது. ஆன்மா அனைத்திலும் வாழ்கிறது. அந்த ஆன்மாவே பிரம்மம் என்பதை ஒப்புக்கொள்வதற்காக ஆண்டவனை, விசேஷ தகுதி பெற்ற ஒருவனிடம் வதிகின்றனனுக முடிவைக்கும் அவசியம் வேதாந்திகளுக்கும் இல்லை, எனக்கும் இல்லை. அப்படிச் செய்வது ஆன்மிக தேசியம் என்ற ஒருவகைத் தோற்றமாகும். ஆனல் அதை நான் ஏற்பதற்கு இல்லை. உயிர் வாழும் அனைத்திலும் நான் கடவுளைக் காண்கின்றேன். மிகச் சிறிய அணுவிலும், மிகப் பிரம்மாண்டமான பிரபஞ்சத் தோற்றத்திலும் ஒருசேர அவனைக் காண்கின்றேன். அடிப்படையில் வேறுபாடு ஒன்றும் இல்லை. சக்தி எங்கும் பரந்து காணப்படுவது, முடிவில்லாதது. அணுவில் மறைந்து கிடக்கும் சக்தி உலகம் அனைத்தையுமே தகர்த்து எறியக் கூடியது என்பதை உணர வேண்டும். மனச்சாட்சியின் இதய கேந்திரத்தில், திவ்யபாவம் என்ற பிரக்ஞையில், 'அயான்'

என்ற சக்தியின் பரிணமத்தில் அது திரண்டு காணப் பெறுகின்றது. ஒவ்வொரு பனித்துளியிலும் சூரியன் ஒளிர்கின்ருன். மனிதர்களில் மிகப் பெரியவர்கள் அதேமாதிரி. ஆனுல் இன்னும் தெளிவாகச் சூரியனது பிரதிபிம்பங்களாய் ஜொலிக்கின்றனர்.

ஆகையால்தான் ஆன்மாவை ஜயித்த வீரர்களுக்கும் அவர்களைப் போல் பலர் அறியாத ஆயிரமாயிரம் மற்றவர்களுக்குமிடையே இருந்துவரும் புனிதமான வேறுபாடுகளை என்னுல் கண்டறிய முடியவில்லை. அவை பக்தனுக்கு மகிழ்ச்சி தருபவை என்பதை அறிவேன். மகத்தான ஆன்மிக சைன்யம், காலப் போக்கிற்கு இசைவாக, மேலேறிக்கொண்டே போகின்றது. அந்தப் படையில் கிறிஸ்துவையும், புத்தரையும், ராமகிருஷ்ணரையும், விவேகானந்தரையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க நான் முற்படுவது இல்லை.

வில்லிநாவ்,
கிறிஸ்துமஸ் 1928

ரோமான் ரோலாண்ட்

# முகவுரை

ஸ்ரீமகிருஷ்ணரது ஆன்மிக மரபைத் தமதாக்கிக்கொண்டு, அவரது சிந்தனையின் வித்தை உலகெங்கும் ஊன்றிய அவரது மகத்தான சீடர் தோற்றத்திலும், நெறிமுறையிலும் அவருக்கு நேரெதிரிடையான தன்மை கொண்டவர்.

அருளும் அன்பும் ஒளியும் சேர்ந்து உருவான குருநாதர் தமது வாழ்நாள் முழுவதையும் அன்னையின் சொரூபமாகிய தெய்வமாதின் அடிபணிந்து கழித்தவர். அந்த அன்னையே அவரது உயிருள்ள தெய்வமாகத் திகழ்ந்தார். இளம் பருவம் முதல் அவருக்கே தம்மை அவர் அர்ப்பணித்துக்கொண்டார். தமது சுயநிலையைப் பற்றிய பிரக்ஞை வருவதற்கு முன்னமேயே தாம் அவளை நேசித்ததை அவர் உணர்ந்தறிந்தார். மீண்டும் அவளுடன் ஒன்றியிருப்பதற்காகப் பலப்பல ஆண்டுகள் அவர் சித்திரவதைக்குள்ளானார். ஆனால், அது பழங்கால வீர மரபையொட்டிய செயலாகவே இருந்தது. அவரது அன்பு பரிசுத்தமானது, சமயச் சிறப்புக் கொண்டது. அதற்கேற்ற தகுதி அவருக்கு ஏற்பட வேண்டுமென்பதுதான் இந்தச் சோதனைகளை அவர் ஏற்றதன் ஒரே நோக்கம்.

ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கும் காட்டுத் தடங்கள் போல அவளே அந்த அனுபவங்களின் இறுதி லட்சியமாகத் திகழ்ந்தாள். அவளே பல வடிவங்கள் கொண்ட ஆண்டவனாக, ஆயிரம் திருமுகங்களிடையே ஜொலித்தாள். அவளை அவர் அடைந்த காலையில், அவளிடம் மற்ற எல்லா முகங்களும் ஒருசேர இருப்பதைக் கண்டறிந்தார். அவளிடமே அவற்றையெல்லாம் கண்டு நேசித்தார். அவளுடன் கூட உலகம் அனைத்தையும் அவர் தழுவிக் கொண்டார். இந்தப் பரமானந்த தெய்விக முழுமையில், தமது வாழ்நாளில் எஞ்சியிருந்த பகுதியை அவர் கழித்தார். அவரது இந்த ஆனந்தானுபவத்தைப் 'பீதோவன்', 'ஷில்லர்' ஆகியோர் மேல்நாட்டவருக்காகப் பாட்டாக இசைத்துள்ளனர்.

துன்ப அனுபவத்தை நிறைய சுவைத்த அவ்வீரர்களைவிட, அவரது அனுபவம் இன்னும் அதிக முழுமை கொண்டது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையிலுள்ள மேகக் கூட்டம் என்ற குழப்பத்தை ஊடுருவிக்கொண்டு வெளிப் போந்த

ஒரு நீலநிறக் கிரணமாகவே பீதோவனுக்கு அந்த ஆனந்தம் புலப்பட்டது. ஆனால் இந்திய அன்னப் பறவை என்று மதிக்கப் பெறும் பரமஹம்சர் தமது விரிவான வெண் சிறகுகளை, முடிவே இல்லாத நீலவண்ண ஏரியில் கிடத்தி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். கொந்தளிப்பு மயமான காலம் ஒரு திரைச்சிலை போல் விலகிக் கிடந்தது.

அவரைப் பின்பற்றிச் சிறப்பெய்தும் வாய்ப்பு, பெருமை மிக்க அவரது சீடர்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் எல்லோரிலும் மிகப் பெரியவர், மிக விரிவான இறக்கைகளைக் கொண்ட ஆன்மா விவேகானந்தர். அவரும் புயற்காற்றுச் சூறைகளுடே திடீர் திடீரெனப் பாய்ந்து சென்று தான் உயர் நிலைகளை எட்டிப் பிடித்தார். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பமும் மீண்டும் மீண்டும் எனக்குப் பீதோவனை நினைவூட்டுகிறது. ஆழ்ந்த அமைதி காணப்பெற்ற சமயங்களிலேகூட, அவரது கப்பல் காற்றடித்த திசையில் எல்லாம் சஞ்சரித்தது. பட்டினியால் மெலிந்த கொக்குக் கூட்டம் பறப்பதுபோல இவ்வுலகத்தின் துயரக் குரல்கள், பன்னெடுங்காலத்துக் கஷ்டங்கள் அவரைச் சுற்றிச் சிறகடித்துச் சென்றன. சிங்கத்தையொத்த அவரது இதயத்தினுள் வலிமையின் உணர்வு மிகுதியாகக் கிளர்ந்தெழுந்தது. பலவீனம் எப்போதுமே அதில் இடம் பெற்றது இல்லை. அவர் சக்தியே திருவுருவாக அமைந்தவர். 'செயல்படு' என்பதே மக்களுக்கு அவர் விடுத்த செய்தி. பீதோவனைப் போலவே அவரும் எல்லா நற்குணங்களுக்கும் செயலாற்றுதலே ஆணிவேர் என்று மதித்தவர். செயலற்றுச் சோம்பிக் கிடப்பதை அவர் கட்டோடு வெறுத்தார். கீழ்நாடுகளில் மக்கள் மாட்டைப் போன்ற பொறுமையுடன் ஜீவயாத்திரையின் பளுவைத் தாங்கிக் குன்றிப் போனவர்கள். இதை அவர் அறிவார். எனினும், சோம்பலிடமுள்ள வெறுப்பின் காரணமாக, "எல்லாவற்றுக்கும் மேலாகத் தேகதிடத்துடன் விளங்குங்கள். ஆண்மையுடன் திகழுங்கள். ஒருவன் ஆண்மையுடன் பலவானாக இருக்கும் வரையில், போக்கிரியாயினும் அவனிடம் நான் மதிப்பு வைப்பேன். ஒரு நாள் இல்லாவிடினும் ஒரு நாள், அவன் தனது போக்கிரித்தனத்தை உதறியெறியும்படி அவனது பலமே செயலாற்றும். சுயநலத்திற்காகப் பணியாற்றும் தன்மை அனைத்தையும் விட்டொழிக்கும்படி அந்தப் பலம் தூண்டும்; இறுதியாக உண்மையில் அவன் ஒன்றி நிற்கும்படியும் செய்துவிடும்" என்று கூறியுள்ளார்.

ராமகிருஷ்ணரது உடல் எடை குறைவுள்ளது; மிக மென்மை

யானது. ஆனால் உறுதியானது. விவேகானந்தரது தோற்றம் அதற்கு நேரெதிரிடையாக இருந்தது. அவர் உயரமானவர் (5 அடி 8½ அங்குலம்); திண்தோள் படைத்தவர்; அகன்ற மார்பகம், பருமன், சற்றுக் கனத்த உடல், கைகள் கட்டுமஸ்தானவை எல்லாவித விளையாட்டுக்களிலும் பயிற்சி பெற்றுச் சேகேறியவர். வெண்ணிறமஞ்சள் மேனியர். தசைப்பற்றுள்ள உருண்டை முகம்; அகன்ற நெற்றி; உறுதியான மோவாய்; மிகக் கம்பீரமான நயனங்கள்; பெரிய, கரிய எடுப்பான கண்கள்; அடர்த்தியான கண்ணிமைகள். பேரிலக்கியங்களில் தாமரை இதழுடன் உவமைகூறுகிற நேத்திரங்களை நினைவூட்டும் வடிவம். அவரது அற்புதப் பார்வையினின்று தப்பிவிட முடியாது. அவரது கவர்ச்சி எதிர்த்து நிற்க முடியாதது. எல்லாவற்றையும் தன்னுள் ஈர்க்கக் கூடியது. ஹாஸ்ய அதிர்வேட்டுகள், தூஷணை நிறைந்த வாசாலகம், அன்பின் சுடரொளி, ஆனந்தானுபவத்தில் மெய்ம் மறந்த நிலை, உணர்வின் கடைக் கோடிகளையும் துணிவுடன் ஆழ்ந்து பார்க்கும் தன்மை, கோபக்கனலால் தகிக்கக்கூடிய சக்தி—எல்லாமே அவரிடம் குடிகொண்டிருந்தன. அவரது முதன்மையான குணவிசேஷம் அவரது ராஜகம்பீரந்தான். அவர் பிறப்பிலேயே மன்னர். இந்தியாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி, அவரை அணுகிய எவராலும் அவரது மாட்சிமைக்கு வணக்கம் செலுத்தாமல் இருக்க முடிந்ததில்லை.

1893 செப்டம்பரில் சிகாகோவில் சர்வ மத விவேகானந்தர் சபையைக் கார்டினல் கிப்பன்ஸ் ஆரம்பித்து வைத்தார். அதன் துவக்கக் கூட்டத்தில் விவரம் தெரியாத இந்த முப்பது வயது இளைஞர் தோன்றியபோது அவரது மாட்சிமையின் முன் மற்றச் சோதர மெம்பர்கள் எல்லோரும் மறைந்துபோய் விட்டனர். அவரது சக்தி, சௌந்தரியம், பண்பு, அந்தஸ்தான தோற்றம், கருநிறக் கண்களின் பிரகாசம், அவரது எடுப்பான ஆகிருதி ஆகியவையும், அவர் பேசத் தொடங்கிய கணத்திலிருந்தே அவரது கம்பீரமான குரலின் அற்புத இசையும் அங்கே குழுமியிருந்த அமெரிக்க, ஆங்கிலோ—சாக்ஸன் மக்களை அவருக்கு அடிமைகளாக்கிவிட்டன. அவர் வெள்ளையர் அல்லாதவர் என்ற காரணத்தால் துவேஷ புத்தியுடன் கூட வந்தவர்களுக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டது. இந்தியாவின் இந்த க்ஷத்திரிய மார்க்கதரிசியின் சிந்தனை அமெரிக்கர் மனசில் ஆழப் பதிந்தது.

விவேகானந்தர் இரண்டாவதுஸ்தானத்தை வகிப்பது அசாத்தியம். அதைக் கற்பனையில்கூடக் காண முடியாது. சென்ற விடமெல்லாம் அவருக்கே முதல் சிறப்பு. அவரது குருநாதர்

ராமகிருஷ்ணரே, தமக்குப் புலப்பட்ட ஓர் அகத் தோற்றத்தில் தமது சீடரை ஒரு பெரிய ரிஷியாகவும், அவரது அருகாமையில் தம்மை ஒரு குழந்தையாகவுமே கண்டார். இதை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அத்தகைய புகழ்ச்சியை ஏற்றுக்கொள்ள விவேகானந்தர் மறுத்துப் பார்த்தது எல்லாம் வீணாயிற்று. அவர் தம்மை மிகக் கடுமையான சோதனைகளுக்குள்ளாக்கிக் கொண்டார். தம்மைத் தாமே மிகவும் தாழ்த்திக்கொண்டு மதிப்புப் போட்டார். ஆனால் கண்டவுடனேயே, 'இதோ தலைவர் வருகிறார்' என்று எல்லோரும் உணர்ந்தறியும்படியாக அவர் வாழ்ந்தார். தெய்வ அருள் ஒளி வீசுபவர். கட்டளைகளைப் பிறப்பிப்பதற் கென்று படைக்கப்பட்ட மானிடர். இமாலயத்தில் அவர் சென்று கொண்டிருந்தபோது, அவர் யார் எனத் தெரியாத ஒரு யாத்திரிகர் அவரைக் கண்டவுடன் வியந்துபோய், 'சிவபெருமான்' என்று உரக்கக் கூவினார்.

குலதெய்வமானது தன் திருநாமத்தை அவரது நெற்றியி லேயே வரைந்துவிட்டது போன்ற ஒரு தோற்றம். ஆனால் அவரது ஆன்மா நாற்றிசைக் காற்றுகளால் அலைக்கழிக்கப் பட்டதால், அதே நெற்றி கரடுமுரடான பாறையாகக் காட்சி யளித்தது. ராமகிருஷ்ணர் எப்போதுமே சாந்தத்துடன் முறு வலிப்பார். ஆனால் அந்த அமைதியுடன், அந்தத் தெளிவான சிந்தனை விலாசத்துடன் விவேகானந்தர் தென்பட்டது வெகு அபூர்வமாகத்தான்.

அவரது உடல் அமானுஷ்ய சக்தி வாய்ந்தது. அதுவும், அவரது மிக விரிவான மூளையும், புயலால் அலைக்கழிக்கப் பட்ட அவரது ஆன்மாவின் அதிர்ச்சிகள் காரணமாக, ஒன்றோ டொன்று போரிடும் நிலைக்களன்களாகப் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டன. நிகழ்காலமும் கடந்த காலமும், கீழ்த்திசையும் மேல்திசையும், கனவும் செயலும், அதில் ஏற்றம் காண்பதற்குப் போரிட்ட வண்ணம் இருந்தன. தம் தன்மை யின் ஒரு பகுதியை அல்லது சத்தியத்தின் ஓர் அம்சத்தைத் துறந்துவிடுவதன் மூலம் தம்மால் நிறைய சாதிக்க முடியும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அதன் மூலம் மனப்பக்குவம் ஏற்படாது என்பதையும் அவர் அறிவார். அவரிடம் உள்ளூற ஒன்றையொன்று எதிர்த்து வந்த சக்திகள் பல வருஷப் போராட்டத்திற்குப் பிறகுதான் ஒரு சமநிலையில் இணைந்தன. அந்த முயற்சியில் அவரது தைரியமும், அவரது உயிரும் விரயமாயின. வாழ்க்கை, போராட்டம் ஆகிய இரண்டுமே அவருக்கு ஒரே பொருள் படைத்தவை. அவரது

முடிவுக் காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. ராமகிருஷ்ணர் காலமான பிறகு, பதினாறு வருஷம் கழிந்து அவரது மகத்தான சீடர் மறைந்தார்......அந்த ஆண்டுகள் கொந்தளிப் பானவை......கட்டுமஸ்தான அவரது உடல் சிதைமீது கிடத்தப் பட்டபோது, அவருக்கு நாற்பது வயது நிரம்பவில்லை.

அந்தச் சிதையிலிட்ட தீ இன்றும் தூங்காவிளக்காக ஒளி வீசுகிறது. 'பீனிக்ஸ்' என்ற பழங்காலப் பறவை தன்னைச் சுட்டெரித்த சாம்பலினின்று இளமைப் பொலிவுடன் வெளிப் போந்து சிறகடித்துச் சென்றதுபோல விவேகானந்தரது சாம்பலி னின்று புதிய பிரக்ஞையுடன் கூடிய இந்தியா கிளர்ந்தெழுந் துள்ளது. தனது ஒருமைப்பாட்டிலும், தனது மெய்ஞ்ஞான போதனையிலும் முழு நம்பிக்கை கொண்ட இந்த அற்புதப் பறவை வேதகாலத்திலிருந்து இந்தத் தொன்மையான பாரத ஜாதி கண்டு வந்த ஆன்மிகக் கனவுகளை நினைந்து ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தது. அந்த மகத்தான மெய்ஞ்ஞானத்தை மனிதவர்க்கத்தின் பிற பகுதிகளுக்கு எடுத்துரைத்த சேவை தான் அதன் மாபெரும் சாதனை.

அத்தியாயம் 1

# ஸ்ரீ ராமகிருஷ்ணர்

நெல் வயல்கள், தடாகங்கள், தென்னந் தோப்புகள் ஆகிய வற்றிடையே வங்காளத்தில் பரவலாகக் காணப்படும் பல கிராமங்களில் கமார்புகூர் ஒன்று. அதில் சட்டோபாத்தியாயா என்ற பெயருடன் பழைய வைதிக வழியினரான ஒரு பிராம் மணத் தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பரம ஏழைகள்; ஆனால் தெய்வபக்தி மிகுந்தவர்கள். அருங் குணங்களே சேர்ந்து உருவான இராமபிரானது வீரதீரப்பராக்கிரமங்களைப் பக்தியுடன் போற்றும் வழியினர். அடுத்த வீட்டில் வசித்து வந்த பெரிய நிலச்சுவானுக்கு அனுகூலமாகப் பொய்ச் சாட்சியம் கொடுக்க அவரது தந்தை மறுக்கவே, அவரது எல்லா உடைமைகளும் பறிபோய்விட்டன. பழங்கால மனிதர்களைப் போல அவர் அவ்வளவு நேர்மையாளர். கடவுளது ஆக்ஞை பிறந்தது. வயது அறுபது ஆகியும் பொருட்படுத்தாது கயைக்கு யாத்திரை சென் றார். அங்கு மகாவிஷ்ணுவின் பாதம் பதிந்து இலங்குகின்றது. கடவுள் அன்றிரவு அவர்முன் தோன்றி, 'உலகின் விமோசனத் திற்காக நான் மீண்டும் பிறக்க இருக்கிறேன்' என்று கூறினார்.

அதே சமயத்தில் கமார்புகூரில் அவரது மனைவி சந்திரமணி தன்னுள் தெய்வம் உறைவதாகக் கனவு கண்டாள். அவளது குடிசைக்கு எதிரேயிருந்த இல்லத்தில் சிவ விக்ரகம் உயிர்த் துடிப்புடன் அவளது கண்களுக்குப் புலப்பட்டது. அதிலிருந்து வந்த ஒரு கிரணம் அவளை ஊடுருவியது. அந்த உணர்ச்சிப் புயலில் சந்திரமணி கீழே விழுந்து மயக்கமானாள். சுயநினைவு வந்தபோது தான் கருவுற்றிருப்பதை உணர்ந்தாள். கயையி லிருந்து திரும்பிய கணவர் அவளது தோற்றத்தில் மாறுதலைக் கண்டார். தெய்வக் குரல் அவள் காதில் ஒலித்தது. ஆண்டவன் அவளிடம் கர்ப்பவாசம் செய்தான்.

பின்னர் ராமகிருஷ்ணர் என்று புகழ் எய்திய குழந்தை 1836 பிப்ரவரி 18-ஆம் தேதி பிறந்தது. ஆனால் சிறுவயதில் அவருக்கு இட்ட பெயர் கதாதரன் என்பது. அப் பெயரில் இன்பமும் மணியின் கிண்கிணியும் சேர்ந்து ஒலித்தன. சிறுவன் ஓடியாடி, விஷமங்கள் பல புரிந்து எல்லோரையும் ஈர்க்கும் கவர்ச்சி பெற்றிருந்தான். பெண்மைக்குரிய ஒரு மென்மை

தோற்றத்தில் இருந்தது. அது வாழ்நாள் நெடுக ராமகிருஷ்ணரை விட்டு அகலவில்லை. சிரித்து விளையாடிய அந்தச் சின்னஞ் சிறு உடலில் முடிவற்ற விண்வெளிகள், அளந்தறிய இயலாத ஆழம் மறைந்திருந்தன என்பதை அப்போது எவராலும் கற்பனைகூடச் செய்திருக்க முடியாது. குழந்தைக்கோ ஒன்றுமே தெரியாது. ஆறு வயதானபொழுது இவை அக்குழந்தைக்குத் தெரியலாயின. 1842 ஜூன் அல்லது ஜூலை—தனது துணியில் ஒரு மடிப்பில் கொஞ்சம் பொரியை உணவாக வைத்துக் கொண்டு சிறுவன் ஒரு நாள் போய்க்கொண்டிருந்தான். வயல் வெளிகளை நோக்கி நடந்தான்.

''நெல் வயல்களிடையே குறுகிய ஒற்றையடிப் பாதையில் சென்றேன். பொரியைத் தின்றவண்ணம் வானவெளியை நோக்கினேன். பெரியதோர் கருமேகம் துரிதமாக வியாபித்து வானம் முழுவதையும் கவ்விக் கொண்டது. அந்த மேகத்தின் ஒரு விளிம்பில் பனிபோல் தூய வெண்மையான கொக்குக் கூட்டம் வந்து என் தலைக்கு மேலே பறந்து சென்றது. மேகத்தின் கருமைக்கும் அவற்றின் வெண்மைக்கும் இருந்த வேறுபாடு மிக ரம்மியமாக இருந்தது. எனது ஆன்மா எங்கேயோ சஞ்சரிக்கலாயிற்று. நான் நினைவிழந்து பூமியில் கிடந்தேன். பொரி கீழே விழுந்து சிதறிவிட்டது. யாரோ ஒருவர் என்னை அணைத்து எடுத்துத் தம் கரங்களில் ஏந்தி வீடு சேர்த்தார். மகிழ்ச்சியும், உணர்ச்சிப் பெருக்கும் மேலிட்டன. முதல் தடவையாக என் வாழ்க்கையில் ஆனந்தபரவசம் அடைந்தேன்'' என்று ராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

அது முதல் இத்தகைய ஆனந்த அனுபவங்கள் அடிக்கடி ஏற்பட்டன. ஐரோப்பாவில் இவ்வாறு நிகழ்ந்திருந்தால் 'இது தீர்ந்துபோன விவகாரம்' என்று முடிவு கட்டிக் குழந்தையைக் கொண்டுபோய்ப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்து, அன்றுடம் உளவியல் சிகிச்சை அளித்திருப்பார்கள். நாளடைவில் இந்த ஆனந்த ஜ்வாலை தணிந்துபோய் அவிக்கப்பட்டு விடும். அற்புத விளக்கு அற்றுப் போய்விடும். ''மெழுகு வர்த்தி மரித்துவிட்டது.'' சில சமயம் குழந்தையும் மாண்டு போகும். அற்புதத் தீப ஒளிகள் இடையறுது ஊர்வலமாகப் பல நூற்றுண்டுகளில் சுடர்விட்டு எரிந்துவந்துள்ள இந்தியாவில் கூடக் கவலைப்பட்டார்கள். அவரது தாயும் தந்தையும் தெய்வானுபவம் உள்ளவர்கள்தாம். எனினும், குழந்தையின் நிலைமை அவர்களுக்கு அச்சத்தை அளித்தது. இந்த நெருக்கடிகள் இல்லாதபொழுது அவர் சிறந்த

ஆரோக்கியம் உள்ளவராகவே காணப்பட்டார். பல அருட்க்ளைப் பெற்றிருந்த போதிலும், அவரது தோற்றத்தில் அசாதாரணமான அம்சம் எதுவும் காணப் பெறவில்லை. திறம் படைத்த அவருடைய கைகள் களிமண்ணில் அற்புதமாகக் கடவுளரைப்படைக்கும். வீரதீரக்கதைகள் மனத்தில்மேலிடும், ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றிய சங்கீர்த்தனங்களைத் தெய்வானுபவத்துடன் பாடினார். சில சமயம் கற்றறிந்தவர்களின் விவாதங்களில் கலந்துகொள்வார். அவரது வயதை மிஞ்சிய மதிநுட்பத்தைக் கண்டு எல்லோரும் வியப்பர். யூத டாக்டர்களை இயேசுமகான் பிரமிக்கவைத்தது போன்றது இந்த அனுபவம்.

ராமகிருஷ்ணர் ஏழாவது வயதில் தந்தையை இழந்தார். வாழ்க்கை வசதி வேறு இல்லை. எனவே, அடுத்த சில ஆண்டுகள் குடும்பம் பரிதவித்தது. ராமகுமார் என்ற மூத்த மகன் கல்கத்தாவுக்குச்சென்று, அங்கே பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்தினார். தம் தம்பியை 1852-இல் கல்கத்தாவுக்கு அழைத்தார். ஆனால் ஆன்மிக வாழ்க்கையில் மனத்தைப் பறிகொடுத்து விட்ட தம்பி கட்டுக் கடங்கவில்லை. கல்விபயில மறுத்தார்.

ராணி ராஸமணி ஒரு பெரிய பணக்காரி. கீழ் ஜாதியைச் சேர்ந்தவர். கல்கத்தாவிலிருந்து நான்கு மைல் தொலைவில், கங்கையின்கீழ்க்கரையில்தக்ஷிணேசுவரத்தில்தெய்விகஅன்னையாகிய காளிக்கு ஒரு கோயிலை அவர் அமைத்திருந்தார். அதில் பூஜை செய்ய ஒரு பிராமணர் கிடைப்பது அவருக்கு மிகச் சிரமமாக இருந்தது. இந்தியா சமயப்பற்று நிறைந்தது. பிக்ஷுக்கள், சாதுக்கள், ரிஷிகள் மலிந்தது. ஆனால் சம்பளம் கொடுத்துப் பூசாரியை நியமிக்கும் முறைக்கு அது மதிப்புத் தந்ததே இல்லை. ஐரோப்பாவில் போல் இந்தியாவில் கடவுளின் சரீரமும், இதயமும் அவரது அன்றாட தியாகசீலத்தின் உறைவிடங்கள் என்று கருதப்படுவதில்லை. சுவர்க்கத்தை அடையத் துணை புரிகிறது என்ற நம்பிக்கையில் பணக்காரர்கள் ஆலயங்களைத் தங்கள் புகழ்ச் சின்னங்களாக அமைத்தனர். உண்மையான சமயம் அவரவரது சொந்த விவகாரம். அதன் ஆலயம் ஒவ்வொருவரிடமும் குடிகொண்டிருக்கும் தனிப்பட்ட ஜீவாத்மா. இந்த ஆலயத்தைத் தோற்றுவித்தவர் நான்காம் வருணத்தினர். எனவே, அதில் பணிபுரிய ஒரு பிராமணன் முன்வருவது தகாது என்று கருதப்பட்டது. ராமகுமார் 1855-இல் வேறு வழியில்லாமல் இப் பொறுப்பை ஏற்பது என்று முடிவு செய்துவிட்டார். ஆனால் தம்பி ஜாதீய விஷயங்களில் மிகக் கண்டிப்பானவர். ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் அவரை இசைய வைக்க முடிந்தது.

ஆனால் சிறுகச் சிறுக அவரது வெறுப்பு அகன்றது. அடுத்த வருடம் அண்ணன் காலமானபொழுது ராமகிருஷ்ணர் அப் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்தார்.

காளி கோயிலின் இளம் பூசாரிக்கு வயது இருபது. தாம் சேவை செய்ய முன்வந்த தேவி எவ்வளவு பயங்கரமானவள் என்பதை அவர் அறிய மாட்டார். புலி தான் இரையாக்க விரும் பும் மிருகத்தை முதலில் கவர்ச்சி செய்து செயலற்றுப் போகச் செய்யும். அதைப் போலவே பத்து வருஷ காலம் அவள் தனது ஜொலிக்கும் கண்களால் அவரை மயக்கி, விளையாடி, போஷித் தாள். ஆலயத்தில் அவளுடன் அவர் தனிமையில் ஆழ்ந்தார். ஆனால் ஒரு புயற்காற்றுச் சூறையின் மத்தியில் வாழ்கின்ற அனுபவமே அவருக்கு ஏற்பட்டது. ஆலயக் கதவுகள் வழியாக ஜனத்திரளின் வெப்பம் நிறைந்த மூச்சு, துறவிகள், சாதுக்கள், பக்கீர்கள் — ஹிந்துக்கள், முஸல்மான்கள், தெய்விகப் பித்தர் கள் நிறைந்த யாத்திரிகர்களின் கூட்டம் அங்கு வந்தவண்ணம் இருந்தது.

"கடவுளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று பின் ஒரு சமயம் ராமகிருஷ்ணரை விவேகானந்தர் கேட்டார்.

"உன்னைக் காண்பது போலவே, ஆனால் இன்னும் அதிக தீட்சண்யத்துடன் அவரை நான் காண்கிறேன்" என்று பதிலளித் தார் ராமகிருஷ்ணர். கடவுளை அவர் கண்டது சூட்சும நிலையி லுள்ள பரதத்துவமாக அல்ல, நேரிடையான ஸ்தூல நிலையில் தான் என்பது அதன் பொருள். ஆனால் சூட்சும நிலையில் தரிசிக்கும் பழக்கமும் அவருக்கு உண்டு.

நாம் கூறுபவை நிகழ்ந்தது 1858-இல். அப்போது ராமகிருஷ் ணர் ஞானசித்தியடைய வில்லை. அவர் செல்ல வேண்டிய மார்க்கம் மிக நீண்டதாகவே இருந்தது. குருடன் கண்களை மூடிக்கொண்டு, வழிகாட்ட யாருமின்றிச் செல்வதுபோல், தெய் வத்தைநாடி, திக்குத் தெரியாமல், ராமகிருஷ்ணர் இக் காலத்தில் போய்க் கொண்டிருந்தார். அவர் சென்றது நேர் வழியில் அல்ல. முட்புதர்களை, வேலிகளைப் பொருட்படுத்தாது சென்று குழிகளில் விழுவார். ஆனால் அவரது முன்னேற்றம் இடையறாது நீடித்தது. விழும்போதெல்லாம் தாமே எழுந்து நின்று தொடர்ந்து தமது யாத்திரையை மேற்கொள்வார்.

அவர் கர்வம் பிடித்தவர் அல்லது பிடிவாதக்காரர் என்று நினைக்காதீர்கள். அவர் மிக எளிமையான வாழ்க்கை வழியினர்.

அவர் நோய்வாய்ப் பட்டிருந்தார் என்று சொன்னீர்களானால், என்ன மருந்து என்று கேட்பார். எதைச் சொன்னாலும் அதைச் செய்து பார்க்க மறுத்திருக்கமாட்டார். சிலகாலம் சொந்த ஊராகிய கமார்புகூருக்கு அவரை அனுப்பிவைத்தார்கள். தெய்வப்பித்து என்ற நோயைத் திருமணம் தீர்த்துவைக்கும் என்ற நம்பிக்கையில்; விவாகம் செய்துவைக்கத் தாயார் விரும்பினார். அவர் ஆட்சேபிக்கவில்லை. தமக்கு அந்த எண்ணம் மகிழ்ச்சி தருவது போலவே, ஒன்றும் அறியாதவர்போல், நடந்துகொண்டார். ஆனால் அது எவ்வளவு புதுமையான திருமணம் ! காளி மாதாவுடன் ஏற்கெனவே அவர் ஒன்றியிருந்தார். அவரது திருமணம் அதைவிட அதிகமான பிரத்தியட்ச அனுபவம் பெற்றது அல்ல. 1859-இல் கல்யாணம் நடந்தது. மணப்பெண்ணுக்கு வயது ஐந்து. அக்காலத்து வழக்கத்திற்கு ஏற்ப, திருமணச் சடங்குகள் முடிந்தவுடன் பெண் தனது பிறந்தகத்திற்குச் சென்றுவிட்டாள். அடுத்து எட்டு அல்ல ஒன்பது வருஷம் தனது கணவனை அவள் பார்க்கவே இல்லை. கணவன் தனது தாய் வீட்டில் ஓரளவு மன அமைதி பெற்று, ஆலயத்திற்குத் திரும்பினார். ஆனால், காளி அவருக்காகக் காத்திருந்தாள். கோயிலடியில் காலெடுத்து வைத்ததுதான் தாமதம். மீண்டும் தெய்வ ஜன்னி மிகக் கடுமையான வேகத்துடன் அவரிடம் கிளர்ந்தெழுந்தது. வெகுநேரம் கண்களை இமைக்காமல் இருப்பார். பித்துப் பிடித்துவிடும்போல் அவருக்கே தோன்றும். பீதி அடைவார். மாதாவை வேண்டுவார். காளியின் தரிசனந் தான் தமக்கு வாழ்வு அளிக்கவல்லது என்பது அவரது திடமான நம்பிக்கை. ஆசாபங்கமும் மனப்பிராந்தியும் மிகுந்த சூழ்நிலையில் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. கடைசியாக உதவியும் கிடைத்தது.

இதுவரையில் நிலவரம் தெரியாததும், கரைபுரண்டு ஓடுவதுமான ஒரு நதியின் நீரோட்டக் கர்ஜனையிலும் சுழற்சியிலும் இழுத்த இழுப்புக்கு இசைவாக அவரது ஆன்மா தனிமையில் நீந்திக்கொண்டிருந்தது. களைத்து மூழ்கிவிடுவது போன்ற ஒரு மனநிலை. அப்போது இருவர் தோன்றி மூழ்காது தலையைத் தாங்கி, காப்பாற்றி எவ்வாறு நதியைக் கடப்பதற்கு அதன் நீரோட்டத்தையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை அவருக்குப் போதித்தனர்.

ஒரு நாள் தமது வீட்டு மாடியில் இருந்தவண்ணம் கங்கையில் குறுக்கு நெடுக்குமாகச் சென்று வந்த பல வர்ணப் பாய்மரங்களுடன் கூடிய படகுகளை அவர் பார்த்துக்கொண்

டிருந்தார். ஒரு படகு அவரது வீட்டின் முன் நின்றது. ஒரு மாது அதிலிருந்து இறங்கிப் படிக்கட்டேறி வந்தாள். அவள் நல்ல உயரம். அழகு நிறைந்தவள். நீண்ட கேசங்கள் அவிழ்ந்த நிலையில் இருந்தன. ஒரு சந்நியாசினியின் காஷாய உடையைத் தரித்திருந்தாள். வயது முப்பத்தைந்து முதல் நாற்பது வரை இருக்கலாம். ஆனால் இன்னும் இளம் வயதினளாகவே தென் பட்டாள். அவளது தோற்றம் ராமகிருஷ்ணரைப் பெரிதும் ஈர்த்தது. சொல்லியனுப்பினார். அவள் வந்தாள். அவரைக் கண்டதும் திடீரென அழுகை வந்துவிட்டது. "என் மகனே, நெடுங்காலமாக உனக்காகவே நான் காத்திருக்கிறேன்" என்றாள்.

அவள் ஒரு பெரிய வங்கக் குடும்பத்தைச் சேர்ந்த பிராமண மாது, விஷ்ணு பக்தை. உயர்ந்த படிப்பும், புனிதமான கிரந்தங்களில், முக்கியமாகப் பக்தி நூல்களில், புலமை மிக்கவள். தெய்வானுபவத்தில் ஆழ்ந்த ஒருவரைத் தான் தேடிக்கொண் டிருப்பதாக அவள் கூறினாள். அப்பேர்ப்பட்ட ஒருவரது இருக் கையை இத் திவ்ய தரிசனம் அவளுக்குப் புலப்படுத்தியது. அவரிடம் தருவதற்காக ஒரு சேதி தன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்றாள். மேற்கொண்டு அறிமுகம் எதுவும் இல்லாமல், பெயர் என்னவென்று கூடக் கேட்காமல், தாய்-மகன் உறவு முறை அந்தப் புனிதமான மாதுக்கும் காளி கோயில் பூசாரிக்கும் ஏற்பட்டுவிட்டது. பைரவி பிராம்மணி என்ற பெயரால் மட்டுமே அவளை உலகம் அறியும். வேறு பெயர் யாருக்கும் தெரியாது. ஒரு குழந்தையைப் போல் அவளிடம் ராமகிருஷ்ணர் முழு நம்பிக்கை வைத்து, தம் துயர் தோய்ந்த தெய்வானுபவ வாழ்க்கையின் அனுபவங்களை, தமது சாதனத்தை, தமது உடல் கோளாறினை, மனநிலைக் கஷ்டங்களை எல்லாம் எடுத்து உரைத்தார். பலர் தமக்குப் பித்துப் பிடித் திருப்பதாகக்கூறுவதாகவும், அவர்கள் சொல்வது சரியாக இருக் கலாமோ என்றும் கவலையுடனும் விநயத்துடனும் அவர் கேட் டார். கூறிய அனைத்தையும் கேட்டு, பைரவி தாய்க்குரிய பரிவு டன் தேற்றி, பயப்பட வேண்டாமென்று சொன்னாள். பிறரது துணையின்றிச் சுயமாக முயன்று பார்த்து, பக்திக்கிரந்தங்களில் விவரித்துள்ள சாதனையின் உயர்நிலைகளை அவர் நிச்சயமாக அடைந்துவிட்டார் என்று பைரவி தெரிவித்தாள். அவரது உடல் நலனைக் கவனித்துக்கொண்டு, மனத்தெளிவுக்கும் அவள் பொறுப்பேற்றாள். தனியாக, கண்ணைக் கட்டிய நிலையில் காரிருளில் அவர் முன்னரே கண்டறிந்தவற்றை, பட்டப் பகலில் ஞான மார்க்கத்தில் சென்று மீண்டும் அவரை உணரச் செய்தாள் பைரவி. தெய்வானுபவ விஞ்ஞானம் பல நூற்றாண்டு

களின் வளர்ச்சிக்குப் பிறகு தெரிந்துகொண்டவற்றை, சில வருஷச் சாதனைகள் மூலம், தமது உள்ள உணர்வின் துணையுடன் ராமகிருஷ்ணர் பெற்றிருந்தார். ஆனால் எவ்வாறு அவை தம்மை வந்தடைந்தன என்பதை முறைப்படி தெளிந்துணராத வரையில் அவர் அத்துறையில் கரைகண்டவராக இருக்க முடியாது.

ராமகிருஷ்ணர் பகவானது அவதாரம் என்பதை, ஞான மார்க்கத்தில் அவரை ஈடுபடுத்திய பைரவி கண்டுணர்ந்தாள். தக்ஷிணேசுவரத்தில் ஒரு சதஸைக் கூட்டினாள். புலமை மிக்க பண்டிதர்கள் விவாதித்தனர். விஞ்ஞான பூர்வமாகக் கடவுள்–மனிதன் உறவுமுறையைத் தெளிந்தறிந்த அந்த அறிஞர்கள் புதிய அவதாரத்தை வெளிப்படையாக அங்கீகரிக்க வேண்டுமென்று பைரவி வற்புறுத்தினாள்.

பிறகு ராமகிருஷ்ணரது புகழ் பரவலாயிற்று. எல்லாச் சாதனைகளிலும் வெற்றி கண்ட இந்த அதிசய மனிதரைக் காணத் தொலை தூரத்திலிருந்து மக்கள் வரலாயினர். பல வழிகளில் சென்று கடவுளை அடைய முயன்றுகொண்டிருந்த துறவிகள், ரிஷிகள், சாதுக்கள், தீர்க்கதரிசிகள் போன்றோர் அவரது உபதேசத்தை நாடி வந்தனர். அவரது யோசனையைக் கேட்டனர். கூட்டுப் பாதையை அடைந்துவிட்ட ராமகிருஷ்ணர், அவர்களிடையே ஆதிக்கம் செலுத்தினார் என்றுதான் சொல்ல வேண்டும். அவர் டாண்டேயைப் போல் நரகம் சென்று வந்தவர் அல்ல. ஆழ்கடலில் முத்துக் குளித்து வெளிப் போந்தவர் போன்றது அவரது தோற்றம். நெடுநாளைய ஆனந்தானுபவத்தில் புடமேறியதால் அவரது பொன்மேனி விசேஷ காந்தியுடன் ஜொலித்தது. ஆனால் வாழ்க்கையின் கடைசி நாள் வரை அவர் மிக எளியராகவே வாழ்ந்து, துளிக்கூடக் கர்வம் இல்லாமல் காணப்பட்டார். தெய்வானுபவப் பித்து அவருக்குத் தலைக்கு ஏறியிருந்தது. அதுவரை தாம் செய்து முடித்தவை பற்றியோ, இனிச் செய்ய இருப்பவை பற்றியோ சிந்திக்க அவரது மனம் நாட்டங் கொள்ளவில்லை. தம்மை அவதாரம் என்று பிரஸ்தாபிப்பதை அவர் வெறுத்தார். அவருக்கு வழிகாட்டியாக அமைந்த பைரவி உள்பட எல்லோரும் அவர் உச்ச நிலையை அடைந்து விட்டதாகவே கருதினர். ஆனால் இன்னும் செல்ல வேண்டிய தூரம் இருக்கிறது, செங்குத்தான கடைசி ஏற்றம் பாக்கியாக உள்ளது என்பது அவருடைய கருத்து. எனவே மிக உன்னதமான உயர்நிலையை அடைந்தே தீருவது என்ற ஒரு மனம் உறுதி அவருக்கு வாய்த்தது.

இந்த கடைசிப் படியை ஏறிச் செல்லப் பழைய வழி காட்டிகள் அவருக்குப் போதுமானவர்களாக இருக்கவில்லை. எனவே மூன்று ஆண்டுகளாக விசேஷ ஆர்வத்துடன் அவரைப் போஷித்து வந்த ஆன்மிகத் தாயார், தன்னை விட்டு, இன்னும் கடுமையான கட்டுப்பாட்டைக் கோரி, அதிகார தோரணையுடன் அழைக்கும் வேறு ஒருவரது கட்டளைகளைப் பின்பற்ற ராமகிருஷ்ணர் உடன்பட்டதைக் கண்டு சிறிது வருத்தம் அடைந்தாள்.

*1864*-இல் ராமகிருஷ்ணர் ஸ்வரூபமுள்ள பிரம்மத்தைக் கண்டு வெற்றி அடைந்துவிட்டார். அத் தருணத்தில் வடிவமற்ற தெய்வத்தை அவருக்குப் புலப்படுத்தும் தூதுவராகத் தக்ஷிணேசுவரத்திற்கு ஒருவர் வந்தார். அவர்தாம் தோடாபூரி என்ற திகம்பரர்; அசாதாரண வேதாந்த ஞானம் படைத்த துறவி. சஞ்சாரமாகச் சென்று பணியாற்றுபவர். நாற்பது வருஷ சாதகத்திற்குப் பிறகு பிரம்மத்தைக் கண்டறிந்தவர், ஆன்ம விபூதியை அடைந்தவர். இந்த மாய உலகத்தை அவர் முழு அசிரத்தையுடன், பற்றற்ற நிலையில் கண்டவர்.

அருகாமையில் செல்லும்போது அவரை ராமகிருஷ்ணர் கண்டார். தாம் கண்டது அவருக்குத் தெரியாது என்று நினைத்தார். எந்த இடத்திலும் மூன்று நாளைக்கு மேல் தங்கலாகாது என்பது துறவிகளின் நியதி. கோயிலின் படி ஒன்றில் உட்கார்ந்துகொண்டு இளம் பூசாரி தமது உள்ளத்தில் உறையும் இறைவனை நினைந்து ஆனந்தானுபவத்தில் மெய்ம்மறந்து இருந்தார். அது தோடாபூரியைப் பெரிதும் ஈர்த்தது.

"மகனே, உண்மையைத் தெளிந்தறியும் மார்க்கத்தில் நீ நெடுந்தூரம் ஏற்றம் கண்டிருக்கிறாய். நீ விரும்பும் பட்சத்தில் அடுத்த கட்டத்தை அடைவதற்கு நான் துணைபுரியக் கூடும். வேதாந்தத்தை உனக்கு உபதேசிக்கிறேன்" என்றார் தோடாபூரி. குழந்தையின் வெள்ளையுள்ளத்துடன் ராமகிருஷ்ணர் அளித்தபதில் அந்தக்கடும் தவசியையும் முறுவலிக்கவைத்தது. "அன்னை காளியின் அனுமதி முதலில் கிடைக்கவேண்டும்" என்றார் ராமகிருஷ்ணர். அவள் அனுமதி அளித்தாள். அதன் பேரில் அடிபணிந்து, முழுநம்பிக்கை வைத்து, தெய்விக ஆசான் புலப்படுத்திய மார்க்கத்தில் சென்றார். முதலில் இந்த வித்தைக்கு வேண்டிய நியதிகளுக்கு உட்படவேண்டியதாயிற்று. தம் அந்தஸ்துக்கும் நிலைக்கும் உரிய விருதுகளையும், சின்னங்களையும் துறந்துவிட வேண்டுமென்பது முதல் நிபந்தனை. யக்ஞோபவீதமும் பூசாரிக்குறிய அந்தஸ்தும் அவ்வாறு துறக்க

வேண்டியவை. இவற்றை விட்டு விடுவது அவருக்கு ஒரு பொருட்டல்ல. ஆனால் இதுவரை தாம் நினைந்து வாழ்ந்து வந்த பாசங்களையும் பிரமைகளையும் கூட அவர் விட்டொழிக்க வேண்டும். ஸ்வரூபமுள்ள கடவுள் அவற்றில் ஒன்று. இங்கும், பிற இடங்களிலும், அன்பும் தியாகமும் கொணர்ந்தளித்த பலம் அனைத்தையும், என்றென்றைக்கும் வேண்டாமெனக் கைவிடவேண்டும். மண்ணோடு மண்ணாகி, தமது சொந்த ஈமச்சடங்கை அடையாளபூர்வமாக அவர் செய்தாகவேண்டும். அகம்பாவத்தின் கடைசி உறைவிடமாகிய இதயத்தை அவர் ஆழப் புதைத்து விட வேண்டும். அப்போதுதான் புது வாழ்வின் சின்னமாகிய சந்நியாசிக்குரிய காஷாயத்தைப் பூணுவதற்கு அவருக்கு யோக்கியதை ஏற்படும். அத்வைத வேதாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அவருக்குத் தோடாபூரி போதிக்கலானார். 'பிரம்மம் ஒன்றே. அது வேறுபாடு அற்றது. ஆழச் சிந்தித்து அகங்காரம் நீங்கி, பிரம்மத்துடன் இணைகின்ற நிலையை உணர்வது எப்படி? சமாதி என்ற பேரானந்த நிலையின் மூலம் அஞ்ஞானம் பரப்பிரம்மத்தில் வேரூன்றி இருக்கச் செய்வது எங்ஙனம்?' இவை போன்ற விஷயங்களை அவர் போதித்தார்.

ஆனந்தத்தை எல்லாப் பிறநிலைகளிலும் கண்டு அனுபவித்த ஒருவர் கடைநிலையின் குறுகிய கதவைத் திறப்பதற்கான சாவியைக் கண்டுபிடிப்பது சுலபம் என்று நினைப்பது தவறு. அவர் இதைப்பற்றிக் கூறியிருப்பவை இங்கு எடுத்துக்காட்டத் தகுதியுள்ளவை. இந்தியாவில் புனிதமான கிரந்தங்களிடையே இடம் பெறவல்லவை. மேலும், பாரமார்த்திக ஞானத்தைப் பற்றிய மேலைநாடுகளின் விஞ்ஞான ரீதியான ஏடுகளிலும் அவை இடம் பெறக்கூடியவை. அவர் கூறுகிறார்:

"எல்லாப் பொருட்களினின்றும் என் மனத்தை விடுவித்து ஆன்மாவில் ஆழ்ந்துவிடவேண்டுமென்று திகம்பர சாமியாரான தோடாபூரி எனக்குச் சொல்லிக் கொடுத்தார். ஆனால் நான் எவ்வளவோ முயன்று பார்த்தேன். பெயர், வடிவம் ஆகியவை அமைந்த நிலவரத்தைத் தாண்டி இலக்கணம் எதுவுமில்லாத ஒரு நிலைமையை நோக்கி என் உள்ளுணர்வைச் செலுத்த முடியவில்லை. ஜோதி மயமான அன்னையின் வடிவம் எனக்கு மிகவும் பழக்கப்பட்டது. அது ஒன்றைத் தவிர, பொருள்களினின்று என் மனத்தைத் துண்டித்துக் கொள்வது சிரமமாக இருக்கவில்லை. அன்னையோவெனில், தூய அறிவின் சாரமாக ஜீவ களையுடன் கூடிய பிரத்தியட்ச ஸ்வரூபமாக என் முன் காட்சியளித்தாள். அப்பால் உள்ளதை நான் அடைவதற்கான மார்க்கத்தில் அவள்

தடையாக நின்ருள். அத்வைத வேதாந்த சித்தாந்தங்களில் என் மனசை ஒருசேர இணைத்து நிற்பதற்குப் பல சந்தர்ப்பங்களில் நான் முயன்று பார்த்தது உண்டு. ஆனல் ஒவ்வொரு சமயமும் அன்னையின் உருவம் குறுக்கிடும். 'பயன் இல்லை. இலக்கணமற்ற நிலைக்கு என் உள்ளுணர்வை உயர்த்தி ஆத்மாவை நேருக்கு நேராகக் கண்டறிவதில் நான் ஒருபோதும் வெற்றி அடையப் போவதில்லை' என்று தோடாபூரியிடம் ஆசாபங்கத்துடன் கூறினேன். அவர் சற்றுப் படபடப்பாகப் பதிலளித்தார். 'உன்னல் முடியாது என்று சொல்கிருய்? முடிந்தாக வேண்டும்' என்ருர். சுற்றும் முற்றும் பார்த்தார். ஒரு கண்ணுடித் துண்டு கிடைத்தது. அதை எடுத்து என் கண்களிடையே ஓர் இடத்தை அதனல் சுட்டிக் காட்டினர். 'அந்த இடத்தின்மீது உன் முழுக் கவனத்தையும் செலுத்து' என்ருர். அதன்பேரில் முழுச் சக்தியையும் பிரயோகித்துத் தியானத்தில் இறங்கலானேன். காளி மாதாவின் அருள் வடிவம் தென்பட்டவுடன் என் பகுத்தறிவை ஒரு கத்தியாகப் பிரயோகித்தேன். அவளை இரண்டு துண்டாக வெட்டினேன். கடைசித் தடை அகன்றுவிட்டது. ஏற்கெனவே பக்குவப்பட்டிருந்த நிலையிலிருந்து என் உள்ளுணர்வு உடனே விடுபட்டு மேலே விம்மிச் சென்றது. நான் சமாதியில் ஆழ்ந்து போனேன்."

விசேஷ சிரமத்தின்பேரில், முடிவில்லாத் துன்பத்தை அநுபவித்த பிறகே, கண்டறிய முடியாததைக் காணக்கூடிய கதவு திறந்தது. ஆனல் அந்த நிலையைத் தாண்டிச் சென்றதும் கடைசிக்கட்டமாகிய நிர்விகல்ப சமாதியை ராமகிருஷ்ணர் அடைந்தார். அதில் ஈடுபடுகிறவன், அவனது நோக்கம் ஆகிய இரண்டுமே ஒருங்கே மறைந்துவிடுகின்றன.

1862 இறுதியில் தோடாபூரி புறப்பட்டுச் சென்ருர். அப்புறம் ஆறுமாத காலத்திற்கு மேல் ராமகிருஷ்ணர் ஒரு மாய வளையத்துக்குள், அக்கினிப் பிழம்பு போன்ற ஒரு வளையத்துக்குள், சஞ்சரித்துக் கொண்டிருந்தார். உடலில் வலு இருக்கும் வரை ஆண்டவனுடன் ஒன்றிய நிலையைத் தொடர்ந்து அநுபவித்தார். ஆறுமாத காலமும் அவர் ஆனந்த பரவசம் எய்தியிருந்தார் என்றே சொல்லவேண்டும் ஆனல் பழங்கால பக்கீர்கள் கூறுவது போல் சரீரத்தினின்று ஆன்மா வெளிப்போந்த நிலையில் அவரது உடல் காலிவீடு போல், நாச சக்திகளுக்கு இரையாகும் நிலையில் கிடக்கும். ஆன்மா அற்ற அந்தச் சரீரத்தை ஒரு மருமான் கவனித்துப் போஷித்து வந்திராவிடில் அவர் மரணம் எய்திருப்பார். உருவமற்ற பிரகிருதியுடன் ஆனந்தாநுபவம் அதற்குமேல் நீடிப்பது என்பது சாத்தியமே இல்லை.

தாம் விதியை வம்புக்கு இழுத்து வெகுதூரம் சிரமப்பட்டு விட்டதை ராமகிருஷ்ணர் உணர்ந்து கொண்டார். தாம் தப்பிப் பிழைத்தது பேரதிசயம் என்று நினைத்தார். அத்தகைய எந்தச் சோதனையிலும் இறங்காதிருக்குமாறு தமது சீடர்களை முன் ஜாக்கிரதையாக எச்சரித்தார். அதைப் பின்பற்றலாகாது என்று விவேகானந்தரைத் தடுத்து நிறுத்தினர். பிறருக்காக உழைப் பதில் தமது மகிழ்ச்சியைத் தியாகம் செய்யும் கடமையுள்ள புனித ஆன்மாக்கள் இத்தகைய சுகாநுபவத்தில் இறங்க லாகாது என்று அவர் காரணம் கூறினர். பரப்பிரம்மத்தை அடைவதற்கான மார்க்கத்தின் கதவு போன்ற நிர்விகல்ப சமாதியைத் தமக்குப் போதித்தருளுமாறு விவேகானந்தர் கெஞ் சிக் கேட்டுக்கொண்டபோது ராமகிருஷ்ணர் மறுத்துவிட்டார்.

கோபமே வராத அவர் சினம் மிக்கவராய், ''உனக்கு வெட் கம் இல்லையா? நீ ஒரு பெரிய ஆலவிருட்சம். களைப்புறும் ஆயிரக் கணக்கான ஆன்மாக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் மரம் என்று நான் நினைத்தேன். ஆனல் நீயோ உனது சொந்த நன்மையை, சுயநல உணர்வுடன் நாடுகிருய். என் குழந்தாய், இந்தச் சின்னஞ்சிறு விஷயங்களை விட்டொழி! ஒருதலைப் பட்சமான இத்தகைய லட்சியம் எப்படி உனக்குத் திருப்தி யளிக்கும்? நீ எல்லாவற்றிலும் ஈடுபாடு உடையவனுக இருத் தல் வேண்டும். எல்லா வழிகளிலும் ஆண்டவனைத் தியானிக்க வேண்டும்'' என்று கூறினர். (தியானத்திலும் சரி, செயலாற்று வதிலும் சரி, மிக உயர்ந்த ஞானம் மனிதவர்க்கத்தின் மிக உயர்ந்த சேவையாகப் பரிமளிக்க வேண்டுமென்று அவர் நினைத்தார்.)

விவேகானந்தர் அழுதார். வெட்கம் மேலிட்டது. தியா கத்தின் கடமையை நினைந்து மனமுடைந்து போனர். தமது குருவின் கட்டளை நியாயமானது என்பதை ஒப்புக்கொண்டார். ஆனல் தமது வாழ்நாளில் கடைசிவரை அந்தப் பரப்பிரம்ம சொருபத்தைக் கண்டறியவில்லையே என்ற ஒரு குறை அவரது மனசில் இருந்து கொண்டே யிருந்தது. எனினும் தமது வாழ்க் கையைப் பணிவுடன், எந்தத் துன்பத்தையும் பொருட்படுத்தா மல், தைரியமாக, மனிதனது சேவைக்கு அவர் அர்ப்பணித்துக் கொண்டார்.

பல முஸல்மான்கள், பக்கீர்கள் போய்க் கொண்டிருந் ததைத் தமது கோயிலிலிருந்து ராமகிருஷ்ணர் பார்த்தார். எல்லா மதங்களையும் சேர்ந்த யாத்திரிக விருந்தாளிகள் தங்குவதற்குத் தமது கட்டிட அமைப்பில் அறைகளை ஒதுக்க

வேண்டுமென்று ராணி ராஸமணி தன் பக்திப் பெருக்கில் விரும்பினள். அவள் புதுப் பணக்காரி. கீழ்வகுப்பினள். இத்தகைய அறையொன்றில் கோவிந்தராய் என்ற அடக்கமான முஸல்மான் பிரார்த்தனையில் ஆழ்ந்திருப்பதை ராமகிருஷ்ணர் கண்டார். இஸ்லாத்தின் மூலம் அவர் கடவுளைக் கண்டறிந்தவர் என்பதை நெடுஞ்சாணகக் கிடந்த அவரது தேகம் ராமகிருஷ்ணருக்குப் புலப்படுத்தியது. தமக்கு உபதேசம் செய்யுமாறு கோவிந்தராயை அவர் வேண்டினர். பல தினங்களுக்குக் காளிபூசாரி தமது சொந்தக் கடவுளை அடியோடு தியாகம் செய்து மறந்துவிட்டார். அவர்களுக்குப் பூஜை நடத்தவில்லை. அவர்களைப் பற்றிச் சிந்திக்கவும் இல்லை. ஆலயத்துக்கு வெளியே வாழ்ந்து, அல்லாவின் திருநாமத்தை ஜபித்துக்கொண்டிருந்தார். முஸல்மானின் உடுப்புக்களைத் தரித்திருந்தார். புனிதமான மிருகம் என்று கருதப்படும் பசுவின் இறைச்சியைக்கூட, மிக ஈனமான பாவம் என்று கருதித் தடை செய்யப்பட்ட அந்த உணவைக்கூட, உட்கொள்ள அவர் தயாரானர். அவரது குருவும் போஷகருமான மாதுரர். பாபு இதைக் கண்டுகதிகலங்கிப் போய், அவ்வாறு செய்யவேண்டாமெனக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அவரது புனிதத் தன்மை கெடாமல் இருப்பதற்காக வேண்டி, ஒரு முஸல்மானின் மேற்பார்வையில் ராமகிருஷ்ணருக்கு ஒரு பிராம்மண சமையற்காரனை, ரகசியமாக உணவு தயாரிக்கச் செய்தார்.

முற்றும் வேருன் ஒரு சமயத்தின் சிந்தனையில் அடியோடு தம்மை ராமகிருஷ்ணர் ஒப்படைத்துவிட்டது, அவரது உத்வேகத்தை உணர்த்தும் ஆன்மிக யாத்திரையாக அமைந்தது இயல்பே. அவரது மனத்திலிருந்த கருத்து கண்களுக்குப் புலப்படும்படியான ஓர் அநுபவத்தின் மூலம் கிட்டியது. ஜோதிமயமான ஒரு பெரியவர் வெண்தாடியுடன், கம்பீரமான ஒரு தோற்றத்துடன் அவர் முன் தென்பட்டார். அப்படித்தான் முகம்மது நபியை அவர் மனத்தால் கண்டிருக்க வேண்டும் அவரை அணுகிவந்து அவரிடம் ஐக்கியமானர். சகுணப் பிரம்மமான முஸ்லிம்தெய்வத்தை ராமகிருஷ்ணர் கண்டறிந்தார். அங்கிருந்து மேலே சென்று நிர்க்குணப் பிரம்மத்தைக் கண்டார். இஸ்லாம் என்ற நதி அவரை மீண்டும் கடலுக்கே கொண்டுபோய்ச் சேர்த்தது.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, இதைப் போன்ற மற்ருேர் அநுபவம், கிறிஸ்துவ சமயத்தை ராமகிருஷ்ணர் உணர்ந்தறியச் செய்தது.

1874 நவம்பர் சமீபமாகக் கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு ஹிந்து மல்லிக், பைபிளை அவருக்குப் படித்துக் காட்டினார். தக்ஷிணேசுவரத்துக்கு அருகிலுள்ள தோட்டத்தில் இது நடந்தது. முதல் தடவையாக ராமகிருஷ்ணர் கிறிஸ்துவைச் சந்தித்தார். சொல்லாக இருந்தது விரைவில் முழு வடிவமாகப் புலப்பட்டது. இயேசுநாதரின் வாழ்க்கை அவரை ரகசியத்தில் ஆட்கொண்டது. ஒருநாள் பணக்காரரான ஒரு ஹிந்து நண்பரது அறையில் உட்கார்ந்திருக்கையில், குழந்தை இயேசுவையும் தாயையும் தாங்கிய சித்திரம் ஒன்றைச் சுவரில் கண்டார். அந்த வடிவங்கள் அவர் கண்களில் உயிர்த்தெழுந்தன. பிறகு உள்ளுணர்வின் நியமனப்படி, எதிர்பார்த்த வகையில் எல்லாம் நிகழ்ந்தது. புனிதமான அந்தத் தோற்றங்கள் அவரை அணுகிவந்து அவருள் புகுந்தன. அவரது சரீரம் முழுவதுமே அவ்விரு வடிவங்களின் உறைவிடமாயிற்று. இஸ்லாத்தைவிட இந்த அநுபவம் அதிக வீரியம் உள்ளதாக இருந்தது.

ஹிந்து கருத்துக்கள் உதறியெறியப்பட்டன. பயந்துபோன ராமகிருஷ்ணர் அலைகளின் நடுவில் தத்தளிப்பவர் போன்ற உணர்வில், "ஏ மாதா, நீ என்ன செய்கிறாய்? எனக்குத் துணை புரி" என்று கூக்குரலிட்டார். ஆனால் அது பயன்படவில்லை. அலைப்பெருக்கு அவரை அடித்துக்கொண்டு போயிற்று. ஹிந்துவின் உள்ளுணர்வு மாறியது. கிறிஸ்துவைத் தவிர வேறு எவருக்கும் அதில் இடமில்லை. பல நாட்களுக்குக் கிறிஸ்துவச் சிந்தனைகளும், கிறிஸ்துவ அன்புமே அவரை நிரப்பியிருந்தன. கோயிலுக்குத் திரும்பிச் செல்வது பற்றிய எண்ணமே போய்விட்டது.

ஒரு நாள் பிற்பகல் தக்ஷிணேசுவரத் தோப்பில், விசாலமான அழகிய கண்களுடன், அருள் நோக்குடன், வெண்மையான சருமத்தினரான ஒருவர் தம்மை நோக்கி வந்துகொண்டிருந்ததை அவர் பார்த்தார். அவர் யார் என்று ராமகிருஷ்ணருக்குத் தெரியாது. எனினும், தெரியாத அந்த விருந்தினரின் கவர்ச்சிக்கு அவர் இரையானார். அருகில் வந்ததும் ராமகிருஷ்ணரது அந்தராத்மா ஒரு பாடலைக் கேட்டது. "உலகம் உய்வதற்காகத் தம் இதயக் குருதியைச் சிந்திய கிறிஸ்துவைப் பார். மனிதரிடமுள்ள அன்பின் காரணமாகக் கடல் போன்ற கஷ்டத்தை அனுபவித்தவரைப் பார். அவர் கடவுளுடன் சாசுவதமாக இணைந்து நிற்கும் பரமயோகி; அவர்தாம் இயேசு அன்பின் அவதாரம்."

இயேசு மகான் இந்தியாவின் ரிஷியை, காளியின் மகனைத் தழுவிக்கொண்டு தம்முள் ஐக்கியப்படுத்திக்கொண்டார். ராம

கிருஷ்ணர் ஆனந்த பரவசமானுர். மீண்டும் பிரம்மத்துடன் ஒன்றிய உணர்வு அவருக்கு ஏற்பட்டது. பிறகு படிப்படியாக உலகானுபவத்துக்குத் திரும்பினுர். ஆனுல் அதுமுதல் இயேசு கிறிஸ்துவின் தெய்வாம்சத்தில், அவதாரத்தில் அவர் நம்பிக்கை கொள்ளலானுர். கிறிஸ்து மட்டுமே அவதாரம் என்று அவர் கருதவில்லை. புத்தரும், கிருஷ்ணனும் அவருக்கு அவதார மாகவே காட்சியளித்தனர்.

தமது சீடர்களிடம் அவர் பின்வருமாறு கூறியிருக்கக் கூடும்: ''நான் எல்லாச் சமயங்களையும் பின்பற்றியுள்ளேன். ஹிந்து மதம், இஸ்லாம் மதம் கிறிஸ்துவ மதம் ஆகிய அனைத் திலும் ஆழ்ந்துள்ளேன். பல்வேறு ஹிந்து சமய வழி முறை களுடன் சென்றிருக்கிறேன் எல்லாமே வெவ்வேறு வழி களில் ஒரே கடவுளை அடையும் நோக்கத்துடன் உழைக் கின்றன என்பதைக் கண்டு கொண்டேன். எல்லாச் சமயங் களையும் பல்வேறு வழிகளையும் ஒரு தடவை கண்டறிய வேண்டும். நான் நோக்கும் திசையெல்லாம் சமயத்தின் பேரால் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பிரம்ம சமாஜிகள், வைஷ்ணவர்கள் போன்ருேரும், மற்றவர்களும் சண்டையிட்டுக் கொள்வதைக் கவனிக்கிறேன். கிருஷ்ணன் என்று நாம் அழைப்பவர்தான் இவர். அவர்தான் ஆதிசக்தி, அவரே இயேசு, அவரே ஆயிர திருநாமம் கொண்ட ராமன். ஒரு குளத்தில் பல ஸ்நான கட்டங் கள் உண்டு. ஒன்றில் ஹிந்துக்கள், தங்கள் பானைகளில் நீரை மொண்டு அதை 'ஜலம்' என்று அழைக்கிருர்கள். மற்ருென்றில் நீரைத் தோல்பெட்டிகளில் முஸ்லிம்கள் எடுத்து அதற்குப் 'பானி' என்ற பெயரைத் தருகிருர்கள். மூன்ருவது கட்டத்தில் எடுக்கும் கிறிஸ்துவர் 'வாட்டர்' என்ற பெயரை அதற்குக் கொடுத்திருக்கிருர். அந்த நீர் 'ஜலம்', அல்லது 'பானி' அல்லது 'வாட்டர்'தான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அது வெறும் கேலிக்கூத்து அல்லவா? பல்வேறு பெயர்களில் இயங்குவது ஒரு பரம்பொருளே. எல்லாரும் நாடுவது அந்தத் தத்துவத் தைதான். பருவநிலை, குணநிலைகள், பெயர்கள் ஆகியவற்றில் தான் வேறுபாடு. ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த வழியில் செல்லட்டும். அவன் மனமாரச் சிரத்தையுடன் கடவுளை அறிய விரும்பினுல் அவனுக்குச் சாந்தி கிடைக்கும். நிச்சயமாக ஆண்டவனை அவன் அடைய முடியும்.

தமது சீடர்களுக்கு ராமகிருஷ்ணர் செய்த உபதேசம் என்ன? அவர் கையாண்ட முறைகள் தனிப்பெருமை வாய்ந் தவை. மொத்தமாக, அக்காலத்து இந்தியாவில் அவை தனிச் சோபை பெற்றிருந்தன என்பதை விவேகானந்தர் வலியுறுத்திக்

கூறியுள்ளார். அவர் காலத்துக்குப் பிறகு அவரது கல்விக் கோட்பாடுகளில் சிலவற்றை, ஐரோப்பாவில் புதிய வழிமுறையினர் ஒழுங்குபடுத்தி நடத்தி வருகிறார்கள். அவர் காலம் வரை இந்தியாவில் குரு சொல்வதுதான் சட்டம் என்றிருந்தது. பெற்றோர்களை விடக் குருவிடந்தான் சீடர்கள் விசேஷ மரியாதையுடன் நடந்துகொண்டனர். ராமகிருஷ்ணருக்கு அந்த முறை பிடிக்கவில்லை. தமது இளம் சீடர்களது அந்தஸ்துக்கு அவர் தம்மைத் தாழ்த்திக்கொண்டார். சகாவாக, உடன்பிறந்த சகோதரனாக மாறி, அவர்களுடன் பழகிப் பேசினார். எந்தவிதமான உயர்வு தாழ்வு உணர்ச்சியும் இல்லாமல் நடந்துகொண்டார்.

சூரியனுக்கும் மனிதர்களாகிய இந்தத் தாவரங்களுக்கும் இடையே தாம் குறுக்கிட்டு, அவற்றின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்காமல் இருப்பதில் அவர் விசேஷ கவனம் செலுத்தினார். பிறரது தனித் \ தன்மைக்கு அவர் மதிப்புத் தந்து அன்பு காட்டினார். அதை அடிமைப்படுத்தக் கூடாது என்ற அச்சம் மிதமிஞ்சிப் போய், தம்மிடம் அளவு கடந்த அன்பைப் பிறர் சொரிந்துவிடக் கூடாதே என்ற பயம் அவருக்கு ஏற்பட்டது. தம்மிடம் சீடர்கள் பிணிக்கப்படுவது உயர்வின் காரணமாக இருக்கலாகாது என்று அவர் விரும்பினார். "தேனீக்கள் உங்கள் இதயத்தைச் சுவைக்கட்டும். ஆனால் உங்கள் இதய எழில் அவற்றில் ஒன்றைக்கூட அடிமைப்படுத்தக் கூடாது."

தமது கருத்துக்களைப் பிறர் மீது திணிப்பது என்ற பிரச்னைக்கே அதில் இடம் இல்லை. தத்துவார்த்தப் போதனைகள், சமுதாயத்தின் விஞ்ஞான விளக்கங்கள் ஆகியவை பற்றிப் பயனற்ற சர்ச்சைகளுக்கு இடமே இல்லை. "நான் சர்ச்சையை விரும்பவில்லை. கடவுள் பகுத்தறிவுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர். இருக்கும் அனைத்துமே ஆண்டவன் என்றுதான் காண்கிறேன். இந்நிலையில் பகுத்தறிவால் என்ன பயன்? தோட்டத்துக்குள் செல்லுங்கள். புனிதமான மாங்கனிகளைச் சுவையுங்கள். மீண்டும் வெளி வாருங்கள். நீங்கள் அங்கே செல்வது மாமரத்திலுள்ள இலைகளை எண்ணுவதற்கு அல்ல. எனவே, மறுபிறப்பைப் பற்றியோ அல்லது விக்கிரக ஆராதனையைப்பற்றியோ சர்ச்சை செய்து காலத்தை வீணடிப்பானேன்?

"அவ்வாறாயின் எதுதான் அடிப்படையானது? சொந்த அநுபவந்தான். முதலில் சோதனை செய்து பார். கடவுளிடம் நம்பிக்கை வை. சமய அநுபவத்தை அடுத்து, தெய்விக நம்பிக்கை வரவேண்டும். அதை முந்திக்கொள்ளக் கூடாது. முந்தி வருமாயின் அதில் ஒரு முரண்பாடு ஏற்படும்."

''எல்லா மனிதர்களிடமும் கடவுளின் அன்பு உறைகின்றது. அதுவே தரும சிந்தனை'' என்றார் ராமகிருஷ்ணர். கடவுள் மனிதனுள் வாழ்கின்றார். தம்மிடமுள்ள கடவுளை நேசிக்காத ஒருவனால் சக மனிதனை உண்மையுடன் நேசிக்க முடியவே முடியாது. இதன் எதிர்நிலையும் உண்மையானதுதான். ஒவ்வொரு மனிதனிலும் உறையும் கடவுளைக் காணாத எவனாலும் உண்மையில் கடவுளைக் கண்டறிய முடியாது.

ஆனால் மனித சமூகம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. மரித்து வருகிறது, புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறது. அது நிராதரவாகத்தான் இருக்க வேண்டுமா? நிச்சயமாக இல்லை. ராமகிருஷ்ணர் சாதிக்காதவற்றை, கர்ம பந்தங்களால், சுருங்கிய வாழ்க்கையில் தம்மால் அடைய இயலாதவற்றை, தமது மாபெரும் சீடரும், வாரிசுமான விவேகானந்தர் நிறைவேற்றட்டும் என்று அவர் விட்டுச் சென்றார். மனிதவர்க்கம் உய்வதற்காக உழைப்பதே விவேகானந்தரின் விசேஷப் பணி என்பதை உணர்ந்து, மனிதக் கூட்டத்திலிருந்து அவரை ராமகிருஷ்ணர் தருவித்தார். உலகில் உழைத்து ஏழை எளியவர்களின் துயரைத் துடைக்கும் பணியைத் தாம் அறியாமலேயே அவரிடம் ராமகிருஷ்ணர் ஒப்படைத்தார். விவேகானந்தர் செயலாற்றுவதில் ஆர்வம் மிகுந்தவர். நிறைய சக்தி படைத்தவர். அதற்கேற்ப, குருவுக்கு முற்றும் மாறுபட்ட ஒரு தன்மை அவருக்கு வாய்த்திருந்தது.

ஒரு நாள், ஒரு மணி கூட வீணடிக்காமல் மிடிமையை அகற்ற உழைக்கவேண்டும் என்று கருதியவர். இப்பணி அவரை இடையறாது துரத்தியது. சில சமயம் ஆசாபங்கத்தால் ஆயாசப்படும் நிலையில்கூட அவரை வைத்துவிட்டது.

ஒவ்வொரு தனிச் சீடனது பக்குவத்துக்கேற்பத் தம் சிந்தனையை உருவாக்கிக் கூறுவது எப்போதும் ராமகிருஷ்ணர் கையாண்ட வழி. மனிதனின் உள்ளுணர்வு ஒரு துல்லியமான சமநிலையில் நிற்பது. அதை அழிக்க அவர் விரும்பவில்லை. அதன் மூலாதாரமான உறுப்புக்களை ஒழுங்கு செய்து, பக்குவமாக உருவாக்குவதில் அவர் விசேஷ கவனம் செலுத்தினார். ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிடுகிறாரோ என்று சில சமயம் தோன்றும் வகையில், ஒவ்வொரு தன்மைக்கும் ஏற்றவாறு, முறைகளை அவர் மாற்றிக்கொண்டதைக் காணலாம்.

சாதாரண வாழ்க்கையின் போக்கை ஒழுங்கு முறை செய்யும் நியதிகளுக்கு அப்பாற்பட்ட வகையில், பரப்பிரம்மத்துடன்

இடையருத தொடர்பு கொண்டு வாழ்ந்து வந்த ஒரு மனிதர் அன்ருட வாழ்க்கையில் எழும் ஆயிரம் விதவிதமான பிரச்னை களின் நெளிவு சுளுவுகளைப் புரிந்துகொண்டு, வழிகாட்டு வதற்குத் தகுதியற்றவர் என்றுதான் கருதுவார்கள். ஆனல் ராமகிருஷ்ணரது விஷயத்தில் உண்மை நிலை அதற்கு நேர் மாருனது. சங்கிலிக்கோவையான மனப்பிராந்திகள் அவருக்கு அடியோடு இல்லை. எனவே, எடுத்த எடுப்பிலேயே வெறுப்பு கள், வெறியுணர்வு, குறுகிய மனப்பான்மை ஆகிய எல்லாமே அகன்று போயின. மனம்விட்டுச் சுதந்தரமாக மதிப்பிடுவ தற்கு எவ்வித இடையூறும் இல்லாததால் எல்லாப் பொருள் களையும், மனிதர்கள் அனைவரையும், அவர் நல்லுணர்வுடன் சிரிக்கச் சிரிக்க எடை போட்டார். சாக்ரடீஸ் போல அவர் நடத்திய சர்ச்சைகள் இன்று கேட்போருக்கு ஆச்சரியத்தை விளைவிக்கும். அவற்றின் புதைபொருளின் போக்கும் இன்ப மான நகைச்சுவையும் தெய்பூட்ட வல்லவை.

இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டுச் செயலாற்றத் தயாராக இருந்த நிலையில், வங்காளத்தின் ஆர்வம் மிக்க சூழ்நிலை அவர்கள் பால் அவரை இரட்டிப்பாக ஈர்த்தது. இரண்டு விசித்திரமான உதாரணங்களைத் தருகிறேன். ஒன்று யானை கதை, மற்றொன்று பாம்பின் கதை. ஒரு புறம் பலாத்காரம், மற்ரெரு புறம் அடியோடு எதிர்க்காமல் இருக்கும் நிலை ஆகிய இரண்டு கடைக்கோடி நிலைகளையும் தவிர்க்க வேண்டுமென்று ராமகிருஷ்ணர் முதல் கதையில் தமது சீடர்களை எச்சரித்தார். இரண்டாவது கதையில், தம்மைத் தாமே அவர் நையாண்டி செய்துகொண்டார். செயலாற்றுவதில் அசிரத்தை, பகுத்தறி வற்ற நடத்தை ஆகிய இரண்டுமே அபாயம் நிறைந்தவை. சர்வ வியாபியான கடவுளைப்பற்றி, இளைஞர்களுக்கு, அவை ரத்தக் கொதிப்பை விளைவிக்கும் தன்மையுள்ளவை. நம்மிட மும், நமது சுற்றத்திலும் சூழலிலும் எந்த அளவு ஆண்டவன் உறைகின்ருர் என்பதையும், அவரது வடிவங்களின் வம்சாவளி களையும், நியதிகளையும் தம்மால் அளவிட்டுக் கூற முடியும் என்று அவர் அடித்துப் பேசுவார்.

### யானை

“ஒரு காலத்தில் ஒரு காட்டில் ஒரு துறவி இருந்தார். அவருக்குச் சீடர்கள் பலர் உண்டு. ஒரு நாள் அவர் சீடர்களிடம் ‘கடவுள் அனைத்திலும் இருக்கிருர். எனவே. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் நாம் தலை சாய்த்து வணக்கம் செய்ய

வேண்டும்' என்று சொன்னர். ஒரு சீடர் யாக அக்கினிக்காக விறகு கொணரச் சென்ருர். 'ஓடுங்கள், ஓடுங்கள். மதம் பிடித்த யானை ஒன்று வருகிறது' என்று திடீரென ஒரு குரல் ஒலித்தது. உடனே எல்லாரும் பயந்து ஓடினர். ஒருவன் மட்டும் அங்கேயே இருந்தவண்ணம், 'யானையும் கடவுளின் ஒரு வடிவந்தானே? அப்படியாயின், நாம் ஏன் ஓடவேண்டும்?' என்று தனக்குள் தர்க்கித்தான். இருந்த இடத்திலேயே அவன் நின்றுவிட்டான். கடவுள் என்று நினைத்து யானைக்கு வணக்கம் செலுத்தினன். துதி பாடினன். 'உன்னைக் காப்பாற்றிக்கொள், உன்னைக் காப்பாற்றிக்கொள்' என்று மாவுத்தன் கோஷமிட்டான். ஆனல் சீடன் ஓர் அடிகூட நகரவில்லை. யானை துதிக்கையால் அவனைக் கைப்பற்றி, வெகுதூரத்தில் வீசியெறிந்துவிட்டது. அதிருஷ்டக் கட்டையான அந்த மனிதன் அசைவற்றுக் கிடந்தான். மூச்சே இல்லை. நிறையக் காயங்கள்.

நடந்ததைக் கேட்டு, பிறருடன் குருநாதர் அவனுக்கு உதவியளிக்க விரைந்தார். அவனை வீட்டுக்குள் கொணர்ந்து காயத்திற்கு மருந்திட்டுக் கவனித்துக்கொண்டனர். நினைவு வந்த பிறகு, 'மாவுத்தன் கோஷத்தைக் கேட்டபோது நீ ஏன் உன்னைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை?' என்று அவனை அவர்கள் கேட்டார்கள். 'உயிர் வாழும் ஒவ்வொரு பொருளிலும் ஆண்டவன் இருக்கின்ருன் என்று நமது குரு இப்போதுதானே போதித்துள்ளார். யானையை நான் கடவுளாக நினைத்தேன். எனவே அவ்விடத்தைவிட்டு நகர நான் விரும்பவில்லை' என்று அந்த இளைஞன் பதில் சொன்னன். அப்போது குருநாதர், 'மகனே, உண்மையில் யானை, கடவுள்தான். ஆனல் மாவுத்தனுகிய கடவுள், நீ பந்தோபஸ்தை நாடவேண்டுமென்று கூறவில்லையா? எல்லாவற்றிலும் கடவுள் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிருர் என்பது உண்மையே. அவர் யானையில் இருக்கிருர் என்றுல், அதேமாதிரி மாவுத்தனிடமும் இருக்கிருர் இல்லையா? எனவே அவனது எச்சரிக்கைக்கு நீ ஏன் மதிப்புத் தரவில்லை?' என்று கேட்டார்.

இளம் வயதினரான விவேகானந்தருடன் ராமகிருஷ்ணர் நடத்திய விஷமம் நிறைந்த உரையாடலின் கருத்து இங்கே தரப்படுகிறது.

### பாம்பு

குரு: (புன்சிரிப்புடன்) நரேந்திரா, நீ என்ன நினைக்கிருய்? கடவுளிடம் ஆழ்ந்து வாழ்கின்றவர்களை இவ்வுலக மக்கள்

பெரும்பாலும் கசப்புடன் நொந்துகொள்கிறார்கள். ஒரு யானை ராஜபாட்டையில் செல்லும்போது, தெரு நாய்களின் கூட்டங்களும், பிற மிருகங்களும் பின்னால் சென்று அதன் காலடியில் குரைத்துக் கோஷமிட்டுக்கொண்டே போகின்றன. ஆனால் அவற்றையெல்லாம் அது பொருட்படுத்துவது இல்லை. தனது சொந்தப் பாதையில் சிறிதும் பிசகாமல் போகின்றது. குழந்தாய், உன் மதிப்பைப் பெற்றுள்ள மக்கள் உன்னைப் பற்றிப் பிறரிடம் கெடுதலாகப் பேசுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நீ என்ன செய்வாய்?

நரேந்திரர்: (அருவருப்புடன்) எனது காலடியில் குரைக்கும் தெரு நாய்கள் என்று நான் மதிப்பேன்.

குரு: (சிரித்துக்கொண்டு) கூடாது குழந்தாய். நீ அவ்வளவு தூரம் போகலாகாது. கடவுள் அசையும் பொருள், அசையாப் பொருள் ஆகிய அனைத்திலும் வசிக்கின்றார். எனவே, எல்லாமே நமது மரியாதைக்கு உரியவைதாம். மக்களுடன் நாம் பழகுங்காலையில், நாம் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். நல்லவர்களுடன் சேர்ந்து பழகவேண்டும். கெட்டவர்களின் தொடர்பைத் தவிர்க்கவேண்டும். புலியிடம் கூடக் கடவுள் இருக்கிறார் என்பது உண்மையே. ஆனால் அந்தக் காரணத்தினால் அதன் கழுத்தைக் கட்டித் தழுவி நமது மார்புடன் புலியை அணைத்துக்கொள்ள முடியுமா?

(சீடர்கள் சிரித்தனர்.)

நரேந்திரர்: அப்போது போக்கிரிகள் ஒருவனை அவமதிக்கையில் ஒருவன் சும்மா இருக்கவேண்டுமா?

குரு: ஒரு காலத்தில் ஒரு மந்தைவெளி இருந்தது. அதில் கால்நடைகளை இடைப்பையன்கள் மேய்த்து வந்தனர். அதே புலனில் ஒரு பயங்கரமான விஷப் பாம்பு வாழ்ந்து வந்தது. ஒரு நாள் ஒரு துறவி அந்தப் பக்கம் வந்தார். குழந்தைகள் அவரிடம் ஓடி, துறவியை 'அந்தப் பக்கம் போகாதீர்கள், அங்கே பாம்பு இருக்கிறது. ஜாக்கிரதை' என்றார்கள்.

'குழந்தைகளே, பாம்பைப்பற்றி எனக்குப் பயமில்லை. தீங்கிழைக்காவண்ணம் அதை முடக்கிவைக்க என்னிடம் மந்திர சக்தி உண்டு' என்றார். அவ்வாறு சொல்லியவண்ணம் அவர் தம் வழியே சென்றார். பாம்பு அவரைப் பார்த்தது. படம் எடுத்த வண்ணம் அவரை நோக்கி விரைந்தது. துறவி ஒரு மந்திரத்தை முணுமுணுத்தார். பாம்பு உடனே அவரது காலடியில்

பணிந்து,. மண்புழுப் போல் சக்தியற்றுக் கிடந்தது. 'நீ ஏன் இம்மாதிரி பிறருக்குக் கெடுதல் விளைவித்துக்கொண்டு வரு கின்றாய்? உனக்கு நான் கடவுளின் புனிதமான பெயரைச் சொல்லிக்கொடுக்கப் போகிறேன். அதை நிருபித்துக்கொண்டு வா. கடவுளை நேசிக்கத் தெரிந்துகொள்வாய். இறுதியில் அவரை நீ காண்பாய். கெடுதலை விளைவிக்கும் ஆவலே உன்னைவிட்டு அகன்று ஓடிவிடும்' என்று பாம்பிடம் கூறினார்.

புனிதமான அந்தத் திருநாமத்தைப் பாம்பின் காதில் அவர் தனிமையில் உச்சரித்தார். பாம்பு பணிந்து கொடுத்து, 'குருவே, ரட்சிக்கப்படுவதற்கு நான் செய்யவேண்டியது என்ன?' என்று கேட்டது. 'புனிதமான திருநாமத்தை ஜபித்துக் கொண்டிரு' என்று பதிலளித்தார் துறவி. 'உயிர் வாழும் எந்தப் பிராணிக் கும் தீங்கு இழைக்காதே. நீ எவ்வாறு நடந்துகொண்டிருக் கிறாய் என்பதைக் காண மீண்டும் நான் வருவேன்' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அவர் . ஏகினார்.

நாட்கள் விரைந்தன. பாம்பு கடிக்கவில்லை என்பதை இடைப் பையன்கள் கண்டுகொண்டனர். அதன்மீது கற்களை வீசினர். அது அமைதியாகவே, கடிக்காமல் மண்புழுப் போல் கிடந்தது. அந்தச் சிறு போக்கிரிகளில் ஒருவன் அதை வாலைப் பிடித்துக் கரகரவென்று தலையைச் சுற்றிப் பல தடவை கற்கள் மீது அடித்தான். பாம்பு ரத்தம் ரத்தமாக வாந்தி எடுத்தது. அது செத்துப் போய்விட்டது என்று சொல்லி விட்டுவிட்டுப் போய்விட்டார்கள் சிறுவர்கள்.

இரவில் பாம்புக்கு நினைவு வந்தது. மெதுவாக அது தன் புற்றுக்கு ஊர்ந்து சென்றுவிட்டது. அதன் உடல் பல துண்டங் களாகச் சிதைந்திருந்தது. பல நாட்களுக்கு வெறும் எலும்புக் கூடாகவே அது இருக்க நேர்ந்தது. அப்புறந்தான் இரை தேடு வதற்கு வெளியே வருவதற்கான சக்தி அதற்கு ஏற்பட்டது. குழந்தைகளிடம் இருந்த பயத்தின் காரணமாக அது இராக் காலத்தில்தான் வெளியே வந்தது. பிராமணன் மந்திர தீட்சை அளித்த காலத்திலிருந்து எந்தப் பிராணிக்கும் கெடுதல் செய் வதை அது நிறுத்திவிட்டது. கூடியவரை சருகுகளையும், புல் பூண்டுகளையும் புசித்து அது வாழ்ந்து வந்தது.

ஒருநாள் துறவி திரும்பி வந்தார். பாம்பை எல்லா இடங் களிலும் தேடினார். அது செத்துவிட்டது என்று குழந்தைகள் கூறினர். பிராமணனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. 'பாம்பு ஆண்டவனது திருநாமத்தை ஜபித்திருக்க வேண்டும். அது

மரணத்தை அண்ட விடாது. அது வாழ்க்கையின் பிரச்னை தீருவதற்கு முன், அதாவது கடவுளைக் காண்பதற்கு முன், மரணத்தை அண்ட விடாது. எனவே அவர் தொடர்ந்து வேண்டினர். பல தடவை பெயர் சொல்லிப் பாம்பை அழைத்தார். அது தன் பொந்திலிருந்து வெளியே வந்து குருவுக்கு வணக்கம் செலுத்தியது. பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது.

துறவி : நீ எப்படி இருக்கிறாய்?

பாம்பு : குருவே, ஈச ... ால் நான் சுகமாய் இருக்கிறேன்.

துறவி : அப்படியாய ... ஏன் நீ எலும்பும் தோலுமாய் இருக்கிறாய்? உனக்கு என்ன நிகழ்ந்தது?

பாம்பு : குருவே, தங்கள் கட்டளைப்படி உயிர் வாழும் எந்தப் பிராணிக்கும் தீங்கு இழைக்காமல் இருக்க முயன்றேன். இலை, சருகுகளை உண்டு வாழ்ந்து வருகிறேன். எனவே நான் இளைத்துப் போயிருக்கலாம்.

துறவி : உணவில் ஏற்பட்ட மாறுதல் மட்டும் உன்னை இந்த நிலைக்குக் கொண்டுவராது. வேறு ஏதோ நடந்திருக்க வேண்டும். எனக்கு அதைச் சொல்.

பாம்பு : ஆ! ஒருக்கால் ஆமாம். சந்தேகமற நான் அதைக் காண முடிகிறது. ஒரு நாள் இடைப்பையன்கள் என்னை வதைத்து விட்டார்கள். எனது வாலைப் பிடித்துப் பல தடவை கடுமையாகக் கல்லின்மீது அடித்தார்கள், அந்தப் பரிதாபமான குழந்தைகள். என்னிடம் ஏற்பட்ட மாறுதலை அவர்கள் அறியமாட்டார்கள். நான் இனிமேல் கடிக்கமாட்டேன் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

துறவி : இது என்ன பித்துக்குளித்தனம், என்ன பித்துக்குளித்தனம்.! உன் பகைவர்கள் இம்மாதிரி உன்னை மோசமாக நடத்துவதை நிறுத்தியிருக்க நீ வகை அறியாதது உன் முட்டாள்தனத்தைக் காட்டுகிறது. கடவுளின் சிருஷ்டிகளைக் கடிக்க வேண்டாமென்றுதானே நான் பல தடவை சொன்னேன்? உன்னைக் கொல்ல விரும்புகிறவர்களை நோக்கி நீ சீறிப் பயமுறுத்தியிருக்கக் கூடாது?

(கண்ணைச் சிமிட்டிய வண்ணம் ராமகிருஷ்ணர் தமது சீடர்களைப் பார்த்தார்.)

அந்தப் பாம்பிடம் துறவி மேலும் கூறினர்:

"நீ படம் எடு, ஆனல் கடிக்காதே. சமூகத்தில் வாழும் மனிதன், அவன் ஒரு பிரஜையாகவும், குடும்பத்தின் தந்தையாகவும் இருக்கும் பட்சத்தில், தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காகக் கெடுதலை எதிர்ப்பதுபோல் பாசாங்கு செய்யவேண்டும். அதே சமயத்தில் தீமைக்குத் தீமையே சரியான ஜவாப் என்று கருதி நடவாமல் மிக ஜாக்கிரதையாக இருந்துவர வேண்டும்."

அத்தியாயம் 2

# நரேன், அன்புமிக்க சீடர்

உயர்நிலையிலிருந்த இந்திய சீடர்களிடையே அசாதாரண மாக ஒருவர் இருந்தார். அவரிடம் தனிப்பட்ட முறையில் ராமகிருஷ்ணர் நடந்துகொண்டார். பின்னர் தமது நம்பிக்கை யாலும், உழைப்பினாலும் உயர்ந்து, பெருமை அடைந்த வர்களில் அவர் மிகச் சிறந்தவர். அந்த இளைஞர் பழகித் தம்மை அறிந்துகொள்ளும் முன்னரே, எடுத்த எடுப்பிலேயே, முதல் தடவை பார்த்தவுடனேயே, அவரை ராமகிருஷ்ணர் பொறுக்கி எடுத்துவிட்டார். அவர் இருந்த நிலைமை, காணக் கூடிய வளர்ச்சி, அதாவது, மனித வர்க்கத்தின் ஆன்மிகத் தலைவராகப் பின்னர் அடையவிருந்த அந்தஸ்தை, அவர் முன் கூட்டியே உணர்ந்திருந்ததுதான் இதற்குக் காரணம். இந்தச் சீடர்தான் நரேந்திரநாத தத்தர் என்னும் விவேகானந்தர்.

அவரது வனப்பு மிக்க தோற்றத்தை இங்கே சற்று விவரிப் போம். நமது உளவியல் அறிஞர்களைப் போல் சாதாரணமான வழிமுறைகளில் இதை என்னால் விளக்கிக் கூற முடியும். ஆனால் இம்மாதிரி விளக்கம் தருவது அவ்வளவு அவசியமாகத் தென்படவில்லை. ஒரு மகத்தான தோற்றமானது, தாம் கண் டதை வெளிப்படுத்தும் சுபாவம் உள்ளதாக அமைகிறது என்பதை நாம் அறிவோம். இனி நடக்கவிருப்பவற்றை முன்கூட்டியே கூறுபவர்கள், எதிர்காலத்தின் உண்மையான படைப்பாளர் என்று ஒருவகையில் கூறலாம். அது நிகழ விருக்கும் தருவாயில் இருப்பதை அவர்கள் முன்கூட்டியே உணர முடிகின்றது. விவேகானந்தரின் விதிப்போக்கு ஒரு பெரிய, வேகமான மலையருவி. ராமகிருஷ்ணருடைய கடாட்ச மானது அதன்மேல் விழுந்து, அதன் முன்னேற்றத்தைத் தடுத்துக்கொண் டிருந்த பாறையை ஓர் அடியில் தகர்த்து, அவரது ஆத்மானுபவம் என்ற நதி பெருக்கெடுத்து ஓடுவதற்கு வழி செய்திராவிடில், அது பூமிக்குள் ஊறி மறைந்திருக்கும்.

“ஒரு நாள் ஜோதிமயமான ஒரு மார்க்கத்தில் என் மனம் சமாதி நிலையில் வெகு உயரப் பறந்து கொண்டிருந்ததைக் கண்டேன்.. விரைவில் அது நட்சத்திரங்கள் நிறைந்த பிரபஞ் சத்தைத் தாண்டி, இன்னும் துல்லியமான கருத்துலகில்

பிரவேசித்தது. அது மேலே மேலே 'சிவ்' என்று எழுகையில், இருபுறமும் கடவுளர்களும் அவர்களுடைய தேவிமார்களும் லட்சிய வடிவங்களுடன் திரண்டிருப்பதைக் கண்டேன். மனசு அந்தப் பிராந்தியத்தின் வெளிவிளிம்புகளை அடைந்தது. அங்கே பிரகாசமான ஒரு தடை காணப்பட்டது. உயிர் வாழும் நிலையைப் புலப்படுத்தும் மண்டலத்தினைப் பரப்பிரம்ம மண்டலத்திலிருந்து அது பிரித்துக் காட்டியது. அந்தத் தடையைக் கடந்து மனதானது விண்ணுலகில் பிரவேசித்தது. அங்கே ஜீவராசிகள் எதுவுமே கண்களுக்குப் புலப்படவில்லை. அந்த ஆனந்தமயமான மண்டலத்தைக் கடவுள்களால் கூட எட்டிப் பார்க்க முடியவில்லை. அவர்கள் வெகுதூரம் கீழே தமது இருக்கையை வைத்துக்கொண்டிருந்தனர்.

"அடுத்தகணம் அங்கே ஏழு முதிய ரிஷிகள் சமாதி நிலையில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். இவர்கள் மக்களை மட்டுமன்றிக் கடவுளரையும் ஞானத்திலும், புனிதத்தன்மையிலும், தியாகத்திலும், அன்பிலும் மிஞ்சியிருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றியது. வியப்பில் ஆழ்ந்து போனேன். அவர்களது அருமை பெருமைகளைப் பற்றிச் சிந்தித்தேன். அப்போது ஜோதிமயமான அந்தப் பிராந்தியத்தின் ஒரு பகுதி இறுகி, ஒரு தெய்விகக் குழந்தை வடிவத்தை எடுத்துக்கொண்டது. குழந்தை ஒரு ரிஷியிடம் வந்து தனது அழகிய கரங்களால் அவரது கழுத்தைக் கட்டிக்கொண்டது. தேனிலும் இனிய குரலில் அவரிடம் பேசி, சமாதி நிலையிலிருந்த அவரது மனத்தை வேறு திசையில் இழுக்க அது முயன்றது. அந்த மாய ஸ்பரிசம் தூய நிலையிலிருந்த ரிஷியை விழிப்புறச் செய்தது. தம் கண்களைச் சிறிது திறந்து அந்த அற்புதக் குழந்தையைப் பார்த்தார். அவரது முகம் மலர்ந்தது. தமது இதய பொக்கிஷமாக அவர் அந்தக் குழந்தையை மதித்திருக்க வேண்டுமென்பது தெரிந்தது.

"விசேஷ மகிழ்ச்சியுடன் அந்த விசித்திரமான குழந்தை அவரிடம், 'நான் கீழே செல்கிறேன். நீங்கள் என்னுடன் கூட வரவேண்டும்' என்று கூறியது. ரிஷி வாய் திறக்கவில்லை. ஆனால் அவரது மென்மையான மௌனம் சம்மதத்தை அளித்தது. குழந்தையை அவர் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார். மீண்டும் சமாதியில் ஆழ்ந்துவிட்டார். அவரது உடலிலும் மனதிலும் ஒரு சிறு பகுதியானது பிரகாசமான ஜோதியாக இப்பூவுலகை நோக்கி இறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். நரேந்திரரை நான் பார்த்தவுடனேயே அவர்தான் அந்த ரிஷி என்பதை அடையாளம் கண்டுகொண்டேன்."

ராமகிருஷ்ணரது மதிப்பு தரமானது. இவ்வுலகுக்குத் திரும்பி அதில் யாத்திரையை மேற்கொண்டு பணியாற்ற அவருக்கு உடலில் வலிமையும் வசதியும் தேவைப்பட்டன. மெய்க் காவலர் அவசியமாயினர். அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்க ஒரு தலைவர் தேவையாக இருந்தது. தவிர, உலகம் அனைத்தையும் நேசிக்கும் விசால இருதயம் படைத்தவராக அவர் இருக்கவேண்டும். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை. அவரது தூரதிருஷ்டி பலித்தது. அவரது பேராவலின் பலம் வெற்றி கண்டது. அதுமட்டும் அல்ல. வங்காளம் அதற்கான பக்குவ நிலையை அடைந்திருந்தது. அவரது சங்கநாதத்துக்குத் துடிப்புடன் அது காத்துக்கொண்டிருந்தது. இயற்கையே விவேகானந்தரை அந்த நூற்றுண்டுக்கு ஈன்றெடுத்துக் கொடுத்ததுபோல் தோன்றியது. அத்தகையதோர் ஆன்மா ஜனிக்க வேண்டுமென்ற சங்கல்பத்தில் மலையே சூல் கொண்டது போல் இருந்தது.

அப்போது நரேந்திரர் ஒரு வழிமுறையும் இல்லாதவராக, மனவேதனை நிறைந்தவராக, புயலில் அடிபட்டவராக வாலிபப் பருவத்தில் இருந்தார். அவர்தாம் எதிர்காலத் தலைவர், தாம் எதிர்நோக்கி வந்த சமயப் பிரசாரகர் என்பதைக் கண்டு கொண்டதற்காக ராமகிருஷ்ணரைப் பாராட்டவேண்டும்.

ஆரம்பக் காலத்தில் அவர்கள் சந்தித்த கதையை முழுதும் சொல்லவேண்டும். தம்மைத் தேர்ந்தெடுத்ததற்காக, தம்முடன் இணைத்துக் கொண்டதற்காக ராமகிருஷ்ணரிடம் நரேன் எவ்வளவு நன்றியுள்ளவராக இருந்தார் என்பதை அப்போதுதான் வாசகர்கள் அறிவர்.

ராமகிருஷ்ணரைச் சுற்றிச் சஞ்சரிக்கும் உபக்கிரகமாக இந்த இளம் மேதை எவ்வாறு ஈர்க்கப்பட்டார் என்பதை முதலில் பார்ப்போம்.

அவர் ஒரு பெரிய க்ஷத்திரிய பரம்பரையினர். அவரது வாழ்நாள் நெடுக அந்த ஜாதிக்குரிய தன்மையைக் காணலாம். 1863 ஜனவரி 12-ஆம் தேதி அவர் கல்கத்தாவில் பிறந்தார். அவரது தாய் நன்கு கற்றறிந்தவள். ராஜகளை படைத்தவள். மகத்தான ஹிந்து இதிகாசங்களைக் கற்றறிந்து, வீர உணர்வுடன் மிளிர்ந்தவள். அவருடைய தந்தை படாடோபமாக, ஓய்வே இல்லாத ஒரு வாழ்க்கையை நடத்தியவர். அவரது சுதந்தர உணர்வு வால்டேரின் தன்மையை ஒத்தது. ஜாதி விஷயத்தில் அவருக்கு அவ்வளவு பற்றுதல் கிடையாது. அவரது

விரிவான மனிதாபிமான உணர்ச்சியும், தாம் மேலானவர் என்று இருந்து வந்த ஒரு பிரக்ஞையுமே அதற்குக் காரணம். அவரது பாட்டன் பணக்காரர், பண்புமிக்கவர். மனைவி, மக்கள், உயர்ந்த அந்தஸ்து, செல்வம், சமூக உறவுமுறைகள் ஆகிய அனைத்தையும் இருபத்தைந்தாவது வயதில் துறந்து காடு சென்று துறவியாகிவிட்டவர். அன்று முதல் பிறகு யார் கண்களிலும் அவர் தென்படவே இல்லை.

ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்திய, கலை உணர்ச்சி படைத்த ஓர் இளம் அரசனைப்போல் நரேந்திரருடைய குழந்தைப் பருவமும், இளமையும் கழிந்தன. அவருக்குப் பலவகைத் திறன்கள் உண்டு. உழைத்து எல்லாவற்றையும் போஷித்தார். சிங்கத்தைப் போன்ற சரீர அழகு, மானையொத்த லளிதம், அளவுகடந்த தைரியம், வஸ்தாதுபோன்ற உடலமைப்பு. அவர் எல்லாத் தேகாப்பியாசங்களிலும் கைதேர்ந்தவர். மற்போர், நீச்சல், படகு ஓட்டுதல், குதிரைச் சவாரி எல்லாவற்றிலும் நிபுணர். இளைஞர்கள் அவரை விடாது வட்டமிட்டனர். அவரும் அக்காலத்து மோஸ்தர்களை நிர்ணயிப்பவராக இருந்தார்.

சமயத் தொடர்புள்ள ஆடல்களில் திறம்பட ஈடுபட்டார். கம்பீரமான சாரீரம். பின்னர் அது ராமகிருஷ்ணரையே ஆட்கொண்டது. புகழ்பெற்ற ஹிந்து, முஸ்லிம் வித்வான்களிடம் நான்கு ஐந்து வருஷ காலம் வாய்ப்பாட்டும், வாத்திய சங்கீதமும் பயின்றார். தாமே மெட்டு அமைத்துப் பாடுவார். இந்திய சங்கீதத்தின் விஞ்ஞானத்தையும் தத்துவத்தையும்பற்றி முழு ஆதாரங்களுடன் கூடிய ஒரு கட்டுரையை எழுதி அவர் வெளியிட்டார். சங்கீதத்தில் அவர் கரைகடந்த புலமையுள்ளவர் என்று எல்லோரும் மரியாதை செலுத்தினர். இசையை எப்போதுமே கோயிலின் தலைவாயிலாக அவர் கருதினார். கோயில், ஆண்டவனது உறைவிடம். கல்லூரியில் விசேஷ மதிநுட்பத்துடன் இவர் புகழ் எய்தினார். விஞ்ஞானங்களில் வான இயல், கணிதம், தத்துவம், இந்திய மொழிகள், மேலை பாஷைகள் அனைத்தையும் ஆர்வத்துடன் கற்றார். ஆங்கில, சம்ஸ்கிருதக் கவிஞர்களைச் சுவைத்தார். கிரீன், கிப்பன் ஆகியோரது வரலாற்று நூல்களைக் கற்று அறிந்தார். பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியன் மாட்சியும் விசேஷமாக அவரைக் கவர்ந்ததுண்டு. இந்தியக் குழந்தைகள் பலரைப் போலவே, அவரும் பிள்ளைப் பிராயத்திலிருந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தார்.

இராக் காலங்களில், ''இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டில்'' என்ற நூலையும், வேதாந்த நூல்களையும் பார்த்து

வந்தார். சித்தாந்த சர்ச்சைகளை அவர் பெரிதும் விரும்பினார். வாதப்பிரதிவாதம், குணதோஷ விமரிசனம், நல்லது கெட்டது என்று பாகுபடுத்தி அறிவது—இவற்றில் அவருக்கிருந்த விசேஷ ஆர்வந்தான், பின்னர் விவேகானந்தர் என்ற பெயர் அவருக்குக் கிடைத்தற்குக் காரணமாயிற்று. கிரேக்கப் பண்பாட்டுடன், சௌந்தரிய உணர்வையும், இந்தோ-ஜெர்மன் சிந்தனைச் செறிவையும் ஒன்றுக்கொன்று இசைவான ஒருருவாக அவர் சமைக்க முயன்றார். அவர் வரம்பு கடந்த பிரபஞ்ச அபிமானி. ஐரோப்பியக் கலைஞர்களின் லட்சிய உயர்நிலைகளை எய்தியவர். எல்லா வடிவங்களிலும் வாழ்க்கை முழுவதும் அவரது ஆன்மிக சாம்ராஜ்யம் பரந்துகிடந்தது. சமயம் ஆழமாக வேர்விட்ட ஆன்மாவும், பரிபூரணத் தூய்மையும் எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக அமைந்தன. அழகே வடிவமான இந்த மகாபுருஷனை, வாழ்க்கையை இனிக்க வைக்கும் வன்மைகளும் இன்பங்களும் நெருங்கி வந்தன. தங்குதடை இல்லை. உணர்ச்சி மிகுதியுள்ளவர். எனினும், அவர் மிகக் கண்டிப்பான பிரம்மசரியத்திற்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார். எந்தச் சமயப் பிரிவுடனும் பிணைத்துக்கொள்ளாமல், உடலும் உள்ளமும் தூய்மையுடன் விளங்கினால் மட்டுமே ஆன்ம பலம் கிடைக்கும், அதுவே வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் ஊடுருவி நிற்கும். ஆனால் சிறிது அசுத்தம் கலந்துவிட்டால் அதன் சக்தி மங்கி விடும் என்பதைச் சுயமாகவே அவர் தெளிந்து உணர்ந்திருந்தார். தமக்கு ஒரு பெரும் பணியை ஆண்டவன் விதித்திருக்கிறான் என்ற ஒரு பிரக்ஞையுடன்கூட, ஆனால் அதன் திசை என்னவென்று தெரியாமல் அவர் காணப்பட்டார். எனினும் அதற்கான தகுதியைப் பெற்று அதை அடைந்தே தீருவது என்று உறுதி கொண்டார்.

அவரது மனமானது ஒரு ஸ்திரமான நிலையை அடைவதற்கு முன்னர் இவ்வளவு அரும்பெரும் திறன்களும், அலைமோதிய உணர்வுகளுமாகச் சேர்ந்து அந்நிலையைத் தோற்றுவித்தன. பதினேழு வயது முதல் இருபத்து ஒன்று வயது வரை (1880 முதல் 1884 வரை) அவர் பல்வேறு நெருக்கடிகளைப் புத்திபூர்வமாகச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவை ஒவ்வொன்றும் அதிக உக்கிரத்துடன் தாக்கின. இறுதியாக, திடமான சமய உணர்வு ஏற்றம் அடைந்து, நெருக்கடிகளை யெல்லாம் அகற்றி விட்டது.

ஸ்டுவர்ட் மில்லின் சமயக் கட்டுரைகளைப் படித்து மனமுருகினார். பிரம்ம சமாஜ வட்டாரங்களில் பழகி அடைந்த

மேம்புல் மேய்கின்ற தெய்வ நம்பிக்கையும், நம்பிக்கை மிகுதியும் அவரை விட்டு அகன்றன. இயற்கையில் தாம் கண்ட தீமையின் வடிவம் அவருக்கு அருவருப்பைக் கொடுத்தது. ஹெர்பர்ட் ஸ்பென்சருடன் அவர் கடிதப் போக்குவரத்து வைத்திருந்தார். அவரது தத்துவங்களை ஏற்றுக்கொள்வதற்கு அவர் முயன்றது எல்லாம் வீணாயிற்று. தமது கல்லூரி வகுப்பிலிருந்த வயதான மாணவர்களை, முக்கியமாக விரஜேந்திர நாத்சீல் என்பவரை ஆலோசனை கேட்டார். தமது அவநம்பிக்கையைப் பற்றிய முழு உண்மையை அவரிடம் மனம் விட்டுச் சொல்லி, உண்மையைக் கண்டறிவதில் தமக்கு வழி காட்டும்படி மன்றாடினார். சீல் சொல்லித்தான் அவர் ஷெல்லியைப் படித்தார். அந்தக் கவிஞர் வருணித்துள்ள கடவுளின் பல்வகைத் தோற்ற அலைகளில், குமுறிக்கொண்டிருந்த அவரது ஆன்மா மூழ்கி எழுந்தது. பரபிரம்மத்தின் சேவையில் அவரை ஈடுபடுத்த வேண்டுமென்று சீல் விரும்பினார்.

பரப்பிரம்மம் என்று அவர் கருதியது பகுத்தறிவுத் தெய்வம். விரஜேந்திரரது பகுத்தறிவு வாதம் ஒரு விசேஷத் தன்மை படைத்தது. வேதாந்தத்தில் சுத்த அத்வைதம், கடவுள் என்பது ஒரு துல்லியமான கருத்து என்று ஹெகெல் தந்த காரிய காரண விளக்கம், சுதந்தரம்-சமத்துவம்- சகோதரத்துவம் என்று பிரெஞ்சுப்புரட்சி உபதேசித்த தத்துவம், ஆகிய எல்லாமாகச் சேர்ந்து அவரது பரப்பிரம்மக் கருத்தை உருவாக்கின. தனி நபருக்கு ஏற்றம் கொடுக்கும் சித்தாந்தம் தீமையானது, பிரபஞ்சம் அனைத்திற்கும் பொருந்தக்கூடிய பகுத்தறிவுத் தத்துவமே நல்லது என்று அவர் நம்பினார். அப்படியாயின் கலப்பற்ற பகுத்தறிவு வெளிப்படையாக விளக்கம் பெறுவது அத்தியாவசியம். இதைச் செய்வது எப்படி என்பதுதான் இக்காலத்துப் பெரிய பிரச்சினை. புரட்சி மூலம் இதைச் செய்து முடிக்கலாம் என்று நினைத்தார் விரஜேந்திரநாத், அவரது பகுத்தறிவு வாதம் புரட்சித் தன்மையும் சாம்ராஜ்யத் தன்மையும் படைத்தது.

பிறர்மீது ஆதிக்கம் செலுத்தும் சுபாவமுடைய நரேந்திரருக்கு இதன் சில அம்சங்கள் உகப்பாயிருந்தன. ஆனால் அவர் கொந்தளிப்பே உருவான ஒரு பிரகிருதி. அவரை அத்தகைய வரம்புக்குள் மடக்கிப் போட முடியாது. பிரபஞ்சம் அனைத்திற்கும் பொருந்தும் பகுத்தறிவு வாதத்தின் மேலாதிக்கத்தை ஏற்க அல்லது திணிக்க அவரது மதிநுட்பம் விரும்பவே செய்தது. தனிநபரின் உயர்வுத் தத்துவத்தைப் புறக்கணித்து, ஒழுக்க உயர்வை அடிப்படையாகக் கொள்ளவே அவரது மனம் நாடி

யது. ஆனால் அவரது வாழ்க்கை அதற்கு இடம் தரவில்லை. உலகின் அழகும் அதன் ஆசாபாசங்களும் அவரை மயக்கி விட்டன. இதையெல்லாம் அவரிடமிருந்து விலக்கி விட வேண்டுமென்று கோருவது, ஓர் இளம் காட்டுப்புலி மீது சைவ உணவைத் திணிப்பது போலாகும். அவரது உள்ளத் துயரும் வேதனையும் இருமடங்காயின. விஸ்தாரமான பகுத்தறிவை, புஷ்டியில்லாத ஒரு கடவுளை அவரை ஏற்கச்செய்வது வெறும் கேலிக்கூத்தாக இருந்தது. அவர் ஓர் உண்மையான ஹிந்து. வாழ்க்கை முதன்மையாகக் கண்ணெதிரில் தென்படுவது என்பதை உணர்ந்தார். அது முழு உண்மையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பரப்பிரம்ம ஞானமும் சொரூபமும் அவருக்கு ஏற்பட்டாகவில்லை. புனிதமான ஒரு குரு தேவையாக இருந்தது. ''நான் ஆண்டவனைக் கண்டேன், அவரை ஸ்பரிசித்தேன், அவராகவே இருந்தேன்'' என்று சொல்லக்கூடிய ஒரு குரு தேவையாக இருந்தது. பிதிரார்ஜிதமாகக் குணதோஷ உணர்வை அவர் பெற்றிருந்தார். ஐரோப்பியச் சூழ்நிலைகள் அவரது உள்ளத்தைப் போஷித்தன. எனினும் உள்ளமும் புலன்களும் காட்டும் வழியில் செல்ல அவரது புத்தி இடம் தரவில்லை. ராமகிருஷ்ணருக்கு எதிரிடையாக அவரிடம் தோன்றிய முதல் உணர்வுகளிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம்.

அக் காலத்தில் வாழ்ந்த இளம் வங்க அறிவாளிகளைப் போலவே அவரையும் கேசவ சந்திர சென்னின் ஜோதி ஈர்த்தது. அவரது புகழ் அப்போது உயர்நிலையில் இருந்தது. அதைக் கண்டு நரேன் பொருமை அடைந்தார். தாமே கேசவராக இருக்கலாகாதா என்று அவர் எண்ணியது உண்டு. புதிய சித்தாந்த சமாஜத்திடம் ஈடுபாடு கொண்டு அதில் சேர்ந்தார். புதிய பிரம்மசமாஜ உறுப்பினர்களில் ஒருவரானார். இந்தச் சமாஜத்தின் திட்டவட்டமான சீர்திருத்தங்கள் அவருக்கு முற்றும் உடன்பாடாக இருந்திருக்க முடியாது என்று ராமகிருஷ்ண மிஷன் ஸ்தாபனத்தினர் பின் கூறியுள்ளனர். வைதிக ஹிந்து தர்மத்திடம் இருந்துவந்த கண்ணியமான துவேஷங்களுக்குக்கூட அவை புறம்பானவையாக இருந்தன. எனினும் ராமகிருஷ்ண மிஷன் ஸ்தாபனத்தினர் கூறுவதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. இளம் நரேன் துடிதுடிப்பு நிறைந்தவர். முழு நாசம் வருவதாயினும் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்பவர். எனவே, உருவ வழிபாட்டுக்கு எதிரிடையானவர்கள் என்பதற்காகத் தம் புதிய சகாக்களை அவர் கண்டிக்கக் கூடியவர் அல்லர். பின்னர் பெரும்பாலும் ராமகிருஷ்ணரது செல்வாக்கின்

விளைவாக, அவர் கால நிலைக்கு ஒவ்வாத, தொன்மையான நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் ஏற்று வணங்கலானார். அவை நெடுநாளைய சம்பிரதாயத்துக்கு இசைவாக இருந்து, சமுதாயத்தின் சிந்தனையில் கணிசமாக ஜீர்ணிக்கப்பட்டு இருந்தால் போதும் என்பது அவரது கருத்து. ஆனால் மனத்துக்குள் பெரிய போராட்டம் இல்லாமல் இந்த மாறுதல் அவருக்கு முதலில் ஏற்படவில்லையென்று நான் திடமாக நம்புகிறேன். ராமகிருஷ்ணரிடம் புத்திபூர்வமான அவநம்பிக்கை அவருக்கு முதலில் ஏற்பட்டதை இதைக் கொண்டு விளக்கலாம். ஜாதி, இனம், சமயம் என்ற வேறுபாடுகள் இல்லாமல் இந்தியப் பாமர மக்களுக்குக் கல்வி புகட்டி அவர்களை ஒன்றுபடுத்துவதற்காகப் பிரம்ம சமாஜ இயக்கத்தில் அவர் சேர்ந்தார். கிறிஸ்துவ மிஷனரிகளைவிட இந்தச் சமாஜத்தினர் சிலர் வைதிக ஹிந்து சமயத்தை மிகக் கடுமையாகத் தாக்கினர். அம்மாதிரி கண்டிப்பவர்கள் குறுகிய உள்ளம் படைத்தவர்கள், புத்திபூர்வமாகச் செயலாற்றுதவர்கள் என்பதை அவரது மதி நுட்பம் விரைவில் கண்டுகொண்டது. அப்படி கண்டித்தோரிடம் மோசமான வேறு குறைகளையும் அவர் கண்டார். தமது உள்ளுணர்வு மட்டுமன்றித் தேசீயப் பெருமையும் அவர்களால் தாக்குண்டதாக நினைத்தார். மேலைநாடுகள் தந்த அறிவைச் சரிவர ஜரித்துக்கொள்ளாமல், இந்தியர்களது விவேகத்தைப் புறக்கணிக்கும் ஏற்பாட்டிற்குத் தாம் இசைவு கூற முடியாது என்றார். எனினும் பிரம்ம சமாஜக் கூட்டங்களுக்கு அவர் சென்று வந்தார். எதிலும் மனசு அமைதி அடையவில்லை.

அடுத்தபடியாக, ஒரு துறவியின் வாழ்க்கையை நரேன் மேற்கொண்டார். இருள் படர்ந்த, ஓதம் நிறைந்த அறையில் வசித்தார். சுற்றிப் புத்தகங்கள்—நடுவில் அவர் படுக்கை. தாமே தேநீர் தயாரித்துக் கொள்வார். இராப் பகலாகப் படிப்பும் தியானமுந்தான். மிகக் கடுமையான தலைக்குத்தலும் வலியும் ஏற்பட்டன. முரண்பாடு நிறைந்த அவரது தன்மை ஒரு சமநிலையை அடையவில்லை. இந்த மனப்போராட்டம் தூக்கத்திலும் அமைதியின்மையை அளித்தது. அவரே கூறுகிறார்: "இளவயது முதல் ஒவ்வோர் இரவும் கண்ணுறங்கினவுடன் இரண்டு கனுக்கள் உருவெடுக்கத் தொடங்கின. ஒன்றில், நான் இவ்வுலக மகான்களில் ஒருவனாக என்னைப் பார்த்தேன். செல்வம், கௌரவம், அதிகாரம், கீர்த்தி எல்லாம் மிகுந்தவனாகக் கண்டேன். இவற்றை எல்லாம் அடைவதற்கான தகுதி எனக்கு இருப்பதாக உணர்ந்தேன். ஆனால் அடுத்த க்ஷணத்திலேயே மற்றொரு தோற்றம் தென்பட்டது.

இவ்வுலக வாழ்க்கையைச் சேர்ந்த எல்லாப் பொருள்களையும் துறந்து, எளிய உடையை அரைக்கசைத்து, பிச்சையெடுத்து உண்டு மரத்தடியில் உறங்குபவனுக என்னைப் பார்த்தேன். அம் மாதிரி வாழ்வதற்கான பழங்காலத்து ரிஷிகள் போன்ற தகுதியும் எனக்கு உண்டு என்று நினைப்பேன். இந்த இரண்டு தோற்றங்களில் துறவித் தோற்றம் மேலோங்கியது. அதன் மூலமாகத்தான் மனிதன் பேரானந்தம் எய்த முடியும் என்பதை உணர்ந்தேன். அதை முன்கூட்டியே சுவைக்கும் உணர்வில் தூங்கினேன். ஒவ்வொரு நாளும் இதுவே என் அநுபவம்.''

ராமகிருஷ்ணரைக் காண்பதற்காகச் சென்ற தருணத்தில் நரேன் இருந்த நிலைமை இதுதான். இந்தியாவும் ஐரோப்பாவும் கலந்து பழகும் அந்தப் பெருநகரில் சமயத் துறையில் வல்லுநர்களாக விளங்கிய எல்லாரையும் நரேன் கண்டு தரிசித்தாகி விட்டது. ஆனல் திருப்தி ஏற்படாமல் திரும்பி வரவேண்டிய தாயிற்று. அவர் தேடியது கிட்டவில்லை. கிட்டியதைச் சுவைத்து வேண்டாமெனப் புறக்கணித்துவிட்டார். திக்குத் தெரியாமல் சென்றுகொண்டிருந்தார்.

நரேனுக்கு வயது பதினெட்டு. பல்கலைக் கழகத்தில் முதல் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தார். 1880 நவம்பரில் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய சுரேந்திரநாத் மித்ரா என்ற செல்வந்த நண்பரின் வீட்டில் ஒரு விசேஷம் நிகழ்ந்தது. அதற்கு நரேன் சென்றிருந்தார். அங்கே சமயச் செறிவு கொண்ட ஓர் அழகான கீதத்தைப்பாடினர். அங்கு வந்திருந்த ராமகிருஷ்ணரது 'கழுகுப் பார்வை' அவர் மீது விழுந்தது. அதிருப்தியில் உழன்றுகொண்'டிருந்த அவரது ஆன்மாவை முதல் தடவை யாக அந்தக் கண்கள் ஊடுருவின. தக்ஷிணேசுவரம் வந்து தம்மைக் காணுமாறு நரேனை அவர் பணித்தார்.

சிந்தனைச் சிறப்பு இல்லாமல் மேம்புல் மேயும் தன்மையுள்ள சில நண்பர்களுடன் நரேன் தக்ஷிணேசுவரம் அடைந்தார். உள்ளே வந்து, சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல், எதையும் பாராமல், கேளாமல், தமது சொந்த சிந்தனையில் ஆழ்ந்தவண்ணம் அவர் உட்கார்ந்திருந்தார். அவரைக் கவனித்துவந்த ராமகிருஷ்ணர் பாடும்படி கேட்டுக்கொண்டார். நரேன் பாடினர். அதில் துக்கம் தோய்ந்திருந்தது. நரேனைப் போலவே ராமகிருஷ்ணரும் இசையின் தீவிர பக்தர். எனவே அதைக் கேட்டு அவர் பரவசமானர். இதைப் பற்றி நரேன் கூறுவதைக் கேட்கலாம்:

"நான் பாடி முடித்த பிறகு அவர் திடீரென எழுந்திருந்து என் கைகளைப் பற்றிக்கொண்டு, வடக்குத் தாழ்வாரத்திற்கு என்னை இட்டுச் சென்றார். பின்னால் கதவைத் தாளிட்டோம். நாங்கள் தனிமையில் இருந்தோம். யாராலும் எங்களைக் காண முடியாது: அவர் ஆனந்தப் பெருக்கினால் அழுததைக் கண்ட நான் பெரிதும் வியப்படைந்தேன். என் கரங்களைப் பற்றிக் கொண்டு அன்பு ததும்பப் பேசினார். நெடுங்காலம் பழகியவ போல் என்னுடன் பேசினார். அவர் சொன்னார்: 'நீ இவ்வளவு காலம் தாழ்ந்து வந்திருக்கிறாயே? இவ்வளவு காலம் நீ ஏன் என்னைக் காக்க வைக்கவேண்டும்? இது குரூரம். பிற மக்களது வீண் வார்த்தைகளைக் கேட்டு என் செவிகள் அலுத்துப் போய்விட்டன. எனது உள் அநுபவங்களைத் தகுதியுள்ள ஒரு வரது உள்ளத்தில் கொட்டி நிரப்ப வேண்டுமென்று எவ்வளவு துடிதுடிப்புடன் நான் காத்துக்கொண்டிருக்கிறேன்!' இதை அழுதவண்ணம் அவர் சொன்னார். பிறகு என் முன் கூப்பிய கரங்களுடன் நின்று அவர், 'சர்வேசா, நீதான் புராதன ரிஷியாகிய நரன், நாராயணனது அவதாரம். மனிதவர்க்கத்தின் துயரைத் துடைக்க உலகில் மறுபிறப்பு எடுத்தவன் என்பதை அறிவேன்' என்று அவர் சொன்னது என்னைப் பெருவியப்பில் ஆழ்த்தியது. நான் காண வந்தது எதை என்று நினைத்துப் பார்க்கலானேன். அவரது மனக்கலக்கத்தை உதறி எறிந்தாக வேண்டும். விசுவநாத தத்தரின் மகனாகிய என்னைப் பார்த்து இவ்வாறு பேச அவருக்கு என்ன துணிவு? ஆனால் வெளிக்கு மனத்தில் சஞ்சலம் இல்லாதவன்போல் இருந்துகொண்டு அவரைப் பேசவிட்டேன். மீண்டும் என் கைகளை எடுத்துக் கொண்டு, 'மீண்டும் என்னைத் தனிமையில் காண விரைவில் வருகிறேன் என்று வாக்குறுதி கொடு' என்றார்......"

தமது விசித்திரமான மனிதரிடமிருந்து விடுவித்துக் கொள் ளும் நோக்கத்துடன் மறுபடி வருவதாக நரேன் கூறினார். ஆனால் மீண்டும் ஒருக்காலும் திரும்புவது இல்லையென்று தம் மனத்துக்குள் உறுதி பூண்டார். இருவரும் எல்லாருக்கும் உரிய பொது அறைக்குச் சென்றார்கள். அங்கு மற்றவர்களும் இருந் தனர். நரேன் எட்ட உட்கார்ந்து ராமகிருஷ்ணரது வடிவத்தை உற்று நோக்கினார். அவரது வழிமுறைகளிலோ, பேச்சிலோ புதுமை எதுவும் காணோம். ஆனால் உள்ளுறக் காரிய காரண இசைவு மட்டும் தென்பட்டது. முற்றும் துறந்த புனிதமான வாழ்க்கை, எடுப்பான உண்மையுணர்வு ஆகியவைதாம் அந்த இசைவுக்குக் காரணம் என்று நரேன் நினைத்தார். இரவில் அவர் தனிமையில் கடவுளை அடைவதற்குச் செய்த முயற்சிகளை

நினைந்து கூறுவதுபோல் ராமகிருஷ்ணர் பேசினர்: "கடவுளை அடைய முடியும்; அவரைக் காண முடியும்; உன்னைக் கண்டு நான் பேச முடிவதுபோல் அவரையும் கண்டு பேசமுடியும். ஆனால் அதற்கான சிரமத்தை மேற்கொள்ள யார் இருக்கிறார்கள்? மனைவி, மக்கள், உடைமை ஆகியவற்றிற்காகப் போலிக் கண்ணீர் உகுப்பார். ஆனல் தெய்வத்திடம் அன்பு காட்டி அதற்காகக் கண்ணீர்விட யார் இருக்கிறார்கள்? உண்மையுணர்வுடன் அவனுக்காக அழுவானேயாகில் ஆண்டவன் தன்னைத் தானே அவனுக்குக் காண்பித்துக் கொள்ளுகிறன்."

இவை வெறும் பொருளற்ற சொற்கள்அல்ல என்ற மெய்யுணர்வுடன் அவர் பேசியது தெளிவுபட்டது. அது மட்டுமல்ல. அவர் உண்மையை நிருபணம் செய்தவர்போல் பேசினர். எளிமையும், சாந்தமும் கொண்ட இந்த ரிஷி இப்படியெல்லாம் கண்டு அநுபவித்தவராக இருக்க முடியுமா என்று தம் மனத்தைத் திடப்படுத்திக்கொள்ள நரேனல் முடியவில்லை. தமக்குள் அவர் சொல்லிக் கொண்டார்: 'அவர் தமக்குத் தாமே பேசிக்கொள்ளும் பித்துக்கொள்ளி. ஆனல் அவரிடம் ஒரு மகத்துவமும் இருக்கிறது. அவர் பித்தராக இருக்கலாம், ஆனல் மரியாதைக்கு உரியவர்.'

குழப்பம் நிறைந்த சிந்தனையுடன் அவர் தக்ஷிணேசுவரத்தை விட்டுப் போனர். ராமகிருஷ்ணருடன் அவரது உறவு முறையைப் பற்றி அப்போது கேட்டிருந்தால், அவை அன்றைய நிலையிலேதான் என்றும் இருக்கும் என அவர் பதில் கொடுத்திருப்பார். எனினும், அன்றைய விசித்திரமான மனத்தோற்றம் அவருள் புகுந்து வேலை செய்தது. ஒரு மாதம் கழித்துக் கால் நடையாகத் தஷிணேசுவரத்திற்கு அவர் திரும்பினர்.

"தமது சிறிய படுக்கையில் அவர் தனியாக உட்கார்ந்திருந்தார். நான் வந்தது அவருக்கு மகிழ்ச்சி யளித்தது. அன்புடன் அழைத்து, தமது அருகில் படுக்கையில் அமர்த்திக் கொண்டார். ஒரு கணத்தில் ஏதோ ஒரு மன எழுச்சி அவரைப் பிடித்து உலுக்கியதைக் கண்டேன். என்னை நெட்டுக்குத்தாகப் பார்த்தார், மனத்துக்குள் முணுமுணுத்தார். நெருங்கி வந்தார். முன்போல் இந்தத் தடவையும் ஏதோ கோமாளித்தனமான ஒரு கருத்துரையைச் சொல்லப் போகிறர் என்று நினைத்தேன். ஆனல் நான் தடுத்து நிறுத்துவதற்கு முன் தமது வலது காலை என் உடல் மீது வைத்துவிட்டார். அந்தத் தொடர்பு பயங்கரமாக இருந்தது. முழு விழிப்புடன் இருக்கும் நிலையில், அந்த அறையின் சுவர்களும், மற்ற அனைத்தும்

சுழன்று சுழன்று ஒன்றுமே இல்லாத சூன்ய நிலையில் மறை வதைக் கண்ணுற்றேன். பெயரிட்டுச் சொல்ல இயலாத ஒரு சூன்யத்தில் பிரபஞ்சம் அனைத்தும், எனது தனித் தன்மை யும், அநேகமாக மறைந்துவிட்டதைக் கண்டேன். எல்லா வற்றையும் அது விழுங்கிவிட்டது. நான் பீதியுற்றேன். மரணம் நெருங்கிவிட்டதாகவே எண்ணினேன். 'நீங்கள் என்ன செய்கிறீர்கள்? வீட்டிலே பெற்றோர்கள் இருக்கிறார்கள்' என்று என்னையும் அறியாமல் கத்திவிட்டேன். அப்போது அவர் சிரிக்கத் தொடங்கினார். என் மார்பகத்தை அரவணைத்துக் கொண்டு, 'சரி, இப்போதைக்கு இங்கே நிறுத்திவிடுவோம். காலக்கிரமத்தில் அவையெல்லாம் உன்னை வந்தடையும்' என்று என்னிடம் சொன்னார். இந்தச் சொற்களை அவர் கூறினாரோ இல்லையோ உடனே எனக்குத் தோற்றமளித்த அந்த விசித்திரமான காட்சி நிலை மறைந்துவிட்டது. நான் மீண்டும் சுய அறிவு பெற்றேன். எல்லாமே வெளியேயும் உள்ளேயும் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டன.''

வீண் வியாக்கியானம் இன்றி வியக்கத்தக்க இந்த வரலாற்றை நான் எழுதி வைத்திருக்கிறேன். மேலை நாடுகளில் வாசகர்கள் என்ன நினைத்தாலும் சரி, இந்திய ஆன்மாக்களைப் பிரமிக்கவைத்து மெய்ம்மறந்த நிலையில் ஆழ்த்தும் சக்தி உண்டு என்பதை அவர்கள் உணர்ந்தறியத்தான் வேண்டும். உணர்வு மிக்க அத்தகைய தரிசனங்களைச் சுவைத்தவர்களைப்பற்றி ஷேக்ஸ்பியர் எழுதியிருப்பது நினைவுக்கு வரும். இந்த விஷ யத்தில் அந்தத் தரிசனத்தைக் கண்டவர் பலவீனமுள்ளவர் அல்லவர். சொன்னதையெல்லாம் நம்பக்கூடியவர் அல்லர். குணதோஷ விமரிசனமின்றி எதையும் ஒப்புக்கொள்ளக் கூடியவர் அல்லர். தாம் கண்டதற்கு எதிராகவே அவரது மனம் கிளர்ந்தெழுந்தது. அவர் சக்தி வாய்ந்த புருஷர்தாம். எனி னும், அப்படியும் விளையும் என்று ஊகித்து மனோவசியச் செயல்கள் விஷயத்தில் தீவிரமான விரோதப் பான்மை கொண் டவராக இருந்தார். ஏதோ ஒரு வேதனை, மனோவசியத்திற்குத் தாம் இரையாகி விட்டிருக்கக் கூடுமோ என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். ஆனால் அத்தகைய அநுபவத்தைப் புலப்படுத்தும் வெளித்தோற்றங்கள் தென்படவில்லை. தம்மைப் புயற்காற்றுச் சூறைபோல் தூக்கியெறிந்த அநுபவத்தினால் இன்னும் அவரது உடல் நடுங்கியவண்ணம் இருந்தது. எனவே, ஜாக்கிரதையாக இருந்தார். இந்த ஒரு பெரிய அதிர்ச்சி நீங்கலாக, மற்றப்படி அந்த விஜயம் சர்வ சாதாரண மாகவே இருந்தது. ஒன்றுமே நடவாததுபோல் பாவித்து,

வழக்கமான எளிமை நிறைந்த அன்பை அவர்மீது ராம கிருஷ்ணர் சொரிந்தார்.

ஒரு வாரம் கழித்து மூன்றாவது தடவையாக நரேன் வந்தார். அப்போது தமது பகுத்தறிவுத் திறனை முதன்மையாகப் பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டிருந்தார். எனினும், வலு வில் முன்வந்து பேசக்கூடிய நிலைமை இல்லாமல் போய்விட்டது. அன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருகிலுள்ள ஒரு தோட்டத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். கொஞ்சநேரம் அங்கு உலாவிய பின், அவர்கள், இடைகழி அறையில் அமர்ந்தனர். விரைவில் நினைவு முழுதும் இல்லாத தியான நிலையில் குருநாதர் ஆழ்ந் தார். நரேந்திரர் அவரது நிலையைக் கண்ணுற்றார். திடீரென ராமகிருஷ்ணர் அவரைத் தொட்டார். உடனே அவர் எல்லாப் பிரக்ஞையையும் இழந்துவிட்டதாக வெளிக்குத் தோன்றியது. நினைவு வந்தபோது ராமகிருஷ்ணர் அவரைப் பார்த்துக்கொண் டிருந்தார். அவரது மார்பைத் தடவிக்கொண்டிருந்தார்.

பின் ஒரு சமயம் தமது சீடர்களிடம் ராமகிருஷ்ணர் கூறி னார்: ''அவர் அந்தப் பிரக்ஞையற்ற நிலையில் இருந்தபொழுது அவரை நான் பல கேள்விகள் கேட்டேன். அவரது பூர்வோத்தரங்களை, இருந்த இடங்களைப் பற்றி வினவினேன். உலகில் அவரது பணி என்ன? அவர் எவ்வளவு காலம் ஜீவ யாத்திரை நடத்துவார் என்றெல்லாம் கேட்டேன். அவர் தம் முள் ஆழ்ந்து சிந்தித்தவராய், எனது கேள்விகளுக்குத் தக்க பதிலைக் கொடுத்தார். அவரை நான் கண்டு ஊகித்தவை அனைத்தையும் அந்தப் பதில்கள் ஊர்ஜிதம் செய்தன. இவை ரகசியமாகவே இருக்கும். ஆனால் அவர் ஒரு ரிஷி, சித்தியடைந் தவர், தியானத்தில் வல்லுநர், தமது உண்மையான தன்மையை அவர் என்று உணருகின்றாரோ, அன்று தமது சொந்தவிருப்பத் தின் பேரில், சரீரத்திலிருந்து தமது ஆன்மா விடுபடும்படி செய்யக் கூடியவர்.''

அப்போது அவரிடம் இதையெல்லாம் ராமகிருஷ்ணர் கூற வில்லை. தமக்குத் தெரிந்த விசேஷ ஞானத்தைக் கருத்தில் கொண்டு, அவரை மரியாதையுடன் நடத்தி வந்தார். தமது சீடர்களிடையே மதிப்பு உயர்ந்த அந்தஸ்தை நரேனுக்கு அவர் அளித்தார்.

ஆனால் நரேன் இன்னும் சீடர் என்ற நிலையை ஏற்றுக் கொள்ளவில்லை. யாருக்கும் சீடராக இருக்க அவர் விரும்ப வில்லை. ராமகிருஷ்ணரது இனம் தெரியாத சக்தி அவரைப்

பெரிதும் ஈர்த்தது. இரும்பைக் காந்தம் கவர்வது போல் அது இழுத்தது. ஆனால் தமது தன்மையும் உலோகத்தின் கடின நிலையை ஒத்ததே என்பதை அவர் அறிந்திருந்தார். ஆதிக்கத் துக்கு உட்பட அவரது பகுத்தறிவு மறுத்தது. பகுத்தறிவு வாதி யான விரஜேந்திரசீலுடன் அண்மையில் அவர் கொண்டிருந்த உறவு முறைகள் விஷயமாக மனசும் மதியும் போரிட்டன. இப் போது மனத்திடம் நம்பிக்கையை மதி இழந்துவிட்டது. தமது சுதந்தரத்தை நிலைநிறுத்தியே தீருவது என்ற உறுதிகொண்டார். தமது சொந்தப் பகுத்தறிவுக்கு முற்றும் கட்டுப்படாத எதை யும் தமது ஆசானிடமிருந்து ஏற்பது இல்லையென்று உறுதி பூண்டார். மற்றவர்கள் ஆழ்ந்து பாராமல் வைத்திருந்த நம்பிக்கையில் அவருக்கு வெறுப்புத்தான் ஏற்பட்டது.

அந்த இளைஞருக்கும் பழைய குருவுக்குமிடையே இப் போது ஏற்பட்டதைவிட அதிகப் புதுமையான உறவு முறை யைக் கற்பனையிலும் காண முடியாது. வெறும் உணர்ச்சி வசப்பட்டுத் தூய பக்தியுணர்வைக் காட்டும் எல்லா வகை நடவடிக்கைகளையும் நரேன் வெறுத்தார். கண்ணீர் விடுவது போன்ற அநுபவங்கள் பெண்மையைக் குறிக்கும் என்று அவர் கருதுவது உண்டு. எல்லாவற்றையுமே கேட்டுத் தெரிந்து கொண்டார். ஒரு கணம்கூடத் தமது பகுத்தறிவை அவர் புறக் கணித்ததே இல்லை. ராமகிருஷ்ணரது சொற்களை அவர் ஒருவர்தாம் சீர்தூக்கிப் பார்த்தவர். அவர் ஒருவர்தாம் சந்தேகங் களைத் தெரிவித்தவர். இதன் விளைவாக, ராமகிருஷ்ணருக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை. அவரிடம் அன்பு பெருகியது. நரேனைச் சந்திக்கும் முன், "ஏ மாதா, எனது சித்திகளைச் சந்தேகிக்கக் கூடிய ஒருவரை என்னிடம் அனுப்பிவைக்க மாட்டாயா?" என்று அவர் பிரார்த்தித்தது உண்டு.

அன்னை அவரது பிரார்த்தனைக்கு இணங்கினாள். நரேன் இந்து தெய்வங்களை ஏற்கவில்லை. அதே சமயத்தில் அத்வைதத் தையும் அவர் நிராகரித்தார். அது நாஸ்திகம் என்பது அவருடைய கருத்து. இந்து சமய நூல்களில் விதித்துள்ள தடை களை அவர் வெளிப்படையாகக் கேலி செய்தார். "கோடிக் கணக்கான மக்கள் உங்களைக் கடவுள் என்று கூறினாலும், ருசுவின் மூலம் நானே அதைத் தெளிந்து அறிந்தாலொழிய, ஒருக்காலும் அப்படிச் சொல்லமாட்டேன்" என்று அவர் ராமகிருஷ்ணரிடம் கூறியது உண்டு. ராமகிருஷ்ணர் சிரித்த வண்ணம் அதை ஆமோதித்தார். "நான் சொல்லுகிறேன் என்பதற்காக எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். ஒவ்வொன்

றையும் நீங்களே சோதித்துத் தெளிந்து அறியுங்கள்'' என்று தான் சீடர்களுக்கு அவர் உபதேசித்தார்.

நரேனின் மதிநுட்பம் மிகுந்த குணதோஷ விமரிசனமும், உணர்ச்சியுடன்கூட அவர் செய்த வாதப்பிரதிவாதமும் குருவை ஆனந்தத்தில் ஆழ்த்தின. அலுப்புச் சலிப்பின்றிச் சத்தியத்தைத் தேடித் திரியும் அவரது மதிநுட்பத்தின் உண்மையுணர்வையும் மேதைமையையும் அவர் பெரிதும் மதித்துப் போற்றினார். அது சிவசக்தியின் வெளித் தோற்றமே என்று கருதினார். இறுதியாக எல்லா மாயைகளையும் அது விலக்கிவிடும் என்று நம்பினார். 'இதோ கவனித்துப் பாருங்கள். எவ்வளவு கூர்மையாகத்துருவி தேடும் சக்தி! அவர் ஒரு பெரிய அக்கினியாக ஜொலிக்கிறார். எல்லா அசுத்தங்களும் அந்தத் தீயில் தூசு ஆகின்றன. மகா மாயையே அவரைப் பத்து அடிக்குள் அணுகிவரச் சக்தியற்றவள். அவருக்கு அருளியுள்ள கீர்த்தியின் விளைவாக அவள் எட்ட நிற்கிறாள்'' என்று ராமகிருஷ்ணர் கூறினார்.

நரேனது ஞானம் அவருக்கு விசேஷ மகிழ்ச்சியை அளித்தது. சில சமயம் அது ஆனந்தப்பரவசமாக உருகி ஓடியது. வேறு சில சமயங்களில் முதியோரான குரு, பிறரது உணர்ச்சிகளுக்கு மதிப்புத் தராமல் நரேன் கடுமையாகக் கண்டனம் வழங்குகிறாரே என்று ஆயாசப்பட்டது உண்டு. நேருக்கு நேராக அவரிடம், ''இத்தகைய சித்திகள் இருப்பதாக உமக்குப் புலப்படுத்துவது மூளைக்கோளாறாக இருக்க முடியாதா? வெறும் மனோவசியப் பிரமையாக இருக்கக்கூடாதா? இல்லை யென்று எப்படிச் சொல்வீர்?'' என்று நரேன் கேட்பார்.

மனம் கலங்கிய ராமகிருஷ்ணர், அப்போது விலகிச் சென்று அன்னையை அணுகி, அவள் அருளை வேண்டி நிற்பார். ''பொறுமையாக இரு; விரைவில் நரேன் விழிப்புற்று எழுவான்'' என்று ஆறுதல் கூறும் விடை அன்னையிடமிருந்து வரும்.

நரேனும் பிற சீடர்களும் ஓயாது தர்க்கமிட்டுக் கொண்டிருந்தது சில சமயம் அவருக்கு அலுப்பூட்டும். ''ஓ மாதா! உனது மாயையில் சிறுபகுதியை நரேனுக்குத் தரமாட்டாயா? அப்போது அவரது மதிநுட்பக் காய்ச்சல் கொஞ்சம் தணிந்து அவரது இதயம் ஆண்டவனைத் தேடக்கூடும் அல்லவா?'' என்று பிரார்த்திப்பார். ஆனால் விவேகானந்தரது ஆன்மா இடையறாது சித்திர இம்சைக்கு உள்ளான நிலையில் இருந்தது. ''நான் கடவுளை வேண்டவில்லை. நான் சாந்தியை விரும்பு

கிறேன். தூய உண்மை, தூய ஞானம், முடிவற்ற தூயநிலை, இவை சேர்ந்த சாந்தியையே நான் நாடுவது" என்று புலம்பினார்.

அத்தகைய விருப்பம் பகுத்தறிவுக்கு இசைவானது அல்ல என்பதை அவர் அப்போது உணரவில்லை. அவரது இதயம் பகுத்தறிவுக்குப் புறம்பான அக்ங்காரத்துடன் கூடிய நிலைமையிலேயே தென்பட்டது. கடவுளைப் பற்றிய ருசுக்களைக் கொடுத்து அவரது மனத்தைத் திருப்தி செய்விப்பது அசாத்திய மாக இருந்தது. "கடவுள் உண்மையானால் அவரை அடைவது சாத்தியமாக இருக்க வேண்டுமே" என்று இந்தியர்களுக்கே உரிய பாணியில், அவர் வாதித்தார்.

படிப்படியாக ஓர் உண்மையைக் கண்டறிந்தார். தமது இதயத்தின் ஆவலாதிகளுக்கு முற்றும் அடிமைப்பட்டவர்கள் என்று நாம் நம்புபவர்கள்தாம் ஆனந்தப்பரவசம் அடைந்தவர்களாகக் காட்சியளிக்கின்றனர். 'புத்தியே பிரதானம் என்று கருதி, தம்மைவிட ஆனந்தப் பரவசர்களாகச் செயல்பட்ட மக்களே தம் மனத்தின் மீது அதிக ஆதிக்கம் செலுத்தியவர்கள் என்பதை அவர் கண்டுகொண்டார். அவர்கள் முற்றும் இதய ஆவலாதிகளுக்கு அடிமையானவர்கள் என்று தாம் நினைத்தபோதிலும் அவர்களது இந்த உயர்வு அவருக்குப் புலப்பட்டது. பின்னர் ராமகிருஷ்ணரைப்பற்றி, "வெளித்தோற்றத்துக்கு அவர் முழுப் பக்தராக இருந்தார். ஆனால் உள்ளூற அவர் ஞான சொரூபியே! எனது நிலை அதற்கு நேர் எதிரிடையானது" என்று அவர் கூறினார்.

இம்மாதிரி கருத்தை வெளியிடும் முன் தமது பெருமை வாய்ந்த சுதந்தரமான உணர்வைக் குருவின் கைகளில் அவர் தாமாகவே இஷ்டபூர்வமாக ஒப்படைப்பதற்கு முன்னர் அவரை நரேந்திரர் நாடினார். அவரிடமிருந்து விரைந்தோடவும் செய்தார். இருவருக்குமிடையே பரஸ்பரம் உணர்ச்சி பூர்வமான ஒரு கவர்ச்சியும் அந்தரங்கத்தில் ஒரு போராட்டமும் இருந்துகொண்டே வந்தன. நரேன் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசுவார். தமக்கு நம்பிக்கையில்லாத விஷயங்களைப் பற்றிச் சிறிதும் தாட்சண்யமின்றிப் பேசக்கூடியவர். எனவே, எல்லாக் குயுக்தி வாதங்களையும் அவர் உறுதியுடன் எதிர்த்தார். பிறரது கருத்துக்கள் விஷயத்தில் கர்வத்துடன்கூடிய அலட்சியப் புத்தியைக் காட்டினார். இதன் விளைவாகப் பிறரது பகைகிட்டியது; அவதூறு வாய்த்தது. அவையெல்லாம்பொருட்படுத்த வேண்டியவை அல்ல என்று அவர் நினைத்தார்.

தமது முன்னிலையில் அவையெல்லாம் சொல்லப்படுவதை ராமகிருஷ்ணர் ஒருதடவைகூட அநுமதித்தது இல்லை. நரேனைப் பற்றி அவருக்கு அவ்வளவு நம்பிக்கை. 'அவர் பத்தரை மாற்றுத் தங்கம். உலகிலுள்ள எந்த மாசும் அவரை அணுகிக் கெடுக்க முடியாது' என்று கூறினார். இவ்வளவு போற்றுதற்குரிய மதி நுட்பமானது திசை தவறிப் போய், உள்ளூறப் போரிட்டுக் கொண்டிருந்த பல்வேறு சக்திகளின் மோதல்களின் விளைவாக, கெடுதலான காரியத்திற்குப் பயன்பட்டு விடுமோ? ஒரு புதிய சமயப் பிரிவை அல்லது புதிய கட்சியைத் தோன்றச்செய்யுமோ? சமூகத்தின் இணைப்புக்கும் ஒற்றுமைக்கும் அர்ப்பணித்துக் கொள்ளும் வாழ்க்கையாகி விடாமல் போய் விடுமோ என்று அவர் பயப்பட்டார்.

நரேனிடம் அவருக்கு உணர்ச்சி பூர்வமான பிரியம் உண்டு. நரேன் சேர்ந்தாற்போல் சில காலம் வராமல் இருந்துவிட்டால் கவலை நிறைந்த வகையில் அது வெளிப்படும். இருவருக்குமே அது மனத்தில் சங்கடத்தை விளைவிக்கும். ராமகிருஷ்ணருக்கு அது எரிச்சலை ஊட்டும். அப்படி ஓர் உணர்வு ஏற்படுவது வெட்கிக்கத் தக்கதுதான். ஆனால் அதை உதறிவிட ராமகிருஷ்ணரால் முடியவில்லை. நரேனை மிதமிஞ்சிப் புகழ்ந்து அவருக்கு ராமகிருஷ்ணர் ஆத்திரமூட்டினார்.

கேசவ சந்திரரின் புகழ் உலகின் அங்கீகாரத்தைப் பெற்றது. இளைஞர் நரேனோ எந்தச் சாதனைகளையும் புரியாதவர். அப்படியிருந்தும், கேசவ சந்திரது புகழ் நரேனுடைய புகழை விட குறைவானது என்று ராமகிருஷ்ணர் கூறியபோது, விவேகானந்தர் கோபப்பட்டார். கல்கத்தா தெருக்களில், சாதாரண பிரம்மசமாஜ ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் எதிர்பாராத வகையில் ராமகிருஷ்ணர் வருவார். அதைப்பற்றி நிந்தனைப் பேச்சுக்கள் எழுந்தன, கண்டனக் குரல்கள் ஒலித்தன.

இம்மாதிரி செல்லுமிடமெல்லாம் ராமகிருஷ்ணர் தம்மைத் துரத்திவருவது நிற்கவேண்டுமென நினைத்தார் நரேன். ஒரு மனிதன் இன்னொரு மனிதனால் மதியற்ற மோகத்தில் அழுத்தப் படலாகாது என்று அவரிடம் கூறினார். மிதமிஞ்சித் தம்மிடம் அன்பு காட்டினால் ராமகிருஷ்ணரது ஆன்மிக மேன்மை நஷ்டமாகி, அவரும் தமது அந்தஸ்துக்குத் தாழ்ந்துவிடுவார் என்று நரேன் கூறினார். அவர் சொன்னதை யெல்லாம் எளிமையும் தூய்மையும் உருவான ராமகிருஷ்ணர் அச்சத்துடன்

கேட்டார். அன்னையிடம் சென்று அவளது புத்திமதியைக் கோரினார். திரும்பி வருகையில் நிம்மதி ஏற்பட்டது.

''ஏ' கேவல பிரகிருதியே! நீ சொல்வதை நான் கேட்கமாட்டேன். உன்னிடம் நான் கடவுளைக் காண்பதால்தான் உன்னை நான் நேசிக்கிறேன் என்று அன்னை சொல்லிவிட்டாள். கடவுளை நான் காண முடியாத நாள் ஒன்று வருகையில் உன்னைக் காண்பது எனக்குச் சகிக்க முடியாததாகிவிடும்'' என்று நரேனிடம் அவர் சொன்னார்.

விரைவில் இருவரது நிலைகளும் நேரெதிராக மாறிவிட்டன. நரேனது இருக்கையை ராமகிருஷ்ணர் முழு அலட்சிய புத்தியுடன் மதித்தார். அவர் வந்திருப்பதைப் பார்த்ததாகக் காண்பித்துக் கொள்வதில்லை. பிறரிடம் பேசிக்கொண்டிருப்பார். இம்மாதிரி பல வாரங்கள் நடந்தது. எனினும் நரேன் இடையறாது பொறுமையுடன் திரும்பத் திரும்ப வந்தார். அவரிடம் தாம் பேசாமல் இருக்கையில் ஏன் வரவேண்டுமென்று ராமகிருஷ்ணர் கேட்டார். அதற்கு நரேன், ''என்னை ஈர்ப்பது உங்களது சொற்கள் மட்டுமல்ல. உங்களை நான் நேசிக்கிறேன். உங்களை நான் கண்டாக வேண்டிய அவசியம் இருக்கிறது'' என்று பதில் அளித்தார்.

கலக மனப்பான்மை கொண்டிருந்த சீடரைக் குருவின் ஆன்மா படிப்படியாகத் தன் வசப்படுத்திக்கொண்டது. ஒரு புறம் உருவ வழிபாடு; மற்றொருபுறம் தூய ஒருமை நிலை. இவ்விரண்டிலும் ராமகிருஷ்ணர் நம்பிக்கைக்கொண்டிருந்ததை நரேன் கேலி செய்தது பயன்படாமல் போயிற்று.. கடவுளின் கவர்ச்சி மெதுவாகத் தன் பணியைச் செய்யலாயிற்று.

''எனது அன்னையை அங்கீகரிக்க உனக்கு விருப்பமில்லையாயின், நீ இங்கு ஏன் வருகிறாய்?'' என்று கேட்டார் ராமகிருஷ்ணர்.

''நான் வந்தால் அவளை அங்கீகரித்துத்தான் ஆகவேண்டுமா?'' என்று பதிலளித்தார் நரேன்.

''சில நாட்கள் கழித்து நீ அவளை ஏற்கத்தான் போகிறாய். அது மட்டுமல்ல, அவளது திருநாமத்தைச் சொல்லும்போது கண்ணீர்ப் பெருக்கு ஏற்படும்'' என்றார் குரு.

பரப்பிரம்மத்துடன் ஒன்றிவிடும் அத்வைத வேதாந்தக் கதவுகளை நரேனுக்குத் திறந்துவிட ராமகிருஷ்ணர் விரும்பிய

போதும் அம்மாதிரியே நிகழ்ந்தது. இந்தத் தத்துவம் வெறும் தெய்வ நிந்தனை மட்டுமல்ல, பித்துக்கொள்ளித்தனம் என்று சொல்லி அவர் நிராகரித்தார். அதைக் கேலி செய்வதற்குக் கிடைத்த வாய்ப்பு ஒன்றைக்கூடக் கைவிடவில்லை.

ஒரு நாள் அவரும் மற்ஞெரு சீடரும் கேலி செய்ததுடன் கூட, அதன் இயற்கையான தன்மையைக் குறித்து உரக்கச் சிரித்தனர். ''இந்த ஜாடி கடவுளாம்! இந்த ஈக்கள் எல்லாம் கடவுளாம்!'' என்று அவர்கள் கூறினுர்கள். அடுத்த அறையி லிருந்த ராமகிருஷ்ணரது செவிகளில் இந்த வயது வந்த குழந்தைகளின் சிரிப்பொலி கேட்டது. அமைதியாக, ஏறக் குறைய பாதி நினைவுள்ள நிலையில் வந்து நரேனைத் தொட்டார். மறுபடியும் அவர் சூருவளியில் சிக்கியது போன்ற அநுபவத்தை அடைந்தார். எல்லாமே அவரது கண்களின் முன் மாறுதல் அடைந்தன. கடவுளைத் தவிர வேறு எதுவுமே இல்லாத நிலைமையைக் கண்ட அவர் வியப்படைந்தார். அவர் வீட்டுக் குத் திரும்பிச் சென்ருர். தான் தொட்டது, பார்த்தது, உண்டது அனைத்துமே தெய்வம்! அவர் எதையும் செய்யாமல் சும்மா நின்றுவிட்டார். பிரபஞ்ச மயமான சக்தியின் மோகத்தில் ஆழ்ந்து போனுர். அவரது பெற்ருேர் கவலைப்பட்டனர். அவர் நோய்வாய்ப்பட்டிருப்பதாக நினைத்தனர். இந்நிலைமை யில் அவர் சில நாட்களைக் கழித்தார். பின்னர் அந்தக் கனவு கலைந்தது. அத்வைத நிலக்கு ஒரு முன்னேடி போல் வந்த அதன் நினைவு எப்போதுமே அவரிடம் இருந்து வந்தது. பிறகு அவர் அதை மறுக்கும் மனப்பான்மையின்ராக ஆகவே இல்லை.

பின்னர், தொடர்ச்சியாகத் தெய்வ அநுபவப் புயல்களை அவர் அநுபவித்தார். பைத்தியக்காரனைப் போல் 'சிவா சிவா' என்று சொல்லிக்கொண்டே யிருந்தார். கருணையுள்ளத்துடன் அவரது நிலையை ராமகிருஷ்ணர் பார்த்தவண்ணம் இருந்தார். ''அம்மாதிரி பன்னிரண்டு வருஷ காலம் நான் இருந்து வந்தேன்'' என்கிருர் நரேன்.

அவர் சிங்கத்தையொத்த சுபாவத்தினர். ஒரே பாய்ச்சலில் நாஸ்திக நிலையிலிருந்து ஜோதியை உணரும் நிலக்குத் தாண்டினுர். ஆனுல் அப்படி ஏற்பட்ட மாறுதலானது நிலைத்துவிட்டது என்ருல் அதற்குக் காரணம், உள்ளுணர்விலிருந்து அது கிளர்ந்ததுதான். வெளி வேகத்தினுல் மாறுதல் ஏற்படாமல்

இருந்த்துதான். திடீரென நிம்மதியான துக்கம் விளைவித்த முரட்டுத் தைரியம் அவரைப் புரட்டியடித்தது. மதி நுட்பத்தில் திளைத்துச் சந்தேகங்களை வெளிப்படுத்துவதில் பெருமைகொண்டிருந்த அவர் வாழ்வு, நன்மை, தீமை ஆகிய இரண்டும் சேர்ந்த அவல நிலையை நேருக்கு நேராகச் சந்திக்க நேரிட்டது.

கவலையே இல்லாமல் மனம்போன போக்கில் வாழ்க்கையை நடத்திய அவரது தந்தை 1884-ஆம் ஆண்டின் துவக்கத்தில் காலமாகிவிட்டார். இதயநோய் அவரைத் திடீரென மாய்த்துவிட்டது. குடும்பம் நிர்மூலமாகிவிடும் நிலை. ஆறு, ஏழு பேர் சாப்பிட்டாக வேண்டும். ஏராளமான கடன்காரர்களின் தொல்லை. அன்று முதல் மனத்துயரை நரேன் சுவைத்தார். வேலைக்காகத் தேடியலைந்து படும் வீண் அவஸ்தையை அறிந்தார். நண்பர்களின் கைவிரிப்பைக் கண்டுகொண்டார். தமது வேதனையை, துக்கம் தோய்ந்த அநுபவக் குறிப்புக்களாக ஒப்புக்கொண்டு அவர் எழுதி வைத்திருக்கிறார் :

''நான் பசியால் உயிர் துறக்கும் நிலைக்கு அநேகமாக வந்துவிட்டேன். காலில் செருப்பு இல்லாமல் காரியாலயம் காரியாலயமாக ஏறி இறங்கினேன். எல்லா இடங்களிலும் புறக்கணிப்புத்தான். மனித அநுதாபத்தைப் பற்றிய அநுபவம் கிடைத்தது. வாழ்க்கையின் பிரத்தியட்சப் பிரச்னைகளுடன் முதல் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. பலவீனர்கள், ஏழைகள், கைவிடப்பட்டவர்கள். ஆகியோருக்கு இடம் இல்லையென்பதைக் கண்டுகொண்டேன். சில தினங்களுக்கு முன் எனக்கு உதவுவது பெருமை என்று நினைத்தவர்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு போனார்கள். உதவி அளிக்கும் சக்தி இருந்தும், அப்படிச் செய்தார்கள். சைத்தானது சிருஷ்டிதான் உலகம் என்று எனக்குத் தோன்றியது.

''ஒரு நாள் படபடக்கும் வெயில். நிற்க முடியவில்லை. ஒரு நினைவுச் சின்னத்தின் நிழலில் உட்கார்ந்தேன். அங்கே பல நண்பர்கள் இருந்தனர். கடவுளின் நிறைந்த அருளைப்பற்றி ஒரு பாசுரத்தை ஒருவர் பாடினார். என் தலையை நோக்கி வேண்டுமென்றே சம்மட்டியால் அடிப்பதுபோல் இருந்தது அது. என் தாயும் சகோதரர்களும் இருந்த பரிதாபகரமான நிலைமை நினைவுக்கு வந்ததும் நான் கூவினேன்: 'அந்தப் பாட்டைப் பாடுவதை நிறுத்துங்கள். செல்வந்தர்களாகப் பிறப்போர் காதில் அது இன்பமாக விழும். பசிப்பிணியால் பெற்றோர்கள் மரிக்கும் நிலையில் இல்லாதவர்களுக்கு அது

உகப்பாக இருக்கும். நானும் அம்மாதிரி நினைத்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இப்போது வாழ்க்கையின் குரூரத்தை நான் நேருக்கு நேராகக் காண்கின்றேன். அது மிகப் பயங்கரமான விதத்தில் என்னைக் கேலி செய்வதுபோல் ஒலிக்கின்றது.'

''என் நண்பர் வேதனைப் பட்டார். எனது பயங்கரமான நிலைமையை உணர்ந்து 'போகட்டும்' என்று விட்டுவிட அவர் தயாராக இல்லை. வீட்டிலே உண்பதற்குப் போதிய உணவு இல்லாதபோது என்னை வெளியில் சாப்பிடக் கூப்பிட்டிருக்கிறார்கள் என்று தாயாரிடம் சொல்லிவிட்டுப் போவேன். வெளியில் பட்டினி கிடப்பேன். தம் வீடுகளுக்கு வந்து பாடுமாறு சில சமயம் செல்வந்தர்களான எனது நண்பர்கள் கேட்பார்கள். ஆனால் அவர்களில் ஒருவருக்குக்கூட என்து துரதிருஷ்டத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்ற ஆவல் ஒரு போதும் ஏற்படவில்லை. அவை என்னுள்ளேயே உறைந்து கிடந்தன...

இந்தச் சமயத்தில் ஒவ்வொரு நாள் காலையிலும் அவர் கடவுளை வணங்கினார். ஒரு நாள் அவாது பிரார்த்தனையைத் தாயார் கேட்டார். துரதிருஷ்டங்கள் காரணமாக அவள் கடுமையாகக் கலகலத்துப் போயிருந்தாள். ''முட்டாள், சும்மாயிரு. குழந்தைப் பருவம் முதல் கடவுளுக்குப் பிரார்த்தனை செய்து உன் தொண்டை கம்மிவிட்டது. உனக்கு அவர் என்ன செய்திருக்கிறார்?'' என்று அவள் கேட்டாள்.

அதன்பேரில் கடவுள் விஷயத்தில் அவருக்குக் கோபம் ஏற்பட்டது. வேதனை நிறைந்த மனத்துடன் தாம் விடுத்த வேண்டுகோளுக்குக் கடவுள் ஏன் செவி சாய்க்கவில்லை? இவ்வுலகில் இவ்வளவு கஷ்டத்தை அவர் ஏன் அனுமதிக்கிறார் என்று நரேன் கேட்டுக்கொண்டார். பண்டித வித்தியாசாகரரின் கசப்பான சொற்கள் அவரது நினைவுக்கு வந்தன. ''கடவுள் நல்லவர், அருள் சொரிபவர் என்றால், ஒரு சில கவளங்கூட இல்லாமல் மக்கள் கோடிக்கணக்கில் மரிப்பானேன்?''*

*பண்டித ஈசுவர சந்திர வித்யாசாகர். (1820-91) ஒரு சமய சீர்திருத்தவாதி. கல்கத்தா ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் டைரக்டர். அவர் ராமகிருஷ்ணரை அறிவார். அவரை விசேஷ பக்தியுடன் நினைவுகூர்ந்து கொள்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அவரது கல்வி அல்ல, அவரது மனிதாபிமானமே என்று சொல்லவேண்டும். ஒரு லட்சம் பேருக்கு மேல் பலியாகிவிட்ட 1864-ஆம் வருஷத்துப் பஞ்சத்தைக் கண்டு அவர் ஒன்றும் செய்ய இயலாது தவித்தவர். அந்த அனுபவத்தின் விளைவாகக் கடவுளே இல்லை என்றார். முற்றும் மனிதனது சேவைக்கே தம்மைப் பணித்துக் கொண்டார். காஷ்மீரில் சுற்றுப்பிரயாணம் செய்கையில், விவேகானந்தர் 1898-இல் அவரைப் பற்றி விசேஷ மரியாதையுடன் குறிப்பிட்டார். ஒரு சொல்கூடக் குறைவாகப் பேசவில்லை. அவர் சொன்னதைச் சகோதரி நிவேதிதா எழுதி வைத்திருக்கிறார்.

ஆக்ரோஷமான கலகம் கிளர்ந்தெழுந்து வானை நோக்கி விம்மியது. கடவுள்மீது அவர் போர் தொடுத்தார்.

எப்போதுமே தமது எண்ணங்களை மூடி மறைக்க அவரால் முடியவில்லை. இப்போது வெளிப்படையாகக் கடவுளுக்கு எதிராகப் பேசினார். 'கடவுள் கிடையாது, அப்படி இருந்தால் அவர் தீமை மயமானவர்' என்று நிருபணம் செய்தார். நாஸ்திகர் என்ற பிரசித்தி அவருக்கு ஏற்பட்டு நிலைத்துவிட்டது. தெய்விக நம்பிக்கையுள்ளவர்கள் தமது வழக்கத்திற்கேற்ப அவரது நாஸ்திகத்திற்குப் பல உள்நோக்கங்களைக் கற்பித்தனர். அவரது பழக்க வழக்கங்களை நிந்தித்தனர். அத்தகைய நேர்மையற்ற போக்கு அவரது உறுதியை மேலும் கடினமாக்கியது. அத்தகைய கேவலமான உலகில், தீமைக்கு இரையாகித் துரதிருஷ்டத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் கிடைக்கும் இன்பம் எதையும் கணநேரம் சுவைப்பதில் தவறு இல்லை என்று அவர் வெளிப்படையாகக் கூறினார். அத்தகைய முறைகள் பயன் உள்ளனவாயின், பிறரிடம் உள்ள பயத்தால் அவற்றை உபயோகிக்காமல் இருக்கலாகாது என்று முடிவு கட்டினார்.

ராமகிருஷ்ணரது சீடர்களில் சிலர் அவருடன் வினயமாக வாதிட்டனர். பயத்தின் காரணமாகக் கடவுளை நம்புகிறவன் கோழை என்று பதிலளித்தார் ராமகிருஷ்ணர். அவர்களை விரட்டியடித்துவிட்டார். மற்றவர்களைப் போலவே, ராமகிருஷ்ணரும் தம்மைப் பழிக்கக்கூடும் என்ற எண்ணம் அவர் மனத்தில் எழுந்தது. அது சிறிது வேதனையைத் தந்தது. ஆனால் அவரது அகந்தை அதற்கு எதிராகக் கிளம்பியது. "அது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். ஒரு மனிதனது கியாதி அத்தகைய மெல்லிய அஸ்திவாரத்தின் மீது அமைந்திருக்குமானால் நான் அதற்காகக் கவலைப்படப் போவது இல்லை. அதைக் கீழே போட்டுக் காலால் துவைத்து மிதிப்பேன்."

தக்ஷிணேசுவரத்தில் தமது ஆசிரமத்தில் இருந்த ராமகிருஷ்ணரைத் தவிர, மற்ற எல்லாருமே, இனித் தாங்கள் நரேனை இழந்துவிட்டதாகவே மதித்தனர். ஆனால் அவர் மட்டும் நரேனிடம் நம்பிக்கை இழக்கவில்லை. அவரது உள்நிலையில் பக்குவமான மாறுதல் ஏற்படட்டும் என்று காத்திருந்தார். நரேனுக்குக் கதிமோட்சம் தம்மிடமிருந்துதான் வர இயலும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

வேனிற்காலம் கழிந்தது. பிழைப்புக்கு ஒரு வழியைத் தேடியலைந்து, நரேன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஒரு

நாள் ஒன்றுமே உட்கொள்ளாமல் மாலை நேரத்தில் அவர் சுருண்டு விழுந்தார், அலுத்துப் போனார். வியர்த்து விறு விறுத்த நிலையில் ஒரு வீட்டின் முன்னர் அவ்வாறு காணப் பட்டார். நெடுஞ்சாலைக் கிடந்த அவரது உடல் ஜன்னி கண்ட ஜுர வேகத்தில் இருந்தது. திடீரென அவரது ஆன்மாவைச் சுற்றி இருந்த உறைகள் பிய்த்தெறியப்பட்டதாக ஓர் அநுபவம். உடனே ஒளி பிறந்தது. அவரது பழைய சந்தேகங்கள் எல்லாம் தாமாகவே நிவர்த்தியாயின. "காண்கிறேன், நான் அறிகிறேன், நான் நம்புகிறேன், நான் ஏமாறவில்லை" என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். அவரது மனமும் உடலும் நிம்மதியில் ஆழ்ந்திருந்தன. உள்ளே சென்று இரவெல்லாம் தியானத்தில் கழித்தார். காலையில் அவருக்கு மனோதிடம் ஏற்பட்டிருந்தது. தமது பாட்டனாரைப் போலவே தாமும் உலகைத் துறந்து விட வேண்டுமென்று முடிவு செய்தார். அந்த விரதம் நிறை வேறுவதற்கு ஒரு நாளையும் குறிப்பிட்டுக்கொண்டார்.

அந்த நாளன்று, இதையெல்லாம் அறியாத நிலையில் ராம கிருஷ்ணர் கல்கத்தாவுக்கு வந்தார். தம்முடன் தக்ஷிணேசுவரத் துக்கு வந்து இரவைக் கழிக்குமாறு நரேனை அவர் கேட்டுக் கொண்டார். அவரிடமிருந்து தப்பிச் செல்ல நரேன் செய்த முயற்சி வீணாயிற்று. குருவுடன் செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. அன்று இரவு ஓர் அறையில் அவரையும் வைத்துக் கதவைச் சாத்திக்கொண்டு ராமகிருஷ்ணர் பாடலானார். அவரது அழகான கீதம் இளம் சீடரது கண்களில் நீர்மல்கச் செய்தது. தமது நோக்கத்தை ஆசான் தெரிந்துகொண்டு விட்டார் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். "நீ உலகில் அதன் பகுதியாக இருப்பது இயலாது என்று நான் அறிவேன். ஆனால் நான் இருக்கும் வரை எனக்காக நீ இருந்தாக வேண்டும்" என்று ராமகிருஷ்ணர் அவரைக் கேட்டுக் கொண்டார்.

நரேன் வீடு திரும்பினார். ஒரு மொழிபெயர்ப்புக் காரியா லயத்திலும், ஒரு வக்கீல் அலுவலகத்திலும் எடுபிடி வேலை கிடைத்தது. ஆனால் நிலையான வேலை எதுவும் வாய்க்கவில்லை. அன்றன்றைக்குச் சம்பாதித்துத்தான் ஜீவனம் என்ற நிலைமை யில் குடும்பம் இருந்தது. தமக்கும் தமது சுற்றத்தாருக்குமாகப் பிரார்த்திக்குமாறு அவர் ராமகிருஷ்ணரை வேண்டிக்கொண் டார்.

"குழந்தாய், அந்தப் பிரார்த்தனைகளை நான் செய்யலா காது. ஏன் நீயே பிரார்த்திக்க மாட்டேன் என்கிறாய்?" என்றார் ராமகிருஷ்ணர்.

நரேன் அன்னையின் ஆலயத்தினுள் சென்றார். அவரது மனம் உயர்ந்த பக்தி நிலையில் இருந்தது. அன்பும் நம்பிக்கையும் அவரது உடலுள் பெருக்கெடுத்து ஓடின. திரும்பி வந்தபின், "பிரார்த்தனை செய்தாயா?" என்று கேட்டார் ராமகிருஷ்ணர். தமது துயரைத் துடைக்குமாறு பிரார்த்தனை செய்து கொள்ள மறந்துவிட்டதாக அவர் பதிலளித்தார். திரும்பவும் செல்லுமாறு ராமகிருஷ்ணர் பணித்தார். இரண்டாவது தடவையும் மூன்றும் தடவையும் சென்று வந்தார். ஆலயத்துக்குள் நுழைந்ததும் பிரார்த்தனைகளின் நோக்கம் அவரது கண்களின் முன்னாலேயே மங்கி மறைந்துவிட்டது. மூன்றுவது தடவை, தாம் வந்த காரியம் அவரது நினைவுக்கு வந்தது. ஆனால் வெட்கம் அவரைப் பிடுங்கித் தின்றது. அன்னையை இந்தச் சில்லறை விஷயங்களுக்காகவா வேண்டிக்கொள்ள வேண்டும்? "உன்னை அறிந்து நம்புமாறு அருள் செய். எனக்கு வேறு ஒன்றும் தேவையில்லை" என்று பிரார்த்தித்தார்.

அன்று முதல் ஒரு புது வாழ்க்கை தொடங்கியது. தெளிந்தறிந்து நம்பினார். 'கியூத்தே'யின் பழைய யாழ்வாணரைப்* போல் அவரது நம்பிக்கையும் மிடிமையில் பிறந்தது. அவரது ரொட்டி எப்போதுமே கண்ணீரில் ஊறிச் சுவைக்கப் பெற்றது. தம்முடன் அந்த ரொட்டித் துண்டுகளைப் பகிர்ந்துகொண்ட, துயரில் ஆழ்ந்த சகோதரர்களின் நினைவு எப்போதுமே நீங்காது இருந்தது. ஒரு மிக உயர்ந்த உணர்வில் தமது நம்பிக்கையை உலகிற்கு அவர் பிரகடனம் செய்தார்.

"நான் நம்பும் ஒரே கடவுள் ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றுகச் சேர்ந்தவர். எனது கடவுள் போக்கிரித்தனம் உள்ளவர். மிடிமையே உருவானவர். எல்லா இனங்களிலும் வறுமைக்கே உரித்தானவர்..."

கலீலியா வீரன் வெற்றி பெற்றுவிட்டான்.** வங்கத்துக் குரு அவரது கர்வத்தைத் தகர்த்துவிட்டார். கட்டளையிட்டு ஆளப் பிறந்த அந்தப் பெரிய க்ஷத்தியரைவிடத் தமக்கு அவ்வளவு பணிவான வேறு ஒரு மகன் கிடைக்கமாட்டான் என்ற

---

*வில்ஹெல்ம் மேஸ்தர் என்ற நூலில் அழகான 'ஈடர்' என்ற பாத்திரத்தைக் 'கியூத்தே' படைத்திருப்பதைப் பற்றியது இந்தப் பிரஸ்தாபம். ஷுபெர்ட், ஹ்யூகோ வுல்ப் போன்றோர் அதற்கு மெட்டுகளை வழங்கிப் பாடியிருக்கிறார்கள்.

** கிறிஸ்துவுக்கு எதிராகச் சண்டை போட்டு, பின் உயிர் நீத்தபோது ஜுலியன் சக்கரவர்த்தி அழுதுகொண்டு கூறியது.

நம்பிக்கை ராமகிருஷ்ணருக்கு ஏற்பட்டது. ஒருவர்தான் மற்றொருவர் என்று சில சமயம் நினைக்கக்கூடியபடி, அவர்களுடைய ஒருமைப்பாடு இணங்கிவிட்டது. இம்மாதிரி மாறுதல் கண்ட ஆன்மாவின் விஷயத்தில் சற்று நிதானப் போக்கைக் காண்பிப்பதன் அவசியத்தை அவர் உணர்ந்தார்.

அரைகுறைப் பணி என்பது நரேனிடம் கிடையாது. முழு மூச்சில் சேவை புரிவதன் அபாயங்களை ராமகிருஷ்ணர் அறிந்திருந்தார். அதன் போக்கு கரடுமுரடானது, கொந்தளிப்பானது, பகுத்தறிவுக்குப் புறம்பானது. ஞானத்திலிருந்து அது அன்பாக மாறியது. தியானத்தின் அவசியத்திலிருந்து செயலின் அவசியத்தை எட்டிப் பிடித்தது. எல்லாவற்றையும் ஒருசேர அரவணைத்துக் கொள்ளும் பேராற்றல் காணப்பெற்றது. ராமகிருஷ்ணரது வாழ்க்கையின் கடைசி நாட்களில் நரேன் அவரைப் பல முறை அணுகி மிக உயர்ந்த அநுபவமாகிய துரிய நிலையைத் தமக்கு உபதேசிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதுவே பேரானந்தம். அதை அடைந்தால் மீளுவது இல்லை. அதுவே நிர்விகல்ப சமாதி. ஆனால் அதை அவருக்கு உபதேசிக்க ராமகிருஷ்ணர் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

ஒரு நாள் இந்த நிலையை நரேன் உண்மையில் அடைந்த போது கல்கத்தா அருகில் காசிப்பூர் தோட்டத்தில் சுவாமி சிவானந்தா இருந்தார். தாம் கண்டதைப்பற்றி அவர் கூறியிருக்கிறார்: ''பிரக்ஞையற்ற நிலையில் அவரைக் கண்டேன். அவரது உடல் சவம்போல் சில்லிட்டிருந்தது. விசேஷப் பரபரப்புடன் குருவை அணுகி நடந்ததைக் கூறினோம். அவர் கவலைப்படவே இல்லை. 'ஓகோ, சரி', என்று மட்டும் முறுவலித்துக் கூறினார். பிறகு மௌனத்தில் ஆழ்ந்துவிட்டார். நரேனுக்குப் பின்னர் பிரக்ஞை வந்தது. குருவிடம் விரைந்தார். 'இப்போது உனக்குத் தெரிகின்றதா? இந்தத் துரிய நிலை இனி என் பெட்டியில் பூட்டப்பட்டிருக்கும். நீ செய்வதற்கு அன்னையின் பணி காத்திருக்கிறது. அது முடிவுறும் நிலையில் அவள் பூட்டை அகற்றிவிடுவாள்' என்றார்.

''குருவே, சமாதியில் நான் இன்புற்றிருந்தேன். முடிவில்லா மகிழ்ச்சியில் இவ்வுலகை மறந்திருந்தேன். அந்த நிலையிலேயே இருக்கும்படி என்னை விடுமாறு பிரார்த்திக்கிறேன்' என்று நரேன் பதிலளித்தார்.

''என்ன வெட்கக்கேடான விஷயம்? நீ எவ்வாறு இதையெல்லாம் கேட்கலாம்? நீ வாழ்க்கையின் உறைவிடம் என்று

அல்லவா நினைத்தேன். ஆனால் சாதாரண மனிதனைப் போல் உனது சொந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்க நீ விரும்புகிறாய். அன்னையின் அருளால் இந்த அநுபவ நிலை உனக்குத் தானாகவே வரும். எல்லா ஜீவராசிகளிலும் ஒரே ஜீவன் உறைகின்றது என்ற சகஜ நிலையை நீ உணர்வாய். உலகில் பெரிய காரியங்களை நீ சாதிக்கப் போகின்றாய். மக்களுக்கு ஆன்மிக மெய்யுணர்வை அளிக்கப் போகிறாய். ஏழை எளிய வர்களின் துயரைத் துடைக்கப் போகிறாய்'' என்று குரு கூறினார்.

விவேகானந்தர் செய்தாக வேண்டிய பணி என்னவென் பதை ராமகிருஷ்ணர் அறிந்துகொண்டார். அதைச் செய்தாக வேண்டும் என்று அவரது விருப்பத்திற்கு மாறாகவே நிர்ப்பந் தித்தார்.

அவர் கூறினார்: ''உலகிற்கு உபதேசம் செய்யும் பொறுப்பை ஏற்பதற்குச் சாதாரண மக்கள் அஞ்சுகின்றனர். ஓர் உபயோகமும் இல்லாத மரக்கட்டை தண்ணீரில் மிதக்கத் தான் செய்யும். அதன்மீது ஒரு பறவை உட்கார்ந்தவுடனே அது மூழ்கிவிடும். ஆனால் நரேன் வேறு விதமானவர். அவர் பெரிய விருட்சங்களின் அடிமரம் போன்றவர். மக்களையும் மிருகங்களையும் தம்மீது ஏற்றிச் செல்லும் கங்கையைப் போன்றவர்.''

செயின்ட் கிறிஸ்டபர்* மக்களைச் சுமந்து சென்றவர். அவரது சின்னத்தை நரேனின் நெற்றியில் ராமகிருஷ்ணர் பொறித்தார்.

* * *

1884-இல் ராமகிருஷ்ணரது உடல்நிலை மோசமாயிற்று. சமாதி நிலையிலிருந்தபோது அவரது இடதுகை நிலை பெயர்ந்து விட்டது. வலி அதிகமாய் இருந்தது. ஒரு பெரிய மாறுதல் அவரிடம் தென்பட்டது. தளர்ச்சியுற்ற தமது உடலையும், நிலைகொள்ளாது சஞ்சரித்துக் கொண்டிருந்த தமது ஆன்மா வையும் அவர் இரண்டாகப் பிரித்துக்கொண்டார். 'நான்' என்ற பிரஸ்தாபமே பிறகு அவரிடமிருந்து கிளம்பவில்லை. 'என்னை' என்று சொல்லிக்கொள்ளவே இல்லை. 'இது' என்று தான் தம்மைப் பற்றிக் கூறிக்கொள்வார்.

---

*செயின் கிறிஸ்டபர் ஒரு ராட்சதர். அவர் கிறிஸ்துவைச் சுமந்து சென் றார் என்று பரம்பரைக் கதை கூறும். மக்களைத் தமது தோள்மீது ஏற்றிக் கொண்டு நதியைக் கடந்து அக்கரை சேர்ப்பார். ஒரு நாள் கிறிஸ்து வாகிய குழந்தை அவரைப் பார்க்கவந்தது. (ஜீன்கிறிஸ்டபர் என்ற நாவலின் கடைசிப் பக்கத்தைப் பார்க்கவும்.)

அடுத்த வருஷம் ஏப்ரல் மாதம் அவருடைய தொண்டையில் ரணம் ஏற்பட்டது. இடையறுது பேசியதால் ஏற்பட்ட அலுப்பும், அபாயம் நிறைந்த சமாதியுமாகச் சேர்ந்து தொண்டையில் ரத்தம் சுரந்து அவருக்கு நோயை விளை வித்தது. அவர் பேசக்கூடாது, சமாதி நிலையில் இருக்கலாகாது என்று வைத்தியர்கள் கூறினர். ஆனல் அவர் அதைப் பெரிது படுத்தவில்லை. ஒரு பெரிய வைஷ்ணவத் திருவிழாவில் தம் சக்திக்கு மீறி உழைத்தார். நோய் மேலும் கடுமையாயிற்று. சாப்பிடக்கூட முடியாமல் போயிற்று. எனினும், இராப் பகலாகக் காண வந்தோருக்குத் தரிசனம் அளித்து வந்தார்.

ஒரு நாள் இரவு தொண்டையிலிருந்து ரத்தப்பெருக்கு ஏற்பட்டது. அது புற்றுநோய் என்று டாக்டர்கள் கண்டறிந்தனர். கல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் மகேந்திரலால் சர்க்காரிடம் சிகிச்சை பெறுமாறு பிரதான சீடர்கள் அவரை வற்புறுத்தினர். 1885 செப்டம்பரில் ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டார்கள். அதில் ஒரு மூலையில் ராமகிருஷ்ணரது மனைவி இடம் தேடிக்கொண்டார். அவரது உடல்நிலை பற்றிய பணிகளை மேற்பார்க்கவே அவர் அங்கு வந்தார்.

விசுவாசம் மிக்க சீடர்கள் இராக்காலத்தில் காவல் புரிந்தனர், அவர்களில் பெரும்பாலோர் ஏழைகள். குருவின் சிகிச்சைக்காகும் செலவுக்கு வேண்டிய கடனை வாங்கினர். தமது உடைமைகளை அடகு வைத்தனர். இத்தகைய செயல்களின் மூலம் அவர்களிடையே ஒற்றுமை உணர்வு வளர்ந்தது. டாக்டர் சர்க்கார் ஒரு பகுத்தறிவுவாதி. மாதாவைப்பற்றி ராமகிருஷ்ணர் கொண்டிருந்த கருத்துக்கள் அவருக்கு உடன்பாடாக இல்லை. மனம் விட்டு அதைச் சொல்லிவிட்டார். ஆனல் தமது நோயாளியைக் காணக் காண அவரிடம் அவருக்கு இருந்த மதிப்பு உயர்ந்துகொண்டே வந்தது. இறுதியாக எவ்விதப் பிரதிப் பிரயோசனமுமின்றி அவருக்குச் சிகிச்சை செய்யலானர்.

ராமகிருஷ்ணரது நிலைமை மேலும் மோசமாயிற்று. கல்கத்தாவிலிருந்து கிராமவாசத்துக்கு அழைத்துச் செல்லுமாறு டாக்டர் சர்க்கார் யோசனை கூறினர். 1885 டிசம்பரில் சுற்றுப் புறத்தில் உள்ள காசிப்பூரில் அழகான தோட்டங்களிடையே இருந்த ஒரு வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். தமது உலக வாழ்க்கையின் கடைசி எட்டு மாதங்களை அவர் அங்கே கழித்தார். கடைசி நிமிஷம் வரை பன்னிரண்டு இளம் சீடர்கள் அவரை விட்டு நகராமல் இருந்தனர். அவரது நடவடிக்கைகளையும், பிரார்த்தனைகளையும் ஒழுங்குமுறை செய்துவந்தார் நரேன். அவர் குணமடைய வேண்டுமென்று தாங்கள் செய்த

பிரார்த்தனையில் குருவும் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டனர். அவர்களைக் காண வந்த ஒரு பண்டிதரும் அதே மாதிரி விரும்பினார். எனவே, மீண்டும் அவரிடம் அந்த வேண்டுகோளை வலியுறுத்தினர். ராம கிருஷ்ணரிடம், ''தங்களைப் போன்ற மகான்கள் மனோபீஷ்டத்தைக் கொண்டே நோயைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே?'' என்று அந்தப் பண்டிதர் கூறினார். ''என் மனத்தைக் கடவுளுக்குச் சாசுவதமாக அர்ப்பணித்துவிட்டேன், அதைத் திரும்பவும் தருமாறு கேட்கச் சொல்கிறீர்களா?'' என்று ராமகிருஷ்ணர் கேட்டார்.

தேக திடம் பெறுவதற்கு விரும்பாமல் இருப்பதைக் கண்டு சீடர்கள் அவரைக் கடிந்துகொண்டனர்.

''நான் கஷ்டப்படுவது எல்லாம் நானே வரவழைத்துக் கொண்டது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? குணமடையவே நான் விரும்புகிறேன். ஆனால் அது அன்னையைப் பொறுத்த விஷயம்.''

''அப்படியாயின் அவளுக்குப் பிரார்த்தனை செய்துகொள்ளுங்களேன்?''

''அதை நீங்கள் சொல்வது சுலபம். ஆனால் அந்த வார்த்தைகளை உச்சரிக்க என்னால் முடியாது.''

''எங்களுக்காகச் செய்துகொள்ளுங்களேன்'' என்று நரேன் கெஞ்சிக் கேட்டார்.

''சரி, என்னால் என்ன இயலும், பார்க்கிறேன்'' என்று குரு இன்புறக் கூறினார்.

பல மணி நேரம் அவரைத் தனிமையில் விட்டார்கள். அவர்கள் திரும்பி வந்தபோது, ''தாயே, நோயின் காரணமாக ஒன்றும் சாப்பிட முடியவில்லை. கொஞ்சம் சாப்பிடுவதைச் சாத்தியமாக்கு என்று அன்னையிடம் கூறினேன். உங்கள் எல்லாரையும் அவள் எனக்குச் சுட்டிக்காட்டி, 'ஏன் இவ்வளவு வாய்கள் இருக்கின்றனவே? அவைமூலம் உன்னால் சாப்பிட முடியாதா?' என்று கேட்டாள். எனக்கு வெட்கம் மேலிட்டது. வேறொரு சொல் என் தொண்டையிலிருந்து வெளிவராது போயிற்று'' என்று பதிலளித்தார் ராமகிருஷ்ணர்.

பல நாட்கள் கழித்து, ''என்னுடைய உபதேசம் அநேகமாக முடிவடைந்துவிட்டது. மேற்கொண்டு மக்களுக்கு

என்றால் ஒன்றும் சொல்ல இயலாது. உலகெங்கும் ஆண்டவன் மயமாக இருப்பதை நான் காண்கிறேன். எனவே, யாருக்கு நான் போதிப்பது என்று என்னை நானே கேட்டுக்கொள் கிறேன்'' என்று அவர் கூறினார்.

1886 ஜனவரி 1. உடல்நிலை சிறிது குணம். தோட்டத்தில் சில அடிகள் எடுத்துவைத்தார். சீடர்களுக்கு ஆசி கூறினார். அவரது ஆசி பல்வேறு விதங்களிலும் வெளிப்பட்டது. மனத் துக்குள் அநுபவித்த பேரானந்தம், வாய்விட்டு மகிழ்ச்சி யைத் தெரிவிக்கும் சொல்லோசை எல்லாம் கேட்டன. ஆனால் ஒரு மின்சார அதிர்ச்சி தாக்கியது போன்ற ஓர் அநுபவம், சக்தி தம்மை வந்தடைந்தது போன்ற ஒரு நினைவு, அவர் களில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டது. எந்த லட்சியத்தை ஒவ்வொருவரும் வரித்துக்கொண்டிருந்தனரோ, அதை ஒரே மூச்சில் அடைந்துவிட்ட அநுபவம் அது.

நரேனுக்கு மட்டும் திருப்தி ஏற்படவில்லை. தந்தையின் பிரிவாற்றாமை, உலகக் கவலைகள், தமது உள்ளத்தை உருக்கி வந்த ஜுரம் எல்லாமாகச் சேர்ந்து அவரது இதயம் உருகி யோடும்படி செய்தன. மற்ற எல்லோரும் மன நிறைவு அடைந்திருந்ததாகவும், தம்மை மட்டும் அது கை விட்டு விட்டதாகவும் அவர் நினைத்தார். அவரது வேதனையை உணர்ந்து, குரு தெம்பளித்ததாகத் தெரியவில்லை. அவருக்கு உற்சாகமூட்டக்கூடிய எதையும் அவர் சொல்லவில்லை. பல நாட்கள் சமாதியிலிருந்து மனத்துயரை அகற்றிக்கொள்ள தம்மை அனுமதிக்குமாறு ராமகிருஷ்ணரை அவர் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்: ஆனால் அவர் கடுமையாகச் சீடரைக் கடிந்துகொண்டார். யாரிடம் அதிகமாக எதையும் எதிர் பார்க்கவில்லையோ, அவர்களிடந்தான் விசேஷப் பரிவு காட்டி னார். இம்மாதிரி கேவலமான எண்ணங்களை வைத்துக்கொண் டிருப்பதற்காக நரேனை அவர் கடிந்துகொண்டார்.

'தமது குடும்பத்திற்கு ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும், செய்துவிட்டால் அவரது தொல்லைகள் எல்லாம் முடிவுறும், பிறகு எல்லாமே அவருக்குச் சித்திக்கும்' என்று புலப்பட்டது. மந்தையை விட்டு நழுவித் தவிக்கும் ஆடுபோல நரேன் அழுதார். கல்கத்தா தெருக்கள் வழியாகவும், வயல் வெளிகள் வழியாகவும் ஓடினார். அவற்றின் தூசைப் பொருட் படுத்தாது சென்று ஒரு வைக்கோல் போருக்குள் புகுந்து கொண்டார். அங்கு வேதனையுடன் புலம்பினார். அடைய முடியாததை அடையும் ஆசை மேலிட்டது. அவரது ஆன்மா

வுக்குச் சாந்தி இல்லாமல் போயிற்று. தொலைதூரத்தில் இருந்தவண்ணம் அவரது கரடுமுரடான வாழ்க்கையை ராமகிருஷ்ணர் அன்புடன், அநுதாபத்துடன் கவனித்துவந்தார். இறை அநுபவம் கிட்டுமுன் அதன் வாசனையை அவர் நுகரச் செய்வதன் அவசியத்தை குரு உணர்ந்தார். நரேனது நிலை அசாதாரணமாக இருந்தது என்பதை அவர் அறிந்தார். தெய்வநம்பிக்கை தமக்குக் கிடையாது என்று ஜம்பம் பேசிய போதிலும், பரப்பிரம்மத்தை அடைவதற்குத் தவித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். மக்களிடையே அவர் அருள் மிக்கவர் என்பது ருசுவான விஷயம். மற்றச் சீடர்கள் முன்னிலையில் நரேனது முகத்தை அவர் மெதுவாக வருடினார். அன்பின் மூலம் ஞானத்தைப் பெறுகின்ற பக்தி மார்க்கத்தின் எல்லாச் சின்னங்களும் அவரிடம் இருப்பதைக் கண்டறிந்தார்.

ஞானிகள் ஆன்ம ஞானத்தின் மூலம் தெளிவான நம்பிக்கை பெறுவார்கள். பக்தர்கள் அவர்கள்பால் முக்தியைக் கேட்பது இல்லை. மக்களின் நன்மைக்காக மீண்டும் மீண்டும் பிறக்க வேண்டுமெனக் கோருவர். மனித வர்க்கத்தை நேசித்து அதற்கு உழைப்பதையே வாழ்க்கையின் பயன் என அவர்கள் கருதுவர். ஒரு சிறு அணுவளவு ஆசை மனத்தில் இருந்தாலும், மறுபிறப்பு வந்தே தீரும். மனித சமூகத்தின் இதயத்திலிருந்த ஆசைகள் அறவே பிய்த்தெறியப்படுகையில்தான் அவர்கள் முக்தி அடைவார்கள். ஆனால் பக்தர்கள் தாமே முக்தியை நாடுவது இல்லை. ஆகையால்தான் உயிர்வாழும் அனைத்துக்கும் உறைவிடமான உள்ளத்தைப் படைத்து, அன்பே உருவாக இருந்த குருவால் அவர்களை மறக்க இயலவில்லை. எப்போதுமே பக்தர்களின்பால் விசேஷச் சலுகை அவருக்கு உண்டு. பக்தர்களில் மிகப் பெரியவர் நரேன்.

நரேன் தமது வாரிசு என்ற உண்மையை ராமகிருஷ்ணர் மறக்கவில்லையென்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

''இந்த இளைஞர்களை உன் பொறுப்பில் விடுகின்றேன். அவர்களது ஆன்ம அநுபவம் வளரச் செய்வதில் கவனம் செலுத்துவாயாக'' என்று ஒரு நாள் அவர் கூறினார்.

துறவியின் வாழ்க்கைக்குத் தயாராகும் வகையில், ஜாதி வேற்றுமை பாராமல், வீடு வீடாகச் சென்று, உணவுப் பிக்ஷை எடுக்குமாறு அவர்களைப் பணித்தார். மார்ச் மாதக் கடைசியில் அவர்களுக்குச் சந்நியாசத்துக்குரிய காஷாயத்தை வழங்கினார். அத்துடன், மடத்தில் பணிபுரிவதற்கான தீக்ஷையையும் செய்து வைத்தார்.

தியாகத்தில் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார் பெருமை மிக்க நரேன். ஆனால், தமது ஆன்மிகக் கர்வத்தைத் துறப்பது அவருக்கு மிகக் கஷ்டமாக இருந்தது. இவ்வுலகின் உயர்நிலைகளை எல்லாம் (இயேசு விஷயத்தில் போல) அவருக்கு வழங்குவதற்குச் சைத்தான் தயாராக இருந்தது. ஆனால் ஆன்மாவை ஆளும் உயர்நிலைக்கு வழி திறக்குமாயின், அதுவே சிறந்தது என்று அவர் மதித்தார்.

தாம் தியானத்துள் ஆழ்ந்திருக்கும்போது. தம்மைத் தொடுமாறு ஒரு நாள் காளிப்பிரசாத் என்னும் நண்பரை அவர் கேட்டுக் கொண்டார். தமது ஆன்மிக சக்தியைச் சோதித்துப் பார்க்க நரேனுக்கு விருப்பம். காளிப்பிரசாத் அப்படியே செய்தார். உடனே அவரும் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். இது ராமகிருஷ்ணர் செவிகளுக்கு எட்டியது. ஓர் அற்ப விஷயத்துக்குத் தமது சக்தியை இம்மாதிரி நரேன் சோதித்துப் பார்த்தது சரியல்ல என்று கடிந்துகொண்டார் ராமகிருஷ்ணர். 'ஆன்மாவின் முழுச் சுதந்தரத்துக்கு எதிரிடையாக எதையும் செய்யலாகாது, அது அடியோடு கூடாது என்பது அவரது கருத்து. 'பிறருக்கு நீ உதவலாம்; ஆனால் அவர்களின் சிந்தனைக்குப் பதிலாக உனது சிந்தனைகள் இடம் பெறும்படி செய்யலாகாது' என்றார்.

சிலகாலம் கழித்து, தியானத்தில் ஈடுபட்டிருக்கையில் தமது தலையின் பின்னால் ஜோதி ஒன்று இலங்குகின்ற மாதிரி ஓர் உணர்வு நரேனுக்கு ஏற்பட்டது. திடீரென அவர் நினைவிழந்தார். பரமாத்மாவில் ஒன்றிவிட்டார். பயங்கரமான நிர்விகல்ப சமாதியில் அவர் ஆழ்ந்துவிட்டார். நெடுங்காலமாக அதைத் தான் அவர் நாடி வந்தது. அது கூடாதென்று ராமகிருஷ்ணர் தாம் தடுத்துவந்தார். நெடுநேரம் கழித்துப் பிரக்ஞை வந்த போது, தமக்கு உடலென ஒன்றிருப்பதாக அவர் நினைக்கவில்லை. தமக்கு இருப்பது முகம் ஒன்றே என்றுதான் அவருக்குப் புலப்பட்டது. 'எனது சரீரம் எங்கே?' என்று கத்தினார். மற்றச் சீடர்கள் பயமடைந்தனர். குருவிடம் விரைந்து சென்றனர். ஆனால், ராமகிருஷ்ணர் அமைதியுடன்கூட, ''சரி, கொஞ்ச நேரம் அவர் அந்த நிலையில் இருக்கட்டும். வெகுகாலம் அது வேண்டுமென என்னைத் தொந்தரவு செய்து வந்திருக்கிறார்'' என்று பதிலளித்தார்.

மீண்டும் நரேனுக்குப் பழைய நிலை திரும்பியபோது அகற்ற இயலாத சாந்தியில் தாம் ஆழ்ந்திருந்ததாக அறிந்தார். குருவை வணங்கினார். ''இப்போது அன்னை உனக்கு எல்லாவற்றையும் காண்பித்துவிட்டாள். ஆனால் அந்தத்

தரிசனம் பெட்டியில் வைத்துப் பூட்டியதாக இருக்கவேண்டும். சாவி என்னிடம் இருக்கும். அன்னையின் பணியை நீ பூர்த்தி செய்துவிட்டால், இந்தப் பொக்கிஷத்தை மீண்டும் காண்பாய்'' என்று அவரிடம் ராமகிருஷ்ணர் கூறினார்.

அடுத்த சில நாட்களில் தமது உடல்நிலை விஷயமாக என்னென்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அவர் யோசனை கூறினார்.

முடிவு நெருங்க நெருங்க, அவரது மனம் பற்றற்ற நிலைமையை மேலும் மேலும் அடைந்துகொண்டிருந்தது. சீடர்களின் துக்கம் தணியும் வகையில், அவரது முகப்பொலிவு படர்ந்தது.

அவர் எவ்வளவு பயங்கரமான நோயினால் காலமானார் என்பதை அறிந்தவர்கள், அவரது முகத்தை விட்டு அன்போ புன்னகையோ சிறிதும் அகன்றதே இல்லையென்பதைக் கண்டு வியந்தனர். சிலுவையில் உயிர் விடும் கீர்த்தி அவருக்குக் கிடைக்கவில்லை. அவரைக் கிறிஸ்துவாகவே இந்தியச் சீடர்கள் மதித்தனர். அவர் படுத்த படுக்கையில் அநுபவித்த வேதனை சிலுவை வேதனைக்குச் சிறிதும் குறைந்தது அல்ல. ஆனால், ''உடல்தான் சிரமப்படுகிறது, உள்ளம் ஆண்டவனுடன் ஒன்றுபட்டிருக்கையில் அது வலியை உணர்வதில்லை'' என்றார். ''உடலும் அதன் கஷ்டங்களும் ஒன்றையொன்று தழுவிக்கொண்டிருக்கட்டும். ஏ மனமே, நீ ஆனந்தத்தில் ஆழ்ந்திரு. இப்போது நானும் எனது தெய்விக அன்னையும் சாசுவதமாக ஒன்றிவிட்டோம்'' என்று கூறினார்.

மரணத்திற்கு மூன்று நாட்கள் முன்னர் நரேனை அழைத்து அவருடன் தனியாக இருக்க விரும்பினார் ராமகிருஷ்ணர். அன்பு ததும்ப அவரை நோக்கினார், ஆனந்த நிலை எய்தினார். அந்த நிலையில் நரேன் முழு ஈடுபாடு கொண்டார். நினைவு திரும்பியபோது, ராமகிருஷ்ணரது கண்கள் பனித்து இருந்ததைக் கண்டார். சீடரிடம் குரு சொன்னார்: ''இன்று என்னிடமுள்ள அனைத்தையும் நான் உனக்குக் கொடுத்து விட்டேன். நான் ஒரு ஏழை பக்கீர். எனக்கு என்று ஒன்றுமே இல்லை. ஆனால் இந்தச் சக்தி, உலகில் நீ நிறைய நன்மை செய்வதற்குப் பயன்படும். அந்த வேலை பூர்த்தியான பிறகே நீ திரும்பி வருவாய்.''

அந்த க்ஷணத்திலிருந்து ராமகிருஷ்ணரது சக்தி அனைத்தும் நரேனுக்கு மாறியது. குருவும் சீடர்களும் ஒன்றாகிவிட்டனர்.

1886-ஆகஸ்ட் 15, ஞாயிற்றுக்கிழமை—கடைசி நாள். பிற்பகல் அற்புதமான சக்தியுடன் அவர் திகழ்ந்தார். தொண்டை படுமோசமாக இருந்தும் சீடர்களுடன் இரண்டு மணி நேரம் பேசினார். இரவில் பிரக்ஞை தவறியது. உயிர் போய் விட்டதென அவர்கள் நம்பினர். ஆனால் நள்ளிரவில் மீண்டும் பிரக்ஞை ஏற்பட்டது. ஐந்தாறு தலையணைகளில் சாய்ந்து கொண்டிருந்தார். ராமகிருஷ்ணானந்தர் அவரது உடலைத் தாங்கிக் கொண்டிருந்தார். கடைசி நிமிஷம் வரை தமது அன்புமிக்க சீடர் நரேனுடன் அவர் பேசிக்கொண்டிருந்தார். கடைசி உபதேசத்தை மெல்லிய குரலில் அவருக்கு வழங்கினார். பிறகு நல்ல கம்பீரமான குரலில் மும்முறை தமது அன்பிற்குரிய காளிமாதாவின் பெயரை உச்சரித்துவிட்டுப் படுத்துக்கொண்டார். கடைசி ஆனந்த நிலை தொடங்கியது. நடுப்பகலுக்கு அரைமணி நேரம் முன்வரை அதே நீடித்தது. அப்போது மரணம் வந்துற்றது. ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்கு அவர் சென்றுவிட்டார். தமது நம்பிக்கையை அவ்வாறுதான் அவர் விளக்கிச் சொல்வது வழக்கம்.

'ஜய ஜய' என்று சீடர்கள் கோஷமிட்டனர்.

* * *

சீடர்களின் தோழமைப் பணி உடனே தொடங்கியது. குருவின் கடைசி சில மாதங்களை, கூட இருந்து அநுபவித்த அவர்கள் மீண்டும் உலக வாழ்க்கைக்குத் திரும்புவது அசாத்தியமாயிற்று. அவர்களுக்கு வசதி இல்லை. ஆனால், திருமணமான நான்கு பேர் அவர்களுக்கு ஊக்கம் அளித்து ஓர் இல்லத்தைத் தோற்றுவிக்கத் துணைபுரிந்தனர். அந்த நால்வரில் ஒருவர் பலராம் போஸ். ராமகிருஷ்ணரது நினைவுச் சின்னங்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. சுரேந்திரநாத் மித்ரா, மகேந்திரா குப்தா, கிரீச சந்திரகோஷ் ஆகியோர் மற்ற மூவர்.

கோஷ் ஹாஸ்ய நடிகராக இருந்து ராமகிருஷ்ணரின் சீடரானவர். பாராநாகூரில் கங்கை அருகில் பாதி பாழ்பட்ட நிலையிலிருந்த ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொள்வதற்கு வேண்டிய பணத்தைச் சுரேந்திரநாத் மித்ரா கொடுத்தார். இது தான் சீடர்களது முதல் மடம் ஆயிற்று. அங்கே பன்னிரண்டு பேர் அல்லது அதிக எண்ணிக்கையினர் புது ஆசிரமத்துக்கு ஏற்ற வேறு பெயர்களுடன் கூடினர். நரேனாக இருந்தவர் விவேகானந்தரானார். அப்பெயரே நிலைத்து விட்டது. அவரது தலைமையை எல்லாரும் சம்மதித்து ஏற்றுக்கொண்டனர். அவர்தாம் எல்லாரிலும் அதிகச் சுறுசுறுப்பு, துடிதுடிப்பு,

மதிநுட்பம் படைத்தவர். அவரை அந்தப் பதவிக்கு குருவே நியமித்திருந்தார். மற்றவர்கள் தனிமையில் ஒதுங்கி, நினைவு, துக்கம் இரண்டுமாகச் சேர்ந்து தோற்றுவித்த போதை நிலையில் ஆழ்ந்து கிடந்தனர். அப்படி இருப்பதிலுள்ள கவர்ச்சியை விவேகானந்தர் அறிவார். ஆனால் அதிலுள்ள அபாயத்தையும் கூடவே உணர்ந்தார். எனவே, அவர்களுக்கு உபதேசம் செய்யும் பணியை அவர் மேற்கொண்டார்.

இந்தத் துறவிகளிடையே ஒரு பெரு நெருப்புப் புயலாக அவர் வீசினார். துக்கம், ஆனந்தம் கலந்த நிலையிருந்து விழிப்புறச் செய்தார். வெளி உலகினரின் சிந்தனைகளைக் கற்றறியும்படி நிர்ப்பந்தித்தார். தமது விரிவான மதிநுட்பத்தை மழையாக வருஷித்து அவர்களை ஞான வெள்ளத்தில் ஆழ்த்தினார். அறிவின் எல்லாக் கிளைகளையும் அவர்கள் சுவைக்கச் செய்தார். சமயங்களை ஒப்புநோக்குவது, விஞ்ஞானம், வரலாறு, சமூக இயல் ஆகியவற்றைப் போதித்தார். அவர்கள் பிரபஞ்ச திருஷ்டியுடன் பணியாற்றவேண்டு மென்பது விவேகானந்தரின் அவா. ராமகிருஷ்ணரது புனித அருளாகிய ஜ்வாலையின் தீட்சண்யம் தெரியாவண்ணம் காத்துக்கொண்டு அவர்களுடன் பயனுள்ள விவாதங்களை அவர் நடத்தலானார்.

1886 கிறிஸ்துமஸ் விழாவின்போதுதான் இந்த 'மனிதத் தெய்வங்களின்' பிறப்பு, முறைப்படி பதிவாகியது. இது எடுப்பான ஒரு கதை. மேலை நாடுகளின் வழிகாட்டியாகிய இயேசு கிறிஸ்துவை * நள்ளிரவில் இந்தியாவின் குரலாகிய விவேகானந்தர் சந்தித்த ஆச்சரிய வரலாறு அதில் தரப்பட்டுள்ளது.

பாபுராம் என்ற சீடரின் அன்னை இல்லத்தில் அந்த்பூரில் அவர்கள் கூடியிருந்தனர்.

குளிர் காய்வதற்கு மூட்டிய தீயின்முன் துறவிகள் கூடியிருந்தனர். மாலை நேரமாகி விட்டது. பெரிய மரத் துண்டுகளைக் கொணர்ந்து அக்கினியில் போட்டு எரித்தனர். விரைவில் ஒரு பெரிய ஜ்வாலை விண்ணோக்கி விம்மியது. சுற்றியிருந்த இருள் நேர்மாறான நிலையில் அதிக எழிலுள்ளதாகக் காணப்பெற்றது. மேலே இரவு அழகிய போர்வையாகப் பரந்து கிடந்தது. சுற்றி நாற்புறமும் கிராமத்தின் அமைதியுடன் கூடிய சீரிய சாந்தி

*அழகிய தேவதை என்பது இயேசு கிறிஸ்துவைப்பற்றி ஆசிரியர் கூறியுள்ள சொற்றொடரின் பொருள். ஆமியன்ஸ் நகரில் உள்ள ஒரு கோதிக் தேவாலயத்தில் உள்ள கிறிஸ்துவின் சிலைக்குப் பிரெஞ்சுக்காரர்கள் போ—தியோ என்ற பெயரை அளித்துள்ளனர்.

நிலவியது. தியானம் தொடங்கி நெடுநேரம் நீடித்தது. பிறகு இடைவெளி.

தலைவர் விவேகானந்தர் இயேசு மகானைப் பற்றிய கதை ஒன்றைச் சொன்னார். பிறப்பிலிருந்து அதன் அற்புதமான மர்மத்தை உள்ளபடியெல்லாம் கூறினார். கர்த்தரின் வருகை கன்னிமேரிக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர் எந்த ஜோதிமயமான நிலையில் காணப்பெற்றாரோ, அதையே இரு துறவிகள் சுவைத்தனர். இயேசுவுடன் அவருடைய பால பருவத்தில் கூட இருந்து தாமும் வாழ்வதாகத் தோன்றியது. எகிப்துக்குள் அவர் விரைந்து சென்றபோது தாங்களும் சென்ற அநுபவம். யூதப் பண்டிதர்கள் புடைசூழ ஆலயத்தில் இருக்கும் போது அவருடன் உடனிருந்தனர். அந்தப் பண்டிதரது வினாக்களைக் கேட்டு அவர் விடை கொடுத்து வந்தார். அவரது முதல் சீடர்கள், தமது சொந்த குருவைப் போல் பாவித்து, அவரைப் பூசித்தனர். சிந்தனையும், செயலும் சீடர்களுடன் உறவுமுறையும் கிறிஸ்து, ராமகிருஷ்ணர் ஆகிய இருவர் விஷயத்திலும் பெரும்பாலும் ஒன்றுபோலவே இருந்தது அவர்களது நினைவுக்கு வந்தது. பழங்காலத்தில் தமது குருவுடன் அடைந்த பேரானந்தத்தை அவர் நினைத்து உருகினார். ரட்சகரான கிறிஸ்துவின் உபதேசங்கள் ஏற்கெனவே காதில் பழகிய சொற்களாக ஒலித்தன.

பிறகு விவேகானந்தர் இத் துறவிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். ஒவ்வொருவரும் கிறிஸ்துவாக மாறி, உலகம் உய்வதற்காக உழைக்கவேண்டும். கிறிஸ்துவைப் போல் எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்து, கடவுளை அடைய முற்பட வேண்டும் என்றார். அந்தத் தீயின் முன் நின்றுகொண்டு ஜ்வாலையில் ஒளிவிட்ட சிவந்த முகத்துடன், மரக்கட்டை வெடிக்கும் சத்தத்தினிடையே அவர்களுடைய சிந்தனை நீடித்தது. அவர்கள் சாசுவதமாகச் சந்நியாசிகளாகவே இருப்பது என்ற புனிதமான பிரதிக்ஞையை ஒவ்வொருவரும் தமது தோழர்கள் முன்னிலையிலும், எல்லாருமாகச் சேர்ந்து ஆண்டவன் சந்நிதானத்திலும் எடுத்துக் கொண்டனர்.

அன்று கிறிஸ்துமஸ் தினம் என்பது இந்தச் சடங்கு எல்லாம் முடிந்த பின்புதான் அத் துறவிகளுக்கு நினைவுக்கு வந்தது.

கடவுளின் பிறப்பைக் குறிக்கும் மற்றொரு தினத்தின் நிறைவு கண்ட ஒரு சின்னமாக அழகுடன் அது மிளிர்ந்தது.

தொடக்கத்திலிருந்தே புதிய ஆசிரமத்திற்குள் தமது பணி ஒரு தனித்தன்மை வாய்ந்தது என்பதை அவர்கள் உணர்ந்தனர். கீழ்த்திசை, மேற்றிசை இரண்டின் இணைப்பால் வலுப்பெற்ற சக்தி அதன் அடிப்படையாக இருந்தது. விஞ்ஞானப் படிப்புடன்கூட, சமயச் சார்புள்ள தியானமும் சேர்ந்து மனத்தை விசாலப்படுத்தியது.

தியான லட்சியமும் மனித சமுகத்துக்குச் சேவை செய்வது என்ற சபதமும் சேர்ந்து ஒன்றுபட்டன. தம் மடத்திற்குள் முடங்கிக் கிடக்கலாகாது என்பது ராமகிருஷ்ணரது ஆன்மிகப் புதல்வர்களுக்கு முதலிலிருந்தே வலியுறுத்தப்பட்டது. அவர்கள். ஒவ்வொருவராக இடம் விட்டு இடம் சென்று பணியாற்றும் துறவிகளாகச் சஞ்சரிக்கலாயினர்.

அத்தியாயம் 3

# பரிவிராஜகர்

1886-ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று இரவு அந்த்பூரில், காலமான குருவின் நினைவாகக் கண்ணீரும் கம்பலையுமாய்ப் புதிய சீடர்களின் குழு நிறுவப் பெற்றது. அதற்கு அப்புறம் பல மாதங்கள், வருஷங்கள் உழைத்த பிறகுதான் ராமகிருஷ்ணருடைய சிந்தனையைப் பயனுள்ள செயலாக மாற்ற முடிந்தது.

முதலில் சிந்தனையையும் செயலையும் இணைக்கும் பாலத்தைக் கட்டவேண்டியிருந்தது. அதைப்பற்றி அவர்களால் ஒரு முடிவுக்கு வரக்கூட முடியவில்லை. நரேன் ஒருவருக்குத்தான் அதற்கான உற்சாகமும் நிர்மாணத் திறனும் உண்டு. ஆனால் அவரே தயங்கினர். மற்றவர்களைவிட, அவர்தாம் அதிகமாகக் கனவுக்கும் செயலுக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருந்தார்.

இரு கரைகளையும் இணைக்கும் வகையை அமைப்பதற்கு முன், மற்றக் கரையை நன்கு அறிய வேண்டுமென நினைத்தார். இந்தியாவின் உண்மையான தன்மைக்கும் இன்றைய நிலைமைக்குமிடையே அவர் பாலம் அமைக்க விரும்பினர். ஆனல் எதுவுமே தெளிவாகப் புலப்படவில்லை. அவரது எதிர்காலப் பணியை அவரால் நிதானித்து அறிய முடியவில்லை.

அவருக்கு வயது இருபத்து மூன்று. செய்ய வேண்டிய வேலை கடினமானது, விரிவானது, சிக்கல் நிறைந்தது. அதை எவ்வாறு நிறைவேற்றுவது என்று தமது மனத்துக்குள்ளேயே எண்ணமிட்டார். எங்கே, எவ்வாறு வேலையைத் துவக்குவது என்ற மனவேதனை காரணமாக, திட்டவட்டமாக முடிவு காணும் பொறுப்பைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தார். ஆனால் தம் மனத்தில் உள்ளூற நடந்துகொண்டிருந்த உணர்வுமிக்க சர்ச்சையைத் தடுத்து நிறுத்த அவரால் இயலவில்லை.

வாலிபப் பருவத்திலிருந்தே ஒவ்வொரு நாளும் அது அவரை விடாது துரத்தி வந்தது. மெய்யுணர்வு இல்லாமல், தம்மையும் அறியாமலேயே, உற்சாகம் மிகுதியான, முரண்பாடு நிறைந்த உள்ளுணர்வுகளை அது ஊடுருவிச் சென்றது. அதில் முரணான ஆசைகள் மோதின. அடைய வேண்டுமென்ற ஆசை,

உலகை அடைந்து, ஜயித்து, அதன்மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற ஓர் ஆசை, கடவுளைத் தாம் அநுபவிக்க வேண்டி, இவ்வுலகப் பொருட்கள் அனைத்தையும் தியாகம் செய்துவிட வேண்டுமென்ற ஓர் ஆசை. இரண்டுக்குமிடையே முரண்பாடுகள் இருந்தன.

அவரது வாழ்நாள் நெடுக இந்தப் போராட்டம் அவ்வப் போது தலைதூக்கிய வண்ணம் இருந்தது. அவர் வெற்றியில் நாட்டம் கொண்ட போர் வீரர். இகம், பரம் இரண்டையும் விரும்பியவர். எல்லாவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்த, எல்லாவற்றையும் துறந்துவிட ஆசைப்பட்டார். அவரது கம்பீரமான, வஸ்தாது போன்ற சரீரத்திற்குள் மூளையும், புலன் களும் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டிருந்தன. ஆனால் அவரிடம் மிகுதியாக இருந்த சக்தியானது ஆற்றுப்பெருக்குப் போல் விரைந்து ஓடியது. கடவுள் என்ற நதி தவிர வேறு எதுவும் அந்த வெள்ளத்தைத் தன்னுள் அடக்கிக்கொள்ள முடியாததாக இருந்தது. ஆண்டவனிடமும், அவனது ஒருமைப் பாட்டிடமும் முழுதும் சரணடைவதைத் தவிர வேறு வழி புலப் படவில்லை. கர்வத்திற்கும், தெய்விக அன்புக்குமிடையே போட்டி. இரண்டு மகத்தான ஆசைகளிடையே போட்டி— அரசுரிமை பெற்ற இரண்டு சகோதரர்களிடையே காணப் பெறுவது போன்ற போட்டி. இதற்கு முடிவு கட்டுவது எப்படி?

மூன்றாவது அம்சமும் குறுக்கிட்டது. அதை நரேன் எதிர் பார்க்கவில்லை. ஆனால் வெகு தொலைவிலிருந்தே ராமகிருஷ்ண ரது தூரதிருஷ்டி அதைக் கண்டு கொண்டது. இந்த இளைஞர் விஷயத்தில் கவலையுடன்கூடிய அவநம்பிக்கையில் பிறர் ஆழ்ந்திருந்தபோது ராமகிருஷ்ணர் கூறினார்:

"துயரம், மிடிமை ஆகியவற்றுடன் நரேன் தொடர்பு கொள்கையில் அவரது தன்மைகளில் ஒன்றாகிய கர்வம் கரைந் துருகி, எல்லையற்ற பரிவாக மாறிவிடும். அவரிடம் பலமான தன்னம்பிக்கை உண்டு. தைரியம் இழந்த அடிமைகளின் மனத்தில் மீண்டும் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் தோற்று விக்க அவரால் முடியும். தம்மைத் தாமே மிகச் சிறப்பாக அடக்கி ஆள்வதன் காரணமாக, அவரது நடத்தையானது சுதந்தரம் உள்ளதாக இருக்கும். அகங்காரம் உண்மையில் அகன்ற திவ்ய-பாவத்தைப் பிறர் அவரிடம் கண்டு வியப்பர்."

துயரத்தையும் மிடிமையையும் அவர் தெளிவற்ற பொதுப் படையான நிலையில் காணவில்லை. அடுத்தாற்போல இருக்கும் மக்களின் துயரம், இந்தியாவின் மிடிமை என்ற சாலைக்

கல்லில் அவரது மதிநுட்பம் மேலும் கூர்மை பெற்று ஒரு பொறி கிளம்பும். அது ஆன்மாவைப் பெரிய அளவில் செயலில் ஊக்குவித்து விடும். இதை அடிப்படையாகக் கொண்டு தமது கர்வம், ஆவல், அன்பு, நம்பிக்கை, விஞ்ஞானம், செயல் பாடு—எல்லாச் சக்திகளையும், ஆசைகளையும், மனித சமூகத் தின் சேவை என்ற ஒரே பணியில் ஒருமுகமாக ஈடுபடுத்தி, ஒரு பெரிய ஜ்வாலையாக, ஒரே சமயத்தில் கிளர்ந்தெழச் செய் தார். "அந்த மதம் நமக்குள் தன்னம்பிக்கையை வளர்க்கும், தேசியத் தன்மான உணர்வைப் பலப்படுத்தும். மக்களுக்கு அன்னமிட்டுக் கல்வி புகட்டும். என்னைச் சுற்றிக் காணப் பெறும் மிடிமையைப் போக்கடிக்கும். கடவுளைக் காண விரும்பினால் மனிதனுக்குச் சேவை புரியுங்கள்."

ஆனால் தமது வாழ்க்கைப் பணியைப் பற்றிய இந்தப் பிரக்ஞை பல வருஷத்திய நேரடி அனுபவத்திற்குப் பிறகு தான் அவரை விடாது பற்றிக்கொண்டது. இந்தியத் தாயை, அவளது பரிதாபகரமான தாழ்நிலையை, அவளது மக்களின் அனுபவங்களை, துயரை, கஷ்டத்தை, நேரிடையாகக் கண்டு ஸ்பரிசித்து அநுபவித்த பிறகே அவருக்கு இந்த உணர்வு ஏற்பட்டது. அவரது ஜீவ யாத்திரையைக் கவனிப்போம்.

பராநாகூரில் கழிந்த முதல் வருஷம், சீடர்கள் பரஸ் பரம் கண்டு பழகிப் பக்குவநிலை அடையச் செய்வதற்குப் பயன்பட்டது. அவர்களில் ஒருவராவது பூர்வாங்கமான தயார் நிலையில் இருக்கவில்லை. தெய்வாநுபவத்தை நாடுவதில் முழு மனத்தையும் செலுத்தும் ஆர்வத்துடன் அவர்கள் இருந்தனர். வெளி உலகில் கவனம் செலுத்தாமல், ஆன்மாவை உள்ளுறக் காணும் ஆனந்த அநுபவத்தை அவர்கள் நாடினர். கடவுளைக் கண்டறியும் அவர்களது ஆர்வம் நரேனுக்கும் இருந்தது. ஆனால் இந்த மிகச் சாதாரண கவர்ச்சியானது, செயலில் ஆர்வம் இல்லாத ஆன்மாவுக்கு மிக அபாயகரமானது. விழுகின்ற கல்லைப் பூமியின் ஈர்க்கும் சக்தி பாதிப்பது போன்றது என்று அவர் கருதினர்.

நரேன் சம்மந்தப்பட்டவரை, கனவு காண்பது கூட அவருக்குச் செயலாற்றுதல்தான். எனவே, தியானத்தில் செய லற்று மூழ்கிவிடும்படி அவர்களை அனுமதிக்க அவர் தயாரா யில்லை. மடத்தில் தனிமையில் கழிக்கவேண்டியிருந்த இந்தக் காலத்தை, ஆன்மாநுபவம் அடைவதற்கான சக்தியுடன் கூடிய வாழ்க்கையாக அவர் மாற்றிவிட்டார். அவரது மேதை

மேம்பாடு உடையது. முதலிலிருந்தே தமது சீடர்களுக்குத் திட்டவட்டமான வழிகாட்டியாக அவர் அமைந்துவிட்டார். அவர்களில் பலர் அவரைவிட வயதில் பெரியவர்கள். ஆனால் குரு விதேக முக்தியடைந்தபோது, 'இந்தச் சிறுவர்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று நரேனிடந்தான் சொல்லி விட்டுப் போனார்.

சமயக் கல்விச் சாலையின் பொறுப்பை நரேன் உறுதியுடன் ஏற்றுக்கொண்டார். கடவுளைத் தியானிப்பதாகச் சொல்லிக் கொண்டு சோம்பேறி வாழ்வு நடத்துவதை அனுமதிக்க அவர் தயாராக இல்லை. அங்கத்தினர்களை எப்போதுமே அவர் உஷாராகக் கண்காணித்து வந்தார். சிறிதும் இரக்கமின்றி அவர்களது மனத்தை அலைக்கழித்தார். மனித சமூகத்தின் சீரிய சிந்தனைகளைக் கொண்ட பெருநூல்களை அவர்களுக்குப் படித்துக் காட்டி விளக்கினார். பிரபஞ்சம் அனைத்தையுமே அன்புடன் காணும் மனசு எவ்வாறு உருப்பெறுகிறது என்று எடுத்துரைத்தார். எல்லாப் பெரிய தத்துவ, சமூகப் பிரச்னைகளையும் பற்றிய சர்ச்சைகளில் அவர்களை ஈடுபடுத்தினார். வரம்பற்ற சத்தியத்தின் அடிவானத்தை நோக்கி அவர்களது ஞானம் விரிவுகாணச் செய்தார். இனங்களும், சமயப் பிரிவுகளும் தோற்றுவித்த வரம்புகளையெல்லாம் மீறி, எல்லாத் திட்டவட்டமான உண்மைகளையும் ஒருசேர இணைக்கும் தன்மையினராக அவர்களை மாற்றினார். ராமகிருஷ்ணரது அன்பு வழியைப் பரப்புவதாக அளித்த வாக்குறுதி இவ்வாறு இணக்கமாக நிறைவேற்றப்பட்டது. குரு நேரில் கூறவில்லையாயினும், அவர் தாம் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்தது போன்ற ஒரு மனநிலை. அவரது விரிந்த உள்ளத்துக்கு இசைவாகத் தமது புத்திபூர்வமான பணிகளை உருவாக்க நரேனால் முடிந்தது.

ஆசிய மக்கள் இருந்த இடத்திலேயே இருப்பவர்கள் என்பது ஐரோப்பியர்களின் நம்பிக்கை. ஆனால் சமயப் பணியாற்றும் எந்த இந்தியனும் ஒரே இடத்தில் அடைபட்டுக் கிடக்கமாட்டான். குறிப்பிட்ட ஜாகையோ அல்லது எவ்விதப் பந்தங்களோ இல்லாமல், பிரபஞ்சம் எங்கும் சஞ்சாரம் செய்வது, தியானத்தில் ஆழ்ந்தவர்களுடைய சுபாவமாக இருந்தது. செல்லும் இடமெல்லாம் புதிது புதிதாக மக்களைக் கண்டு அளவளாவினர். இம்மாதிரி சஞ்சாரம் செய்யும் ஹிந்து சமயத் துறவிக்குப் 'பரிவிராஜகர்' என்று பெயர்.

பாரானாகூரைச் சேர்ந்தவர்கள் சிலரை இத்தகைய துறவி வாழ்க்கை ஈர்த்தது. தொடக்கத்திலிருந்து ராமகிருஷ்ணரது

சீடர் குழு பூராவாகக் கூடியதே இல்லை. யோகானந்தா, லாட்டு என்ற இரண்டு முக்கியஸ்தர்கள் 1886 கிறிஸ்துமஸ் அன்று நடைபெற்ற 'ஆசிரமம் மாறிய' புனித விழாவிற்கு வரவில்லை. இளம் வயதினரான சாரதாவைப் போன்ற வேறு சிலர் போகுமிடம் அறிவிக்காமல் திடீரென மறைந்துவிட்டனர். சீடர்கள் குழாத்தைப் பிணைத்துவைத்த பந்தங்கள் தளராமல் இருக்கச் செய்யும் கவலை நரேனுக்கு ஏற்பட்டது. ஆனால் குழாத்தினின்று விலகிச் செல்லும் அதே சமயம் அவரது மனமே அவரை வதைக்கலாயிற்று. அவரது ஆன்மா சஞ்சாரத்தை நாடியது; சேதி தாங்கிச் செல்லும் புறாவைப் போல விடுபட்டு, சிறகடித்துச் செல்ல விரும்பியது. காற்று நிறைந்த விண்வெளியில் மறைந்துவிட ஆவல் கொண்டது.

இந்த விடுதலை உணர்வையும், புதிதாகத் தோற்றுவிக்கப் பட்ட ஒரு மடத்தின் ஸ்திரமான பணிகளையும் சமரசப் படுத்துவது சிரமமாக இருந்தது. குழுவைச் சேர்ந்த ஒரு சிலரேனும் எப்போதும் பாராநாகூரில் இருக்க வேண்டும், மற்றவர்கள் வனவாசத்தை மேற்கொள்ளலாம் என்று ஏற்பாடாயிற்று. குழுவைச் சேர்ந்த ஒருவர்—அவருடைய பெயர் சசி—தமது வீட்டை விட்டு வெளிவரவே இல்லை. அவர்தாம் மடத்தை விசுவாசத்துடன் கட்டிக் காத்து வந்தார். அவர் அசையாப் பொருள்போல இருந்து, அடிக்கல்லாக அமைந்து பணியாற்றினர்.

வெளியே செல்ல வேண்டுமென்ற ஆவலை நரேன் இரண்டு வருஷ காலம் எதிர்த்துப் பார்த்தார். சில நாட்களுக்கு இங்குமங்கும் சென்று வந்தது தவிர, பாராநாகூரில் அவர் 1888 வரையில் தங்கியிருந்தார். திடீரென ஒரு துணைவருடன் கூட வெளியே சென்றார். தப்பிச் செல்ல வேண்டுமென்ற ஆவல் அதிகமாக இருந்தது. ஆனால் எதிர்பாராத வகையில் ஏதாவது நிகழ்ந்து, தோழர்கள் அழும்போதெல்லாம் திரும்புகின்ற மனப்பான்மையில் முப்பது மாத காலம் கழிந்தது. பின்னர் தப்பியே செல்வது என்ற பித்துத் தலைக்கேறிவிட்டது. ஐந்து வருஷமாக அடக்கி வைத்திருந்த ஆவல் கரை புரண்டு ஓடியது. 1891-ஆம் ஆண்டில் தனியாக, துணைவர் யாருமின்றி, பெயர் எதுவுமின்றி, கையில் திரிதண்டமும் திருவோடும் தாங்கி யாரும் அறியாத பிச்சைக்காரராக இந்தியாவின் பிரம்மாண்ட சமுதாயத்தில் அவர் ஒன்றிவிட்டார்.

உள்ளூற நடைபெற்று வந்த காரிய-காரண சர்ச்சை அவருக்கு ஒரு வழியை உருவாக்கிக் கொடுத்தது. 'என்னை நீ

கண்டிராவிடில், என்னை நீ தேடி அலைய மாட்டாய்' என்ற அமர வாக்கியம் நினைவுக்கு வந்தது. கடவுள் உள்ளுறையும் ஆன்மாக்கள் தவிர, பிறருக்கு இந்த அநுபவம் ஏற்படக் கூடியது அல்ல. தாம் மேற்கொண்டுள்ள பணியின் ரகசியத்தை ஆண்டவனிடமிருந்து எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்ற மனப் போராட்டம்; நடப்பவர்கள் விஷயத்தில் இது முற்றும் உண்மையானது.

தமக்கு ஒரு பெரிய பணி நிச்சயமாகக் காத்திருக்கிறதென்று நரேன் நினைத்தார். அவரது சக்தியும் மேதையும் இதை உள்ளூற உணர்த்தின. அக்காலத்திற்கு உரிய உத்வேகம் பரந்து கிடந்த மிடிமை, அடக்கி வைக்கப்பட்ட இந்தியாவின் குரல் மௌனமாக விடுத்த வேண்டுகோள்; ஆனால், புராதன சக்தியும் பெருமையும், அதற்கு நேர்மாறாக மக்கள் மோசம் செய்து தோற்றுவித்த இழிநிலையால், தனது பணியை இந்நாடு பூர்த்தி செய்ய முடியாது போன நிலவரம்; மரணம், மீட்சி ஆகியவை தரும் வேதனை; ஆசாபங்கமும் அன்பும் போட்டி யிடுவது—இவை எல்லாமாக அவரது இதயத்தை ஆட்கொண் டன. தமது பணி எதுவாகத்தான் இருக்கப் போகின்றது? அதைத் தமக்கு எடுத்துரைக்கப் போவது யார்? குரு அதைத் தெளிவுபடுத்தாமல் காலமாகிவிட்டார். உயிருடன் இருந்தவர் களில் தமது பாதையைப் புலப்படுத்தக்கூடிய எவரையும் காண முடியவில்லை. கடவுள்தான் துணைபுரிய வேண்டும். அவர் பேசட்டுமே? ஏன் மௌனம் சாதிக்கிறார்? ஏன் விடை தர மறுக்கிறார்?

அவரைத் தேடி புறப்பட்டார், நரேன்.

1888-ஆம் ஆண்டில் திடீரெனக் கல்கத்தாவைவிட்டு அவர் வெளியேறினார். வாரணாசி, அயோத்தி, லட்சுமணபுரி, ஆக்ரா, பிருந்தாவனம், ஹத்ரஸ், ஹிமாலயம் ஆகியவற்றிடை சஞ்சரித் தார். இந்த யாத்திரை பற்றியோ, பின்னர் அவர் மேற்கொண்ட யாத்திரைகள் பற்றியோ ஒன்றுமே யாருக்கும் தெரியாது. அவ ரைச் சந்தித்தவர்கள், அல்லது அவருடன் கூடச் சென்றவர்கள் எழுதிவைத்த குறிப்புக்கள் தவிர எதுவும் கிடைக்கவில்லை.

மத விஷயமான தமது அநுபவங்களை நரேன் ரகசியமாகவே வைத்துக்கொண்டிருந்தார். 1888-இல் இந்த முதல் யாத்திரையின் போது பிருந்தாவனத்தை விட்டுச் சென்றார். ஹத்ரஸ் என்ற சிறிய ரெயில்வே ஸ்டேஷனில் எதிர்பாராத வகையில் அவருக்கு முதல் சீடர் கிடைத்தார். ஒரு நிமிஷந்தான் அவர் புது மனித

ராக இருந்தார். அடுத்த நிமிஷம் அவரது அருட்பார்வை ஆட்கொண்டுவிட்டது. எல்லாவற்றையும் தெரிந்து பின்பற்றத் தயாரானார். இறுதிவரை அவருடன் விசுவாசத்துடன் அச் சீடர் இருந்து வந்தார். அவருடைய பெயர் சரத் சந்திர குப்தா. சதானந்தர் என்பது அவரது ஆசிரமப் பெயர். அவர்கள் பிச்சைக்காரர்கள் போல் வேஷம் தரித்துச் சஞ்சரித்தனர். பல இடங்களில் புறக்கணிக்கப்பட்டனர். பசிக் கொடுமைக்கும் உள்ளாயினர். நாவறண்டு கஷ்டப்பட்டது உண்டு. ஜாதி வேறுபாடின்றிப் பறையர்களது சுங்கானையும் புகைத்தனர். சதானந்தர் நோய்வாய்ப்பட்டார். அபாயம் நிறைந்த காடுகளின் வழியே நரேன் அவரைத் தமது தோள்மீது சுமந்து சென்றார். பின்னர் அவருக்கும் நோய் வந்துற்றது. இருவரும் கல்கத்தாவுக்குத் திரும்பிவிட வேண்டியதாயிற்று.

இந்த முதல் யாத்திரையின்போது புராதன இந்தியா அவரது கண் முன் போந்து காட்சியளித்தது. அதன் சாசுவதமான தோற்றத்தைக் கண்டார். வேதகாலத்து இந்தியா, அதன் வீர தீரப் பரம்பரையினர், கதை, வரலாறு இரண்டிலும் புகழ் பெற்ற கடவுளர் போன்றோர்; ஆசிரியர்கள், முகலாயர்கள், திராவிடர்கள் எல்லோரையுமே ஒருசேரக் கண்டார்.* இந்தியாவும் ஆசியாவும் ஒரே ஆன்மிக ஒருமைப்பாடு உடையவை என்பதை எடுத்த எடுப்பிலேயே அவர் கண்டு கொண்டார். தாம் கண்டறிந்த இந்த உண்மையைப் பாராநாகூர்ச் சகோதரர்களுக்கு எடுத்துரைத்தார்.

1889-இல் நரேன் காசிப்பூர் சென்றார். மேலையுலகில் வளர்ச்சி கண்டு வந்த முழு ஜனநாயக நாடுகளில், மெய்மறந்த நிலையில், கண்மூடித்தனமாக உருவாகி வந்த மனிதாபிமான சித்தாந்தம் அவரை ஈர்த்தது. அங்கு ஏற்பட்டு வந்த மாறுதலைத் தமது சகோதரர்களுக்கு விளக்கினார். மன்னன் தெய்வாம்ச உரிமை பெற்றவன் என்பது புராதன லட்சியம். படிப்படியாக, வர்க்கபேதமின்றி எல்லாருக்குமே சேரவேண்டிய உரிமை இது என்ற நிலைமை அங்கு அங்கீகாரம் பெற்றுள்ளதாகச் சொன்னார். இயற்கையும் பரிபூரண ஒருமைப்பாடும் தெய்விகத் தன்மை உடையவை என்று மனிதனது ஆன்மா உணர்ந்த

---

*ஆக்ராவில் முகலாயர்களது பெருமையைப் புலப்படுத்திய சின்னங்களைக் கண்டு அவர்களது கண்கள் பனித்தன. அயோத்தியில் அவர் ராமாயணக் கதையைத் தாமே வாசித்து அநுபவித்தார். பிருந்தாவனத்தில் கிருஷ்ணரது பிள்ளைப் பிராய அநுபவங்களை சுவைத்தார். ஹிமாலயத் தபோவனங்களில் வேதங்களைப் பற்றிச் சிந்தனை செய்தார்.

தாகச் சொன்னார். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அவ்வளவு நல்ல பலன்களை அளித்த கொள்கைகளை, இந்தியாவில் உடனடியாகப் பரப்ப வேண்டிய அவசியம் இருப்பதாகக் கூறினார். எல்லா மக்களது ஒன்றுபட்ட முயற்சியின் மூலம் பொதுநலனை, எல்லா மக்களின் ஆன்மிகவளர்ச்சியை விரும்பித் தோற்றுவிக்கப் பாடுபடும் விசாலமான விடுதலை உணர்ச்சியும் பெருந்தன்மையும் அவரிடமிருந்து வெளிப்போந்தன.

1889-90-ஆம்ஆண்டுகளில் அலகாபாத்துக்கும், காசிப்பூருக்கும் சென்றுவந்தார். பிரபஞ்ச ஒருமைப்பாட்டுத் தத்துவம் இந்த விஜயங்களின் விளைவாக மேலும் அவரது மனத்தில் ஆழ ஊன்றியது. காசிப்பூரில் அவர் அளித்த பேட்டிகள் குறிப்பிடத் தக்கவை. ஹிந்து சமயத்தையும், நவீன விஞ்ஞானத்தையும் சமரசப்படுத்தும் நிலையை நோக்கி அவர் சென்று கொண்டிருந்தார். வேதாந்தச் செல்வங்களையும், இக்காலத்துச் சமுதாயச் சாதனைகளையும் இணைந்த கருத்துக்களாகப் பார்த்தார். மனிதன் படிப்படியாகத்தான் உயர்நிலையை நோக்கி ஏற்றம் காண முடிகின்றது. இந்த ஞானயாத்திரையில் கையாளும் முறைகள் பல உண்டு. அந்தஸ்துகளும் வேறுபாடு உடையவை. எல்லாச் சமயங்களிலுமே மனிதனது சபல புத்திக்கு அவசியமான வகையில், சில கீழ்நிலைக் கருத்துகள் தேவைப்படுகின்றன. அவற்றில் ஒன்று கடவுளர் பலராகக் காணப்படுவது. இவையெல்லாம் ஆன்ம வளர்ச்சியின் வெவ்வேறு நிலைகளின் தன்மையைப் புலப்படுத்திய சாயைகள். மெதுவாகத்தான் அது உச்ச நிலையை அடைய முடிகிறது.

இம்மாதிரி சிந்தனைகள் அவரது எதிர்காலத்தைப் புலப்படுத்தும் மின்வெட்டுக்களாகத் தோன்றி மறைந்தன. இந்த அநுபவங்களையெல்லாம் அவர் நினைந்து நினைந்து சேமித்து வைத்துக்கொண்டார். ஒரு மகத்தான சக்தி அவரிடம் வளர்ச்சி கண்டு வந்தது. அன்றாடக் கடமைகள், மடத்துப் பணிகள், நண்பர்களுடன் உறவு முறை ஆகிய அனைத்தையும் மீறி, இச் சக்தி வலுப்பெற்று வந்தது. அதை எதனாலும் அடக்கி வைக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. தம்மைப் பிணைத்து வைத்திருந்த பந்தங்களை எல்லாம் அறுத்துக்கொண்டார். தமது தளைகளைக் களைந்து எறிந்தார். தமது வாழ்க்கை வழி, பெயர், நரேனுக்கு உரிய சரீரம் ஆகிய அனைத்தையுமே அவர் புறக்கணித்தார். தம்மிடையே ஓர் அரக்கன் போல வளர்ச்சி கண்ட சக்தியானது மறு பிறப்புக் கண்டு, சுதந்தரமாகச் செயலாற்றுவதற்கு இசைவாகத் தான்

இவற்றையெல்லாம் அவர் செய்தார். இந்த மறு பிறவிதான் விவேகானந்தர். தம்மை மூச்சுத் திணறும்படி பிணைத்து வைத்திருந்த தளைகளை அறுத்து எறிந்தார். கடவுளைப் பின் பற்றிச் செல்வதற்காகத் தமது சகோதரர்களிடம் விடைப் பெற்றுச் செல்லும் யாத்திரிகராக அவர் காட்சியளிக்கவில்லை. நல்ல கட்டுமஸ்தான இளம் உடல். பிரயோகிக்கப்படாததன் காரணமாகச் சக்தியானது மரணவாயிலை அடைந்துவிட்ட நிலைமை. அடிப்படையின் உணர்வு உந்தித் தள்ள, அவர் சிறிதும் ஒளிவு மறைவின்றி, மனத்தில் இருந்ததை அப்படியே கொட்டிவிட்டார். வாரணசியில் அவர் வெளியிட்ட கருத் துக்கு அவரிடம் பக்தி விசுவாசம் கொண்ட சீடர்கள் திரை யிட்டு விட்டனர். ''நான் போகிறேன், ஆனால், ஒரு வெடி குண்டு போலச் சமூகத்திடையே வெடித்து, நாய்போல அது என் பின்னால் வரும்படி செய்யக்கூடிய சக்தியைப் பெறும்வரை நான் திரும்பிவரமாட்டேன்'' என்று அவர் சொன்னார்.

சக்தி வாய்ந்த அசுரர்களை எப்படியெல்லாம் அவர் முறி யடித்து வெற்றி கண்டு, விசேஷ பவ்யத்துடன் மக்களது சேவையில் அவர்களை ஈடுபடச் செய்தார் என்பதை நாம் அறிவோம். ஆனால் அவரை மூச்சுத் திணற அடித்த மூர்க்க சக்திகளாகிய காலத்தையும், பேராசையையும் நினைத்துப் பார்க் கையில், நமக்கு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்யும். அவற் றின் மூலம் அவரது சக்தி பீறிட்டு வெளிவந்தது. ஆதிக்கம் செலுத்தியே தீருவது என்று ஆர்ப்பரித்தது. தம்முள் அவர் ஒரு நெப்போலியனை வைத்துக்கொண்டிருந்தது போலவே தோன்றியது.

1890 ஜூலை தொடக்கத்தில் பாராகூரிலிருந்து அவர் விடு பட்டுச் சென்றார். சிறகடித்துப் பறந்தார். புனித அன்னையை (ராமகிருஷ்ணரது மனைவியார்) அடைந்து, தமது நீண்ட யாத்திரைக்காக நல்லாசி கூறுமாறு வேண்டினார்.

இந்தத் தடவை அவர் வருஷக்கணக்கில் சஞ்சாரம் செய்தார். எல்லாப் பந்தங்களினின்றும் விடுபட்டு, ஹிமாலயத்தில் தபோ வனத்துக்குச் செல்ல விரும்பினார். ஆனால் நல்ல விஷயங்கள் எல்லாவற்றிலும் அடைவதற்கு மிகக் கடினமானது தனிமை தான். அது ஒரு மாபெரும் நிதியம். ஆனால், மனிதக் கூட்டத் துடன் உறவாடும் தன்மையுள்ளவர்களுக்கு அது கிட்டுவது முற்றும் அசாத்தியம். பெற்றோர், நண்பர்கள் யாருமே இதை மறுப்பர். டால்ஸ்டாயால் கூட இந்நிலையை அடையமுடிய

வில்லை. தன்னை விட்டுப் பிரிந்து செல்லும் ஒருவரிடம், சமுதாய வாழ்வானது ஓர் ஆயிரம் நன்மைகளை உரிமையுடன் கோருகிறது. அப்படித் தப்பிச் செல்பவர் இளவயதினராக இருந்தால் கேட்பானேன்? அதிலுள்ள சிரமத்தை நரேன் கண்டுகொண்டார். தம்மிடம் அதிகம் அன்பு பாராட்டியவர்களது நேசம் நஷ்டமாயிற்று. அவரது சோதரத் துறவிகள் அவருடன் கூட வரவிரும்பினர். முரட்டுத்தனமாகப் பேசி அவர்களிடமிருந்து தம்மை முறித்துக்கொண்டார்.

எனினும், சோகத்தில் மூழ்கியுள்ள இவ்வுலகம், தன்னை அவரால் மறக்க முடியாதபடி செய்துவிட்டது. ஒரு சகோதரி காலமாகி, அவரைத் தனியராக்கிவிட்டாள். சமுதாயக் கொடுமைக்கு அவள் பலியானவள்; ஹிந்து மாதரின் தியாக வாழ்வுக்கு உதாரணமாக விளங்கியவள். மக்களின் வருத்தம் தோய்ந்த பிரச்னைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதை எட்ட இருந்து, பற்றற்ற நிலையில் பார்த்துக்கொண்டிருப்பது பெருங் குற்றமெனக் கருதினர் நரேன். பல்வேறு சந்தர்ப்பச் சேர்க்கைகள், ஒன்றன்பின் ஒன்ருக, சங்கிலிக் கோவையாக வந்துற்றன. அவை முன்கூட்டியே திட்டமிட்டு விளைந்தன போலத் தோன்றியது.

தாம் விரும்பிய தனிமை கைகூடிவிடும் என்று நினைத்த தருணத்தில் இந்த அநுபவம் அவருக்கு ஏற்பட்டது. ஹிமாலயத்தின் மௌனச் சிறப்பினின்று, சப்தமும் தூசும் நிறைந்த சமவெளி வாழ்க்கைக்குள் அவர் தூக்கி எறியப்பட்டார். இந்த மனக் குழப்பங்களுடன் கூடச் சிறிது கஷ்டங்களும் சேர்ந்து கொண்டன. ருத்திரப் பிரயாகையிலும், ஹிமாலயத்தின் அடிவாரத்திலும், ரிஷிகேசத்திலும் இரண்டு தடவை அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். தொண்டை அடைப்பான் வந்து மரணவாயிலை ஒரு சமயம் அடைந்தார். பலவீனம் மிகுதியாகிவிட்டது. எனவே தனியாகத் தமது யாத்திரையை மேற்கொள்ள அவரால் முடியாது போல் தோன்றியது.

எனினும், அந்தத் தனி யாத்திரையைப் பூர்த்தி செய்தார். அப்படி உயிர் பிரிவதாயின் வழியில் போகட்டுமே என்று நினைத்தார். கடவுள் அருள் செய்த வழியில் முடிவு எய்துவது நல்லது என்றே கருதினர்.

1891 பிப்ரவரியில், நண்பர்கள் எச்சரித்ததைப் பொருட்படுத்தாமல், டில்லியிலிருந்து தனியாகக் கிளம்பினர். இதுதான் ஒரு பெரிய யாத்திரை. இந்தியக் கடலுக்குள் மூத்துக்குளிப்

பவன் போலக் குதித்தார். பொங்கியெழுந்த இந்தியப் பெருங் கடல் அவர் வந்த மார்க்கங்களை மறைத்துவிட்டது. அதன் மீது காணப்பட்ட பலவகையான ஜீவராசிகளில் அவரும் ஒருவர். பெயர் இல்லாத ஒரு சந்நியாசி. காஷாயம் தரித்த பல்லாயிரம் பேரில் தனி ஒருவர். ஆனால் அவரது கண்கள் மேதைக்குறிய பிரகாசத்துடன் ஜொலித்தன. எவ்வளவுதான் மூடிமறைக்கப் பார்த்தாலும், அவரது உயர்நிலையை அந்தக் கண்கள் புலப்படுத்தின.

அத்தியாயம் 4

# பாரத யாத்திரை

விவேகானந்தரின் சுபாவம் இருவகைப்பட்டதாக இருந்தது. இரண்டு வருஷ காலம் இந்தியாவெங்கும், பிறகு மூன்று வருஷ காலம் உலகைச் சுற்றியும் அவர் யாத்திரை சென்றார். முதலில் அவருக்கு இந்த உத்தேசம் இருந்திருக்குமா என்பது நிச்சயமாகத் தெரியாது. சுதந்தரம், சேவை என்ற இரண்டு உணர்வுகளுமே அவரது சுபாவத்தில் கிளர்ந்து காணப்பெற்றன. ஜாதி, வீடு வாயில் அனைத்தையும் துறந்து, திட்டம் எதுவுமின்றி, இடையறாது ஆண்டவன் ஒருவனையே துணையாகக் கொண்டு அவர் சஞ்சாரம் செய்தார்.

அவரது வாழ்க்கையில் துக்கம், ஆசாபாசங்கள், சூழல்கள், மிடிமை, மக்களின் வேகத்தில் தென்பட்ட ஜுரவெறி ஆகிய அனைத்தையுமே அவர் அநுபவிக்காத ஒரு மணி நேரம் கூட இல்லையெனச் சொல்லலாம். ஏழை—பணக்காரர்கள், நகர மக்கள், நாட்டுப்புறத்தார் எல்லோர் விஷயமும் ஒரே தன்மையுடையதாக இருந்தது. அவர்களுடைய வாழ்க்கையில் அவர் ஒன்றி நின்றார். நூல்நிலையங்களில் அடக்கிவைத்துள்ள புத்தகங்கள் அனைத்தும் உணர்த்துவதற்கு இயலாத உண்மைகளை, வாழ்க்கை என்ற மகத்தான நூல் அவருக்குப் புலப்படுத்தியது. புத்தகங்கள் வெறும் நூல்களின் சேகரந்தான்.

ராமகிருஷ்ணர் ஆர்வமும் அன்பும் மிகுந்தவர். எனினும் வாழ்க்கையின் துயரம் தோய்ந்த நிலவரத்தை கனவுபோல் தெளிவற்ற பிறக்ஞையுடன்தான் அவரால் காண முடிந்தது. இக்காலத்தின் வருந்தத்தக்க நிலை, மனித சமூகத்தில் உறைகின்ற கடவுளின் தத்தளிப்பு, உதவியை நாடிய இந்திய, உலக மக்களின் அழுகைக் குரல், வெற்றி காண்பது அல்லது அந்த முயற்சியில் அழிந்துபடுவது என்ற வீரக் கடமை தமக்கு உண்டு என்ற பொறுப்புணர்வு ஆகியவையே அவர் தமது கண்முன் கண்ட தோற்றங்கள்.

வருஷக்கணக்கில் பயணம், வருஷக்கணக்கில் பயிற்சி! என்ன ஈடு இணையற்ற கல்வி! குதிரை லாயங்களிலும், பிச்சைக்காரர்களின் குடிசைகளிலும் உறங்கிய, அடக்கமே

உருவான தம்பியாக அவர் உழைத்தார். ஆனால் அவர் ஒவ்வொரு மனிதனும் தமக்குச் சரிநிகர் சமானம் என்ற எண்ணம் அவரது மனத்தை விட்டு அகலவே இல்லை. அருவருப்புடன் புறக்கணிக்கப்பட்டு, தீண்டாதோரின் அரவணைப்பில் காலம் தள்ளிய பிச்சைக்காரனாக இன்றைய நிலை! நாளைக்கு மகுடதாரிகளின் விருந்தினர் என்ற அந்தஸ்து. பிரதம மந்திரிகள், மகாராஜாக்கள் போன்றோருடன் சமநிலையிலிருந்து உரையாடல். கொடுமைக்கு உள்ளாகி, மிடிமையால் உடல் வலுவிழந்து கிடப்பவர்களின் சோதரர். ஆனால் அதே சமயத்தில் பெரிய இடத்து நண்பர்களின் ஆடம்பர வாழ்க்கையைத் தேடித் துருவி, அவர்களது கல்நெஞ்சத்தில் பொதுஜன நன்மை என்ற வித்தை ஊன்றவைக்கும் கவலை நிறைந்த, விழிப்பூட்டும் பொதுப்பணியாளர்! அவருக்குப் பண்டிதரின் ஞானம் உண்டு, அதேமாதிரி ஆலைத்தொழில், கிராம வாழ்வுப் பற்றிய பொருளாதார அறிவும் உண்டு. அவை எவ்வாறு மக்களின் வாழ்க்கை மீது ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை அவர் நன்கு அறிவார். ஓயாத போதனை. ஓயாமல் தாமே கல்வி பயிலுதல். படிப்படியாக ஏற்றம் கண்டு இந்தியாவின் மனச்சாட்சியாக அவர் உருப்பெற்றார். அதன் ஒற்றுமையின் சொரூபமாகவும் எதிர்காலத் தலைவிதியின் உருவமாகவும் திகழ்ந்தார். இந்த அம்சங்கள் அனைத்தும் அவரிடம் நிறைவு பெற்றிருந்தன. இவையனைத்தையும் விவேகானந்தரிடம் உலகம் கண்டது.

*ராஜபுதனம், ஆள்வார் (1891 பிப்ரவரி முதல் மார்ச் வரை) ஜயப்பூர், ஆஜ்மீர், கேத்ரி, ஆமதாபாத், கத்தியவார் (செப்டம்பர் முடிய), ஜீனகட், குஜராத், போர்பந்தர் (எட்டு முதல் ஒன்பது மாதகாலம் வாசம்), துவாரகை, பலிடானா (காம்பே வளைகுடா அருகில் உள்ள ஆலய நகரம்) பரோடா சம்ஸ்தானம், கண்டுவார், பம்பாய், புணே, பெல்காம் (1892 அக்டோபர்) மைசூர் சம்ஸ்தானத்தில் பெங்களூர், கொச்சி, மலபார், திருவிதாங்கூர் சம்ஸ்தானம், திருவனந்தபுரம், மதுரை, தென்னிந்தியாவின் வாரணாசி என்று கருதப்படும் ராமேசுவரம், அதற்கப்பால் மகத்தான தேவி உறையும் கன்னியாகுமரி புனித ஸ்தலம் (1892 முடிய). மிக பிரம்மாண்டமான கூம்பு போன்ற இந்த நாட்டின் கடைக்கோடி முனையை அவர் அடைந்தார்.*

வடக்கு முதல் தெற்கு வரை புராதன நாடாகிய இந்தியா கடவுளர் நிறைந்த நாடு. அவர்களுடைய கரங்கள் எண்ணற்றவை. சங்கிலிக் கோவையாக இணைந்து இருப்பவை. எனினும்

அவை அனைத்துமே ஒரே ஒரு கடவுளின் கரங்கள்தாம். அத்தனை தெய்வங்களும், உணர்விலும், உருவிலும் ஒருமைப்பாடு உடையவை என்பதைக் கண்டறிந்தார். எல்லா ஜாதிகளிடையேயும், ஜாதியைப் பாராத நிலையிலும் அடைந்த அநுபவத்தின் மூலம் இதைத் தெரிந்துகொண்டார். தாமும் கண்டு தெளியுமாறு மக்களுக்குப் போதித்தார்.

அவர் கொண்டு சென்ற செய்தி, எல்லாரும் பரஸ்பரம் நன்கு உணர்ந்தறிய வேண்டுமென்பதுதான். பிடிவாதக்காரர்கள், மதிநுட்பத்தினுல் தத்துவ தரிசனங்களில் மனத்தைப் பறிகொடுத்தவர்கள் ஆகிய எல்லாருக்குமே, கடவுளை விக்கிரகமாகவும், உருவங்களாகவும் வழிபட்டுக் கௌரவிப்பதன் அவசியத்தைப் போதித்தார். பழைய பெருநூல்களைப் படித்துத் தெளிவு பெறுவது இளைஞர்களின் கடமை என்றுர். வேதங்கள் புராணங்கள் என்ற புராதன வரலாற்று நூல்கள் முதலியவற்றைப் படிப்பதுடன் இக்கால மக்களையும் நன்கு ஆராய்ந்தறியவேண்டும், இந்தியத் தாயிடம் சமய ஆர்வத்துடன்கூடிய அன்பு வேண்டும். அவளது விமோசனத்திற்காகத் தம்மை உத்வேகத்துடன் அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்' என்று உபதேசித்தார்.

அவர் தாம் செய்த உபதேசங்களுக்குக் குறைவில்லாத அளவில் பிறரிடம் கற்றறிந்தார். தமது அறிவை விரிவாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஒரு நாள்கூட அவர் ஈடுபடாது இருந்ததில்லை. அவர் அடைந்த அநுபவம் மகத்தானது. இந்திய மண்மீது பரந்து, புதையுண்டு கிடக்கும் சிந்தனை நீரோட்டங்கள் அனைத்தையும் அவர் ஜரித்துக்கொண்டார். அவை எல்லாவற்றின் மூலாதாரமும் ஒரேமாதிரி இருப்பதைக் கண்டுகொண்டார். வைதிகர்களின் குருட்டுப் பக்திக்கு அவர் விலக்காக இருந்தார். குட்டையாகத் தேங்கி நிற்கும் கலங்கிய நீரின் சக்தி நாற்றத்தில் அவர்கள் ஆழ்ந்து கிடந்தனர். அதேமாதிரி சீர்திருத்தவாதிகள் என்ற பெயருடன், பிரம்ம சமாஜிகள் தவறுன வழியில் சென்று பேசிய பகுத்தறிவு வாதத்தையும் அவர் தவிர்த்தார். அவர்களுடைய எண்ணங்கள் மிகச் சிறந்தனவாக இருந்திருக்கலாம். ஆனால் மறைபொருளாக இலங்கும் தெய்வாநுபவ ஊற்றை வற்றடிப்பதில்தான் அவர்கள் சுறுசுறுப்புக் காட்டினர். இவற்றையெல்லாம் காப்பாற்றி, ஒன்றுடன் ஒன்றைச் சமரசப்படுத்தி, ஆழ்ந்த மத நம்பிக்கையுள்ள ஆன்மாநுபவம் மேலோங்கிக் காணப்பெற்ற இந்தக் கண்டத்திலிருந்து நாற்றத் தேக்கங்கள் அனைத்தையும் வெளியேற்றிச் சுத்தப்படுத்த விரும்பினர்.

அவர் செய்ய ஆசைப்பட்டது இதற்கும் அதிகமாக. சமுத்திரங்களுக்கிடையே சுரங்கப் பாதையை அமைத்துக் கண்டங்களை இணைக்கும் மகத்தான என்ஜினீயரைப் போல உழைப்பவர்கள் நிந்தனையின்றித் தப்ப முடியாது. சென்ற இடம் எல்லாம், 'கிறிஸ்துவின் அடிச்சுவட்டில், (*The Imitation of Christ*) என்ற நூலை அவர் கூட எடுத்துச் சென்றார். அதையும் பகவத் கீதையையும் வைத்துக்கொண்டு இயேசுவின் சிந்தனைகளைப் பரப்பினார். மேலைநாடுகளின் விஞ்ஞானங்களைக் கற்றறியுமாறு இளைஞர்களை வற்புறுத்தினார்.

ஆனால் அவரது உள்ளம் கருத்துச் செறிவில் மட்டும் விரிவு கண்டது என்று நினைப்பது தவறு. அவரது ஆன்மிகத் திருஷ்டியில் ஒரு புரட்சி ஏற்பட்டது. பிறருடன் தமக்கு இருந்து வரவேண்டிய உறவு முறை விஷயமாக இந்த மாறுதல் ஏற்பட்டது. இளைஞராகிய அவரிடம் பெருமை இருந்தது. மதியற்ற போக்கை வெறுத்துத் தள்ளும் மனப்பான்மை இருந்தது. உயர்ந்த லட்சியம் என்று தாம் கருதும் புனித நிலைக்கு மட்டமாக இருக்கும் அனைத்தையும் வெறுக்கும் பெரிய மனித மனப்பான்மை இருந்தது. இவையனைத்தும் இளம் நரேனிடம் ஒரு சேரக் காணப்பெற்றன.

அவர் கூறினார் : இருபது வயதில் நான் சிறிதும் அநுதாபம் இல்லாத முரட்டுத்தனமுள்ள வெறியனாக இருந்தேன். கல்கத்தாவில் நாடகக் கொட்டகை இருக்கும் தெருவில் அதையடுத்த நடைபாதையில் கூடப் போகமாட்டேன். 1896-இல் எழுதிய ஒரு கடிதத்தில், 'முப்பத்து மூன்றுவது வயதில் தாசிகளுடன் கூட ஒரே வீட்டில் வசிக்க என்னால் முடிந்தது' என்று அவர் கூறினார்.

யாத்திரையின் ஆரம்ப காலத்தில் ஜயப்பூர் அருகில் கேத்ரி மகாராஜாவுடன் தங்கியிருந்தபோது, (ஏப்ரல் 1891) ஒரு சின்னஞ்சிறு நடிகை அவருக்கு, தன்னையும் அறியாமல் அடக்கமாக நடந்துகொள்வதன் அவசியத்தை உணர்த்திவிட்டாள். அவள் ஆட வந்தவுடன் வெறுப்பு மிகுதியுடன் துறவி வெளியே கிளம்பிச் செல்ல எழுந்தார். ஆனால் தங்கியிருக்குமாறு மகாராஜா அவரை வேண்டிக்கொண்டார். அந்தச் சிறு நடிகை பாடினாள் :

'ஏ ஆண்டவனே, எனது தீய குணங்கள் மீது உனது பார்வையைச் செலுத்தாதே. உனது திருநாமம் சமதிருஷ்டி உடையவன் என்பது. நாம் இருவரும் ஒரே பிரம்மமாக ஆகும்படி செய்யுங்கள். ஓர் இரும்புத் துண்டு கோயிலில் விக்ரக

மாக விளங்குகிறது. மற்றொன்று கசாப்புக்கடைக்காரர் கையில் கத்தியாகக் காணப்படுகிறது. ஆனால் இரண்டுமே தத்துவதரிசிகளின் ஸ்பரிசம் பட்டவுடன் பொன்மயமாகி விடுகின்றன. எனவே, கடவுளே, எனது தீய குணங்களைக் கண்ணெடுத்துப் பாராதீர். ஆண்டவனே, உன்னுடைய பெயர் சமதிருஷ்டி உடையவன் என்பது.

''ஒரு துளி நீர் புனிதமான யமுனையில் விழுகிறது. மற்றொன்று பாதை அருகில் சாக்கடையில் நாறுகிறது. ஆனால் அவை இரண்டும் கங்கையில் விழும்போது இரண்டுமே ஒருசேரப் புனிதமாகின்றன. எனவே, ஆண்டவனே, எனது தீய குணங்களைக் கண்ணெடுத்துப் பாராதீர். உன் திருநாமம் கடவுளே, சமதிருஷ்டி உடையவன் என்பது.'' (சூரதாஸ் என்ற வைஷ்ணவ ஞானியின் பாடல்.)

நரேனை இந்தக் கீதம் அடியோடு ஆட்கொண்டுவிட்டது. அடக்கமான இந்தப் பாட்டில் தெரிவிக்கப்பட்ட திடமான நம்பிக்கை அவரது வாழ்க்கையை அடியோடு பாதித்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு உணர்ச்சி மிகுதியுடன் கூட இந்த நிக ழ்ச்சியைப்பற்றி அவர் பேசியது உண்டு:

''ஒவ்வொன்றாக அவரது வெறுப்புக்கள் மறையலாயின. மிக ஆழமாக வேர் விட்டிருப்பவை என்று அவர் நினைத்தவை கூட விலகலாயின. இமாலயத்தில் பலருக்கு ஒரு மனைவி இருந்து வரும் திபேத்திய இனத்தாரிடையே அவர் வசித்தார். ஒரே மனைவியையுடைய ஆறு சகோதரர்களின் குடும்பத்தில் விருந்தினராக அவர் தங்கினார். அற வாழ்வில் ஏற்பட்டிருந்த புதிய உற்சாகத்தில், அவர்களது நடத்தையின் ஒழுங்கீனத்தை எடுத்துக் காண்பிக்க முயன்றார். ஆனால் அவரது போதனைகள் அவர்களுக்குக் கோபத்தையே விளைவித்தன. 'எத்தனை சுயநலம் ? ஒரு பெண்ணை ஒருவன் தனக்கு மட்டுமே வைத்துக் கொள்ள விரும்புவது ?' என்று அவர்கள் கேட்டனர். மலையின் அடித்தளத்தில் சத்தியமாக இருப்பது அதன் உச்சியில் தவறாகக் காணப்படுகிறது. நன்னடத்தை என்பது இடத்துக்கு இடம் மாறுபட்டதாக இருக்கக்கூடும். மகத்தான சம்பிரதாயச் சிறப்புடைய நற்குணங்கள் கூட அதேமாதிரி இருக்கலாம் என்பதை உணர்ந்தார். ஒரு விசித்திரமான அநுபவம், நல்லது கெட்டது பற்றிய அவரது கருத்து விரிவடைய உதவியது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் நல்லதையும் கெட்டதையும் மதிப்

பிடுவது அந்த அந்தக் காலத்து நியதிகளையே அடிப்படையாகக் கொண்டிருக்க முடியும்.

மிகக் கேவலமான ஜாதியைச் சேர்ந்த திருடர்களுடன் கூட அவர் வசித்தார். வழிப்பறிக் கொள்ளைக்காரர்களிடையே, பாவிகளாக இருந்தும் ஞானிகளாக மாறக்கூடிய உள்ளுறைச் சிறப்புகள் இருந்தோரைக் கண்டறிந்தார். எல்லா இடங் களிலும் கொடுமைக்குள்ளான வகுப்புக்களின் நிந்தனைகளை, சிரமங்களை அவர் பகிர்ந்து கொண்டார். மத்திய இந்தியாவில் தீண்டப்படாத தோட்டிக் குடும்பம் ஒன்றில் வசித்தார். சமுதாயத்தைக் கண்டு அஞ்சும் தன்மையுள்ள அக்கீழ்நிலை மக்களிடையே ஆன்மிகச் செல்வம் இருப்பதை உணர்ந்தார். ஆனால் அவர்களது மிடிமை அவரது நெஞ்சைப் பிளந்தது. அதைத் தாங்க அவரால் முடியவில்லை. "ஐயோ! என் தேசமே!" என்று புலம்பித் தேம்பித் தேம்பி அழுதார் கல்கத்தாவில் ஒரு மனிதன் பசியால் மாண்டு போனதாகப் பத்திரிகைகளில் படித்தபோதுதான் இம்மாதிரி அநுபவம் அவருக்கு ஏற்பட்டது. 'கடவுளின் பணியாளர் என்று கருதப்படும் சந்நியாசி களாகிய நாம் பாமர மக்களுக்காக என்ன செய்திருக்கிறோம்?' என்று புலம்பியவண்ணம் மார்பில் அடித்துக்கொண்டார்.

'வயிறு காய்பவனுக்கு மதம் இல்லை' என்ற பச்சையான உண்மை, ராமகிருஷ்ணர் கூறியது அவரது நினைவுக்கு வந்தது. அகந்தையுடன் கூடிய சமயத்தின் தத்துவார்த்த ஆராய்ச்சிகள் விஷயத்தில் அவருக்கு அடியோடு பொறுமை இல்லாது போயிற்று. 'ஏழைகள்பால் கவலை கொண்டு அவர்களுக்கு ஏற்றம் அளிப்பதுதான் மதத்தின் முதல் கடமை' என்று அவர் பணித்தார். செல்வர்கள், அதிகாரிகள், ராஜாக்கள் எல்லோருக்குமே இக்கடமை உண்டு என்று வலியுறுத்திக் கூறினர். "பிறரது சேவைக்காக உயிரைத் தரக்கூடிய எவரும் உங்களிடையே இல்லையா? வேதாந்த விசாரத்தையும், தியானத் தின் அனுஷ்டானத்தையும் மற்றொரு பிறவிக்கு ஒதுக்கி வைப் போம். இந்தச் சரீரமானது பிறரது சேவைக்காகத் தன்னைப் பணித்துக் கொள்ளட்டும். அப்போதுதான் நீங்கள் என்னிடம் வந்தது வீண் போகாது என்று நான் உணர்வேன்."

பிற்காலத்தில் துயரம் தோய்ந்த குரலில் இந்தச் சீரிய கருத்தை அவர் வெளியிட்டார். "எனக்கு நம்பிக்கையுள்ள ஒரே கடவுளை—அதாவது எல்லா ஆன்மாக்களும் ஒன்று சேர்ந்த கடவுளை—போக்கிரிகள், துன்பப்படுவோர், எல்லா

இனங்களிலும் உள்ள ஏழைகள் ஆகிய அனைவரும் சேர்ந்து உருவாகிய கடவுளை, நான் பூசிக்கக்கூடுமானால் மீண்டும் மீண்டும் பிறந்து, ஆயிரக்கணக்கில் துயரங்களை அநுபவிக்கத் தயார்.''

1892-ஆம் ஆண்டில் இந்தியாவின் மிடிமைதான் மற்றக் கருத்துக்களையெல்லாம் விலக்கிவிட்டு அவரது மனத்தை நிரப் பிக் கொண்டது. தனது இரையை விடாது துரத்தும் புலிபோல, இந்தியாவின் வட பகுதியிலிருந்து தென்திசையை நோக்கிய யாத்திரையில், இடையருது அதே நாட்டத்துடன் உழைத்தார். இராத் தூக்கம் இல்லை. குமரிமுனையில் அந்த மிடிமையானது அவரைத் தனது பிடியில் இறுக்கிக் கொண்டது. அப்போது தமது சரீரத்தையும் ஆன்மாவையும் அதனிடம் அவர் பறி கொடுத்தார். மகிழ்ச்சியற்ற பாமர மக்களுக்காக என்று தமது வாழ்வை அவர் அர்ப்பணித்துக் கொண்டார்.

ஆனால், அவர்களுக்கு அவரால் எவ்வாறு உதவியளிக்க முடியும்? அவரிடம் பணம் இல்லை. காலமோ நெருக்கிக் கொண்டிருந்தது. ஒன்றிரண்டு மகாராஜாக்களின் நன்கொடை யும், நல்லெண்ணம் உடைய பல குழாத்தினரின் உதவியும் சேர்ந்தாலும் மிக அவசரமான தேவைகளின் ஆயிரத்தில் ஒரு பங்கைத் திருப்தி செய்விப்பதற்குக் கூடப் போதாது. தனது மயக்க நிலையிலிருந்து இந்தியா விழிப்புற்று எழுந்து, பொது நன்மைக்காக ஸ்தாபன ரீதியில் உழைக்க முன்வருவதற்குள், இந்தியாவின் நாசம் பூர்த்தியாகிவிடும். கடலை நோக்கிக் கண்களைத் திறந்து பார்த்தார். கடல்களுக்கு அப்பாலுள்ள பூமியைக் காண முயன்றார். 'உலகம் அனைத்திற்குமே வேண்டு கோள் விடுத்தல் வேண்டும். உலகம் பூராவுக்குமே இந்தியா வானது தேவை. இந்தியாவின் வாழ்வோ தாழ்வோ உலகம் அனைத்துக்குமே கவலையை விளைவிக்கக் கூடியது. எகிப்து, சால்டியா போன்ற பல்வேறு தொன்மையான பண்பாடுகள் அழிந்துபட்டன, பின்னர் அவற்றை உயிர்ப்பிக்க முடியவில்லை. இடிபாடுகளே மிஞ்சின. இந்த அநுபவத்திற்குப் பிறகு இந்தியா வின் மகத்தான ஆன்மிகச் செல்வமும் அழிந்துபோகும்படி விடலாமா? ஆன்மா மரித்து விட்டால் பின்னர் என்ன இருக் கும்?' ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் வேண்டுகோளை அனுப்புவது என்ற எண்ணம் இந்தத் தனிமனிதரின் சிந்தனை யில் உருவாயிற்று.

1891-ம் வருஷ இறுதியில், ஜுனகட்டுக்கும் போர்பந்தருக்கும் இடையே வாழ்ந்தபோது முதல் தடவையாக இவ்வெண்ணம்

அவரது மனத்தில் உதித்தது. போர்பந்தரில் அவர் பிரெஞ்சு மொழியைக் கற்கத் தொடங்கினார். தாய்நாட்டைவிட, மேலை நாடுகளில் அவரது எண்ணத்துக்கு அதிக மதிப்பு இருக்குமாகையால், மேற்றிசை செல்லுமாறு ஒரு பண்டிதர் அவருக்கு யோசனை கூறினார். "நீங்கள் சென்று சண்டமாருதமாகப் பேசி வெற்றி கண்டு திரும்புங்கள்." என்றார்.

1892-ஆம் ஆண்டு காண்டுவாவில் இருக்கையில், அடுத்த வருஷம் சிகாகோவில் 'ஸர்வ மத மகாசபை' (பல்வேறு சமயங்களின் பார்லிமெண்ட்) ஒன்று கூட இருப்பதாகக் கேள்விப்பட்டார். அதில் எவ்வாறு பங்கு பற்றுவது என்பதுவே அவரது சிந்தனையாயிற்று. ஆனால் இந்த நோக்கம் கைகூடுவதற்கான எந்த நடவடிக்கையையும் அவர் மேற்கொள்ளவில்லை. அதற்காக நன்கொடை வசூல்களை ஏற்க மறுத்துவிட்டார். இந்தியாவில் தமது யாத்திரை முழுமை கண்ட பிறகு தான் அதைப் பற்றி நினைக்க முடியும் என்றார். "இந்தியாவின் வறுமை நிலைமைக்குப் பரிகாரம் காண்பதற்கான சாதனங்களைக் கேட்பதற்காக வேண்டி மேலைநாடுகளுக்குத் தாம் செல்ல உத்தேசித்திருப்பதாக" அக்டோபர் மாத இறுதியில் பெங்களூரில் மகாராஜாவிடம் குறிப்பாகத் தெரிவித்தார். அந்தச் சாதனங்களுக்குப் பதிலாக வேதாந்தத்தைப் பரிவர்த்தனை செய்து கொள்ளலாம் என்று நினைப்பதாகச் சொன்னார். 1892 இறுதியில் யாத்திரையைப்பற்றி அவரது மனம் உறுதிப்பட்டுவிட்டது.

அத்தருணத்தில் இந்தியாவின் தென்கோடியில் அவர் தங்கியிருந்தார். இலங்கைக்கு அனுமான் தாண்டிச் சென்ற இடத்தில் இருந்தார். ஆனால், விவேகானந்தர் ஒரு மனிதர். எனவே, தேவதைகளின் வழிமுறைகளைப் பின்பற்ற அவரால் இயலாது. விரிவான இந்தியாவை அவர் கால்நடையாகக் கடந்து சென்றார். இரண்டு வருஷ காலம் இந்தியாவின் மகத்தான சொரூபத்துடன் அவரது சரீரம் இடைவிடாது தொடர்பு கொண்டிருந்தது. பட்டினி, தாகம், மனிதனின் கொலைக்காரச் சுபாவம், அவமதிப்பு அனைத்தையும் அநுபவித்தார். குமரிமுனையை அடைந்தபொழுது அவர் களைத்துப் போயிருந்தார். தமது யாத்திரையின் இறுதி இடத்திற்குச் செல்ல ஒரு படகு தேவைப்பட்டது. ஆனால் அதற்கான கூலியைக் கொடுப்பதற்குப் பணம் இல்லை. எனவே கடலில் குதித்து, சுறுமீன்கள் நிறைந்த அந்த ஜலசந்தியில் நீந்திச் சென்றார். அவரது கடமை முடிவுற்றது. ஒரு மலையுச்சியிலிருந்து பின்னோக்கிப் பார்ப்பதுபோல்

இந்தியா முழுவதையும், யாத்திரையின்போது தமது மனத்தை ஆட்கொண்ட சிந்தனை உலகத்தையும் பின்னோக்கிப் பார்த்தார்.

இரண்டு வருஷகாலம் அவர் கொந்தளிக்கும் உலைமீது வாழ்ந்து வந்தார். ஒரே ஜுர வேகம். அவருடைய ஆன்மா சுடர்விட்டு எரிந்ததாகச் சொல்லலாம். சூறாவளியாகவும், புயலாகவும் அவர் செயலாற்றினார். பழங்காலத்தில் குற்றவாளிகளை ஜல ஹிம்சைக்கு உட்படுத்துவது வழக்கம். அவர்களைப் போலவே, தாம் சேர்த்து வைத்துக்கொண்ட சக்தி பெருமளவில் மூழ்கிவிடுவது போலவும், அந்த வெள்ளத்தைத் தாங்கி நின்ற அடித்தளம் நொறுங்கிவிடுவது போலவும் ஓர் உணர்வு ஏற்பட்டது. பாரதபூமியின் தென்கோடியில் தாம் தங்கிய இடத்தின் ஒரு கோபுரத்தின் உச்சிமீது நின்று, தம்முன் பரந்து கிடந்த அற்புதமான காட்சியை ரசிக்கையில், அவரது கால்களைக் கடல் அலை தாக்கியதுபோல, அவரது இதய ஒலி காதுகளைத் தாக்கியது. ஏறக்குறைய கீழே விழுந்துவிடும் நிலைமை. அவரிடம் உறைந்து கிடந்த கடவுளர் துணையுடன் மேற்கொண்ட மகத்தான முயற்சியே அது. இந்தப் போராட்டம் முடிவுற்ற நிலைமையில் அவருக்கு முதல் பெரிய வெற்றி கிடைத்துவிட்டது எனலாம். தாம் பின்பற்ற வேண்டிய வழியை அவர் தெரிந்து கொண்டு விட்டார். தமது பணி என்னவென்பதை அறிந்து வரித்துக் கொண்டுவிட்டார்.

பாரத கண்டத்தை மீண்டும் நீந்தி அடைந்தார். எதிர்க் கரையிலிருந்து வடதிசையில் பயணமானார். கால்நடையாக ராமநாதபுரம், புதுச்சேரி வழியாகச் சென்னையை அடைந்தார். மேலை நாடுகளுக்குத் தாம் தூது செல்லப் போவதாகப் பகிரங்கமாய் 1893 ஆரம்பத்தில் அவர் பிரகடனம் செய்தார்.

விருப்பத்திற்கு மாறாக, அவரது புகழ் முன்னமேயே பரவி விட்டது. மதிநுட்பத்திற்கும், ஜீவசக்தியுடன் கூடிய உழைப்புக்கும் பெயர்போன இந்த நகரில் இருமுறை அவர் தங்கினார். அங்கு ஏராளமான பார்வையாளர்கள் வந்து அவரை முற்றுகையிட்டனர். தமது பணிக்கு என்று வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்ட, பக்தி சிரத்தையுள்ள, முதல் சீடர் குழாத்தைச் சென்னையில்தான் அவர் தோற்றுவித்தார். அவர்கள் பின்னர் அவரை விட்டு அகலவே இல்லை. அவர் புறப்பட்டுச் சென்ற பிறகு, கடிதங்கள் மூலமாகவும், தமது திடமான நம்பிக்கையை உறுதி செய்துகொள்ளவும், தொடர்ந்து அவருக்கு அவர்கள் ஆதரவு அளித்தனர். அவரும் தொலை

தூரத்திலிருந்து அவர்களுக்கு வேண்டிய கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். அவரது மகத்தான நாட்டுப்பற்று சீடர்களின் உணர்ச்சி மிக்க இதயங்களில் புது விழிப்பை ஏற்படுத்தியது. அவர்களுடைய உற்சாகமானது அவரது திடநம்பிக்கையைப் பன்மடங்கு பெருக்கியது. சொந்த மோட்சத்திற்கான முயற்சிகளுக்கு எதிரிடையாக அவர் பிரசாரம் செய்தார். பொதுமக்களின் விமோசனத்தையே இலக்காகக் கொண்டு உழைக்க வேண்டும் என்றார். தாய்நாட்டுக்கு மறுவாழ்வு அளிப்பது, இந்தியாவின் ஆன்மிக சக்தி மீண்டும் மலரச் செய்வது, பிரபஞ்சம் எங்கும் அதன் பெருமையைப் பரப்புவது — இவையே பிரதானம் என்றார் விவேகானந்தர்.

''பக்குவமான தருணம் வந்துவிட்டது. ரிஷிகளது மதம் மகத்தான வீரியமுடையதாக வலுப்பெற வேண்டும். அதற்கான சக்தி அதனிடமிருந்தே கிடைக்க வேண்டும்'' என்றார்.

அயல்நாடுகளுக்குச் செல்வதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து உதவ நவாப்புகளும், பணக்காரர்களும் முன்வந்தனர். ஆனால், அவற்றையெல்லாம் ஏற்க அவர் மறுத்துவிட்டார். ''நான் மக்கள் சார்பில் செல்கின்றேன், ஏழைகள் சார்பில் போகின்றேன்'' என்று சொல்லி, நடுத்தர வகுப்பினரிடமிருந்து கேட்டு வசூலிக்குமாறு தமது சீடர்களுக்கு யோசனை கூறினார்.

யாத்திரையின் துவக்கத்தில் செய்தது போலவே, ராமகிருஷ்ணரது பத்தினியாகிய அன்னையை அணுகி அவரது ஆசியைக் கோரினார். அந்த அம்மையார் தமது ஆசியுடன் ராமகிருஷ்ணரது ஆசியையும் சேர்த்து வழங்கினார். அப்படி ஆசி வழங்கும் தகுதியை ஒரு கனவில் ராமகிருஷ்ணரே அந்த அம்மையாருக்கு அளித்திருந்தார்.

பாராநாகூரில் இருந்த தமது துறவிக் கோஷ்டிக்கு அவர் எழுதியதாகத் தெரியவில்லை. அவர்கள் தியானத்தில் ஆழ்ந்திருந்தனர். அவர்கள் மடத்திலிருந்து கொண்டு பணியாற்றும் பழக்கம் பெற்றவர்கள். சமூக சேவையும், மேலைநாடுகளுக்குப் பிரயாணம் செய்வதும் நிச்சயமாக அவர்களுக்கு அருவருப்பை உண்டுபண்ணியிருக்கும். பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் தமது சொந்த மோட்ச விஷயங்களில் முழுக் கவனம் செலுத்தி வந்த அவர்களது அமைதியான தூய உள்ளங்களில், அத்தகைய கருத்துக்கள் மனக்கிளர்ச்சியை விளைவிக்கும். அவரது புறப்பாட்டுக்குச் சமீபமாகப் பம்பாய் அருகில் அபு ரோட் ஸ்டேஷனில் அவர்களில் இருவரை விவேகானந்தர் காண

நேரிட்டது. ஒருவர் பிரம்மானந்தா, மற்றொருவர் துரீயானந்தா. இந்தியாவின் கஷ்டத்தைக் கண்டு சகிக்காமல் நிர்ப்பந்தமாக தாம் இப்பணியை மேற்கொள்ளவிருப்பதாக மனத்துயருடன், உணர்ச்சியுடன் அவர் தெரிவித்தார். பாராநாகூரில் அவரது சொற்கள் எதிரொலித்தன.

விவேகானந்தர் கூறினார்: ''நான் இப்போது இந்தியா எங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தாகிவிட்டது. பாமர மக்களின் பயங்கரமான வறுமையையும், மிடிமையையும் என் கண்களால் கண்டு மனவேதனை அடைந்தேன். சகோதரர்களே! கண்ணீர்ப் பெருக்கைத் தடுத்து நிறுத்த என்னால் முடியவில்லை. அவர்களது வறுமையை, அவர்களது துயரத்தை அகற்றுவதற்கு முதலில் முயற்சி செய்யாமல், அவர்களிடையே சமயப் பிரசாரம் செய்வது பயனற்றது என்பது என்னுடைய திடநம்பிக்கை. இக்காரணத்தால் இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் விமோசனத்திற்குத் தேவைப்படும் சாதனங்களைக் கண்டறிவதற்காக வேண்டி, நான் இப்போது அமெரிக்காவுக்குச் செல்கின்றேன்.''

அவர் கேத்ரி சென்றார். அங்கிருந்து பம்பாய் வரை வந்து வழி அனுப்புமாறு தமது திவானை மகாராஜா அனுப்பி வைத்தார். பிரயாண சமயத்தில் சிவப்புப் பட்டாலான அங்கிகளையும், காஷாயத் தலைப்பாகையையும், கூடவே விவேகானந்தர் என்ற திருநாமத்தையும் அவர் தரித்துக்கொண்டார். பிறகு அந்தப் பெயரால்தான் அவரை உலகம் அழைக்கலாயிற்று.

அத்தியாயம் 5

# மேலை நாடுகளுக்கு விஜயம்: ஸர்வ மத மகாசபை

இந்த யாத்திரை உண்மையில் மிகவும் வியக்கத்தக்க வகையில், எதிர்பாராத பல அநுபவங்கள் நிறைந்ததாக இருந்தது. இளைஞரான சுவாமி, கண்களைக் கட்டிய நிலையில் திடும்பிரவேசமாக அதை மேற்கொண்டார். அமெரிக்காவில் ஏதோ ஓரிடத்தில், ஏதோ ஒரு நாள் ஸர்வ மத மகாசபை நடைபெறப் போகிறது என்று அவர் போகிற போக்கில் கேள்விப்பட்டார். அதற்குச் செல்வது என்று முடிவு செய்தார். அதைப் பற்றிய தகவல்களைக் கேட்டறிய அவரோ, அவரது சீடர்களோ, இந்திய நண்பர்களோ, மாணவர்களோ, பண்டிதர் களோ, மந்திரிகளோ, மகாராஜாக்களோ எவ்வித முயற்சியும் செய்யவில்லை. அவருக்கு ஒன்றுமே தெரியாது. அது கூடும் தேதியை அவர் அறியார். அதில் சேருவதற்கு என்ன நிபந்தனை கள் என்றும் தெரியாது. தம்முடன் ஓர் அத்தாட்சிச் சீட்டுக் கூட அவர் எடுத்துச் செல்லவில்லை. முழு திடநம்பிக்கையுடன் நேரடியாகச் சென்றார். சரியான தருணத்தில், கடவுள் புலப் படுத்தும் வழியில், அங்கே தாம் தென்பட்டால் போதும் என்று அவர் நினைத்தார். கப்பல் பயணத்திற்கான டிக்கெட்டை அவருக்காகக் கேத்ரி மகாராஜா வாங்கியிருந்தார். அவரது ஆட்சேபங்களைப் பொருட்படுத்தாமல் அழகான உடுப்பைத் தயாரித்துக் கொடுத்தார். அவரது வாசாலகத்தைப் போலவே, அமெரிக்கச் சோம்பேறிகளை அந்த உடுப்பும் பெரிதும் கவர்ந் தது. அந்நாட்டின் கால நிலை, பழக்கவழக்கங்கள் முதலிய வற்றில் அவரோ, வேறு எவரோ க்வனம் செலுத்தவே இல்லை. கப்பல் பயணம் செய்து, படாடோபமான இந்திய உடுப்பில் கானடாவில் அவர் வந்திறங்கியபோது குளிரால் விறைத்துப் போனார்.

1893 மே 31-ம் தேதி பம்பாயிலிருந்து கிளம்பி இலங்கை, பினங்கு, சிங்கப்பூர், ஹாங்காங், கான்டான், நாகசாகி வழி யாகச் சென்றார். நாகசாகியிலிருந்து தரை மார்க்கமாக யோக ஹாமா, ஒஸாகா, கியூட்டோ, டோக்கியோ சென்றார். சீனா விலும், ஜப்பானிலும் அவரது எடுப்பான தோற்றம் எல்லா ரையும் ஈர்த்தது. 'தூரக் கிழக்கு நாடுகளில் பரவியிருந்த சாம்

ராஜ்யங்கள் மீது புராதன இந்தியா மகத்தான செல்வாக்கைச் சமயத் துறையில் பெற்றிருந்தது. ஆசியா முழுவதுமே ஆன்மிக ஒருமைப்பாடு உள்ளது' என்பன அவரது இரு திட நம்பிக்கைகள். இவற்றிற்குப் புதிய ருசுக்கள் கிடைத்தன. அதே சமயத்தில், இந்தியாவின் கஷ்டங்கள் அவரது மனத்தை விட்டு அகலவே இல்லை. ஜப்பான் அடைந்திருந்த முன்னேற்றம் அவரது இதயப் புண்ணைக் கிளறிவிட்டது.

யோகஹாமாவிலிருந்து அவர் வான்கூவருக்குச் சென்றார். அங்கிருந்து ரெயிலேறி, ஜூலை மாத மத்தியில், மனம் மிக மிகக் குழம்பிய நிலையில் சிகாகோ நகரை வந்தடைந்தார். வழி நெடுக அவரது கஷ்டத்தின் சின்னங்கள் சிதறிக் கிடந்தன. பணத்தைக் கறந்துவிடும் சுபாவம் உள்ளவர்கள் அவரை விடவில்லை. தொலை தூரத்திலிருந்தே அவரை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. முதலில் ஒரு பெரிய குழந்தை போன்ற மனநிலையில் அவர் காணப்பட்டார். திறந்த வாய் மூடாமல், வைத்த கண் வாங்காமல் சிகாகோ உலகக் கண்காட்சியைக் கண்டு ரசித்தார். எல்லாமே அவருக்குப் புதுமையாக இருந்தன. பேராச்சரியத்தை விளைவித்துத் திக்பிரமையை உண்டுபண்ணின.

மேலை உலகின் சக்தியும் செல்வமும், புதிய கண்டுபிடிப்புகளைத் தோற்றுவிக்கும் மேதையும் இவ்வளவு பிரமாதமாக இருக்குமென்று அவர் ஒருபோதும் கற்பனை செய்துகொண்டது கூட இல்லை. சக்தியின் மாட்சியை அவர் அதிகமாகச் சுவைக்கும் வல்லமை பொருந்தியவராக இருந்தார். டாகுரும், காந்தியும், இரைச்சலையும் இயந்திர இயக்கத்தின் வெறியையும் கண்டு மனவேதனை அடைந்தவர்கள். ஆனால் ஐரோப்பிய, அமெரிக்க இயந்திரச் சாதனைகள், முக்கியமாக அமெரிக்கச் சாதனைகள் விவேகானந்தருக்கு மனச்சாந்தியை அளித்தன. ஆரம்ப நிலையில் அதுவே அவரது அனுபவமாயிருந்தது. அதன் பரபரப்பான மோகம் அவரைக் கிறங்க வைத்தது. குழந்தையைப் போல் அதுவே சரி என்று ஏற்கும் முதல் உணர்வு ஏற்பட்டது. அவரது வியப்பும் பாராட்டுதலும் வரம்பு கடந்து காணப் பெற்றன.

பன்னிரண்டு நாட்கள் அலுப்புச் சலிப்பின்றி இப்புது உலகைத் தமது கண்ணுறக் கண்டார். சிகாகோவை அடைந்த சில தினங்களில் மகாசபையின் செய்திப் பிரிவுக்குச் சென்றார். அங்கே அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில்தான் ஸர்வ மத மகாசபை கூடுகிறது என்று

அறிந்தார். அது மட்டுமல்ல, பிரதிநிதிகளைப் பதிவு செய்து கொள்வதற்கான காலக்கெடு தீர்ந்துபோய்விட்டதாகவும் கூறப்பட்டது. மேலும், அதிகார பூர்வமான அத்தாட்சியின்றி எந்தப் பிரதிநிதியையும் ஏற்றுக்கொண்டு பதிவு செய்யமாட் டார்கள் என்றும் அறிந்தார். அவரிடம் அத்தாட்சி இல்லை. அவரைத் தெரிந்தவர்கள் கிடையாது. அங்கீகாரம் பெற்ற எந்த மதப் பிரிவும் அவருக்கு அனுமதி அளிக்கவில்லை. அவரது பணப்பை அனேகமாகக் காலியாகிவிட்டது. மகாசபை கூடும் வரை காத்திருக்க முடியாத ஒரு நிலை, என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார். சென்னையிலுள்ள நண்பர்களுக்குத் தந்தி அடித்து உதவி கோரினார். ஒரு மதச் சங்கத்திற்கு வேண்டுகோள் அனுப்பித் தமக்கு ஒரு மானியம் தருமாறு கேட்டுக்கொண்டார். ஆனால், சுயேச்சையாக நடந்துகொள் பவர்களைத் அதிகார பூர்வமான சங்கங்கள் மன்னிக்கும்வழக்கம் இல்லை. 'சைத்தான் குளிரில் விறைத்துச் சாகட்டும்' என்று சங்கத்தின் தலைவர் பதில் அனுப்பினார்!

சைத்தான் சாகவில்லை. தன் முயற்சியையும் கைவிட வில்லை. விதி விட்ட வழியாகிறது என்ற நம்பிக்கையில் செய லாற்றினார். தம்மிடமிருந்த ஒரு சில டாலர்களைப் பத்திரப் படுத்திக் காலம் தள்ளும் மனிதராக அவர் இருக்கவில்லை. அதற்கு ரெயில் டிக்கெட் வாங்கிக்கொண்டு பாஸ்டன் நகரை அடைந்தார். அங்கே அவருக்கு விதி துணை புரிந்தது. தமக்குத் தாமே உதவி செய்துகொள்வோருக்கு விதியும் துணை புரியும். விவேகானந்தர் எங்கே சென்றாலும், மக்களை ஈர்க்காமல் இருக்க முடியாது. யார் என்று தெரியாத நிலையிலும், காண்போரைக் கவரும் வசீகரம் அவரிடம் இருந்தது.

பாஸ்டனுக்கு ரெயிலில் போய்க்கொண்டிருக்கையில் அவர் தோற்றமும் பேச்சும் சகப் பிரயாணி ஒருவரைக் கவர்ந்தன. அவர் மாசாசூசெட்ஸ் நகரைச் சேர்ந்த ஒரு பணக்காரப் பெண் மணி. முதலில் அவரைச் சில கேள்விகள் கேட்டார். பின்னர் அவர் விஷயத்தில் அக்கறை பிறந்தது. தமது இல்லத்திற்கு அழைத்தார். ஹார்வார்டு சர்வகலாசாலையில் கிரேக்க விவகாரங் களைப் போதித்து வந்த ஜே. எச். ரைட் என்ற பேராசிரியருக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார். இந்த இளம் ஹிந்துவின் மேதை ஒரு கணத்தில் பேராசிரியரைக் கவர்ந்தது. அவர் உடனே, 'விவேகானந்தருக்காக எதையும் செய்யத் தயார்' என்று கூறினார். ஸர்வமத மகாசபையில் விவேகானந்தர் ஹிந்து சமயத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ள வேண்டு மென்று அவர் வலியுறுத்தினார். கமிட்டியின் தலைவருக்கு அவர்

எழுதினர். சிகாகோவுக்குச் செல்வதற்கு ரெயில் கட்டணம் கொடுத்தார். அங்கே அவருக்குத் தங்குமிடம் கிடைப்பதற்காக வேண்டி, கமிட்டிக்குச் சிபாரிசுக் கடிதங்களையும் வழங்கினர். அவரது கஷ்டங்கள் எல்லாம் இவ்வாறு அகற்றப்பட்டன.

விவேகானந்தர் சிகாகோவுக்குத் திரும்பினர். ரெயில் நேரம் கழித்து வந்தது. கமிட்டியின் சிபாரிசுக் குறிப்பைத் தொலைத்து விட்டார். சித்தப்பிரமை ஏற்பட்ட நிலையில், எங்கே போவது என்று தெரியாது தவித்தார். வெள்ளையர் அல்லாத ஒருவருக்கு அவர் கோரும் தகவலைக் கொடுக்க எவரும் பெரிய மனது பண்ணமாட்டார்கள். ரயில் ஸ்டேஷனில் ஒரு மூலையில் பெரிய காலிப்பெட்டி கிடந்தது. அதற்குள் படுத்து உறங்கினர். காலையில் எழுந்திருந்து விசாரித்துக்கொண்டே, சந்நியாசி என்ற முறையில் வீடு வீடாகப் பிச்சை கேட்டார். ஆனல் பணம் சம்பாதிப்பதற்கு ஆயிரம் வழிகளை அறிந்த அந்நகரில், கடவுளின் ஆண்டியாக இருக்கும் முறை யாருக்கும் தெரியாது. சில வீடுகளில் முரட்டுத்தனமாக அவரைப் பேசி அனுப்பினர். மற்றவைகளில் வேலையாட்களே நிந்தித்தனர். வேறு சில வீடுகளில் கதவைப் படார் என்று அறைந்து சாத்தினர். நெடுநேரம் திரிந்து அலைந்து, தெருவில் களைத்துப் போய் உட்கார்ந்தார். எதிர்வீட்டின் ஜன்னலிலிருந்து அவர் மீது ஒரு பார்வை திரும்பியது. அவர் ஸர்வ மத மகாசபைக்கு ஒரு பிரதிநிதி அல்லவா என்ற கேள்வி எழுந்தது. உள்ளே வருமாறு அழைப்புக் கிடைத்தது. மீண்டும் விதி அவருக்குத் துணைபுரிந்தது. அமெரிக்கச் சீடர்களில் மிகமிக விசுவாசியாக வளர்ச்சி கண்ட ஒருவர் அங்கே அவருக்குக் கிடைத்தார். (அவரது பெயர் ஸ்ரீமதி ஜி. டபிள்யூ. ஹேல்) சிறிது களைப்பாறியபின், மகாசபைக்கு, (பார்லிமெண்டுக்கு) அவரை அம்மாது அழைத்துச் சென்ருர். அங்கே அவரை மகிழ்ச்சியுடன் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டார்கள். கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்திருந்த பிற பிரதிநிதிகளுடன் கூட அவருக்கும் தங்குமிடம் கிடைத்தது.

ஏறக்குறைய பேராபத்தான நிலைமையில் முடிவுறுவது போலத் தென்பட்ட, பல அபாயங்கள் நிறைந்த யாத்திரையில், இத் தருணம் அவருக்குச் சிரமமின்றி நாடிய இலக்கு கிடைத்தது. ஆனல் அவர் இங்கே வந்தது ஓய்வுக்காக அல்ல. செயலாற்றத் துடித்தார். விதியால் என்ன செய்ய முடியுமோ அவ்வளவும் விளைந்தாகிவிட்டது. இனி, உறுதியுடன் செயலில் இறங்க வேண்டியதுதான். நேற்று யாரும் அறியாத பிச்சைக்காரராக, வெள்ளையர் அல்லாதவர் என்பதற்காக, கூட்டத்தால்

வெறுக்கப்பட்டு, போக்கிரிகளின் நிந்தனைக்கு உள்ளானவர், எடுத்த எடுப்பில் தமது ஆதிபத்திய மேதையைப் பிரகாசப் படுத்தும் வாய்ப்புப் பெற்றார்.

1893 செப்டம்பர் 11-ம் தேதி திங்கட்கிழமை மகாசபையின் முதல் கூட்டம் தொடங்கியது. மத்தியில் கார்டினல் கிப்பன்ஸ் அமர்ந்திருந்தார். அவரது இருமருங்கிலும் கீழ்த் திசைப் பிரதிநிதிகள் கூடியிருந்தனர். பிரதாப சந்திர மஜூம்தார், பிரம்ம சமாஜத் தலைவர், விவேகானந்தரின் பழைய நண்பர், இந்திய ஆஸ்திகர்கள் சார்பில் நாகர்காருடன் அங்கு இருந்தார். இலங்கை பௌத்தர்களின் பிரதிநிதியாகத் தரும பாலர் வந்திருந்தார். ஜைனர்கள் சார்பில் காந்தி * அங்கு இருந்தார். அன்னி பெசன்ட்டுடன் பிரம்மஞான சபை சார்பில் சக்கரவர்த்தி வந்திருந்தார். ஆனால் அவர்கள் எல்லாருக்குமிடையே, யாருடைய பிரதிநிதியாகவும் இராமல் ஆனால், எல்லோருக்கும் உரியவராக, எந்தப் பிரிவையும் சேராதவராக இந்தியா முழுமைக்கும் உரியவராக அமர்ந்திருந்த அந்த இளைஞர், அங்கு ஆயிரக்கணக்கில் கூடியிருந்த எல்லாரின் பார்வைக்கும் உள்ளானார். அவரது கவர்ச்சிகரமான முகம், பெருந்தன்மை வாய்ந்த ஆகிருதி, ஏதோ ஒரு கற்பனை உலகிலிருந்து வந்தவரோ என்று நினைக்கும்படி செய்த எடுப்பான உடுப்பு! தமது உணர்ச்சி வெள்ளத்தை அவர் வெளிக்குக் காட்டவில்லை. அத்தகைய ஒரு கூட்டத்தில் அவர் பேசுவது முதல் தடவை. ஒவ்வொரு பிரதிநிதியும் தாம் யார் என்பதைச் சுருக்கமான உரையில் அறிமுகம் செய்துகொள்ள வேண்டும். தமக்கு வந்த வாய்ப்புகளை அன்று இறுதிவரை அவர் பயன் படுத்திக்கொள்ளவில்லை.

ஆனால் அன்று மாலை அவர் ஆற்றிய உரை ஒரு ஜ்வாலை போல் பிரகாசித்தது. வறட்டு வாதங்கள் நிறைந்த பயனற்ற சொற்பொழிவுகளுக்கிடையே, கேட்க வந்த ஜனத்திரளுக்கு ஒரு புதிய ஆன்மாநுபவத்தை அது உண்டு பண்ணியது. 'அமெரிக்காவைச் சேர்ந்த சகோதரர்களே, சகோதரிகளே!' என்ற எளிய சொற்களுடன் தமது உரையை அவர் தொடங்கியவுடன்

---

* இந்தக் காந்தி வேறு; இத்தருணத்தில் மோகன்தாஸ் காந்தி தென்னாப்பிரிக்காவில் அடியெடுத்து வைத்திருந்தார். அவரது குடும்பத்தினர், ஜைனர்களுடன் நெருங்கிய உறவு முறை உள்ளவர்கள். ஒருகால் ஸர்வமத மகா சபைக்கு வந்திருந்த காந்தி, எம். கே. காந்தியின் தூரத்து உறவினராக இருந்திருக்கக் கூடும்.

நூற்றுக்கணக்கான பேர் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நின்று கரகோஷம் செய்தனர். உண்மையில் தமக்குத்தான் அந்தக் கரகோஷமா என்ற ஆச்சரியம் அவருக்கு ஏற்பட்டது. காங்கிரசின் சம்பிரதாயமான சடங்கு முறைகளைப் புறக்கணித்து விட்டு, அங்கே குழுமியிருந்த பாமர மக்களுக்கு, அவர்கள் கேட்பதற்கு ஏங்கித் தவித்த பாஷையில் அவர் பேசினார். மீண்டும் மௌனம். உலக நாடுகளில், பிராயத்தில் குறைந்த அமெரிக்காவை, உலகில் மிகப் பெரிய துறவிச் சமூகத்தின் பெயரால், வைதிகச் சந்நியாசிகளது திருக்கூட்டத்தின் பெயரால் அவர் வாழ்த்தினார். "ஹிந்து சமயம் எல்லா மதங்களுக்கும் தாய். அது இரண்டு விஷயங்களைப் போதித்தது. ஒருவரை யொருவர் ஏற்றுக்கொண்டு, ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுங்கள்." புனிதமான நூல்களிலிருந்து இரண்டு அழகான சுலோகங்களை அவர் எடுத்துரைத்தார்.

'எந்த வடிவத்தில் யார் என்னை அணுகினாலும் நான் அவனை அடைகின்றேன்.'

'எல்லா மக்களும் சிரமப்பட்டு வகுத்துக்கொண்டுள்ள சமயவழிகள் அனைத்தும் இறுதியில் என்னையே அடைகின்றன.'

அங்கு மற்ற வாசாலகர்கள் எல்லோரும் தம் தம் கடவுளைப் பற்றிப் பேசினர். தம் தம் பிரிவைச் சேர்ந்த கடவுளைப் பற்றி உரை நிகழ்த்தினார்கள். அவர் மட்டும் எல்லாரது கடவுளையும் சேர்த்துப் பேசினார். அவை அனைத்தும் பரப்பிரம்மத்தின் சொரூபங்கள் என்று அறிவித்தார். ராமகிருஷ்ணரது அநுபவம் இவ்வாறு தமது மகத்தான சீடரின் மூலம், எல்லாத் தடைகளையும் தகர்த்துக்கொண்டு வெளிப்போந்தது. ஸர்வ மத மகாசபை அந்த இளம் மேதைக்கு மகத்தான கரகோஷத்தை வழங்கியது.

அடுத்த தினங்களில் பத்துப் பன்னிரண்டு தடவை அவர் பேசினார். ஒவ்வொரு தடவையும் புதுப் புது வாதம். ஆனால் காலம், இடைவெளி என்ற வரம்புகள் இல்லாத, பிரபஞ்சமயமான மதத்தை அவர் திடநம்பிக்கையுடன் விளக்கினார். மனித வர்க்கத்தின் ஆன்மாவை ஒன்றுபடுத்தி, காட்டுமிராண்டிக் காலம் முதல் நவீன விஞ்ஞானம் புலப்படுத்தும் தரிசனங்கள், நிர்மாண ரீதியான நம்பிக்கைகள் வரை எல்லாவற்றையும் இணைத்துப் பேசினார். இவற்றையெல்லாம் மிகக் கம்பீரமாக ஒன்றோடொன்று பொருத்தி, சமரசப்படுத்திக்

காட்டினர். எந்த ஒரு சமயத்தையும் நோகாமல், எல்லாவித நம்பிக்கைகளும் வளர்ந்து, அதனதன் சரியான சுபாவத்துக்குத் தக்கபடி வளமுற வேண்டுமென்றுர். 'மனிதன் தெய்வாம்சம் பொருந்தியவன். அவன் இடையருது வளர்ச்சி கண்டு ஏற்றம் காண்பதற்கான தகுதியுடையவன்.' இது ஒன்றுதான் அவர் புலப்படுத்திய சித்தாந்தம்.

''அத்தகைய மதம் ஒன்றை வழங்குங்கள். உலக நாடுகள் அனைத்தும் உங்களைப் பின்பற்றும். அசோகரது திருச்சபை, புத்த சமயத்தினரது ஆலோசனைக் கூடமாக இருந்தது. அக்பரது திருக்கூட்டம் தெளிவான நோக்கம் கொண்டது. ஆனால் அது அந்தரங்கத்தில் நடைபெற்ற ஆலோசனை. கடவுள் ஒவ்வொரு மதத்திலும் இருக்கின்றுர் என்பதை உலகின் எல்லா மூலைமுடுக்குகளும் அறியும்படி பிரகடனப்படுத்தும் பெருமை அமெரிக்காவுக்குக் காத்திருந்தது.

''இந்துக்கள் பிரம்மம் என்று அழைப்பவரும், ஜுராஸ்திரியர்கள் அகூரா மஸ்தார் என்று போற்றுபவரும், பௌத்தர்களின் புத்தரும், யூதர்களின் ஜிஹோவாவும், கிறிஸ்தவர்களின் தந்தையாகிய இயேசு மகானும் உங்களுக்கு வல்லமை தருவர். கிறிஸ்துவர் இந்துவாக வேண்டாம், பௌத்தராக வேண்டாம், இந்து அல்லது பௌத்தர் கிறிஸ்தவராக வேண்டாம். ஆனல் ஒவ்வொருவரும் மற்றவர்களது உணர்வுகளைத் தெரிந்து, அறிந்து, ஜீரணித்துக்கொள்ள வேண்டும். அதே சமயத்தில் தனது தனித்தன்மையையும் காப்பாற்றிக்கொண்டு, தன்து சொந்தமான வளர்ச்சியின் நியதிக்கு ஏற்ப ஏற்றம் காணட்டும். ஸர்வ மத மகாசபை ஒரு விஷயத்தை நிருபணம் செய்துள்ளது. தூய்மை, ஞானம், கருணை ஆகியவை உலகில் எந்த மதத் திருச்சபைக்கும் ஏகபோகமான தனிப்பெருமை அன்று. ஒவ்வொரு முறையிலும் மிகச்சிறந்த குணநலம் பெற்ற ஆண்களும், பெண்களும் தோன்றியிருக்கிறுர்கள். எதிர்ப்பு இருந்தபோதிலும், விரைவில் ஒவ்வொரு சமயக்கொடியிலும் கீழ்க்கண்ட வார்த்தைகள் பொறிக்கப் பெறும்: 'உதவிக் கொள்ளுங்கள், சண்டையிடாதீர்கள்', 'ஜரித்துக்கொள்ளுங்கள், அழித்துக் கொள்ளாதீர்கள்', 'சௌஜன்யமும் சாந்தியும் நிலவட்டும், தகராறுகள் தேவையில்லை.' ''

இந்த மகத்தான சொற்களின் விளைவு பிரமாதமாக இருந்தது. மகாசபைக்கு வந்திருந்த அதிகாரபூர்வமான பிரதி

நிதிகளின் முன்னிலையில் நிகழ்த்திய உரையாயினும், அவர்களையும் விஞ்சி, வெளியிலுள்ள எல்லா மக்களையும் கருத்திற் கொண்டு பேசியதால், எல்லோரது சிந்தனையையும் அது ஊக்குவித்தது. உடனே விவேகானந்தரின் புகழ் கடல் கடந்து பரவியது. இந்தியா இதனால் விசேஷ நன்மை அடைந்தது. ''ஸர்வ மத மகாசபையில் கலந்துகொண்டவர்களில் சந்தேகமற அவர் முதன்மையானவர். அவரைக் கேட்ட பின்னர், ஞானம் தோய்ந்த இந்திய நாட்டிற்கு மிஷனரிகளை நாம் அனுப்புவது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை உணர்கிறோம்'' என்று அமெரிக்கப் பத்திரிகைகள் அங்கீகார முத்திரை அளித்து அவரைப் புகழ்ந்தன.

இம்மாதிரி அவர் கூறியது கிறிஸ்தவ மிஷனரிகளின் செவிகளில் தேனைகப் பாயவில்லை. விவேகானந்தரது வெற்றி, கசப்பு நிறைந்த சர்ச்சையை அவர்களிடையே கிளப்பிவிட்டது. மிகக் கீழ்த்தரமான சாதனங்களை உபயோகிக்கவும் அவர்கள் துணிந்தனர். சில ஹிந்துப் பிரதிநிதிகளின் பொருமையும் வலுப்பெற்றது. 'இந்த உலக சஞ்சாரியாகிய துறவி தம்மை மங்க அடித்து விட்டார், அவருக்கு அதிகாரம் இல்லை, பந்தங்கள் இல்லை' என்று அவர்கள் பேசிக்கொண்டனர். விவேகானந்தர் பிரம்ம ஞானத்தை (தியாசபியை)க் கண்டனம் செய்தார். அதற்காக அவரை அப்பிரிவினர் மன்னிக்கவே இல்லை.

கீர்த்தியின் இந்த அருணோதய வேளையில் அதன் சுடரொளி எல்லா வகை இருளையும் அகற்றிவிட்டது. விவேகானந்தர் அத்தருணத்தில் மிக மிகப் பெரியவராகத் திகழ்ந்தார்.

இந்த வெற்றியைப் பற்றி அவர் என்ன நினைத்தார்? அவர் மனமுருகி அழுதார். கடவுளுடன் தனிமையில், நிர்ப்பந்தமின்றித் தாம் தேடி வாழ்ந்த நிலைமை முற்றுப் பெற்றுவிட்டது என்பதைக் கண்டு கொண்டார். அவரது வருத்தத்தை அனுதாபத்துடன் பகிர்ந்துகொள்ளாத சமயப்பற்றுள்ள எவரும் இருக்க முடியாது. அது தமக்கென அவரே வரித்துக்கொண்ட வழி. அல்லது இந்த யாத்திரையை மேற்கொள்ளும்படி பணித்த அந்த யாருமறியாச் சக்தியானது இப்படி நடக்கவேண்டுமென்று விதித்தது போலும்! ஆனல் மற்ருேர் உள்ளுறைக் குரல் கூடவே ஒலித்துக்கொண்டிருந்தது. ''துறந்துவிடு, கடவுளில் ஒன்றி வாழ்'' என்று அது கூறிக்கொண்ருந்தது. ஒன்றை மறுக்காமல் மற்றென்றைத் திருப்தி செய்விக்க முடியாத நிலைமை. ஒன்றுக்கொன்று முரண்பட்டது போல் தோன்றி

ஞலும், உண்மையில் காரிய காரணத் தொடர்புடன் கூடிய அவரது மேதையும் துயரமும் அவ்வப்போது பல நெருக்கடிகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தன.

மனத்தில் ஒரே ஒரு சிந்தனை மட்டும் உள்ளவர்களால் இதைச் சுலபத்தில் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் தமது வறுமையை ஓர் அருங்குணமாக மதித்து வந்தனர். ஆன்மாக்கள் ஒன்றுக்கொன்று சௌஜன்யமாக வாழவேண்டுமென்பதற்காகப் பிறர் நடத்திய, சோகம் தோய்ந்த, பெரிய போராட்டங்கள் பணப் பகட்டுள்ளவை என்று, குழப்பத்தின் காரணமாக அல்லது ஏமாற்று வித்தையாக அவர்கள் சொல்லி வந்தனர். இவ்வாறு கெட்ட எண்ணத்துடன் விளக்கம் கூறுபவர்கள் அன்றும் இன்றும் என்றுமே நிந்திக்கத்தான் செய்வர். இதை மன்னித்துவிட விவேகானந்தரது கருவறிலை இடம் தரவில்லை.

இத்தருணத்தில் எழுந்த பல சிக்கல்கள் அவரது ஆன்மாநுபவத்தை மட்டும் பற்றியவை அல்ல. அன்றைய நிலையில் அவை தவிர்க்க முடியாதவையாக இருந்தன. வெற்றி கண்ட பிறகு, அவரது பணி முன்னைவிட அதிகச் சிரமமுள்ளதாக மாறியது. வறுமை காரணமாகப் பட்டொழியும் நிலையில் இருந்தவருக்கு, இப்போது செல்வத்தின் கீழ்ச் சிக்குண்டு போய்விடும் அபாயம் ஏற்பட்டிருந்தது. அமெரிக்கச் செல்வர்கள், பெரிய மனித ஹோதாவில், ஆரம்ப உற்சாகிகளாகி, பகட்டான வாழ்க்கையையும் ஆடம்பரத்தையும் அவர்மீது திணிக்க முற்பட்டனர். இம்மாதிரி மிதமிஞ்சிப் பணம் கிடைத்தது, விவேகானந்தருக்கு ஏறக்குறைய நோயை விளைவித்தது. இரவு நேரத்தில் படுக்கை அறையில் ஆயாச மிகுதியுடன் அழுவார். தரையில், புரளுவார். பட்டினியால் உயிர் துறப்போரை நினைத்து உருகுவார். "ஏ தாயே, என் மக்கள் மிடிமையில் தவித்துக்கொண்டிருக்கையில், எனக்குப் புகழ் கிடைத்து என்ன பயன்?' என்று புலம்புவார்.

அதிருஷ்டக்கட்டையான தமது இந்தியாவின் நலனுக்கு உழைக்கவும், ஆதரவு அளித்துவந்த பணக்காரர்களை நம்பியுள்ள நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவும் வேண்டி, பல இடங்களில் உரைகளை நிகழ்த்தும் ஓர் அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார். அமெரிக்காவில் கீழ்ப் பகுதி, மேல் திசை, மத்தியப் பகுதி, சிகாகோ, அயோவா, டெஸ்மாயின்ஸ், செயின்ட் லூயி, மின்னியாபொலீஸ், டெட்ராயிட், பாஸ்டன், கேம்பிரிட்ஜ், பால்டிமோர், வாஷிங்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் உரை நிகழ்த்துவதாக ஒப்புக்கொண்டார். ஆனால் இது ஆபத்தான முறை. அமெரிக்க

மக்களுக்குத் துதி பாடி, அவர்களிடமிருந்து கரகோஷத்தையும், டாலர்களையும் பிறர் போல் அவர் அடைய முற்படுவார் என்று யாரேனும் நினைத்திருந்தால் அது பெரிய தவறாகும்.

இளம் அமெரிக்கக் குடியரசின் மகத்தான சக்தியைக் கண்டு கவரப் பெற்று, வியப்பிலாழ்ந்து போன ஆரம்ப உணர்வு இப்போது மங்கிவிட்டது. மிருகத்தனம், மனிதத் தன்மை இல்லாத நடத்தை, சின்ன மனசு, குறுகிய வெறி, மிகப் பெரிய அளவில் அறியாமை, எதையும் புரிந்துகொள்ள இயலாத ஒரு மனோபாவம், தாங்கள்தாம் மனித வர்க்கத்தில் மிகச் சிறந்த சமுதாயத்தினர், மாறுபட்ட மற்ற எல்லோருமே உண்மை அறியாதவர்கள் என்ற வறட்டுப் பிடிவாதமுள்ள நிலவரம் — இவற்றையெல்லாம் விவேகானந்தர் சாடினார். அவருக்கு இவை விஷயத்தில் பொறுமை இருக்கவில்லை. எதையும் ஒளித்துவைத்து அவர் பேசவில்லை.

மேலை நாடுகளின் நாகரிகம், பலாத்காரம், சூறையாடுதல், நாசம் போன்ற தன்மைகள் படைத்தது, தீய குணங்களையும் குற்றங்களையும் போஷிப்பது என்று சொல்லி அவர் கண்டித்தார். தமக்கு மிகவும் பிடித்தமான ஒரு மத விஷயத்தைப் பற்றிப் பாஸ்டனில் அவர் பேசுவதாக இருந்தது. தம்மைக் கேட்க வந்தவர்களைப் பார்த்தவுடனேயே அவருக்குப் பெரிய அருவருப்பு ஏற்பட்டது. குரூரமும், இந்த உலக விவகாரங்களில் திளைத்தலும் மிகுதியாகவுள்ள ஒரு செயற்கையான வாழ்க்கையினர் அவர்கள் என்பதைக் கண்டுகொண்டார். தமது இருதயத்தில் உள்ளதை அவர்களுக்குத் திறந்து காண்பிக்க மறுத்துவிட்டார். உடனே பேசும் விஷயத்தைத் திடீரென மாற்றிக்கொண்டார். அத்தகைய நரிகளையும், ஓநாய்களையும் பிரதிநிதியாகக் கொண்ட ஒரு நாகரிகத்தைச் சண்டமாருதமாக, சொற்பொழிவின் மூலம் கடுமையாகத் தாக்கினார். பல நூறு பேர் கோஷங்களை எழுப்பிக்கொண்டு மண்டபத்தை விட்டு வெளியேறினர். பத்திரிகைகள் ஆக்ரோஷத்துடன் எழுதின.

பொய்ம்மைப் போர்வையில் இயங்கிய கிறிஸ்தவ மதத்தையும்,. மதத்தின் பெயரால் காணப்பெற்ற வெளி வேஷத்தையும் அவர் கசப்புடன் தாக்கினார்: "நீங்கள் பிரமாதமாகப் பெருமையடித்துக்கொள்கிறீர்கள்; வானளாவப் பேசுகிறீர்கள். கத்தி இல்லாது உங்கள் கிறிஸ்தவ சமயம் எங்கே வெற்றி கண்டிருக்கிறது? ஆடம்பர வாழ்க்கையின் பெயரால் பிரசாரம் செய்யப்படும் மதம் உங்களுடையது. இந்த நாட்டில் என்

காதில் விழுந்த அனைத்துமே வெளி வேஷந்தான். இவையெல்லாம் கிறிஸ்துவிடமிருந்தா வந்தன? கிறிஸ்துவின் பெயரால் பேசுபவர்கள் செல்வத்தைத் திரட்டுவது தவிர வேறு எதிலும் அக்கறை கொள்வது இல்லை. உங்களிடையே தலை வைத்துப் படுப்பதற்குக் கிறிஸ்துவுக்கு ஒரு கல் கூட அகப்படாது, நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவை நாடித் திரும்புங்கள்."

இம்மாதிரி நிந்தனையுடன் அவர் செய்த உபதேசத்துக்கு ஜவாபாகக் கோபத்துடன் ஒரு பெரிய எழுச்சி கிளம்பியது. அந்தக் கணத்திலிருந்து அவர் பின்னல் எப்போதும் கிறிஸ்துவ திருச்சபையினர் தொடர்ந்து வந்து, அவரை வைதார்கள்; அவர் மீது குற்றம் சாட்டினார்கள். அமெரிக்காவிலும், இந்தியாவிலும் அவரது வாழ்க்கையையும், நடவடிக்கைகளையும் பற்றி மிகக் கேவலமான அவதூறுகளைப் பரப்பினார்கள். விவேகானந்தர் அடைந்த புகழினால் பொறாமை கொண்ட போட்டிச் சங்கங்களின் ஹிந்துப் பிரதிநிதிகளும் மிகவும் வெட்கம் கெட்ட முறையில் நடந்துகொண்டனர். கெட்ட எண்ணத்துடன் மிஷனரிகள் துவக்கிய பிரசாரத்தை அவர்கள் வகை தொகை இல்லாமல் பரப்பலாயினர்.

பொறாமையுள்ள இந்த ஹிந்துக்கள் கூறியவற்றைக் கிறிஸ்துவப் பாதிரிகள் தமக்கேற்ற சாதனங்களாகப் பயன் படுத்திக்கொண்டு, இந்திய சந்நியாசியைத் தாக்கினர். 'அவரது உற்சாகம் வெறும் கோமாளிக் கூத்து. வைதிக ஹிந்துத் தர்மம் நிர்ணயித்துள்ள விதிகளின்படி அவர் அமெரிக்காவில் நடந்துகொள்ளவில்லை' என்று அவர்கள் கூறினர். இந்தியாவிலுள்ள அவர்களது சீடர்கள், நெஞ்சில் வைரம் வைத்த இந்த மோசக்காரர்கள் தமக்கு எழுதிய கடிதங்களைக் கண்டு பயந்து போய் அவற்றை விவேகானந்தருக்கு அனுப்பி வைத்தார்கள். தம்மை நிந்தனை செய்தவர்களின் முகத்திலேயே அவற்றை அவர் விட்டெறிந்தார்.

அமெரிக்கச் சீடர்களில் ஒருவரான சுவாமி கிருபானந்தா எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்: "இவ்விடம் போலி மதஸ்தர்களின் அக்கிரமங்களுக்கு உறைவிடமாகிவிட்டது. வழக்கத்திற்கு மாறானவற்றில் விசேஷ ஆர்வமும், கூடமான விஷயங்களில் ஒரு நாட்டமும், அசாதாரணமானவற்றில் ஒரு ப்ரியமும் இங்கு மிகுந்து காணப்படுகின்றன. பகுத்தறிவு இல்லாமல், சொன்னதை அப்படியே நம்பமுற்படும் போக்கின் விளைவாகப் பல நூறு சங்கங்கள் கிளைத்தன. குட்டிச் சாத்தான்கள், பிசாசுகள், மகாத்மாக்கள்,

பொய்யான ஞானிகள் போன்றோர் மிகுந்துவிட்டனர். எல்லா நிறத்தவரான அஞ்ஞானிகளுக்கும் இது புகலிடமாகிவிட்டது. எனவே, இது விவேகானந்தருக்கு வெறுக்கத்தக்க இடமாகி விட்டது. எடுத்த எடுப்பில் உருவான இவ்வளவு படுமோச நிலவரத்தைத் தூய்மைப்படுத்தும் கடமை தமக்கிருப்பதாக அவர் நினைத்தார்.

''சோம்பேறிகள், கோமாளிகள் போன்றோர் எங்கு வசித்த போதிலும் அவற்றில் புகுந்து சுயநலத்தை அடையப் பார்க் கிறார்கள். தமது ஆரம்ப உரைகளைக் கேட்ட அந்தப் பெரும் கூட்டத்தினராகிய எல்லோருமே சைத்தான் வழியினர் என்று அவர் நினைத்தார். மோசக்காரர்கள், ஏதோ சுறுசுறுப்பாக இருப்பது போல் காலம் தள்ளுபவர்கள், மதத் துறையில் வெறும் போலிகள் போன்றோர் அவருடன் உறவாட முன் வந்தனர்; வாக்குறுதி கொடுத்தனர்; மிரட்டினர்; அச்சுறுத்தும் கடிதங்களை அனுப்பினர். அவரைப்போன்ற குண நலம் படைத் தவரை அவை பாதிக்கவில்லை யென்பதை விளக்கத் தேவை யில்லை. தம்மீது ஆதிக்கம் செலுத்தச் சிறிதேனும் பிறர் முயல் வதை அவர் சகிக்கமாட்டார். ஒரு பிரிவுக்கு எதிராக மற்றொரு பிரிவுடன் சேர வேண்டுமென்ற யோசனையை அவர் நிராகரித்தார். தம்மைச் சொந்தக் காரியங்களுக்காகப் பயன் படுத்திக் கொள்வதற்கு விரும்பிய ஸ்தாபனங்களை எதிர்த்து அவர் வெளிப்படையாகப் போரிட்டார்.

அமெரிக்காவின் கண்ணியமான ஒரு போக்கைக் குறித்து இங்கே சொல்லித்தான் ஆகவேண்டும். அவரது தார்மிக உறுதிப்பாடு, ஜீவசக்தியுடன் கூடிய லட்சிய பாவம், அஞ்சா நெஞ்சத்துடன் அவர் காட்டிய விசுவாசம் ஆகியவை பொறுக்கி எடுத்த ஒரு சிலரை ஈர்த்தன. வியந்து பாராட்டியும், பல நிந்தனை களுக்கு எதிராக நியாயத்தை எடுத்துரைத்தும் பணியாற்ற ஒரு குழுவினர் முன்வந்தனர். அவர்கள்தாம் முதல் முதலாக அவரது மேலை நாட்டுச் சீடர் குழாமாக அமைந்தனர். மனித சமூகத்தில் மறுமலர்ச்சிக்கான பணியில் மிகச் சுறுசுறுப்பாக அவர்கள் இறங்கலாயினர்.

அத்தியாயம் 6

# அமெரிக்காவில் பிரசாரம்

விவேகானந்தர் தமது பிரசாரத்தைத் துவக்கியவுடனேயே அவரது செய்தியைக் கேட்கும் வேட்கை மிகுதியுடன் ஆண்களும், பெண்களும் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நிறைய வந்தனர். அறிஞர்களின் ஆலோசனைக் குழுக்களும், பல்கலைக் கழகங்களும் அவர்களை அனுப்பிவைத்தன. உண்மையுணர்வுடன் கூடிய தூய்மையான கிறிஸ்தவர்களாக அவர்கள் இருந்தனர். உண்மையாகவே பகுத்தறிவுவாதிகளான சிந்தனையாளரும், தெய்வத்தைப்பற்றி அவநம்பிக்கை கொண்டிருந்தோரும் வந்தனர். இளமையான, ஆனால் தொன்மையான அவ்வுலகின்கண், ஒன்றையொன்று சேர்ந்தாற்போல் நேரெதிர் நிலைகள் இருந்துவருவது விவேகானந்தருக்கு எடுப்பாகப் புலப்பட்டது.

இன்றும் அதே விடுபடாத புதிர்போன்ற நிலைதான் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையும் அச்சமும், மிக மேன்மையாகவும் மிகக் கொடியனவாகவும் உள்ள சக்திகள், உண்மையைத் தேடியலைவதில் ஒரு பேரார்வம், தவறான வழியை நாடிச் செல்வதிலும் ஓர் ஆவல், முற்றிலும் பற்றற்ற ஒரு நிலை, அதையடுத்துப் பொன்னைக் கேவலமாகப் பூசிக்கும் ஒரு வழி முறை, குழந்தையைப் போன்ற உண்மையுள்ளம், நியாயபுத்தி உள்ளவர்களிடையேயும் உள்ளும் புறமும் ஒன்றியில்லாத வெளிவேஷம் — இவையெல்லாம் அடுத்தடுத்து இருந்துவருவது அவருக்குத் தெளிவாகப் புலப்பட்டன.

அவர் எப்போதுமே கொஞ்சம் மிடுக்குடன் கூடத்தான் தமது கருத்துக்களை வெளியிடுவார். எனவே, திடீர் திடீரெனக் கோபாவேசமாவார். எனினும் அனுதாபம் வேறு, விரோதம் வேறு. அனுதாபத்திற்கும் விரோத மனப்பான்மைக்கும் இடையே ஒரு சமநிலையில் தமது மனத்தை நிறுத்தும் ஒரு பெருந்தகையாளராக அவர் விளங்கினார். ஆங்கிலோ-சாக்ஸன் இனப் பிரிவைச் சேர்ந்த அமெரிக்கர்களின் உண்மையான நற்குணங்களையும் சக்தியையும் அவர் எப்போதுமே அங்கீகரித்தது உண்டு.

ஐரோப்பாவின் பிற இடங்களில் தோற்றுவித்ததைவிட இன்னும் அதிகமான ஸ்தாபனங்களை அவர் அமெரிக்காவில் ஏற்படுத்தினர். ஆனல் பின்னர் இங்கிலாந்தில் தங்கியிருந்த பொழுதுதான் தாம் உறுதியான மண்மீது வேரூன்றி நிற்கும் ஓர் உணர்வு அவருக்கு ஏற்பட்டது. அம்மாதிரி அமெரிக்கா விஷயத்தில் அவரால் நினைக்கக்கூட முடியவில்லை. எனினும், புதிய அமெரிக்காவைச் சேர்ந்த சீரிய அம்சம் எதையும் பற்றி அவர் மரியாதைக் குறைவாகப் பேசியதே இல்லை. அவற்றைத் தெளிந்தறிய இடையருது அவர் முயன்ருர். நல்ல அம்சங்களை வியந்து, அவை சிறந்த எடுத்துக்காட்டுக்கள் என்று தம் நாட்டவருக்கு உபதேசித்தார்.

பொருளாதாரக் கொள்கை, தொழில் துறை அமைப்பு, கல்வி போதனை, பொருட்காட்சிச் சாலைகள், கலைக்கூடங்கள், விஞ்ஞானத்தின் வளர்ச்சி, சுகாதார ஸ்தாபனங்கள், சமுதாய நலப் பணிகள் முதலியன. இத்தகைய எடுத்துக்காட்டுகளில் சில. சமூக நலப் பணிகள் விஷயத்தில் அமெரிக்காவில் மிகப் பேரளவில் நடந்துவந்த முயற்சிகள் அவருக்கு வியப்பூட்டின. பொது நலனுக்காகப் பொதுப்பணத்திலிருந்து தாராளமாக அங்கே செலவிடும் போக்கை, தமது சொந்த நாட்டில் சமூகப் பிரச்சினைகளில் காணப் பெற்ற அலட்சியப் புத்தியுடன் ஒப்பு நோக்கினர். மேலை நாடுகளின் கர்வத்தை அடக்குவதற்கு அவர் எப்போதுமே தயாராக இருந்தார் என்பது உண்மை. ஆனல், மேலை நாடுகளின் சமூக சேவையை எடுத்துக் காட்டி இந்தியா வெட்கித் தலைகுனியச் செய்வதற்கும் அவர் அதே அளவில் தயாராக இருந்தார்.

பெண்களுக்கான ஒரு பல்கலைக் கழகத்தைக் கண்டு திரும்புகையில், அவர் பின்வருமாறு எண்ணமிட்டார்: குற்றம் இழைத்தவர்களை அங்கு மனிதாபிமானத்துடன் நடத்தினர்கள். ஆனல் இந்தியாவில் தமக்குத் தாமே உதவி செய்துகொள்ளக் கூடாத ஏழைகளையும், பலவீனர்களையும் குரூரமாக, அலட்சிய புத்தியுடன் இந்தியர்கள் நடத்துவதை அவர் ஒப்பு நோக்கினர்.

''மனிதப் பிறவியின் கண்ணியத்தை ஹிந்து மதத்தைப் போல் அவ்வளவு உயர்த்திப் பேசும் சமயம் வேறு எதுவும் இவ்வுலகில் இல்லை. ஆனல் ஹிந்து சமயத்தைப் போல் ஏழைகள், வறியர் தலைகளை மிதிக்கும் வேறு சமயமும் உலகில் கிடையாது. அது சமயத்தின் குற்றம் அல்ல. அதைப் பின்பற்றுவோர்தாம் குற்றவாளிகள்.'' எனவே, இந்திய யுவர்களை

இறைஞ்சி, ஊக்குவித்து அவர்களது மனத்தை அக்கலைழித்து, உபதேசிப்பதை அவர் நிறுத்திக்கொள்ளவே இல்லை. ஒரு தடவை அவர் கூறினர்:

“பெரும்பணிக்குத் தயாராக வேண்டும் சிறுவர்களே! என்னை ஆண்டவன் இதற்காகத்தான் அழைத்துள்ளான். நீங்கள் சாதுக்கள்; கீழ்நிலையில் இருப்பவர்கள். ஆனல் விசுவாசம் உள்ளவர்கள். ஆகையால்தான் உங்களை நான் நம்பியிருக்கிறேன். வாழ்க்கை நிலை மோசமாக இருப்பவர்கள் விஷயத்தில் உங்களுக்கு நல்லுணர்வு ஏற்படவேண்டும். உதவி கோருபவர்களுக்கு அது கிடைத்தாக வேண்டும். என்னுடைய இதயத்தை இந்தச் சுமையானது பன்னிரண்டு ஆண்டுகளாக அமுக்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் கருத்து என் தலையை விட்டு அகலவில்லை. பணக்காரர்கள், பெரிய மனிதர்களின் வீடுவீடாகச் சென்று வந்திருக்கிறேன். உலகின் பாதியைக் கடந்து உதவியை நாடி, விசித்திரமான இந்நாட்டிற்கு இதய வேதனையுடன் நான் வந்திருக்கிறேன். ஆண்டவன் எனக்குத் துணைபுரிவார். இந்நாட்டில் நான் பசியாலும், குளிராலும் அழிந்துபோய் விடலாம். ஆனல் ஏழ்மையிலும், அறியாமையிலும் ஆழ்ந்து, கொடுமைக்கு உள்ளாகியிருக்கும் மக்களின் நலனுக்கான போராட்டத்தை, அநுதாப உணர்வுடன் நடத்தும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன். ஆண்டவன் முன் தெண்டனிட்டு வணங்குங்கள். பெரிய தியாகங்களைப் புரிவதற்குத் தயாராகுங்கள். அவர்களுக்காக வாழ்க்கை முழுவதையுமே தியாகம்செய்வதற்கு முன்வாருங்கள். முப்பது கோடி மக்கள் ஒவ்வொரு நாளும் தாழ்நிலையை நோக்கி மேலும் மேலும் சரிந்த வண்ணம் இருக்கின்றனர். ஆண்டவன் அருளினல் நமது முயற்சி வெற்றி பெறும். இந்தப் போராட்டத்தில் பல நூறு பேர் வீழ்ச்சியுறலாம். ஆனல் பல நூறு பேர் புதிதாக வந்து பொறுப்பை ஏற்பர். நம்பிக்கை, அனுதாபம் தேவை; வாழ்வு என்பதில் ஒன்றுமில்லை. மரணம் என்பதில் ஒன்றுமில்லை. கடவுளின் கீர்த்திதான் பெரிது. முன்னேறிச் செல்லுங்கள். ஆண்டவன் நமக்கு வழிகாட்டி. யார் பின் தங்கிவிடுகின்றனர் என்பதைப் பார்க்கப் பின்புறம் திரும்பாதீர்கள். வைத்த கண் வாங்காமல் முன்னேறிச் செல்லுங்கள்.”

அமெரிக்காவின் சீரிய சமுதாய நல அறப்பணிகளைக் கண்டு ஊக்கம் பெற்று இந்தக் கம்பீரமான கடிதத்தை அவர் எழுதினர். நம்பிக்கை மிகுதியுடன் அதை முடித்தார். கிறிஸ்தவச்

சமயத்தினரிடையே காணப்பெற்ற போலிகளைச் சாடியவர், அந்தச் சமுதாயத்திலே தெய்வ அருளுடன் கூடிய, அன்பினல் உந்தப்பட்டு இருப்பவர்களைக் கண்டு உண்மையுணர்வுடன் கூறினர்: "நான் இங்கு மேரியின் புதல்வரது குழந்தைகளிடையே இருந்து வருகிறேன். இயேசுநாதர் எனக்குத் துணை புரியட்டும்."

மத சம்பந்தமான இடையூறுகளைக் கண்டு ஒருக்காலும் அவர் சிரமப்பட்டது இல்லை. இந்த மாபெரும் உண்மையை முழக்கினர்: "ஒரு சமுதாயத்தினராகப் பிறப்பது நல்லது. ஆனல் அதிலேயே இருந்து மாள்வதைப் போன்ற பயங்கரம் வேறு இல்லை."

சமயவெறி பிடித்து அலைந்த கிறிஸ்தவர்களும், ஹிந்துக்களும் தம்தம் சமயப் பிரிவுகளின் கதவுகளைத தாளிட்டு, பிறர் நுழையா வண்ணம் தடுக்கும் காவல் பொறுப்பு இருப்பதாக நினைத்துக் கோஷமிட்டு வந்தனர். நம்பிக்கை இல்லாத எவரும் அவற்றுள் பிரவேசிக்கலாகாது என்பது அவர்களுடைய எண்ணம். அதற்கு விவேகானந்தர் அளித்த பதிலாவது:

"அவர்கள் ஹிந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும், கிறிஸ்துவர்களாயினும், யாராயினும் பரவாயில்லை. ஆண்டவனை நேசிக்கும் எல்லோருமே என்னைப் பணியாளாக ஆக்கிக் கொள்ளலாம். தியாக வேள்வியில் குதியுங்கள், குழந்தைகளே, எல்லாம் உங்களுக்குக் கிட்டும். நம்பிக்கைதான் தேவை. நம்மில் ஒவ்வொருவரும், இராப்பகலாக, இந்தியாவில் மிதியுண்டு தவிக்கும் கோடிக்கணக்கான மக்களுக்காகப் பிரார்த்தனை செய்வோமாக. வறுமை, பூசாரிச்சடங்கு, கொடுங்கோன்மை ஆகியவற்றில் பந்தப்பட்டுக் கிடக்கும் அவர்களுக்காக, இராப்பகலாகப் பிரார்த்தனை செய்யுங்கள். நான் தர்க்கவாதி அல்ல, தத்துவ நிபுணன் அல்ல, ஞானியும் அல்ல. நான் ஏழை. ஏழைகளை நேசிக்கிறேன். இந்தியாவில் ஏழ்மையிலும், அறியாமையிலும் சதா ஆழ்ந்து கிடக்கும் இருபது கோடி ஆண்களுக்கும் பெண்களுக்குமாகக் கவலைப்படுபவர் யார்? இதற்கு ஒருவழி உண்டா? அவர்களுக்கு ஒளியைக் கொண்டு செல்வோர் யார்? இந்த மக்கள் உங்களது கடவுளாக இருக்கட்டும். ஏழை மக்களுக்காக, இதயபூர்வமாக இயங்குகிறவனை நான் மகாத்மா என்று அழைக்கிறேன். கோடிக்கணக்கான பேர் பட்டினி கிடந்து, அறியாமையில் ஆழ்ந்திருக்கையில், அவர்களை வஞ்சித்து, கல்விச் செல்வம் பெற்று, அவர்கள் விஷயத்தில்

சிறிதும் அக்கறை காட்டாத ஒவ்வொரு மனிதனையும் துரோகி என்றுதான் நான் வருணிப்பேன்.''

எனவே ஒரு நாள் கூட, தமது அடிப்படைப் பணியை அவர் மறக்கவே இல்லை. இந்தியாவில் வடகோடியிலிருந்து தென்கோடிக்குத் தமது மக்களை ரட்சிப்பதற்காக, முதலில் அவர்களுடைய சரீரத்தையும், பிறகு ஆன்மாவையும் காப்பாற்றுவதற்காக, தமது வசதிகளை விரிவாக்கிக்கொண்டு, தமது மக்களுக்கு உதவியளிக்குமாறு உலகம் பூராவையும் திரட்ட முற்பட்டவராக அவர் காட்சி அளித்தார். அது எல்லா மக்களுக்கும் செய்தாக வேண்டிய பணியாயிற்று. உலகம் எங்கும் உள்ள ஏழைகளும், கொடுமைக்கு உள்ளானவர்களும் நலம் பெறுவதற்கான ஓர் இயக்கமாக அது மாறியது. ''கொடுத்து வாங்குங்கள். அனுதாப உணர்வுடன் கூட, கரத்தை நீட்டி ஐயமிடும் பேச்சு இனித் தேவை இல்லை. வாங்குபவன் கொடுப்பவன் என்பதில் சமத்துவ நிலை வேண்டும். எவ்வளவு வாங்குகிறானோ, அவ்வளவு கொடுக்கிறான். வாழ்க்கையைக் ஏற்கிறான்; வாழ்க்கையை கொடுக்கிறான். கடவுளைக் கொடுக்கிறான். இந்தியாவில் கந்தையுடுத்தி, நடைபிணங்களாய் உள்ள ஏழைகள் எல்லோருமே கடவுளர். தொன்றுதொட்டுத் துயரமும் சீரழிந்த நிலையுமே அவர்களது அநுபவம். ஆனால் அவற்றூடே சாசுவதமாக ஆன்மிகம் என்ற மது பாய்ந்தோடுகிறது, காடி ஏறுகிறது. வீரியம் அனைத்தும் ஒன்றாகத் தன்னுள் திரட்டி வைத்துக் கொள்கிறது. அதை எடுத்துப் பருகுங்கள். அவர்களும், 'இதில் எனது குருதி' என்ற கிறிஸ்தவப் புனித மந்திரத்தை உபயோகிக்கலாம். அவர்கள்தாம் தேசிய சமுதாயங்களின் கிறிஸ்து எனலாம்.''

விவேகானந்தரது திருஷ்டியில் தமது பணி இருவகைப் பட்டதாகத் தோன்றியது. மேலை நாகரிகம் சம்பாதித்து வைத்துள்ள செல்வத்தையும், பொருட்களையும் இந்தியாவுக்கு எடுத்துச் செல்வது, மேலை நாடுகளுக்கு இந்தியாவின் பாரமார்த்திகச் செல்வங்களை எடுத்துச் செல்வது. இது விசுவாசம் நிறைந்த பரிவர்த்தனை; சகோதரத்தன்மையும், பரஸ்பர உதவித் தன்மையும் நிறைந்தது.

உலக வாழ்க்கைக்குப் பயன்படும் மேலை நாடுகளின் பொருட்களை மட்டுமே அவர் மதித்தார் என்பது இல்லை. சமுதாய நலம், தார்மிகச் சிறப்பு ஆகியவற்றையும் அவர் போற்றினார். கண்டிக்க வேண்டிய அவசியம் இருப்பதாகத்

தாம் நினைத்த அமெரிக்கச் சமுதாயத்திலேயே தாம் கண்ட மனிதாபிமானத்தை அவர் போற்றிய வரலாற்றை இப்போது தான் படித்தோம். கண்டனத்துடன் போற்றுதலும் சேர்ந்த நல்லுரை அது. ஒரு கோடீசுவரனும், ஒரு வெள்ளைக்காரப் பணிப்பெண்ணும் ஒரே டிராம் வண்டியில் பிரயாணம் செய்வதில் உள்ள ஜனநாயக சமத்துவம் அவரை ஈர்த்தது. அதை உணர்ச்சி பூர்வமாகப் போற்றினர். அதற்கு அளவுக்குமேல் முக்கியத்துவத்தை அவர் அளித்தார். இயந்திரமானது, வீழ்ச்சியுறும் எல்லோரையும், ஒருசேர, சிறிதும் நெஞ்சில் ஈரமின்றி அறைத்துத் தள்ளுகிறது என்பதை அப்போது அவர் உணரவில்லை. ஆகையால்தான் ஜாதிகளிடையே இருந்த சமநிலையற்ற போக்கும், இந்தியாவில் தாழ்த்தப்பட்டோர் சமுதாயப் பிரஷ்டர்களாகக் கருதப்பட்ட நிலவரமும் அவருடைய நெஞ்சில் தைத்தன.

''மிலேச்சன் என்ற வார்த்தையை (ஹிந்து அல்லாதவன், வெளியான்) என்றைய தினம் கண்டுபிடித்தார்களோ அன்றைய தினமே இந்தியாவின் வீழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது. பிறருடன் தொடர்புகொள்ள முடியாதபடி அது தடை செய்து விட்டது.''

மேலை நாடுகளின் ஜனநாயக வழி முறைகளில் சென்று ஹிந்துக்கள் பரஸ்பரம் உதவி செய்துகொள்வதையும், பரஸ்பரம் பாராட்டிக்கொள்ள வேண்டியதையும் போதிப்பதற்காக ஒரு ஸ்தாபனத்தை நிறுவுவது முதல் தேவையென்று அவர் உபதேசித்தார். ஏராளமான அமெரிக்க மாதர் சிறந்த மதியூகிகளாக இருந்து சாதனைகள் பல புரிந்ததையும், தமது சுதந்தரத்தை மிகச் சிறப்பான முறையில் அவர்கள் உபயோகித்ததையும் கண்டு அவர் போற்றினர். இந்திய மாதர் ஒதுங்கி நிற்கும் நிலைமையுடன் அமெரிக்க மாதரின் விமோசன நிலையை ஒப்பு நோக்கினர். தமது சகோதரிகளில் ஒருத்தி காலமானதால் ஏற்பட்ட துயரம் அவரது நினைவை விட்டு அகலவில்லை. எனவே, இந்திய மாதர்களின் விமோசனத்துக்காக உழைப்பது அவரது அன்புப் பணியாகியது.

மேலை நாடுகள் சமூகநலத் துறையில் மேம்பாடு கண்டிருந்தன என்பதை வெளிப்படையாக அவர் புகழ்ந்தார். இன கௌரவம் அதை ஒப்புக்கொள்வதற்கு இடையூருக அவர் விஷயத்தில் இருக்கவில்லை. அந்த உதாரணத்திலிருந்து மக்கள் நன்மை அடைய வேண்டுமென்பதே அவரது எண்ணம்.

சமநிலையில் பரிவர்த்தனை செய்துகொள்வதைத் தவிர வேறு எதையும் ஏற்க அவரது மனம் இடந்தரவில்லை. செயல் என்ற அசுரனுக்கு மேலை நாட்டினர் அடிமையாகி, பிரத்தியட்ச நிலவரம் என்று சொல்லி, தாமே விரிக்கும் வலைகளில் சிக்கிக் கொள்வதைக் கண்டார். அந்த உலகிற்கு ஆன்மாவின் மூலம் விடுதலையுணர்வு பெறும் செய்தியை அளிக்க விரும்பினர். அதுவே தெய்வத்தை அடையும் பாதையைப் புலப்படுத்தும் திறவுகோல். மிக ஏழ்மையான இந்தியர்களிடம் அது நிறைய இருந்தது. இளம் நாடாகிய அமெரிக்காவில் மனிதனிடம் நம்பிக்கை மிகப் பெரிய அளவுக்கு வளர்ச்சி கண்டிருந்தது. ஆனல் அவர் சம்பந்தப்பட்டவரை அது முதல்படி என்று தான் சொல்லவேண்டும். அங்கிருந்துதான் தமது பணியைத் துவக்க வேண்டுமென்று அவர் கருதினர். அதன் மதிப்பைக் குறைத்துக் கூற அவர் விரும்பவில்லை. சில ஐரோப்பியக் கிறிஸ்துவப் பிரிவுகளை இளப்பமாகப் பேச அவர் விரும்பவில்லை. நல்ல வமிசத்தில் தோன்றிய ஒரு தங்கை என்றுதான் அவை ஒவ்வொன்றையும் அவர் மதித்தார். ஆனல் புதிய அருணோதயத்தால் கண் கூசிப் போய், கண்மூடித்தனமாக ஆத்திரப் பட்டு, படுகுழியில் கொண்டுபோய் விடக்கூடிய பாதைகளில் அவை சென்றுகொண்டிருப்பதாகவே அவர் கண்டார். அந்தத் தங்கைக்குக் கண் கொடுத்து, வழிகாட்டியாகத் துணைபுரிந்து, வாழ்க்கையின் உயர்நிலைக்கு இட்டுச் செல்வது அவரது திட்டம். அங்கிருந்து ஆண்டவனை அவள் கண்டுகொள்ளலாம்.

எனவே, அமெரிக்காவில் அவர் தொடர்ச்சியாகப் பல பிரசார இயக்கங்களை மேற்கொண்டார். களம்பாகக் கிடந்த விரிவான அமெரிக்க விளைநிலத்தைப் பண்படுத்தி, வேதாந்த வித்தைத் தெளித்து, ராமகிருஷ்ணரது அன்பாகிய மழையைப் பெய்து, பயனுறச் செய்வதே அவரது நோக்கம். அமெரிக்கப் பொதுமக்கள் தர்க்கரீதியில், காரிய-காரண விளக்கம் கேட்டுப் பழக்கப்பட்டவர்கள். எனவே, அந்த மனப்பான்மைக்கு உசிதமான பகுதிகளை வேதாந்தத்திலிருந்து எடுத்துக்கொண்டு அவர் பயன்படுத்தினர். அவர் உபதேசித்தது தமது குரு அருளிச் செய்ததுதான். ஆனல் அவரைப்பற்றி எந்தப் பிரஸ்தாபத்தையும் அவர் செய்யாமல் இருந்தார். குருவிடம் உள்ள அதி தீவிர வாஞ்சையின் விளைவாக ஏற்பட்ட அடக்கமே அதற்குக் காரணம். தம்முடன் நெருங்கிப் பழகிய சீடர்களிடம் நேரடியாகக் குருவைப்பற்றித் தாம் பிரஸ்தாபித்தபொழுது அதைப் பகிரங்கப்படுத்த வேண்டாமென்று வேண்டிக்கொண்டார்.

உரை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதைத் தொழிலாகக் கொண்ட ஸ்தாபனங்களிடமிருந்து தம்மை அவர் விரைவில் விடுவித்துக்கொண்டார். அந்த ஸ்தாபனங்களின் மானேஜர்கள் ஒரு பிரயாணத் திட்டத்தை வகுத்து நிர்ணயிப்பர். அவரை ஏதோ ஒரு சர்க்கஸ் புலி போல மதித்து, பிரமாதமாக விளம்பரம் செய்து, தமது சுயநலத்துக்காக அவரைப் பயன்படுத்திக்கொள்ள முயன்றனர்.

டெட்ராயிட்டில் 1894 - இல் அவர் ஆறு வாரம் தங்கியிருந்தார். அங்கேதான் இத்தகைய நிகழ்ச்சிகள் சகிக்க முடியாதவையெனக் கருதி, அவற்றை உதறியெறிந்தார். ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடுமாறு நண்பர்களைக் கேட்டுக்கொண்டார். இதனால் அவருக்குக் கணிசமான பொருள் நஷ்டம் விளைந்தது. டெட்ராயிட் நகரில்தான், தமது மேற்றிசைச் சீடர்களில் முதல்வரான சகோதரி நிவேதிதாவை (மிஸ் மார்கரெட் நோபிள்) கண்டார். அவரது சிந்தனை விவேகானந்தரது சிந்தனைக்கு மிக நெருக்கமாக இருந்தது. சகோதரி கிறிஸ்டீன் (மிஸ் கிரீன்ஸ்டீடெல்) என்ற புனைபெயரை அவர் தரித்துக் கொண்டார்.

டெட்ராயிட் நகரிலிருந்து 1894 குளிர்காலத்தில் அவர் நியூயார்க் திரும்பினார். முதலில் பணக்காரர்களான ஒரு குழுவினர் அவரைத் தமது ஏகபோகமாக்கிக் கொண்டனர். அவர் கொணர்ந்த செய்தியைவிட, அப்போது பிரபலமாக இருந்த மனிதர் என்ற வகையில்தான், அவரிடம் அவர்கள் அதிகமாக நாட்டம் கொண்டிருந்தனர். ஆனால் எவ்விதத் தடைகளையும் நிர்ப்பந்தங்களையும் தாங்க முடியாத மன நிலையில் அவர் இருந்தார். தனிமையில் தமக்குத் தாமே எஜமானனாக இருப்பதற்குத் துடித்தார். உருப்படியாக நிலைத்திருக்கக் கூடிய எதையும் செய்ய முடியாமல், இப்படி இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லும் நிலவரம் அவருக்கு அலுப்பூட்டியது. ஒரு சீடர் குழாத்தைத் தோற்றுவித்து, உபதேச வகுப்புக்களை இலவசமாக நடத்துவது என்று முடிவு செய்தார். அவருக்குப் பண உதவி அளிப்பதாக முன்வந்த செல்வர்கள் சகிக்க முடியாத நிபந்தனைகளைப் போட்டனர். தாங்கள் சரியான மனிதர்கள் என்று கருதும் தேர்ந்தெடுத்த நபர்களை மட்டுமே அவர் சந்திக்க வேண்டுமென்று நிர்ப்பந்தித்தனர். அவருக்கு ஆத்திரம் வந்தது. ''சிவ, சிவா, பணக்காரர்களால் எப்போதேனும், ஏதாவது மகத்தான பணி நடந்தேறியது உண்டா? மூளையும் இதயமுந்தானே புதிய படைப்புகளைத் தோற்றுவிக்கின்றன! பணமா உற்பத்தி செய்கிறது!''

இந்த வேலையை நடத்துவதற்கான பண வசூல் பொறுப்பைச் சற்று ஏழைகளாக இருந்த மாணவர்களே பக்தி சிரத்தையுடன் மேற்கொண்டனர். விரும்பத்தகாதது என்று கருதப்பட்ட ஒரு பேட்டையில், இருள் அடர்ந்த சில அறைகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. அவற்றில் ஆசன வசதிகள் முதலியன கிடையா. எங்கு இடம் உண்டோ, தரையிலாயினும் சரி, அங்கு அமர வேண்டியதுதான். பத்துப் பன்னிரண்டு பேர் நின்றுகொண்டிருப்பர். அந்நிலையில் கதவைத் திறந்து படிக்கட்டுக்கு அருகிலிருந்த வண்ணம், படிக்கட்டுகளில் இருந்துங் கூட, மக்கள் கேட்கும்படி விடுவது அவசியமாயிற்று. விரைவில் இன்னும் விசாலமான இடத்திற்குப் போவதைப் பற்றி அவர் யோசிக்க வேண்டியதாயிற்று.

1895 - ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ஜூன் வரை அவரது முதல் உபதேச வகுப்பு நடைபெற்றது. அதில் உபநிடதங்களுக்கு அவர் விளக்கம் கூறினார். ஒவ்வொரு நாளும் பொறுக்கி எடுத்த சீடர்களுக்கு ராஜயோகம், ஞானயோகம் ஆகிய இரண்டையும் உபதேசித்தார். ராஜயோகம் மனத்தையும், சரீரத்தையும் பக்குவப்படுத்தும் இயல்பு வாய்ந்தது. இந்திரியங்களை மனத்துக்குக் கட்டுப்படுத்தி, ஜீவாதாரமான சக்தியை அதன் வசப்படுத்தி, ஏகாக்கிர சித்தத்தைப் பலப்படுத்துவதுதான் அதன் நோக்கம். உள்ளூறப் பாய்ந்தோடும் சக்திகளின் சலனத்தை அடக்கி, ஆண்டவனது தெளிவான குரல்தவிர வேறு எதுவும் காதில் விழாதபடி மோன நிலையைத் திணிப்பது அதன் வழிமுறை. ஞானயோகம் என்பது புத்தியைத் தழுவிய வழி. விஞ்ஞான ரீதியில் நடக்கும் காரிய-காரண விளக்கங்களைப் போன்றது. ஆன்மாவைப் பர தத்துவத்துடன் இணைப்பது. அதுவே இறுதியான மெய்நிலை, அதுவே விஞ்ஞான காரணம்.

1895 ஜூன் மாதம் ராஜயோகத்தைப் பற்றிய புகழ் பெற்ற தமது நூலை அவர் எழுதி முடித்துவிட்டார். மிஸ். எஸ். இ. வால்டோ (பின்னர் சகோதரி ஹரிதாசி என்ற பெயர் பூண்டவர்) விவேகானந்தர் சொல்லச் சொல்ல, அந்த நூலை எழுதிக் கொண்டார். வில்லியம் ஜேம்ஸ் போன்ற அமெரிக்க உடற்கூறு நிபுணர்களின் கவனத்தையும், பின்னர் டால்ஸ்டாயின் உற்சாகமான வரவேற்பையும் அது பெற்றது.

இந்நூலின் இரண்டாவது பாகத்தில், ''இந்தத் தெய்வானுபவக் கொள்கையைப் பற்றியும், மற்றப் புராதன யோகங்களைப் பற்றியும் நான் மீண்டும் கூறுவேன். இந்த யோகத்தின்

விளைவாக லௌகிக வாழ்வில் வெற்றி அடைவதற்கான சக்தி வளர்ந்தோங்கும்'' என்ற பிரத்தியட்ச உணர்வுடன் கூடத்தான் அமெரிக்க மக்கள் வெகுவாக அதை ஏற்றுக்கொண்டனர் என்று தோன்றுகிறது. அது ஏறக்குறைய உடலின் தன்மையைப் பற்றியதாக இருந்ததே அக்கவர்ச்சிக்குக் காரணம். இந்த மக்கள் அரக்க உடலும், குழந்தை மூளையும் படைத்தவர்கள். தமக்கு அனுகூலம் பயக்கக்கூடிய கருத்துக்களில் மட்டுமே அக்கறை காண்பித்தனர்.

மதமும், வேதாந்தவிசாரமும் நடைமுறைக்குப் பயன்படக் கூடிய விஞ்ஞானங்களாகவே கருதி ஏற்கப்பட்டன. ஆரோக்கியம், சக்தி, செல்வம் ஆகியவற்றை—அதாவது, இந்த உலகில் சிறப்பு நிலைகளை—அடைவதுதான் அவற்றின் நோக்கம். இதைத் தவிர விவேகானந்தருக்கு அதிகமான மனத்துயரைத் தரக்கூடியது வேறு இருக்க முடியாது. உண்மையில் ஆன்மிகத் துறையில் உழைத்துள்ள ஹிந்து வழிகாட்டிகள் அனைவருமே, ஆன்மானுபவமானது அதை அடைவதற்கு என்று வரித்துக்கொள்ளப்பட்ட இறுதி லட்சியமாகவே கருதி வந்துள்ளனர். அதை அடைவதுதான் அவர்களது பிரதான நோக்கம். இவ்வுலக வாழ்வுக்குரிய சாதனங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக, அவற்றை அடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் அவற்றைக் கையாள்பவர்களை ஒருக்காலும் அவர்கள் மன்னிக்க மாட்டார்கள். இது மன்னிக்க முடியாத குற்றம் என்று கசப்புடன் சொல்லி, விவேகானந்தர் கண்டனம் செய்துள்ளார்.

சைத்தானுக்கு ஆசை ஊட்டாமல் இருப்பது ஒருக்கால் சரியான வழிமுறையாக இருக்கக்கூடும். வேறு திசைகளில், முதலில் அமெரிக்க அறிஞர்களைத் திருப்பிவிடுவது நல்லதாக இருக்கலாம். இதை அவரே உணர்ந்தறிந்தார். அடுத்த ஆண்டு அவரது உபதேசம் மற்ற யோகங்களைப் பற்றியதாக அமைந்தது. இத்தருணத்தில் அவர் இன்னும் பரீட்சார்த்த கட்டத்தை விட்டு நகரவில்லை. வேறு ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள் மீது தமக்கு எவ்வளவு சக்தி இருக்கிறதென்பதை, இளைஞரான இந்தக் குரு சோதனை செய்து பார்த்தார். அந்தச் சக்தியை எவ்வாறு பிரயோகிப்பது என்பதைப் பற்றி அவர் இன்னும் முடிவு செய்தாகவில்லை.

இதற்கப்புறம் 1895 ஜூன் — ஜூலையில் வேனிற்காலத்தில் 'ஆயிரம் தீவுப் பூங்கா' என்ற இடத்தில் கூடியிருந்த

தேர்ந்தெடுத்த, பக்திசிரத்தை மிகுந்த நபர்களிடையே அவர் காலம் கழித்தார். அப்போதுதான் தமது நடைமுறைகளைப் பற்றி அவர் திட்டவட்டமாக முடிவு செய்தார் என்று சகோதரி கிறிஸ்டீன் எழுதியுள்ளார். செயின்ட் லாரென்ஸ் நதிக்கு அப்பால் ஒரு காட்டின் அருகில் ஒரு குன்றின்மீது வேதாந்த காலக்ஷேபத்திற்காக என்று அவரிடம் ஓர் எஸ்டேட் ஒப்படைக்கப்பட்டது. அங்கே பொறுக்கி எடுத்த சீடர்கள் பன்னிருவர் ஒன்று சேர்ந்தனர். செயின்ட் ஜானின் பிரகாச தீபிகையினின்று ஒரு பகுதியைப் படித்துவிட்டு, அவர் தமது தியானத்தைத் தொடங்கினார். ஏழுவார காலம் இந்தியாவின் புனிதமான நூல்களை அவர் விளக்கினார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஆன்மாக்களின் வீர உணர்வைத் தட்டியெழுப்பும் பணியும் கூடவே நடைபெற்றது. அவர் சம்பந்தப்பட்டவரை, அதுவே அதிக முக்கியத்துவம் உள்ளதாக இருந்தது. விடுதலை, தைரியம், கற்பு, தன்னைத்தானே குறை கூறிக்கொள்ளும் பாபம் முதலியவை விளக்கப்பெற்றன. பேட்டி காண வந்தவர்களிடம் அவர் பேசிய விஷயங்களில் இவை சில:

''ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பக்குவப்படுத்த வேண்டும். அதுவே எனது சங்கல்பம். தனி நபர்களுக்குப் பயிற்சி தருவதற்குமேல் எனக்கு வேறு ஆசை இல்லை'' என்று அபயானந்தருக்கு அவர் எழுதினார். ''சுதந்தரத்தை அடைவதற்கு ஒரு தனி மனிதனுக்கு உதவி அளிப்பதில் என் வாழ்வில் நானே வெற்றி அடையக்கூடுமானால், என் முயற்சிகளை வீண் என்று கருதமாட்டேன்'' என்று மீண்டும் அவர் கூறினார்.

ராமகிருஷ்ணரது உள்ளுணர்வு - முறையை அவர் பின்பற்றினார். சாதாரணமாக உபதேசம் செய்வோரில் பலர் பொது மக்கள் என்ற பொதுப்படையான குழாத்துக்காகப் பேசுவர். ஆனால் விவேகானந்தர், கேட்க வந்தோருக்குப் புரியும் விதத்தில் தவிர வேறு எவ்வகையிலும் பேசமாட்டார். ஒவ்வொருவரையும் அவர் தனித்தனியாகப் பெயரிட்டு அழைத்துச் சொல்வார். ''ஒரு தனி மனிதன் தனக்குள் பிரபஞ்சம் அனைத்தையும் அடக்கிக்கொண்டிருக்கிறான்'' என்று அவர் கூறினார். ''ஒவ்வொரு தனி நபரிலும் இந்தப் பிரபஞ்சத்தின் அணு உறைகின்றது.''

அவர் ஒரு பெரிய சம்பிரதாயத்தைத் தோற்றுவித்தவர் தாம். ஆனால், கடைசிவரை ஒரு சந்நியாசியாகவே வாழ்ந்தார். தெய்வத்தில் ஆழ்ந்துள்ள சுதந்தர மக்களாகிய சந்நியாசிகளைத்

தோற்றுவிப்பதே அவரது ஆசை. எனவே, அமெரிக்காவில் ஒரு திடமான நோக்கத்துடன், மெய்யுணர்வுடன்கூட அவர் பாடுபட்டார். சில ஆன்மாக்களையேனும் தமது மாமூலான வழிகளினின்று விடுவித்து, விடுதலையை உபதேசிக்கும் பணியாளராக மாற்றுவதுதான் அந்த நோக்கம்.

1895-இல் பல மேற்றிசைச் சீடர்கள் அவரது அழைப்பை ஏற்க வந்தனர். அவர்களில் சிலருக்கு அவர் தீட்சை வழங்கினர். ஆனால், அவர்கள் அவர் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறு பட்ட தன்மையினராக வளர்ச்சி கண்டனர். ராமகிருஷ்ணரைப் போல் விவேகானந்தருக்கு, கண்டதும் மதிப்பிடும் கழுகுப் பார்வை இல்லை. ராமகிருஷ்ணர் ஒருவரைக் கண்டவுடனேயே அவரது ஆன்மாவை ஆழம் பார்த்து, அவரது கடந்த காலம், எதிர்காலம் அனைத்தையும் அப்பட்டமாகக் காணும் சக்தி பெற்று விளங்கினர். ஆனால், சுவாமியோ, "உமியும் தானியமும் சேர்ந்து இருக்கத்தான் செய்யும். காலப்போக்கில் தூற்றி உமியை வேருக்கி விடலாம்" என்று நினைத்தார்.

தமது சீடர்களில் ஒரு சிலரை அவர் பொறுக்கி எடுத்து, அவர்களைப் பக்குவப்படுத்தினர். சகோதரி கிறிஸ்டீன், ஜெ. ஜெ. குட்வின் என்ற இளம் ஆங்கிலேயர் ஆகியோர் அம்மாதிரி அவரது நன்மதிப்பைப் பெற்றவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். குட்வின் தமது வாழ்நாள் முழுவதையுமே விவேகானந்தருக்காக அர்ப்பணித்தார். 1895 முதல் அவர் விவேகானந்தரது காரியதரிசியாகப் பணியாற்றினர். தமது வலதுகரம் என்று அவரை விவேகானந்தர் குறிப்பிடுவது வழக்கம். அமெரிக்காவில் சுவாமி பயிரிட்ட வித்தைப் போஷித்து, காத்து வளர்த்தது அவருடைய தனிப்பெருமை யாகும்.

1895 ஆகஸ்டில் விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்று, டிசம்பரில் திரும்பினர். இதைப் பற்றிப் பின்னர் கூறுவோம். திரும்பிய பிறகு, 1896 ஏப்ரில் வரை அவரது அமெரிக்க விஜயம் நீடித்தது. இரண்டு தொடர்களாக வேதாந்த உபதேசங்களைச் செய்தார். நியூயார்க்கில் தனி வகுப்புக்களையும் நடத்தினர். 1895 டிசம்பரில் கர்மயோகத்தை (உழைப்பின் மூலம் கடவுளை அடையும் வழி) அவர் உப தேசித்தார். அதைப் பற்றிய அவரது விளக்கம் தலைசிறந்தது என்று கருதப்படுகிறது. 1896 பிப்ரவரியில் பக்தி யோகத்தைப் பற்றி அவர் சொற்பொழிவாற்றினர்.

நியூயார்க், பாஸ்டன், டெட்ராயிட் நகரங்களில் எல்லா விதமான இடங்களிலும் பேசினர். பொதுமக்கள் நிறைந்த கூட்டங்களில், ஹார்ட்பர்ட் தத்துவ விசாரக் கழகத்தில், புருக்ளின் அறவழிச் சங்கத்தில், ஹார்வார்ட் தத்துவ மாணவர் கள், பேராசிரியர்கள் முன்னிலையில் உரைகளை நிகழ்த்தினர். ஹார்வார்டில் கீழ்த்திசைத் தத்துவங்களை விளக்கும் ஆசிரிய பீடம் அவருக்கு அளிக்கப்பட்டது. கொலம்பியாவில் ஸம்ஸ் கிருத பீடத்தை அவர் அலங்கரித்தார். நியூயார்க்கில் பிரான்சிஸ் லெக்கெட் தலைமையில் வேதாந்த சங்கத்தை நிறுவினர். பின்னர் அது அமெரிக்காவில் வேதாந்த இயக்கத்தின் கேந்திர மாக அமையலாயிற்று.

சகிப்புத்தன்மையும், பிரபஞ்சம் அனைத்தையும் படர்ந்து ஆட்கொள்ளும் சமய மனப்பாங்குந்தான் அவரது குறிக் கோள்கள்.

புது உலகில் மூன்று வருஷ காலம் பிரயாணம் செய்தார். மேலை நாடுகளின் சிந்தனையும் பல்வேறு சமயங்களுடன் இடையருது தொடர்புகொண்டதுமாகச் சேர்ந்து, பிரபஞ்சம் அனைத்துமே ஏற்கக்கூடிய ஒரு மதத்தை உருவாக்குவது என்ற அவரது லட்சியத்தை வளப்படுத்தின ஆனல் அதே சமயத்தில், அவரது ஹிந்து மதி நுட்பமானது, ஒரு பெரிய அதிர்ச்சிக்கு உள்ளாயிற்று. இந்தியாவின் பெரிய சமய தத்துவச் சிந்தனைகளை அடியோடு திருத்தி அமைக்க வேண்டிய அவ சியம் இருப்பதாக அவர் உணர்ந்தார். இல்லாவிடில் பிறரை வெல்லும் சக்தியை அடைந்து ஏற்றம் காண்பதற்கான திறன் பெற்று, மேலை நாடுகளை ஊடுருவி வளர்ப்பது அதனல் இயலாது போகும்.

1893-இல் சென்னையில் ஏற்கெனவே இக்கருத்தை அவர் வெளியிட்டிருந்தார். இந்தியாவில் கருத்துவளம் காடாக மண்டிக் கிடந்தது. ஒன்ருெடொன்று இணைந்து காணக் கூடியவாறு, அதை ஒழுங்குபடுத்தி, அதன் பல்வேறு சித் தாந்தங்களை வகைப்படுத்தி, பிரபஞ்ச தத்துவத்தின் மத்திய கேந்திரங்களாக அவற்றை விளங்கவைக்க வேண்டும் என நினைத்தார்.

இந்திய சித்தாந்தங்களிடையே, வெளிப்படையாகப் பார்க்குமிடத்துத் தத்துவ முரண்பாடுகள் தோன்றும். ஜீவாத் மாவும், பரமாத்மாவும் ஒன்றே என்று கூறும் அத்வைதம்,

இந்த ஒற்றுமையிலுள்ள தனிச் சிறப்பு அம்சத்தைக் காட்டும் விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகியவை உபநிஷத்துக்களிலே ஒன்ருேடொன்று மோதிக்கொண்டுள்ளன. இவற்றை ஒன்றுக் கொன்று சமரசப்படுத்தி, பாலம் அமைத்து, மேலை நாடுகளின் தத்துவ விசாரத்துடன் ஒப்புநோக்கிப் பார்க்கும் முறையைக் கையாள வேண்டியிருந்தது.

ஹிமாலயத்தைப் போலவே வேதாந்த தத்துவம் மிகப் பழமையானது, ஆழமானது. அதற்கும், நவீன விஞ்ஞானத்தினர் ஒப்புக்கொள்ளும் கோட்பாடுகளுக்குமிடையே உள்ள உறவு முறைகளைத் தெளிவுபடுத்த வேண்டியிருந்தது. தாமே இத்தகைய நூலை இயற்றவேண்டுமென அவர் விரும்பினுர். பிரபஞ்ச சித்தாந்தம் என்ற தயாரிப்புக்கு வேண்டிய விஷயங்களில் துணைபுரியுமாறு தமது இந்தியச் சீடர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஹிந்து தத்துவ சிந்தனையை ஐரோப்பிய பரிபாஷையில் மொழிபெயர்த்துத் தருவதுதான் அந்தப் பணி என்று நினைத்தார். வறண்ட தத்துவம், சிக்கல் நிறைந்த புராண வரலாறு, விசித்திரமான திடுக்கிட வைக்கும் உளவியல் தத்துவம் ஆகியவற்றிலிருந்து சுலபமானதும், எளிமையானதும், பொது மக்களை ஈர்க்கக் கூடியதும், அதே சமயத்தில் சிறப்பான உயர்நிலையை எய்திய மனத்துக்குத் திருப்தியளிக்கக் கூடியதுமான ஒரு மதத்தை உருவாக்க விரும்பினுர்.

மிகத் தொன்மையானதும், காலகதியில் வளர்ச்சி கண்டதுமான இந்திய சமயக் கோட்பாடுகளின் உண்மைத் தோற்றத்தை, அத்தகைய முயற்சியானது மாற்றிவிடக்கூடும் என்று வைதிகர்களான ஹிந்துக்களும், இந்தியா விஷயத்தில் அக்கறை கொண்ட ஐரோப்பியர்களும் கூறினர். ஆனுல், விவேகானந்தர் அவர்கள் சொன்னதை நம்பவில்லை. அதற்கு நேர்மாறுன பயனே கிட்டும் என்று அவர் நம்பினுர்.

அந்தத் திரைச்சீலையின் உண்மை நிலையை அலங்காரமான கறைகள் மறைத்து, ஒரு பொய்த் தோற்றத்தை அளித்து வந்தன. அவை அகன்றுவிடுமாயின் முதலில் இருந்துவந்த ஆழ்ந்த ரசானுபவம் கிடைக்கும் என்பது அவரது கருத்து. இதைப் பல தடவைகளில் அவரே சொல்லியிருக்கிருர். தவிர அவரைப் போன்ற மனேபக்குவம் உள்ள ஒருவரால், சில ஸ்திரமான நிலைகளில் மதம் ஒடுங்கிக் கிடக்கிறது என்று நம்ப முடியாது எப்போதுமே அது ஏற்றம் கண்டு வருவதாகத்

தான் அவர்கள் கருதுவர். ஒரு க்ஷணம்கூட ஏற்றம் காணது நின்றுவிடுமாயின் உடனே அது மரித்துவிடும். எனவே, தமது பிரபஞ்ச லட்சியமானது எப்போதுமே இயங்கிக்கொண்டிருக்க வேண்டுமென அவர் விரும்பினர்.

கீழ்த்திசையும், மேற்றிசையும். இடையருது ஒன்றுபட்டு, ஒன்றையொன்று வளப்படுத்த வேண்டும். அவை எந்தக் குறிப்பிட்ட ஒரு சித்தாந்தத்தையும் பற்றிக்கொண்டிருக்கலாகாது. இரண்டுமே ஜீவகளையுடன் சேர்ந்து இயங்கி அபிவிருத்தியடைய வேண்டும். அதை உறுதி செய்வதுதான் வேதாந்த சங்கத்தின் பணிகளில் ஒன்ருக இருக்கவேண்டும். சிந்தனை என்ற ரத்த ஓட்டமானது ஒழுங்காகச் சஞ்சரிக்க வேண்டும். மனித வர்க்கத்தின் சரீரம் முழுவதையுமே அது வியாபித்து வளப்படுத்தவேண்டும்.

அத்தியாயம் 7

# இந்தியா—ஐரோப்பா சந்திப்பு

நியூயார்க்கில் சூழ்நிலை மிகச் சிறப்பாக இருந்தது. செயலாற்றுதலில் விவேகானந்தரது மேதை பிரகாசமாகக் கொழுந்து விட்டெரிந்தது. எங்கே பார்த்தாலும் வேலை மயமாக இருந்தது. வெறிபிடித்த நிலையில் அவரையும் அது ஆட்கொண்டது. சிந்தனை, எழுத்து, உணர்ச்சியுடன் கூடிய பேச்சு ஆகிய நடவடிக்கைகளில் அவர் தமது சக்தியைப் பெரிதும் செலவிட்டார். எனவே, அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. விழிப்புற்று எழுந்த தமது ஆன்மபலத்தைத் தம்மைக் கேட்க வந்த ஜனத்திரளுக்கு அவர் ஓரளவு அளித்தார்.

ஆனால் மனம் உள்ளூற ஏங்கித் தவித்தது. ஒரு மூலைமுடுக்கான இடத்தைத் தேடி அங்கே தலை சாய்த்து உயிர்விடவே விரும்பினார். அவர் வாழ்ந்தது சொற்பக் காலமே. ஏற்கெனவே நோயினால் மெலிவுற்ற தேகம். மேலும் அதைச் சிரமப்படுத்தியதால் ஏற்பட்ட வேதனை. அதனின்று அவர் மீளவே இல்லை. இத்தருணத்தில்தான் மரணம் நெருங்கி வருகிறது என்பதை உணர்ந்தார். ''என் காலம் தீர்ந்துவிட்டது'' என்று வாய்விட்டுச் சொன்னார். ஆனால் மகத்தான, வீரமிக்க பணி அவரை இடையறாது திரும்பத் திரும்ப அழைத்துக்கொண்டே யிருந்தது.

ஐரோப்பாவுக்கு யாத்திரை சென்றால் அவரது கவனம் வேறு திசையில் திரும்பும் என்று கருதினார்கள். ஆனால் எங்கே சென்றபோதிலும், அவர் தமது சக்தியை மீறியே உழைத்தார். அவர் இங்கிலாந்தில் மூன்று தடவை தங்கியிருந்தார். 1895 செப்டம்பர் முதல் நவம்பர் வரை; 1896 ஏப்ரல் முதல் ஜூலை முடிய, 1896 அக்டோபர் முதல் டிசம்பர் 16-ஆம் தேதி வரை.

அவரை இங்கிலாந்து கவர்ந்தவிதம் அமெரிக்க அநுபவத்தினின்று முற்றும் மாறுபட்டது. அது எதிர்பாராத ஆழ்ந்த அநுபவம். அமெரிக்காவில் எதைப் பற்றியும் அவர் குறைப்படவில்லை. எதிர்ப்புக்கள் இருந்தபோதிலும், ஆரம்பப் படாடோபங்கள் மலிந்து கிடந்தபோதிலும், மிகத் துல்லிய

மான அனுதாபம் அவர்பால் காண்பிக்கப் பெற்றது. பக்தி சிரத்தையுடன் துணைபுரிவதற்குப் பலர் முன்வந்தனர். பக்குவப் படுத்திப் பயனுறச் செய்வதற்கான வாய்ப்பு அங்கு மிக விரிவாக அமைந்திருந்தது.

பழைய உலகில் அடியெடுத்து வைத்தவுடன் முற்றும் வேறுபட்ட, புத்திகூர்மை நிறைந்த ஒரு சூழ்நிலையை அவர் கண்டார். தமது மனோதிடத்தை மிதமிஞ்சி மதிப்பிட்டு, ராஜ யோகத்தில் முழு மூச்சுடன் குதிக்கத் தயாராக இருந்த இளம் சமுதாயத்தின் காட்டுமிராண்டித்தனமான ஆசைகள் அங்கே காணப் பெறவில்லை. உலகத்தை தம் வசப்படுத்துவதற்கும் பயன்தரக்கூடிய விரும்பத் தகாத ரகசியங்களை அதன் மூலம் அடைய வேண்டுமென்பதற்காகவும், அமெரிக்காவில் அதை சிறுபிள்ளைத்தனமாக நாடி வந்தனர். ஆனால் இங்கு (ஐரோப்பா வில்) ஏற்கெனவே ஓர் ஆயிரம் வருஷத்திய உழைப்பு இருந் தது. எனவே நேரடியாக இந்தியாவின் உபதேசத்தை எடுத்துரைக்க இயன்றது.

அத்வைத ஞானம் அத்தியாவசியமானது. அந்த ஞானத் தைத் தரும் வழி முறையே ஞானயோகம். அதை ஐரோப் பிய மக்களுக்கு விளக்கும்பொழுது, ஆரம்ப வகுப்புகளுக்குச் சொல்லித் தருவதுபோல் இல்லாமல், மேல்வகுப்பினருக்குப் போதிப்பதுபோல் விளக்க அவரால் முடிந்தது. விஞ்ஞானத் திருஷ்டியும், திட்டவட்டமான மதிப்பீடும் உள்ளவர்களாகை யால், ஐரோப்பிய மக்கள் தாமே கண்டு முடிவு செய்யக் கூடிய தகுதி பெற்றிருந்தார்கள்.

அமெரிக்காவில் சிறந்த அறிஞர்கள் பலரை விவேகானந் தர் கண்டார். பேராசிரியர் ரைட், தத்துவ ஆசிரியர் வில்லியம் ஜேம்ஸ், நிக்கோலஸ் டெஸ்லா என்ற மின்-இயல் நிபுணர் ஆகியோர் அனுதாபத்துடன் கூடிய அக்கறையைக் காட்டினார் கள். எனினும், ஹிந்து வேதாந்த தத்துவ விசாரத் துறையில் அவர்கள் ஆரம்ப நிலையில்தான் இருந்தனர். எல்லாவற்றையுமே கற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது. ஹார்வார்ட் தத்துவப் பட்டதாரிகளின் நிலையும் அதுவே.

ஐரோப்பாவில் மாக்ஸ் முல்லர், பால் டியூசென் போன்ற இந்தியத் தொல்துறை ஆராய்ச்சி நிபுணர்களுடன் சமநிலையில் அவரால் அளவளாவ முடிந்தது. தத்துவம், மொழி-விஞ்ஞானம் ஆகிய இரண்டும் அடைந்திருந்த உயர்நிலைகளை உண்மை யுணர்ச்சியுடன், பெருமையுடன், தமது மேதா விலாசத்திற்கு

ஏற்ப, அவருக்கு அவர்கள் புலப்படுத்தினார்கள். அது அவரது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதுவரை பிற இந்திய மக்களைப் போலவே அவரும் அங்கு நடந்தேறிய பணியைப் பற்றி அறியாமையில் ஆழ்ந்திருந்தார். இந்தியாவின்பால் அவர்கள் கொண்டிருந்த எழில்மிக்க அன்பையும் மதிப்பையும் கண்டு அவர் பெருமிதம் கொண்டார்.

ஆனால் இங்கிலாந்தில் அவர் கண்டறிந்தவை முற்றும் வேறு வகையான உணர்வைத் தோற்றுவித்தன. அவர் பகைவனைக் அங்கே சென்றார். அங்கு அவர் ஜெயிக்கப்பட்டார். இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் முதன்மையான விசுவாசத்துடன் இதை அவர் விவரித்தார். ''ஆங்கிலேய இனத்தவரிடம் எனக்கு இருந்ததைவிட அதிகமான துவேஷத்துடன் ஒருவர் இங்கிலாந்தின் மண்மீது எப்போதும் அடியெடுத்து வைத்திருக்க மாட்டார். ஆனால், இன்று ஆங்கில மக்களை நான் நேசிக்கும் அளவுக்கு உங்களில் யாரும் நேசிக்க மாட்டீர்கள்.''

1896 அக்டோபர் 8ஆம் தேதி ஓர் அமெரிக்கச் சீடருக்கு இங்கிலாந்திலிருந்து எழுதிய கடிதத்தில், ''ஆங்கிலேயர்களைப் பற்றிய எனது கருத்துக்கள் புரட்சிகரமாக மாறிவிட்டன'' என்று அவர் கூறியிருக்கிறார்.

அங்கே அவர், ''வீரர்கள் நிறைந்த ஒரு சமுதாயத்தை, உண்மையான க்ஷத்திரியர்களை, தைரியமும் விடாமுயற்சியும் உடையவர்களைக் கண்டறிந்தார். தமது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு ஒருபோதும் அவற்றை வெளிக்காட்டாமல் இருப்பதற்கான சக்தியை அங்கே போதிக்கிறார்கள். இம்மாதிரி வெளித்தோற்றம் மிடுக்காக இருந்தபோதிலும் ஆங்கிலேயர்களது இதயத்தில் உணர்ச்சி ததும்புகிறது. அந்த இதயத்தை அடைவது எப்படி என்று ஒரு தடவை தெரிந்தால் போதும், பிறகு அவர் உங்களது நண்பராகிவிடுகிறார். ஒரு தடவை அவர் மூளையில் ஒரு கருத்தைப் புகுத்திவிட்டால் போதும், பிறகு அது அங்கிருந்து வெளிவருவதே இல்லை. அந்த இனத்தவர் பிரத்தியட்ச உணர்வு மிக்கவர்கள்; விசேஷ சக்தி படைத்தவர்கள். எனவே, அங்கு விரைவில் வித்து முளைத்து உடனடியாகப் பயனையும் தருகின்றது. அடிமைகளாகக் கெஞ்சிக் கொண்டிருக்காமல் கீழ்ப்படியும் ரகசியத்தை அவர்கள் கண்டுவிட்டார்கள். பெரிய அளவில் சுதந்தரத்தை அநுபவிக்கிறார்கள். பெரிய அளவில் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கின்றார்கள்.

கண்டு பொறுமைப்படக் கூடிய ஓரினம்; தனது கொடுமைக்கு உள்ளாகின்றவர்கள்கூட, தன்னிடம் மரியாதை செலுத்தும்படியாக இங்கிலாந்து நிர்ப்பந்திக்கிறது. அடிமைப் படுத்தப்பட்ட தமது மக்களின் கொந்தளிக்கும் மனச்சாட்சியாக இருந்துகொண்டு, அவர்களை மேம்படுத்த விரும்புகின்றவர்கள் கூட—ராம் மோகன் ராய், விவேகானந்தர், டாகுர், காந்தி போன்றவர்கள்கூட—தம்மை ஜயித்தவனின் பெருமையை உணர்ந்து அங்கீகரிக்க வேண்டிய நிலைமை இருந்துவந்துள்ளது. விசுவாசிகளாக அந்நாட்டுடன் ஒத்துழைப்பதால் நன்மை உண்டென்றுகூட அவர்கள் நினைத்திருக்கிறார்கள். தம்மை ஜயித்த இந்த நாட்டவரை விட்டு, வேறு ஒரு நாட்டவருக்கு அடிமைப்பட்டிருக்க அவர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். இங்கிலாந்தின் ஆதிக்கம், அசுரத்தனமான அதிகார துஷ்பிரயோகத்திற்கு உறைவிடமாக இருந்திருக்கலாம். ஆனால் இந்தியாவின் கருத்துக்கள் நிர்ப்பந்தமின்றி வளர்ச்சி காண்பதற்கு எல்லா மேற்றிசை நாடுகளுக்கிடையே இங்கிலாந்து ஒன்றுதான் அதிகப்பட்ச வாய்ப்பு அளித்து வருவதாகவே எனக்குத் தோன்றுகிறது. மேற்றிசை என்பதில் ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் சேர்த்தே தான் குறிப்பிடுகிறேன்.

இங்கிலாந்தைக் கண்டு விவேகானந்தர் வியப்புற்றார். ஆனால் இந்தியர், இந்தியாவின் தூதர் என்ற வகையில்தான் தாம் பணியாற்ற வேண்டியவர் என்பதை அவர் ஒருகணமும் மறக்கவில்லை. இங்கிலாந்தின் உயர்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அதன்மீது ஆன்மிகத் துறையில் ஆதிக்கம் செலுத்துவதற்கு இந்தியா உழைக்கவேண்டுமென விரும்பினார். பின்னர் அவர் எழுதினார்: "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் எவ்வளவோ குற்றங்குறைகள் இருக்கலாம். ஆனால் கருத்துகள் பரவுவதற்கு அதைப்போல் அவ்வளவு சிறந்த சாதனம் வேறு எங்கும் இருந்ததில்லை. எனது கருத்துக்களை இந்தச் சாதனத்தின் கேந்திரத்தில் விதைக்க விரும்புகிறேன். இங்கிருந்து அவை உலகெங்கும் பரவும். ஆன்மிகக் கருத்துகள் எப்போதும் அமுக்கப்பட்டவர்களிடையே இருந்துதான் (யூதர்களும் கிரேக்கர்களும்) வெளிப்போந்து உள்ளன.

"இங்கிலாந்தில் என் வேலை உண்மையில் அற்புதமாக நடந்திருக்கிறது" என்று சென்னையிலுள்ள ஒரு சீடருக்கு, தமது முதல் பிரயாணத்தின் போதே, லண்டனிலிருந்து அவர் எழுதியிருக்கிறார்.

அவருக்கு வெற்றி கைமேல் கிட்டியது. பத்திரிகைகள் அவரைப் பெரிதும் பாராட்டின. ராம் மோகன் ராய், கேசவ சந்திர சென் போன்ற இந்திய மேதைகளுடன் மட்டுமின்றி, புத்தருடனும், கிறிஸ்துவுடனும் அவரது தார்மிகத் தோற்றத்தை ஒப்புநோக்கி, மிகச் சிறந்த முறையில் அவை எழுதின. பரம்பரைப் பெருமையுள்ள வட்டாரங்களில் அவருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. திருச்சபைகளின் தலைவர்களும் அவரிடம் அனுதாபம் காட்டினர்.

இரண்டாவது விஜயத்தின்போது வேதாந்த உபதேசம், முறைப்படி நடப்பதற்கான வகுப்புக்களை அவர் துவக்கினார். புத்திபூர்வமாகத் தெளிந்தறிய விரும்பும் மக்கள் கிடைப்பர் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. எனவே, ஞானயோகத்துடன் தமது உபதேசத்தை ஆரம்பித்தார். பிக்காடிலிக் கலைக்கூடம், இளவரசர்களின் மண்டபம், கிளப்புகள், கல்விச் சங்கங்கள், அன்னி பெசன்டின் விடுதி, தனி வட்டங்கள் ஆகியவற்றில் அவர் பல்வேறு பிரவசனங்களைச் செய்தார்.

அமெரிக்கப் பொதுமக்களைப்போல் மேம்புல் மேய்வதில் நாட்டம் இல்லாமல் கேட்கவந்த ஆங்கிலேயர்கள் சிரத்தையுடன் தெளிந்தறிய விரும்புவதைக் கண்டார். அமெரிக்கர்களை விட அவர்கள் கவர்ச்சி குறைவுள்ளவர்களாக இருக்கலாம், பழம் போக்கினராகவும் இருத்தல் கூடும். முதலில் ஆங்கிலேயர்கள் தயக்கத்துடன் கூடத்தான் எதையும் ஏற்பர். ஆனால் அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு, அரைகுறைப் பணி என்பதே கிடையாது. எனவே, விவேகானந்தருக்கு மன ஆறுதல் ஏற்பட்டது. அவர்களிடம் இன்னும் அதிகமாக நம்பிக்கை வைக்கலானார். தமது அன்புக்குரிய குருவாகிய ராமகிருஷ்ணரைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லாமல் இருந்தவர், இப்போது அவரைப் பற்றிப் பேசலானார். தாம் அந்த நிலையில் காணப்படுவது ராமகிருஷ்ணரிடமிருந்து கிடைத்த அநுக்கிரகந்தான், சொந்தமாக, தாமாகச் சிந்தித்துக் கூறியது ஒன்றுமில்லை என்று, தீவிர அவையடக்கத்துடன், உணர்ச்சி மிகுதியுடன், அவர் பேசியது உண்டு. "உலகில் மத வாழ்க்கை அடைந்துள்ள இன்றைய கட்டம் அவரிடமிருந்து ஊற்றுப் பெருக்காக வந்தது தான்" என்று அவர் பிரகடனம் செய்தார்.

ராமகிருஷ்ணர்தான் மாக்ஸ்-முல்லருக்கும், அவருக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தவர். ராமகிருஷ்ணர் கீழ்த்திசையில் தோன்றிச் சுடர்விட்டு எரியும் நட்சத்திரம் என்பதை அவர்

தாம் முதலில் கண்டுகொண்டார். ஹிந்து மதத்தினரின் ஆத்மானுபவங்களை, அதன் இடையருத புது ஆர்வத்துடன் அவர் கவனித்து வந்தார். அந்தப் புதிய அவதாரத்தின் நேரடியான சீடரைச் சில கேள்விகள் கேட்க அவர் தவித்துக்கொண்டிருந்தார். அவரது வேண்டுகோளின்பேரில் தமது குருவைப் பற்றிய நினைவுகளை விவேகானந்தர் எடுத்துரைத்தார். பின்னர் ராமகிருஷ்ணரைப் பற்றிய தமது நூலில் அந்தத் தகவல்களை மாக்ஸ்-முல்லர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். பரமஹம்சர் வங்கவானில் சிறகடித்துச் சென்றதைத் தொலைதூர ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து கவனித்து உலகிற்கு அறிவித்த மாக்ஸ்-முல்லர் விவேகானந்தரைப் பெரிதும் ஈர்த்தார்.

1896 மே 28-இல் தமது வீட்டுக்கு அவரை அழைத்தார். ஐரோப்பாவின் முதிய ஞானிக்கு இந்தியாவின் இளைய சந்நியாசி தலை வணங்கினர். தமது இனத்தின் ஆன்மா என்று புகழ்ந்தார். ஒரு புராதன ரிஷியின் மறுபிறப்பு என்று பாராட்டினர். வேத காலத்து இந்தியாவில் முதலில் அவர் ஜனித்திருக்க வேண்டும் என்றார். ஆகையால்தான் ஒவ்வொரு நாளும் பிரம்மத்துடன் ஒன்றியிருக்கும் நிலைமையை அந்த ஆன்மா வரவர அதிகமாக உணர்ந்து வருகிறது என்று வாழ்த்தினர்.

இன்னும் மிக ரம்மியமான நட்புறவுகள் இங்கிலாந்தில் அவருக்குக் கிட்டின. ஜெ. ஜெ. குட்வின், மார்கரெட் நோபிள், சேவியர் தம்பதிகள் ஆகியோரின் நட்புக் கிடைத்தது.

குட்வினைப்பற்றி முன்னரே பிரஸ்தாபித்துள்ளேன். 1895 இறுதியில் நியூயார்க்கில் விவேகானந்தரை அவர் கண்டார். சுவாமியின் பாடங்களை அப்படியே எழுதிக்கொள்வதற்கு நல்ல சுருக்கெழுத்தாளர் தேவையாயிருந்தது. போதிய படிப்புள்ள ஒருவரைக் கண்டுபிடிப்பது சிரமமாயிருந்தது. இங்கிலாந்திலிருந்து வந்தவுடனேயே அப்பணியில் குட்வின் அமர்த்தப்பட்டார். இரண்டு வாரம் அவரது தகுதியைச் சோதித்துப் பார்க்கக் கெடு வைத்தார்கள். அந்தப் பதினைந்து நாட்கள் முடிவடைவதற்கு முன்னமேயே தாம் எழுதிக்கொண்டிருந்த சூழ்நிலையின் சிறப்பினால் விழிப்புற்று எழுந்து, எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு எஜமானனுக்காகவே வாழ்ந்தார். சம்பளம் வாங்க மறுத்துவிட்டார். இராப்பகலாக உழைத்தார். விவேகானந்தர் சென்ற இடமெல்லாம் கூடச் சென்றார். அன்புடன் கூட அவரைக் கவனித்துக்கொண்டார். பிரம்மசரிய விரதத்தை மேற்கொண்டார். தமது வாழ்க்கையை அவர்,

குருவுக்காகவே முற்றும் அர்ப்பணித்துக் கொண்டார். அவர் இந்தியாவில் அகால மரணம் அடைந்தார். குடும்பம் நாடு எல்லாம் எஜமானர்தான் என்ற ஒரே எண்ணத்தில், நம்பிக்கையில், உணர்ச்சி மிகுதியுடன் பின்பற்றி அவருடன் இந்தியாவுக்கு வந்துவிட்டார் குட்வின்.

மார்கரெட் நோபிள் அதேமாதிரி தம்மை விவேகானந்த ருக்கு நன்கொடையாகவே சமர்ப்பித்துக்கொண்டார். அவர் தீட்சை பெற்று ஏற்ற பெயர் சகோதரி நிவேதிதா என்பது. அவரது பெயரும் விவேகானந்தர் பெயரும் ஒன்ருகவே எதிர் காலத்தில் சேர்த்துப் பேசப்பெறும். தம்மை இம்மாதிரி அடைந் தவர்களை மிகக் கடுமையான சோதனைகளுக்குப் பிறகுதான் ஏற்றுக்கொள்வது சுவாமியின் வழக்கம்.

லண்டனில் ஒரு பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியையாக இளவயதிலேயே அவர் பணியாற்றிவந்தார். அவரது பள்ளிக் கூடத்தில் விவேகானந்தர் பேசினர். உடனே அவரது எடுப்பான காம்பீர்யம் அவரை அடிமைப் படுத்தியது. நெடுங்காலம் அந்த உணர்வு மேலிடாதவாறு அவர் தம்முள் போராடிக்கொண் டிருந்தார். ஒவ்வொரு பிரசங்கத்திற்குப் பிறகும் விவேகானந்தரை அணுகி, "ஆமாம் சுவாமி, ஆனல்...?" என்று கேள்வி கேட்ட வர்களில் அவரும் ஒருவர்.

எப்போதுமே மார்கரெட் வாதிடுவார், எதிர்த்துப் பேசுவார், பணிய வைக்க முடியாத நெஞ்சுரம் படைத்த ஆங்கிலேயர் களில் அவர் ஒருவர். ஆனல், ஜயிக்கப்பட்ட பிறகு, சாசுவத மான விசுவாசத்துடன் நடந்துகொள்வது பிரிட்டிஷ் வழி. அவர்களைப் போல்நம்பிக்கைக்குப்பாத்திரமானவர்களைக் காண முடியாது என்று விவேகானந்தரே கூறியிருக்கிறார்.

தம் விதியைச் சுவாமியின் கரங்களில் ஒப்படைப்பது என்று அவர் முடிவுசெய்தபொழுது அவருக்கு வயது இருபத்தெட்டு. ஹிந்து மாதரின் கல்வி போதனைக்காக இந்தியாவுக்கு அவரை விவேகானந்தர் வரச்செய்தார். ஹிந்துவாகவே தம்மை ஆக்கிக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்தார். "சிந்தனையில் ஹிந்து, கருத்துக் களில் ஹிந்து, பழக்கவழக்கங்களில் ஹிந்து, தனது பழங்கால நினைவுகளைக்கூட மறந்துவிடவேண்டும்" என்ருர். அவர் பிரம்மசரிய விரதத்தை மேற்கொண்டார். ஓர் இந்தியத் துறவித் திருக்கூட்டத்தில் இடம் பெற்ற முதல் மேற்றிசை மாது நிவேதிதாதான். மீண்டும் விவேகானந்தருடன் அவர் பணி யாற்றினர். அவருடன் கண்ட பேட்டிகளை எல்லாம் எழுதி

வைத்துக்கொண்டார். மேலை நாடுகளில் விவேகானந்தரைப் பிரபலப்படுத்துவதற்கு மற்றவர்களைவிட அவர்தாம் அதிகம் பாடுபட்டுள்ளார்.

சேவியர் தம்பதிகளது நட்பு, அன்பையும் முழுநம்பிக்கையையும் ஆதாரமாகக் கொண்டது. ஒரு தடவை பணிந்து விட்டால், அது வாழ்நாள் முழுதும் நீடிக்கும் என்பதற்கு அவர்கள் ஓர் எடுத்துக்காட்டு. சேவியருக்கு வயது 49. பட்டாளத்தில் காப்டனாக இருந்து ஓய்வு பெற்றவர். அவரும் அவரது மனைவியும் மத சம்பந்தமான விஷயங்களில் கவனம் செலுத்தி வந்தனர். விவேகானந்தரின் சிந்தனை, சொற்கள், தோற்றம் எல்லாம் அவர்களைக் கவர்ந்தன. மிஸ். மாக்லியாட் என்னிடம் கூறியுள்ளார்: ''அவரது பிரசங்கம் ஒன்றைக் கேட்டு வெளிவருகையில், சேவியர் என்னை நோக்கிக் கேட்டார்: 'உங்களுக்கு இந்த இளைஞரைத் தெரியுமா, அவர் எப்படிக் காட்சியளிக்கிறாரோ, அப்படியே உண்மையில் இருக்கிறார் என்று?' 'ஆம்' என்று பதிலளித்தேன். 'அவ்வாறாயின், அவரைப் பின்பற்றி அவருடன் சேர்ந்து கடவுளைக் காண வேண்டும்' என்றார். வீடு சென்று தம் மனைவியிடம், 'சுவாமியின் சீடனாக ஆவதற்கு நீ அனுமதி தருவாயா?' என்று கேட்டார். 'தருகிறேன், ஆனால் நானும் சிஷ்யை ஆகும்படி விடுவீர்களா?' என்று பதிலுக்குக் கேட்டாள் அவள். அவர் அன்பும் ஹாஸ்யமும் கலந்த குரலில், 'எனக்குத் தெரியாது' என்று பதிலளித்தார்.''

அவர்கள் வாழ்நாளைய துணைவர்களாயினர். தமது சின்னஞ்சிறு செல்வம் அனைத்தையும் அதற்காகப் பயன்படுத்த முன் வந்தனர். ஆனால் அவ்வாறு செய்ய விவேகானந்தர் அனுமதிக்கவில்லை. தமது நண்பர்களின் எதிர்காலத்தைப் பற்றி அவர்களைவிட விவேகானந்தர் தாம் அதிகமாகக் கவலைப் பட்டார். அவர்கள் ஓரளவு தமக்காகவே வாழவேண்டுமென்று நிர்ப்பந்தித்தார். அவர்கள் சுவாமியைத் தமது குழந்தையாகவே பாவித்தனர். அத்வைத ஆசிரமத்தை அமைப்பதில் முழுக் கவனம் செலுத்தினர். அதுவே அவர்களது கனவாக இருந்தது.

ஹிமாலயத்தில் உருவமற்ற கடவுளைத் தியானிப்பதற்காக அந்த ஆசிரமம் ஏற்படவேண்டுமென்று அவர் நினைத்தது உண்டு. விவேகானந்தரது சிந்தனைகளில் அவர்களைப் பெரிதும் கவர்ந்தது அத்வைதந்தான். அவருக்கும் அது அத்தியாவசியமாக இருந்தது. 1901-ஆம் ஆண்டில் தாமே கட்டிய இந்த மடத்தில் சேவியர் காலமானார். ஸ்ரீமதி சேவியர் தமது கணவ

ருக்கும், விவேகானந்தருக்கும் பிறகும் வாழ்ந்து வந்தார். மலைகளிடையே ஒதுக்காக இருக்கும் இந்த இடத்தில் பதினைந்து வருஷகாலம் தனிமையில் இருந்த ஒரே ஐரோப்பியப் பெண் மணியாக அவர் திகழ்ந்தார். குழந்தைகளின் கல்வியில் தமது நேரத்தையெல்லாம் செலவழித்தார்.

''உங்களுக்கு அலுப்புத் தட்டுவது இல்லையா?'' என்று மிஸ் மாக்லியாட் அவரைக் கேட்டார்.

''விவேகானந்தரைப் பற்றியே எனது நினைவு எல்லாம்'' என்ற எளிய பதிலை அவர் அளித்தார்.

அத்தகைய வியக்கத்தக்க நட்பு இந்தியர்களில் விவேகானந்தருக்கு மட்டுமே இங்கிலாந்தில் கிடைத்தது என்று நினைக்கலாகாது. மாபெரும் ஹிந்துக்கள் பலர் எப்போதுமே, வீரம் மிகுந்த, விசுவாசம் நிறைந்த ஆங்கிலேய சீடர்களையும் உபகாரிகளையும் அடைந்தது உண்டு — டாகுருக்குப் பியர்ஸன் போல், காந்திக்கு ஆண்ட்ரூஸ் அல்லது மீரா பென்னைப் போல. பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாகத் தான் பட்ட கஷ்டங்களையும், அதற்குத் தான் கடன்பட்டிருக்கும் அளவையும் சுதந்தர இந்தியாவானது, பிற்காலத்தில் கணக்கிட்டுப் பார்க்கையில், புனிதமான நட்புக்கள் மூலம் கிடைத்த அநுகூலம் இந்தியாவுக்குத்தான் பன்மடங்கு அதிகம் என்பது புலனாகும்.

இங்கிலாந்தில் அவரது உபதேசம் ஆழ்ந்த சலனங்களை விளைவித்தது. ஆனால் அமெரிக்காவில் போல் அங்கு எந்த ஸ்தாபனத்தையும் அவர் நிறுவவில்லை. அமெரிக்காவில் ராமகிருஷ்ண மிஷன் தோன்றி, பிறகு வளர இருந்தது. இங்கிலாந்தும் ஐரோப்பாவும் மதிநுட்பத்தில் மிக உயர்நிலையை அடைந்திருந்ததால் பாராநாகூரைச் சேர்ந்த விசேஷ ஆத்மஞானம் பெற்ற ஹிந்து மிஷனரிகளை அங்கு அனுப்பவேண்டியிருக்கும் என்று அவர் ஒருக்கால் நினைத்து இருக்கக்கூடும்.

அவரது அமெரிக்கச் சீடர்களில் ஒருத்தி இதை என்னிடம் கூறினாள். ஆனால் அவரைப் பீடிக்கத் தொடங்கிய கடுமையான அயர்ச்சியை அலட்சியம் செய்ய இயலாதுபோயிற்று. உலகம் அவருக்கு அலுத்துவிட்டது. செயலாற்றும் அடிமை நிலையும் அலுத்தது. அமைதிக்காக ஏங்கித் தவித்தார். அவரது உடலின் வலிமையை உள்ளிருந்தே ஒரு புழு அரித்துக்கொண்டிருந்தது. அந்த வேதனையில், வாழ்க்கையிலேயே சிரத்தையில்லாமல்

நீண்ட நேரத்தை அவர் கழித்தது உண்டு. அப்போது நிர்மாண ரீதியில் எந்தப் பொதுப்பணியிலும் அவர் இறங்கமாட்டார். நிர்மாண வேலைக்கான சக்தி தமக்கு இல்லையென்று கூறி விடுவார்.

1896 ஆகஸ்டு 23ஆம் தேதி அவர் எழுதினார்: ''பணியைத் துவக்கிவிட்டேன். மற்றவர்கள் அதைப் பூர்த்தி செய்யட்டும். பணி தொடர்ந்து நடப்பதற்தாக நான் பணத்தையும், சொத்தையும் சிறிது காலம் என் கையால் தொடவேண்டியிருந்தது. ஆனால், செய்யவேண்டிய பணியில் என் பங்கு தீர்ந்துவிட்டதாக நம்புகிறேன். எனவே, இவ்வுலகில், வேதாந்தத்திலோ அல்லது வேறு எந்தத் தத்துவத்திலோ அல்லது பணியிலோ கூட எனக்குச் சிரத்தை இல்லை. மதத்துறைப் பணியினால் விளையக்கூடிய நன்மைகள்கூட என்னை ஊக்குவிக்கவில்லை. இந்த உலகம் ஒரு நரக அநுபவமாகிவிட்டது. எனவே, அதற்கு மீண்டும் திரும்பாத வகையில் நான் போய் விடுவதற்குத் தயாராகிறேன்.''

இது பரிதாபகரமான குமுறல். அவரைச் சிதைத்துக் கொண்டிருந்த நோய் விளைவித்த பயங்கரமான அலுப்பை அறிந்தவர்கள் இந்தச் சொற்களின் வேதனையை உணர்வர். மற்றச் சமயங்களில் இதற்கு நேர்மாறாக அவர் விசேஷப் பரவச நிலையில் காணப்பட்டார். பிரபஞ்சம் அனைத்துமே கடவுளின் லீலைக்கான ஒரு சாதனமாகவே புலப்பட்டது. அதில் பகுத்தறிவுக்கு இடமில்லை. ஆனால் கூடவே இன்பத்திலும் துன்பத்திலும் அதே பற்றற்ற மனப்பான்மை காணப்பட்டது. உலகம் அவரை விட்டு அகன்றுகொண்டிருந்தது. காற்றாடியின் கயிறு அறுந்து கொண்டிருந்தது.

* * *

அவரை விசேஷ அன்புடன் கவனித்துவந்த நண்பர்கள் ஓய்வு தருவதற்காக வேண்டி ஸ்விட்ஜர்லாந்துக்கு அழைத்துச் சென்றார்கள். 1896-ஆம் வருஷம் வேனிற்காலத்தில் பெரும் பகுதியை அவர் அங்கே கழித்தார். அந்நாட்டின் காற்று தெம்பூட்டியது. பனிமலைகள், மலையருவிகள், ஹிமாலயத்தை நினைவூட்டிய மலைகள் ஆகியவற்றைச் சுவைத்து நன்மை அடைந்தார். ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்தில், மான்ட் பிளாங்குக்கும், லிட்டில் செயின்ட் பெர்னாடுக்கும் இடையே உள்ள ஒரு கிராமத்தில் தங்கியிருக்கையில்தான், ஹிமாலயத்தில் ஒரு மடத்தை நிறுவவேண்டுமென்ற திட்டம் முதலில் அவரது மனத்தில் உதய

மாயிற்று. அங்கே தமது மேற்றிசை, கீழ்த்திசைச் சீடர்கள் ஒன்று பட்டுப் பணியாற்றலாமென நினைத்தார். சேவியர் தம்பதிகள் கூட இருந்தனர். இந்தக் கருத்து செயலாக உருப்பெறுவதற்கு அவர்கள் உதவினர். அது அவர்களுடைய வாழ்நாளைய வேலை யாயிற்று.

பேராசிரியர் பால் டியூசன் அவருக்கு ஒரு கடிதம் அனுப்பி யிருந்தார். கீல் நகரில் தம்மை வந்து காணுமாறு அவர் கேட்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்காக வேண்டி ஸ்வித்ஜர் லாந்தில் தமது தாமதத்தைக் குறைத்துக்கொண்டு, ஒரு மாணவனைப்போல் ஹைடல்பர்க், கொப்ளேன்ஸ், கொலோன், பெர்லின் வழியாகச் சென்றார். ஜெர்மனியையாவது கொஞ்சம் பார்க்கவேண்டுமென்ற ஆசை. செல்வத் துறையில் அதன் சக்தியும் அதன் மகத்தான பண்பாடும் அவரைப் பெரிதும் கவர்ந்தன. ஷோபனர் சங்கத்தைத் தோற்றுவித்த இந்தப் பெரியாரைக் காண்பதற்கு அவர் சென்றதை 'ஜார்பூச்' என்ற நூலில் நான் விளக்கிக் கூறியுள்ளேன். அவருக்கு அன்புடன் கூடிய நல்வரவு கிடைத்தது. பால் டியூசன் தீவிரமான வேதாந்தி.

"உண்மையை நாடி மனிதனின் மேதை முயன்று அடைந்த மாபெரும் பயனே வேதாந்தம். அது மாண்புமிக்க அமைப்பு, தூய்மையான அறவாழ்வுக்கு முதன்மையான ஆதாரமாக இருப்பது, வாழ்க்கையும் மரணமும் தரும் துன்பங்களினின்று மனத்துக்கு மிகப் பெரிய அளவில் அதுவே ஆறுதல் அளிக் கிறது" என்பது அவருடைய கருத்து. எனவே, இவ்விருவருக்கு மிடையே உறவுமுறை எதிர்பார்க்கக்கூடிய சிறப்பு நிலையை அடைந்திருந்தது.

சுவாமியின் வசீகரமான தோற்றம், அவரது பாரமார்த்திக அருள் உரைகள், ஆழ்ந்த ஞானம் ஆகியவற்றை டியூசன் உணர்ந்து போற்றினர். ஆனால் தம்மைக் காணவந்த இளைஞருக்கு ஒரு மகத்தான எதிர்காலம் காத்திருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்ததாக அவருடைய குறிப்புக்களிலிருந்து தெரியவில்லை. நல்ல தேகதிடம் உள்ளவர்போல் மகிழ்ச்சியில் மூழ்கியவராக அவர் வெளிப்பார்வைக்குத் தோன்றியபோதிலும், உள்ளூற இருந்து வந்த, சோகம் தோய்ந்த நிலவரத்தை அவரால் கற்பனை செய்துகொள்ள இயலவில்லை. ஏற்கெனவே மரணத் தின் வடுக்கள் அவரது தசையில் தெரிய ஆரம்பித்துவிட்டன. அவர் சாந்தி மிக்க நிலையிலிருக்கக் கண்டார் டியூசன்.

நன்றியறிதலுடன் கூட, எவ்வித நிர்ப்பந்தமுமின்றி, அந்த மகத்தான ஜெர்மன் பேராசிரியரான ரிஷியுடன் சந்தோஷமாகக் காலங் கழித்தார். இந்தியாவுக்காக டியூசன் எவ்வளவோ உழைத்திருக்கிறார். எனவே, இதற்கான நன்றியறிதல் விவேகானந்தரது மனத்தைவிட்டு அகலவேயில்லை. கீலில் தாம் கழித்த நாட்களை அவர் எப்போதும் பெருமையுடன் உணர்ந்து கூறுவார். ஹாம்பர்க், ஆம்ஸ்டர்டாம், லண்டன் ஆகியவற்றிலும் டியூசன் அவருடன்கூட இருந்தார். அந்த நாட்களும் மிக இன்பமானவை. அவர்களது சிந்தனைகளைப் 'பிரம்மவாதின்' என்ற பத்திரிகையில் ஒரு மிகச் சிறந்த கட்டுரையில் விவேகானந்தர் எழுதி வைத்துள்ளார்.

மாபெரும் ஐரோப்பிய ஞானிகளுக்கு இந்தியா பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இந்தியாவிடம் அன்பு காட்டி, அதைச் சரிவரப் புரிந்துகொள்வதில் அவர்கள் சமர்த்தர்களாக இருந்தனர். தன்னைத்தானே அந்த அளவுக்கு இந்தியா கூட அறிந்துகொண்டது இல்லை. முக்கியமாக,. மாக்ஸ் முல்லர்; பால் டியூசன் ஆகிய இரண்டு ஞானிகளுக்கும் இந்தியா பெரிதும் கடமைப்பட்டுள்ளது என்று பின்னர் தமது சீடர்களுக்கு அவர் நினைவூட்டினார்.

மேலும் இரண்டு மாதங்களை அவர் இங்கிலாந்தில் கழித்தார். மாக்ஸ்முல்லரை மீண்டும் சந்தித்தார். எட்வர்ட் கார்ப்பென்டர், பிரெடெரிக் மயர்ஸ், கானன் வில்பர்போர்ஸ் ஆகியோரைச் சந்தித்தார். வேதாந்தம், மாயைபற்றிய ஹிந்து தத்துவம், அத்வைதம் ஆகியவற்றை விளக்கும் புதிய உரைத் தொடர் ஒன்றை நிகழ்த்தினார். ஆனால் திரும்பி வருமாறு இந்தியா அவரை அழைத்துக்கொண்டே யிருந்தது. தாய்நாட்டைக் காணவேண்டுமென்ற அவா அவரைத் தாக்கியது. புதிய தளைகளைத் தாம் தரிக்கப்போவதில்லையென்று; மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் ஆயாசத்துடன் அவர் சொன்னார். செயல் என்ற நரகானுபவத்திலிருந்து உலகம் விடுபட வேண்டுமென்பதே தமது ஆவல் என்று கூறியிருந்தார். ஆனால் மறுபடியும் உணர்ச்சி மிகுதியுடன் கூட அந்தப்பணியில் அவர் குதித்துவிட்டார். தாமே வலிய வந்து தோள் கொடுத்தார். தமது ஆங்கில நண்பர்களிடம் விடை பெற்றபோது, "இந்தச் சரீரத்தினின்று விடுபடுவது நன்மையாக இருக்கலாம். உடுத்துக் களைந்த ஆடையைப்போல், அதை வீசி எறிந்துவிடலாம். ஆனால் ஒருக்காலும் மனித வர்க்கத்திற்குத் துணைபுரியும் பணியை நான் நிறுத்துவதற்கு இல்லை" என்று அவர் தெரிவித்தார்.

"இந்த வாழ்க்கையிலும், இனிவர இருக்கும் பிறப்புக்களிலும் எல்லா மறு பிறவிகளிலும் உழைத்து, சேவை புரிவதே என் கடமை." இந்த நரகத்திற்கு மீண்டும் மீண்டும் திரும்பியாக வேண்டிய நிர்ப்பந்தம் விவேகானந்தருக்கு உண்டு போலும்! ஓய்வின்றி மீண்டும் மீண்டும் திரும்பி உழைக்கவே தம்மை விதி பணித்திருப்பதாகவும், அதுவே தாம் உயிர் வாழ்ந்திருப்பதற்குக் காரணம் என்று அவர் கருதினார். அந்த வழியில் தான் 'இந்த நரகத்தின்' தீ ஜ்வாலைகளை அணைத்து, அதில் உழன்றுகொண்டிருப்பவர்களை மீட்க முடியும். மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காக அந்தத் தீயில் தாம் எரிய வேண்டும் என்பது விதியின் கட்டளை என்று அவர் நினைத்தார்.

1893 டிசம்பர் 16-ஆம் தேதி இங்கிலாந்திலிருந்து கிளம்பி டோவர், கலே, மாண்ட் செனிஸ் வழியாகப் பிரயாணம் செய்து, ஐரோப்பாவில் தாம் தங்கியிருந்த காலத்திற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இத்தாலி வழியாக ஒரு குறுகிய பயணத்தை மேற்கொண்டார். மிலான் நகரில் காட்சியளிக்கும் 'கடைசி விருந்து' என்ற டாவின்சி சித்திரத்தைக் கண்டு வணங்கினார். டில்லியுடன் ஒப்பு நோக்கக்கூடிய பெருமை ரோமாபுரிக்கு உண்டு என்பது அவரது கற்பனைச் சித்திரம். எனவே அவரை அந்நாகரிகம் விசேஷமாக ஆட்கொண்டது. கத்தோலிக்கச் சடங்குகளுக்கும், ஹிந்து சமய வழிமுறைகளுக்கு மிடையே உள்ள ஒருமைப்பாடு அவரைப் பெரிதும் ஈர்த்தது. அதன் காம்பீர்யத்தை அவர் உணர்ந்தார். உயர்நிலைச் சிறப்புக்கு அது உறைவிடம் என்று சொல்லி ஆதரவு கொடுத்தார். அவருடன் கூட இருந்த ஆங்கிலேயர்களையும் அது பரவசப் படுத்தியது. ஆரம்ப காலக் கிறிஸ்துவர்களின் நினைவுகள் அவரது உள்ளத்தை உருக்கின. உயிர்த் தியாகம் செய்த 'காடகூம்ப்' வீரர்களின் நினைவுகளும் அவரை ஈர்த்தன. கன்னித்தாயையும், சிசுவான கிறிஸ்துவையும் இத்தாலிய மக்கள் மென்மை உணர்வுடன் தொழுதார்கள். அந்த அநுபவத்தை விவேகானந்தரும் பகிர்ந்துகொண்டார்: அவர்கள் அவரது சிந்தனையினின்று அகலவேயில்லை. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் அவர் நிகழ்த்திய உரைகளிலிருந்து, இதற்கு நான் மேற்கோள்களைக் காட்டியிருக்கிறேன். ஸ்வித்ஜர்லாந்தில் தங்கியிருக்கையில், ஒரு மலைக் கோயிலைக் கண்டார். மலர் கொய்து, கன்னி மாதாவின் பாதார விந்தங்களில் ஸ்ரீமதி சேவியர் மூலம் சமர்ப்பித்து அவர் அஞ்சலி செய்தார். "அவள் எனக்கும் மாதா" என்று கூறினார்.

அவரது சீடர்களில் ஒருவர் மடோன்னாவின் சிலை ஒன்றை அவரிடம் கொடுத்து, அவரை அனுக்கிரகிக்குமாறு கேட்டுக்

கொண்டார். ஆனால் இதை தாம் செய்வதற்கில்லையென்று அடக்கத்துடன் மறுத்துவிட்டார். "அந்தச் சிசுவின் பாதங்களை மனத் துயருடன் தொட்டு, அவரது கால்களை நான் என் இதயக் குருதியினால் கழுவ விரும்புவேன், என் கண்ணீரால் அல்ல" என்று கூறினார்.

அவரைப்போல் கிறிஸ்து மகானுக்கு அவ்வளவு நெருக்கமாக வேறு ஒருவர் இருந்திருக்க முடியாது என்று உண்மையுணர்வுடன் கூற முடியும். கடவுளுக்கும் மனிதனுக்கு மிடையே மகத்தான பாலம் அமைத்த இயேசுவே கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கு மிடையே உண்மையான பாலமாக இருந்தார் என்பது அவரது தெளிவான கருத்து. கீழ்த்திசை நாடுகளும் இயேசு மகான் தமக்குச் சொந்தமானவர் என்று கருதுகின்றன. அவர் கீழ்த்திசை உலகில்தான் ஜனித்தவர்.

கீழ்த்திசை உலகையும் மேற்றிசை உலகையும் சேர்த்து வைத்திருக்கும் இந்தத் தெய்விகப் பிணைப்பைப்பற்றி ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கப்பலில் செல்கையில் விவேகானந்தர் நீண்ட நேரம் சிந்தித்தது உண்டு. அவற்றிடையே உள்ள பிணைப்பு இது ஒன்று மட்டுமல்ல. மகத்தான, சுயநலமற்ற சாகித்திய கர்த்தாக்கள், இருளைக் கடக்க யாரும் துணைபுரியாத நிலைமையில், இந்தியாவின் தூய்மையான ஆத்மஞானம் என்ற மிகத் தொன்மையான சாதனையைத் தெளிந்தறிந்து, அதை அடைவதற்கான பாதையைப் பிரகாசப்படுத்தி யிருந்தனர்.

பழைய உலகம், புதிய உலகம் இரண்டிலும் மக்களில் நல்லெண்ணம் உடையவர்கள், சுவாமியின் ஆவேசமான சொற்களைக் கேட்டு, எதிர்பாராத வகையில் பாரமார்த்திக ஞானத்தை அடைந்த சாதனையும் இருந்தது. தாராளபுத்தியுடன் கூடிய நம்பிக்கை சுரந்து வளர்ந்தது. இதயம் சகல வகைகளிலும் செழுமையுற்றது. விவேகானந்தரது சேவைக்கு என்று தம்மை அர்ப்பணித்துக்கொண்ட, தூய்மையான ஒளிவு மறைவில்லாத ஆன்மாக்கள் மூலம் அது வெளிப்போந்தது.

புவியை ஜயித்த மிடுக்குடன் காணப்பட்ட அதே புதிய மேற்றிசை உலகம், பகுத்தறிவு என்ற வாளை, பலாத்காரத்தின் சக்தியை வெளிப்படுத்திய அவ்வுலகம், எவ்வளவு தாராள சிந்தையுடன் நடந்துகொள்ளக்கூடும் என்று அவர் முதலில் கற்பனை செய்திருக்க முடியாது. அன்பினால் அடிமைப்பட்டு, அவருடன் வந்துவிட்ட சீரும் சிறப்பும் உள்ள நண்பர்கள்

இருந்தனர். சேவியர் தம்பதிகள் அவருடன் கூட அதே கப்பலில் வந்தனர். ஐரோப்பாவைக் கைவிட்டு, தமது கடந்த கால வாழ்க்கை அனைத்தையும் துறந்து, அவர்கள் அவரைப் பின்பற்றினர்.

நான்கு வருஷ காலம் தாம் மேற்கொண்ட நீண்ட யாத்திரையின் பலாபலன்களை அவர் மொத்தமாக மதிப்பிட்டார். இந்திய மக்களுக்குத் தாம் எடுத்துச் சென்ற செல்வங்களைப் பற்றி நினைத்தார். மேலை நாடுகளுக்கு அவர் எடுத்துச் சென்ற பாரமார்த்திகச் செல்வங்கள், சிறந்த ஆத்ம அநுபவங்கள்—பெரிய அளவில் நன்மை பயத்தன. ஆனால் இந்தியாவின் மிடிமைக்குப் பரிகாரம் காண்பது அதைவிட ஜீவாதாரமான, அவசரமான பணி அல்லவா என்று நினைத்தார். இந்தியாவின் கோடானுகோடி மக்கள் அழிவுறுதபடி காப்பாற்றுவதற்கு வேண்டிய உதவியை அவசரமாகப் பெறுவதற்காக அவர் மேலை நாடுகளுக்குச் சென்றார்.

தமது மக்களின் உடலையும் ஒழுக்கச் சிறப்பையும் மீண்டும் நல்ல முறையில் உருவாக்குவதற்கான பண உதவி பெறுவதற்காகப் போனார். ஆனால் அவற்றை அவர்களுக்காகப் பெற்று வந்தாரா? மேலைநாடுகளின் அசுர செல்வத்தில் ஒரு பிடிகூட அவருக்குக் கிடைக்கவில்லை. இவ்வகையில் பார்த்தால், யாத்திரை தோல்வியுற்றதாகத்தான் சொல்ல வேண்டும். மீண்டும் ஒரு புதிய அடிப்படையில் தமது வேலையை அவர் மேற்கொள்ள வேண்டும். இந்தியா தனக்குத் தானே மறுவாழ்வு அளித்துக்கொள்ள வேண்டும். அதன் ஆரோக்கியம் உள்ளூற இருந்துதான் வளர்ச்சி காண வேண்டும்.

இது செயற்கரிய மகத்தான பணி. ஆனால் தயக்கமின்றி அதை மேற்கொள்ளும் தருவாயில் அவர் இருந்தார். மரணத்தின் சாயை படிந்திருந்தது. எனினும், மேலை நாடுகளின் விஜயம், அதற்கு முன் இல்லாத ஒரு தகுதியை அவருக்கு அளித்திருந்தது. அதுதான் அதிகாரத்துடன் பேசக்கூடிய ஒரு தனித்தன்மை.

அத்தியாயம் 8

# இந்தியா திரும்புதல்

ஸர்வ மத மகாசபையில் விவேகானந்தர் அடைந்த மகத்தான வெற்றியைப் பற்றிய செய்தி இந்தியாவுக்கு மெது வாகத்தான் கிடைத்தது. ஆனால், அது கிடைத்ததும் தேச மெங்கும் மக்கள் தமது நாட்டுக்கே ஒரு பெருமதிப்பு ஏற்பட்ட தாகக் கருதி மகிழ்ச்சியில் மூழ்கினர். தேசமெங்கும் செய்தி பரவியது. பாராநாகூர் மடத்துச் சந்நியாசிகளுக்குச் செய்தி எட்டுவதற்கு ஆறு மாதமாயிற்று. சிகாகோவில் தமது சகோதரர் வெற்றி முழக்கம் செய்த தகவலே அவர்களுக்குத் தெரியாது. விவேகானந்தரிடமிருந்து வந்த ஒரு கடிதம் இந்தச் செய்தியை அவர்களுக்கு அறிவித்தது. ராமகிருஷ்ணர் அருளிச் செய்த ஒரு பழைய ஜோஸ்யம், அந்த மகிழ்ச்சியிடையே நினைவுக்கு வந்தது.

"உலகை அதன் அஸ்திவாரம் வரை நரேன் உலுக்கிவிடு வார்" என்று ராமகிருஷ்ணர் கூறியிருந்தார்.

ராஜாக்கள், பண்டிதர்கள், பாமர மக்கள் ஆகிய எல்லோரும் சந்தோஷப்பட்டனர். வெற்றிவீரராகத் திரும்பிய தனது மகனை இந்தியா பாராட்டியது. சென்னையிலும், வங்காளத்திலும் உற்சாகம் கரை புரண்டோடியது. 1894 செப்டம்பர் 5-ம் தேதி, சிகாகோ காங்கிரஸ் கூடிய தினத்திலிருந்து ஒரு வருஷத்திற்குப் பிறகு, கல்கத்தா டவுன் ஹாலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. எல்லா வகையினரும், ஹிந்துக்களில் எல்லாப் பிரிவினரும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தனர். விவேகானந்தரது வெற்றியைக் கொண்டாடி, அமெரிக்க மக்களுக்கு நன்றி செலுத்த அவர்கள் கூடியிருந்தனர். ஒரு நீண்ட கடிதத்தில் அங்கே கூடியிருந்த பெரிய மனிதர்களின் கையெழுத்துக்களை வாங்கி அமெரிக்காவுக்கு அனுப்பினர். விவேகானந்தரது பணியைத் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக்கொள்ள சில அரசியல் கட்சிகள் முயன்றன. ஆனால் இந்தச் செய்தி கிடைத்ததும், விவேகானந்தர் அதை வன்மையாகக் கண்டித் தார். பற்றற்ற தன்மையில்லாத எந்த இயக்கத்திலும் தாம் கலந்துகொள்ள முடியாது என்று அவர் அறிவித்துவிட்டார்

''வெற்றி தோல்விக்கு நான் மதிப்புத் தரவில்லை. எனது இயக்கம் தூய்மையானதாக இருக்கவேண்டும். இல்லாவிடில் அது எனக்கு வேண்டவே வேண்டாம்.''

சென்னையிலிருந்த தமது இளம் சீடர்களுடன் விவேகானந்தர் இடையருத தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். அவர்களுக்கு ஊக்கமூட்டும் கடிதங்களை அடிக்கடி எழுதினர். அவர்கள் கடவுளின் பணியைச் செய்யும் வீரர்களாக, உடலில் உயிர் இருக்கும் வரை ஏழைகளாகவும், விசுவாசிகளாகவும் செயலாற்ற வேண்டுமென்று பணித்தார்.

''என் சகோதரர்களே, நாம் ஏழைகள், வெற்று ஆசாமிகள். ஆனல் நம்மைப் போன்றவர்கள்தாம் எப்போழுதும் ஆண்டவனின் கருவிகளாகப் பயன்பட்டு வந்திருக்கிருர்கள்.''

மேலை நாடுகளிலிருந்து எழுதிய கடிதங்களில், அவர்கள் நடத்தவேண்டிய இயக்கத்தின் வேலைத் திட்டங்களை முன் கூட்டியே விவேகானந்தர் விவரித்திருந்தார். ''இந்தியாவில் பாமரமக்களை மேம்பாடு அடையச் செய்வது ஒன்றுதான் கடமை. அவரவர்கள் தங்கள் தனிப்பட்ட சக்திகளை ஒன்று திரட்டி உழைக்க வேண்டும். கீழ்ப்படிதல் என்ற நற்குணத்தைப் பயிலவேண்டும். பிறருக்காக ஒன்றுபட்டு உழைப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.''

தொலை தூரத்திலிருந்து அவர்களது வளர்ச்சியை அவர் கவனித்து வந்தார். சென்னையில் 'பிரம்மவாதின்' என்ற வேதாந்த சஞ்சிகையை வெளியிடுவதற்குப் பணம் அனுப்பினர், தாம் வெளிநாட்டில் இருந்த நிலையில், தமது பணி தொடர்ந்து நடைபெறச் செய்வதற்கு இதன்மூலம் அவர் துணை புரிந்தார். அலுப்பு அவரைப் பெரிதும் வருத்தியது. ஆயினும், இந்தியாவுக்குத் திரும்பும் நாள் நெருங்க நெருங்க அவரது கடிதங்கள் சங்கநாதம் போல் முழங்கின.

''செய்தாக வேண்டிய பெரும் பணிகள் இருக்கின்றன. என் குழந்தைகளே, அஞ்சாதீர், தைரியமாக இருங்கள்! நான் இந்தியாவுக்குத் திரும்பி வருகிறேன். அங்கே செய்ய வேண்டியதை ஒழுங்குபடுத்தி நடத்திவைக்கிறேன். விடாது உழையுங்கள்; மனம் சோராமல் தைரியமாகப் பாடுபடுங்கள். ஆண்டவன் உங்களுக்குத் துணைபுரிவான்.''

சென்னையிலும், கல்கத்தாவிலும் இரண்டு தலைமை ஸ்தலங்களை நிறுவுவது தமது உத்தேசமென அவர் அறிவித்தார்.

பின்னர், பம்பாயிலும் அலகாபாத்திலும் அதேமாதிரி தோற்று விக்க விரும்பினார். ஒரு மத்திய ஸ்தாபனத்தில் ராமகிருஷ்ண ருடன் கூட இருந்து அநுபவப்பட்ட குழாத்தை இருக்கச் செய்வது, மற்றொன்றில் மேலைநாடுகளைச் சேர்ந்த தமது சீடர் களும் உதவியாளரும் ஒரு மிஷனாக அமைந்து, எல்லாரிடமும் அன்பு காட்டி உதவிபுரியச் செய்வது. சேவையின் மூலம் இந்தியாவையும், உலகையும் அவை ஜயிக்கவேண்டுமென்பது அவரது எண்ணம்.

எனவே, தாம் திரும்பி வருகையில் தமது கட்டளையை நிறைவேற்றி வைப்பதற்குத் தயாரான நிலையில் தமது பட்டாளம் இருக்குமென்று அவர் நம்பினார். ஆனால் பாரத சமுதாயம் முழுவதுமே — இந்திய மக்கள் எல்லோருமே — ஒன்றுகத் திரண்டெழுந்து, மேலை நாடுகளை ஜயித்த வெற்றி வீரரது கப்பலின் வருகைக்காகக் காத்திருக்கும் என்று அவர். எதிர் பார்க்கவில்லை. எல்லாப் பெரிய நகரங்களிலும் அவருக்கு வரவேற்பு அளிப்பதற்காக, சமூகத்தின் எல்லாப் பிரிவினரும் சேர்ந்த கமிட்டிகள் ஏற்பாடாகியிருந்தன. வெற்றி வளைவுகள் வழிநெடுக நிறுவப்பெற்றன; தெருக்களையும், வீடுகளையும் அலங்கரித்தார்கள். சந்தோஷம் எல்லையற்றிருந்தது. அவர் தமது ஊர்களுக்கு வரும் வரை பலர் காத்திருக்கவில்லை. நாட்டின் தென்பகுதியில் வந்து குவியலாயினர். அவர் இலங் கையில்தான் கரை இறங்குவார் என்று தெரிந்தது. எனவே, அவரை வரவேற்பவர்களில் முதல்வராக இருக்கவேண்டும் என்ற பேரார்வம் எல்லோருக்கும் இருந்தது.

1897 ஜனவரி 15-ஆம் தேதி அவர் கப்பலிலிருந்து இறங்கிய பொழுது, கொழும்புத் துறைமுகத்தில் திரண்டிருந்த ஜனசமுத் திரம் இடிமுழக்கம் செய்து அவருக்கு வரவேற்பு அளித்தது. அவரது கால்களைத் தொட்டு வணங்க ஜனங்கள் கூட்டமாக முன்னேறினர். ஓர் ஊர்வலம் ஏற்பாடாயிற்று. அதன் முன் கொடிகள் சென்றன. பாசுரங்கள் சேவிக்கப்பட்டன. வழி நெடுக மலர்களைத் தூவினர். பன்னீரையும், கங்கை நீரையும் தெளித்தனர். வீடுகளின் முன் தூபதீபங்களைக் காண்பித்து மரியாதை செய்தனர். பணக்காரர்களும் ஏழைகளுமாக நூற்றுக்கணக்கான பேர் அவருக்குத் தமது காணிக்கைகளைக் கொணர்ந்திருந்தனர்.

மீண்டும் ஒருமுறை விவேகானந்தர் தென்திசையிலிருந்து வடதிசையை நோக்கி, இந்தியாவைக் கடந்து சென்றார்.

முந்தைய தடவை பிச்சைக்காரராக, பாதைகளில் நடந்து சென்றார். இன்று அவர் வெற்றிவீரராகத் திக்விஜயம் செய்து திரும்பியிருக்கிறார். மக்கள் ஆனந்தவெறியில் ஆழ்ந்தவர்களாக அவருடன் சென்றனர். அரசர்கள் அவர்முன் அடிபணிந்தனர். அவர் அமர்ந்திருந்த வண்டியை இழுத்தனர். குண்டு மரியாதைகள் முழங்கின. மிகக் கவர்ச்சிகரமான ஊர்வலங்கள் நடைபெற்றன. யானைகள், ஒட்டகங்கள் வந்தன. வெற்றி கீதங்கள் இசைக்கப் பெற்றன.

வெற்றியைக் கண்டு அவர் பின் வாங்கவில்லை. போர் முனையிலிருந்தும் அவர் பின்னடைபவர் அல்லர். கௌரவிக்கப் படுவது தாம் அல்ல, தாம் எடுத்துக்கொண்ட பணிதான் என்று கூறினார். பேரும் புகழும் இல்லாமல், வீடுவசதி இல்லாமல், உலக உடமைகள் எதுவுமின்றி, கடவுளைத் தவிர வேறு எதையும் தம்முடன் கொண்டு வராத ஒரு சந்நியாசிக்குத் தேசீய வரவேற்பு அளிக்கப்படுவது மிக அசாதாரணமானது என்று தெரிவித்தார்.

செய்யவேண்டிய மகத்தான பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தமது சக்திகளை ஒன்று திரட்டினார். அவர் நோய் வாய்ப்பட்டவர். தமது தேகதிடத்தை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால் அசாதாரணமான வகையில் தமது சக்தியை அவர் விரயம் செய்துகொண்டிருந்தார். வழிநெடுக அவர் மிகச் சிறந்த சொற்பொழிவுகளை நிகழ்த்திய வண்ணம் இருந்தார். அவ்வளவு அழகான, வீர உணர்ச்சி ததும்பிய உரைகளை இந்தியா முன்னர் கேட்டதில்லை. தேசமெங்கும் உற்சாகம் பெருக்கெடுத்தோடியது. இந்தக் கட்டத்தில் நான் இதை நிறுத்திவிட வேண்டும். அவர் தமது பணியின் உச்சநிலைக்கு வந்துவிட்டார். உலகின் மேலைப் பகுதியில் பெரிய பிரசார இயக்கத்தை நடத்தி அநுபவம் நிறைந்தவராக அவர் திரும்பி வந்திருந்தார். மேலை நாடுகளில் அடைந்த நீண்ட கால அநுபவத்தால் இந்தியாவின் மகத்துவம் அவருக்கு இன்னும் அதிகமாகப் புலப்பட்டது. மேலை நாடுகள் சக்தி வாய்ந்தவை; பலவகைத் தோற்றம் உள்ளவை. அதற்கு அவர் மதிப்புக் கொடுத்தார். இரண்டுமே ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருக்கவேண்டிய அவசியம் உள்ளவை என்று கருதினார். அவற்றை ஒன்றாக இணைத்து ஒரு பொதுத் தத்துவத்தை உருவாக்க விரும்பினார். ஒன்றுபடுத்துவதற்கான வழியைச் சமைக்கவேண்டிய கடமை அவருடையதாக இருந்தது.

'புண்ணிய பூமி இந்தியா', 'வேதாந்த தத்துவம்' என்ற விஷயங்களைக் குறித்துக் கொழும்புவில் அவர் நிகழ்த்திய உரைகள் நெஞ்சையள்ளுவனவாக இருந்தன. ஆனால், அனுராதபுரத்தில் ஓர் அத்திமரத்தின் நிழலில், வெறிபிடித்த பௌத்த ஜனக்கூட்டம் ஆட்சேபித்துங்கூட, அவர் 'பிரபஞ்சசமயம்' என்பதைக் கொண்டாடி செய்த பிரசங்கம் பிரசித்தி பெற்றது. கிறிஸ்துவின் போதனைகளுடன் நெருங்கி ஒப்பிடக்கூடிய மகத்தான உரையை, ராமேசுவரத்தில் கூடியிருந்த மக்களுக்கு அவர் நிகழ்த்தினார்.

"ஏழைகள், பிணியாளர், பலவீனர்கள் ஆகியோரிடம் உறையும் சிவனைப் பூசியுங்கள்" என்று அவர் கூறினார். அதன் விளைவாகப் பக்தி சிரத்தையுள்ள ராஜா மகிழ்ந்து தருமத்தை வருஷித்துவிட்டார். ஆனால், சென்னையில்தான் அவரது மகத்தான சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. உணர்ச்சிமிக்க ஆவேசத்துடன், வாரக்கணக்கில் சென்னை அவரை எதிர்பார்த்த வண்ணம் இருந்தது. பதினேழு வெற்றி வளைவுகளைத் தெருக்களில் அமைத்தனர். ஹிந்துஸ்தானத்தின் பலவேறு மொழிகளில் இருபத்து நான்கு வரவேற்பு உரைகளைப் படித்து வழங்கினர். அவரது வருகையின்போது, பொது வாழ்வே நின்றுவிட்டது என்றே சொல்லலாம். ஒன்பது நாட்களும் மிகக் கவர்ச்சியான திருவிழாக் கோலந்தான்.

மக்கள் பேரார்வத்துடன் எதிர்பார்த்ததற்கிணங்க, இந்தியாவுக்கு அவர் தமது செய்தியை விடுத்தார். ராமன், சிவன், கிருஷ்ணன் ஏற்றம் தந்த தேசத்துக்கு மறுவாழ்வு தரும்படி கோரும் சங்கநாதமாக அது அமைந்தது. வீர உணர்வுடன் அழிவில்லாத ஆன்மாவில் நம்பிக்கை வைத்து, அந்த மறுவாழ்வு மலருவதற்குப் போர் செய்யவேண்டுமென அது வற்புறுத்தினார். தமது போர்த்திட்டத்தை விளக்கும் ஒரு சேனாதிபதியாக விவேகானந்தர் காட்சியளித்தார். மக்கள் திரண்டெழ வேண்டுமெனப் பணித்தார்.

"என் இந்தியாவே, எழுவாயாக! உனது ஜீவசக்தி எங்கே? உனது அழிவில்லாத ஆன்மாவில் அது உறைகின்றது!"

"ஒவ்வொரு தனி நபரையும்போல், ஒவ்வொரு தேசத்துக்கும் இந்த வாழ்க்கையில் ஓர் ஆதார சுருதி உண்டு. அதைச் சுற்றித்தான் மற்ற எல்லா அம்சங்களும் வளைய வந்து, ஒரு சௌஜன்ய நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். எந்தத் தேசமாயினும் தனது தேசிய ஜீவ தாதுவை — பல நூற்றாண்டுகளின்

போக்கில் உருவாகி அமைந்த சம்பிரதாய வழியை — புறக் கணித்து விடுமாயின், அந்தச் சமுதாயம் மரித்துவிடும். இங்கிலாந்து போன்ற நாட்டில் அரசியல் அதிகாரம் அதன் ஜீவநாடி; மற்றொன்றில் கலை பரிமளிக்கும்; வாழ்க்கை ஜீவ நாடியாக இருக்கும். இந்தியாவில் கம்பீரமாக விளங்குவது மதத்தைச் சூழ்ந்துள்ள வாழ்க்கை. தேசீய வாழ்வின் இதயகீதம் அது. எனவே, உங்கள் மதத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, அரசியலையோ சமூக விஷயங்களையோ மேற்கொள்வதில் வெற்றி காண்பீர்களாயின், அதன் விளைவாக அடியோடு அற்றுப் போவீர்கள். ஆசார சீர்திருத்தம், அரசியல் ஆகியவை உபதேசமாகப் பெற வேண்டியவைதான். ஆனால், மதத்தி லுள்ள ஜீவசக்தியின் மூலமாகவே அதைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய வழி என்னவென்பதைத் தானே நிர்ணயித்துக்கொள்ளுதல் வேண்டும். அதேமாதிரி தான் தேசத்தின் விஷயத்திலும். நாம் நமது வழி என்னவென் பதைப் பல சகாப்தங்களுக்கு முன் நிர்ணயித்துக்கொண்டு விட்டோம். அழிவற்ற ஆத்மாவிடம் நம்பிக்கை வைத்து உழைப்பதே நமது வழி. அதைக் கைவிடுவோர் எவரேனும் இருக்கிறார்களா என்று அறைகூவி அழைக்கிறேன். உங்கள் சுபாவத்தை எவ்வாறு மாற்றிக்கொள்ள முடியும்?''

''குறை சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள். உங்களுக்கு வாய்த்துள்ள பணி சிறந்ததெனக் கருதுங்கள். உங்கள் கையில் இருக்கின்ற சக்தியைப் பயன்படுத்துங்கள். அது எத்தன்மை யது என்பதை நீங்கள் உணர்ந்து, அதன் பெருமைக்கேற்ப உழைப்பீர்களானால் உலகில் புரட்சியைத் தோற்றுவிக்க முடியும். இந்தியாவை ஆன்மிக கங்கை என்று சொல்ல வேண்டும். ஆங்கிலோ - சாக்ஸன் இனங்கள் லௌகிகத் துறையில் பல வெற்றிகளை அடைந்திருக்கலாம். ஆனால், கங்கை யின் நீரோட்டத்தைத் தேக்கிவிட அவற்றால் இயலவில்லை. அது மேலும் விரைந்து செல்லவே அவை துணை புரிந்துள்ளன. இங்கிலாந்தின் சக்தியானது உலக நாடுகளை ஒன்றுபடுத்தி யுள்ளது. கடல்களைக் கடந்து தேசங்களை இணைக்கும் வழிகளை இங்கிலாந்து தெரிந்து வைத்துள்ளது. இந்தியாவின் ஆன்மாநுபவம் அலையலையாகக் கிளர்ந்து, பரந்து, உலகின் எட்டுத் திக்கையும் அடையக்கூடிய வாய்ப்பு அதன்மூலம் கிடைத்துள்ளது.'' (ரோமாபுரி ஏகாதிபத்தியம் கிறிஸ்தவ மக்களின் வெற்றிக்காக ஏற்பட்டது என்பது உண்மை. இதை விவேகானந்தர் அறிந்திருந்தார். இதையும் அவர் சேர்த்துச் சொல்லியிருக்கக்கூடும்.)

இந்தியாவின் ஆத்மாநுபவம் என்பது என்ன? இந்தச் சொல்லின் பொருள் என்ன? உலகம் காத்து நிற்பதாகச் சொல்லப்படும் இந்தப் புதிய ஆதர்சம் யாது?

"நம்மிடமிருந்து உலகிற்குத் தேவைப்படும் மற்றொரு கருத்து உண்டு. மேல்வகுப்புகளைவிட கீழ்வகுப்புகளுக்கு அது அதிகம் தேவை; படித்தவர்களைவிட படிக்காதவர்களுக்குத் தேவை; பலம் உள்ளோரைவிடப் பலமற்றவர்களுக்குத் தேவை. பிரபஞ்சம் அனைத்துமே பாரமார்த்திக வகையில் ஒன்று பட்டுள்ளது என்ற மகத்தான, சாசுவதமான கருத்துத்தான் அது. அதுதான் முடிவற்ற பிரத்யட்ச நிலைமை. அது உன்னிடமும், எல்லாரிடமும் மனத்தில், ஆன்மாவில் உறைகின்றது. ஆன்மா முடிவற்ற ஒருமைப்பாடு உடையது. அதுதான் எல்லா ஒழுக்கமுறை நியதிகளுக்கும் சாசுவதமான ரட்சையாக இருந்து வருவது. நானும் நீங்களும் சகோதரர்கள் மட்டுமல்ல, நீங்களும் நானும் உண்மையில் ஒரே பொருள். கீழே அமுக்கி வைக்கப் பட்டுள்ள நமது இனங்களுக்கு இடையறாத இந்த உபதேசம் எவ்வாறு தேவையோ, அதேமாதிரி ஐரோப்பாவுக்கும் தேவை. இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளில் அண்மையில் முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் சமூக, ராஜீய அபிலாஷைகள் அனைத்திற்கும் இந்த மகத்தான கோட்பாடுதான், மெய்ம்மறந்த நிலையில், அடிப்படையாக உருவாகி வருகின்றது."

"பழைய வேதாந்த மதத்திற்கு, மகத்தான அத்வைதம் அஸ்திவாரம். இந்தியாவின் தொன்மையான ஆத்மாநுபவம் விசேஷத் தூய்மையுடன் அதில் ஆழ்ந்து கிடக்கிறது.

"நான் மிதமிஞ்சி அத்வைதத்தைப் பிரசாரம் செய்கிறேன். துவைதத்தை மிகக் குறைவாகவே எடுத்துரைக்கிறேன்" என்ற புகாரை ஒரு தடவை கேட்டேன். துவைத மதத்தில் இருக்கும் காம்பீர்யத்தை, அன்பு அலையாகக் கிளர்ந்தெழும் தன்மையை, முடிவில்லாத அருள் நிறைந்த ஆனந்தாநுபவத்தை நான் அறிவேன். அவையெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் கண்ணீர் சிந்துவதற்கு இது தருணமன்று. ஆனந்தக் கண்ணீர் கூட வேண்டாம். நிறைய அழுதாகிவிட்டது. நமது மனத்தை மென்மையாக்கிக் கொள்வதற்கு இது காலமன்று. மனத்தை நெகிழவிட்டுப் பஞ்சுக்குவியல் போன்ற மென்மை நிலைக்கு நாம் தாழ்ந்துவிட்டோம். இன்று நம் நாட்டுக்குத் தேவைப்படுவது இரும்புபோன்ற உறுதியான தசைகள், உருக்காலான நரம்புகள், மகத்தான காரியங்களை நிறை

வேற்றுவது என்ற சங்கல்பம், எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது எதையும் சாதிக்கும் ஒரு துணிவு. கடலின் அடித்தளத்துக்குப் போகும்படி நேரிடினும், நேருக்கு நேர் மரணம் வந்துற்றாலும், தயாரான நிலையில், உறுதியான மனத்துடன் பணியாற்றுவதுதான் நமக்குத் தேவை. அத்வைத லட்சியத்தைத் தெளிந்தறிந்து நம் வசப்படுத்திக்கொண்டால்தான், இந்த நிலைமையைத் தோற்றுவித்து, நிலைநிறுத்தி, புலப்படுத்த முடியும். சுயநம்பிக்கை வளர வேண்டும். முப்பத்து முக்கோடி தேவர்களிடமும், நம்மிடையே அந்நியர்கள் புகுத்தியுள்ள மற்றத் தெய்வங்களிடமும் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் உங்களிடமே உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்ற நிலையில் உங்களுக்குக் கதிமோட்சம் கிடைக்காது. சுய நம்பிக்கையுடன்கூட உறுதியுடன் நின்று உழையுங்கள்.

"நாம் முப்பத்து மூன்று கோடி மக்கள். ஏன் சென்ற ஓராயிரம் ஆண்டுகளாக, ஒரு சில அந்நியர்களைக்கொண்ட கூட்டங்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறோம்? இதற்குக் காரணம் அந்நியர்களிடம் சுயநம்பிக்கை இருந்தது, நம்மிடம் இல்லாமல் போய்விட்டது என்பதுதான். ஓர் ஆங்கிலேயன் நமது ஏழைகளில் ஒருவனைத் துன்புறுத்தினான் அல்லது கொலை செய்தான் என்றால், தேசமெங்கும் ஒரே கூக்கூச்சல் கிளம்புவதைப் பத்திரிகைகளில் படிக்கிறேன், படித்து அழுகிறேன். இதற்கெல்லாம் யார் காரணம் என்பதை அடுத்த கணமே என் மனம் அறிகின்றது. இதற்கு ஆங்கிலேயர்கள் காரணம் அல்ல. நமது அவக்கேடான நிலைக்கு நாமேதாம் பொறுப்பாளிகள். நமது முன்னோர்களில் பரம்பரைப் பெருமையுள்ளவர்கள். சாமான்ய பாமர ஜனங்களைத் தமது காலடியில் மிதித்தார்கள். நிராதரவாகி, இந்தச் சித்திரவதையின்கீழ், தாம் மனிதப் பிறவிகள் என்பதையே அவர்கள் மறந்துவிடும் அளவுக்கு இந்தக் கொடுமைகள் நீடித்தன. பல நூற்றாண்டுகளாகவே பிறரது சௌகரியத்திற்காகக் குற்றேவல் புரியும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு வந்துள்ளனர். தாங்கள் அடிமைகளாகப் பிறந்தவர்கள், கட்டை வெட்டிகளாகவும், தண்ணீர் சேந்துபவர்களாகவும் இருக்கவே ஜனித்தவர்கள் என்று அவர்களே நம்பும்படி செய்தனர்.

"*சீர்திருத்தவாதிகளாவதற்குத்* துடிக்கும் அன்பர்களே! தேசபக்தர்களாவதற்கு விரும்புவோர்களே, உங்கள் உணர்ச்சிகள் பொங்கட்டும். உங்களுக்கு உணர்வு இருக்கின்றதா? தேவர்களிடமிருந்தும், ரிஷிகளிடமிருந்தும் ஜனித்த கோடிக்

கணக்கான மக்கள், விலங்கினங்களை யொத்த நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை உணருகின்றீர்களா ? இன்று கோடிக்கணக்கான பேர் பட்டினியால் அவதியுறுகின்றனர் என்பதை உணருகின்றீர்களா ? கோடிக்கணக்கான பேர் பல சகாப்தங்களாகவே பட்டினி கிடக்கின்றார்கள் என்பது தெரியுமா ? இந்த நாட்டின்மீது கார்முகிலாக அறியாமை கவிந்து கொண்டிருப்பதை உணருகின்றீர்களா ? அதன் விளைவாக உங்கள் மனத்தில் கிளர்ச்சி ஏற்படவில்லையா ? தூக்கம் இல்லாத ஒரு நிலையை அது விளைவிக்கவில்லையா ? அது உங்களை அநேகமாகப் பித்துப் பிடித்தவர்களாக்கவில்லையா? சர்வ நாசத்தின் மிடிமை உங்களைப் பிடித்து உலுக்கவில்லையா ? உங்கள் பெயர், புகழ், மனைவி-மக்கள், சொத்து, உங்கள் சொந்தச் சரீரம் அனைத்தையும் மறந்துவிட்டீர்களா ? தேசபக்தன் ஆவதற்கு இதுதான் முதலாக எடுத்துவைக்கும் அடி.

''பல நூற்றாண்டுகளாக மக்களைத் தாழ்வுபடுத்தும் தத்துவங்களைப் போதித்து வந்திருக்கிறோம். அவர்கள் வெறும் பூஜ்யங்கள் என்று மக்களிடம் கூறிவந்துள்ளோம். தாங்கள் மனிதப் பிறவிகள் அல்லவென்று உலகெங்கும் சாமான்ய மக்களுக்குச் சொல்லி வந்திருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாக மிகவும் கிலி பிடித்துப்போய் ஏறக்குறைய விலங்கின நிலைக்கு அவர்கள் தாழ்ந்துவிட்டார்கள். ஆத்மாவைப்பற்றிக் கேட்பதற்கு அவர்கள் ஒருக்காலும் அனுமதிக்கப்படவில்லை. அவர்களும் ஆத்மாவைப் பற்றிய விஷயங்களைக் கேட்டறியட்டும். மிகக் கீழ்நிலையில் இருப்பவர்களில் கீழ்மகனுக்கும் உள்ளே அந்த ஆத்மா உறைகின்றது. அந்த ஆத்மாவுக்கு மரணம் இல்லை ; ஜனனம் இல்லை ; அதை வாளால் துளைக்க முடியாது, தீயால் எரிக்க முடியாது, காற்றால் உலர்த்த முடியாது, அது அழிவற்றது, ஆதியந்தம் இல்லாதது ; முற்றும் தூய்மையானது, எல்லாவற்றையும்விட மகத்தான சக்தி வாய்ந்தது. எல்லாவிடங்களிலும் ஒரு சேரக் காணப்பெறுவது.''

''ஜாதி, பிறப்பு ஆகியவற்றைப் பாராமல், பலம், பலவீனம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், ஒவ்வோர் ஆணும் பெண்ணும் குழந்தையும் இதைத் தெரிந்துகொள்ளட்டும். பலவான்கள் பின்னாலும், பலமற்றவர்கள் பின்னாலும், உயர்ந்தவர்கள் பின்னாலும், தாழ்ந்தவர்கள் பின்னாலும், எல்லார் பின்னாலும் முடிவில்லாத அந்த ஆன்மா இருந்துவருகிறது. எல்லாரும் மகத்தான நிலைக்கு உயர்ந்து நல்லவர்களாக ஏற்றம் காண முடியும். அதற்கான முடிவில்லாத தகுதி இருக்கிறது என்பதை

அது அறுதியிட்டுக் கூறுகின்றது. ஒவ்வோர் ஆன்மாவுக்கும் இதை நாம் பிரகடனம் செய்வோம்: 'எழுமின், விழுமின் லட்சியத்தை அடையும்வரை நிற்காதீர். எழுமின், விழுமின்! பல வீனத்தால் ஏற்பட்ட மயக்க நிலையிலிருந்து விழித்தெழுங்கள். உண்மையில் யாருமே பலக்குறைவு உள்ளவர் அல்ல. ஆன்மா முடிவில்லாதது, சர்வ சக்தி வாய்ந்தது. எல்லா இடங்களிலும் பரிமளித்திருப்பது, எழுந்திருங்கள்! உங்கள் நிலையை நிர்த்தாரணம் செய்யுங்கள், உங்களிடம் உறைகின்ற கடவுளைப் பிரகடனம் செய்யுங்கள். அவர் இல்லையென்று மறுக்காதீர்கள்.

''மனிதனை மனிதனாக உருவாக்கும் மதந்தான் இன்று நமக்குத் தேவைப்படுவது. மனிதனை மனிதனாக்கும் கல்விதான் தேவை. எல்லாவகைகளிலும் மனிதனை மனிதனாக்கும் தத்துவங்கள்தாம் நமக்கு வேண்டும். உங்கள் தேகதிடத்தை, மதிநுட்பத்தை, ஆன்மசக்தியைப் பலவீனப்படுத்தும் அனைத்தையும் விஷம் என்று உணர்ந்து நிராகரித்துவிடுங்கள். இது ஒன்று தான் உண்மையைக் கண்டறியும் உரைகல். அந்த விஷத்தில் வாழ்வு இருக்க முடியாது. அதில் உண்மை ஒளிர்வதற்கு இடம் இல்லை. உண்மையானது பலத்தைக் கொடுக்கிறது, உண்மை தான் தூய்மை, உண்மை தான் ஞானம். அனைத்தும் உண்மைக்கு வலுவைக் கூட்டுவதாக இருக்க வேண்டும். அது மனத்தில் புத்தொளி பிறக்கச் செய்யவேண்டும். தெம்பூட்டுவதாக இருக்கவேண்டும். பலவீனப்படுத்துகின்ற தெய்வாநுபவங்களை விட்டுவிடுங்கள். பலவான்களாக இருங்கள். மகத்தான உண்மைகள் இவ்வுலகில் மிகமிக எளிதானவை. நீங்கள் வாழ்ந்திருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு எளிமையானவை அந்த மாபெரும் உண்மைகள்.''

''நமது வேதங்கள் போதிக்கும் உண்மைகளை இந்தியாவிலும், வெளியிலும் உபதேசிப்பதற்கு இளைஞர்களைத் திரட்டிப் பயிற்சியளிப்பதற்கான ஸ்தாபனங்களை நிறுவுவது எனது திட்டம். எனக்கு ஆட்கள்தாம் தேவை. மற்றவையெல்லாம் தயக்கமின்றிக் கிடைத்துவிடும். வல்லமை, சுறுசுறுப்பு, ஆஸ்திகம், உண்மையுணர்வு மிகுந்த இளைஞர்கள் தாம் எனக்கு வேண்டும். அப்படி ஒரு நூறு பேர் கிடைக்க முடிந்தால் இந்த உலகில் புரட்சியைத் தோற்றுவித்துவிடலாம். அதைச் செய்து முடிக்க வேண்டுமென்ற மனோதிடம் பிற அனைத்தையும் விட அதிக வலுவுள்ளதாக இருக்கிறது. மனோபீஷ்டம் கடவுளின் ஆக்ஞை. எனவே, மற்ற அனைத்தும் அதன்முன் பணிய வேண்டியதுதான். அது தூய்மையான, சக்தி வாய்ந்த மனோபீஷ்டம். எனவே சர்வ வல்லமை உடையது.''

"பறையரைவிட, பாரம்பரிய வசதி காரணமாக, கல்வி கற்பதற்குப் பிராம்மணனுக்கு அதிக தகுதி இருக்குமாயின், பிராம்மணனது கல்வியின்மீது மேற்கொண்டு பணம் செலவழிக்கவேண்டாம். எல்லாவற்றையும் பறையனதுகல்விக்காகச் செலவழியுங்கள். பலக்குறைவாக உள்ளவர்களுக்குக் கொடுங்கள். எல்லாத் தானங்களும் அவர்களுக்குத்தான் மிகமிகத் தேவை. பிராம்மணன் பிறப்பிலேயே கெட்டிக்காரனாக இருக்கும் பட்சத்தில் உதவியில்லாமல் அவன் கல்வியைப் பெற முடியும். எனக்குத் தெரிந்தவரை இதுதான் நியாயம். இதுதான் பகுத்தறிவு."

"அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு நமது மனத்திலிருந்து பிற கடவுளர் எல்லாரும் மறைந்துவிடட்டும். நமது சொந்த சமுதாயம் ஒன்றுதான் நமக்கு விழிப்புற்றிருக்கும் கடவுள். எங்கும் அவனது கரங்களைக் காண்கிறோம். அவனது பாதங்களைத் தரிசிக்கிறோம். எல்லா இடங்களிலும் அவனுக்கே செவிமடுக்கிறோம். எல்லாவற்றிலும் அவன் உறைகின்றான். மற்றக் கடவுளர் எல்லோரும் உறக்கத்தில் ஆழ்ந்துள்ளனர். நம்மைச் சுற்றிக் காணப்பெறும் விராட்புருஷன் என்ற கடவுளைப் பூஜிக்காமல் எந்த வகைத் தெய்வங்களை நாம் நாடுகிறோம்? முதலில் பூஜிக்க வேண்டியது விராட்புருஷன். மக்களும் மாக்களும் அனைத்துமே நமது கடவுளர்தாம். நாம் துதிக்கவேண்டிய முதல் கடவுள் நம் சொந்த நாட்டு மக்களே!"

இடி முழக்கம் போன்ற இந்தச் சொற்கள் எவ்வளவு பிரமாதமாக எதிரொலித்தன என்று கற்பனை செய்து பாருங்கள். இந்திய ஜனக்கூட்டமும், விவேகானந்தரும் சொன்னதைப் பின்பற்றி வாசகர்களும், "சிவ, சிவா" என்று கூடவே சொல்லத் தோன்றும்.

சூறாவளி ஓய்ந்துவிட்டது. சபவெளி மீது நீரும் தீயுமாக அருவிகளை அது பரப்பியது. ஆன்ம பலத்தை வளர்ப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த வேண்டுகோளாக அமைந்து, மனிதனுள்ளே உறங்கிக்கொண்டிருக்கும் கடவுளையும் அவர் மூலம் புரியக்கூடிய வரம்பற்ற சாதனைகளையும் பரவலாக உணர்த்தியது. ரெம்பிராண்ட் எழுதிய சித்திரத்தில் ஜலாரஸின் கல்லறை மீது இயேசு மகான் கரம் உயர்த்தி நின்று கொண்டிருப்பதைக் காண்கிறோம். அதேமாதிரி, விவேகானந்தர், சக்தி ததும்பக் கரம் உயர்த்தி, இறந்தவர்களை எழுப்பி உயிர்ப்பிக்கும் காட்சியை என்னால் காண முடிகிறது.

ஆனால் இறந்தவர்கள் எழுந்தனரா? அவரது சொற்கள் தோற்றுவித்த உணர்வுக்கு இசைவாக அவரது சங்கநாதத்திற்கு இந்தியா பதில் அளித்ததா? ஆரவாரத்துடன் காட்டிய உற்சாகம் செயல்களாகப் பரிமளித்ததா? அப்பொழுது சீர்த்தெழுந்த ஜ்வாலை புகைந்துவிட்டது போலவே தோன்றியது. தமது சைனியத்துக்கு அவசியமான இளைஞர்கள் இந்தியாவிலிருந்து கிடைக்கவில்லை என்று, இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், விவேகானந்தர் கசப்புடன் கூறினார். விருப்பு வெறுப்புகளுக்கு அடிமையாகி, சின்னஞ்சிறு பணிகளையும் செய்வதற்குத் திராணியற்றவர்களாகி, கனவில் ஆழ்ந்துள்ள மக்களின் பழக்க வழக்கங்களை ஒரு கணத்தில் மாற்றுவது அசாத்தியம். ஆனால் விவேகானந்தர் முரட்டுத்தனமாகக் கொடுத்த சாட்டையடி காரணமாக உறக்கத்திலிருந்த சமுதாயம் புரண்டு கொடுத்தது. தனது கடவுளைப் பற்றிய புதுப் பிரக்ஞையுடன் முன்னேறிச் செல்வதைப்பற்றிய கனவில் இந்தியா ஆழ்ந்திருக்கையில், அவரது வீரமுழக்கம் செவிகளில் ஒலித்தது. இந்தியா அதை என்றென்றைக்கும் மறக்கவில்லை. அன்றே இந்தியக் கும்பகர்ணனின் விழிப்பு ஆரம்பமாகி விட்டது. விவேகானந்தர் காலமான்தை அடுத்த மூன்று ஆண்டுகளில் வங்காளத்தில் கலகம் தலைதூக்கியது. திலகரும் காந்தியும் பெரிய இயக்கங்களை நடத்துவதற்கு அது முன்னோடியாக அமைந்தது. பாமர மக்கள் கட்டுப்பாடாக, கூட்டு நடவடிக்கையில் திட்டவட்டமாக இன்று இந்தியாவில் பங்கு பெறுகிறார்கள் என்றால், இதற்குச் சென்னையிலிருந்து 'எழுமின், விழுமின்' என்று முரசொலி அறைந்து தோற்றுவித்த ஆரம்ப அதிர்ச்சிதான் காரணம்.

'சக்தி செயல்படட்டும்' என்று அவர் விடுத்த செய்தி இருவகைப் பொருள் படைத்ததாக இருந்தது. ஒன்று தேசீயத்திற்கும், மற்றொன்று பிரபஞ்சம் அனைத்திற்குமாகப் பயன் பட்டது. மாபெரும் அத்வைதத் துறவியாகிய விவேகானந்தரை, பிரபஞ்சத்தைப் பற்றிய பொருள்தான் எடுப்பாக ஈர்த்தது என்பதைப் பற்றிச் சந்தேகம் இல்லை. ஆனால் தேசீயத்தின் நரம்புகளுக்கு அவர் முறுக்கேற்றியது தான் இந்தியாவுக்கு மறுபிறப்பை அளித்தது. தேசீயம் அசுரத்தன்மை பெற்று, தீய விளைவுகள் உள்ளதாக வளரக்கூடும் என்பதை நாம் இன்று காண்கிறோம்.

ஆனால் வரலாற்றின் அத்தருணத்தில் இந்த உத்வேகம் தேசீயமாகத்தான் இந்தியாவில் உருப்பெற்றது. எனவே,

ஆரம்பத்திலேயே அபாயம் நிறைந்த ஓர் அம்சத்துடன் அது ஜனித்தது. ஓர் இனத்தில் அல்லது சமுதாயத்தின் பெருமையில், அதன் முட்டாள்தனமான, குரூரமான மிருக உணர்ச்சியுடன் கூடிய கருவம் மேலோங்கி விடுமாயின், அதன் சீரிய பாரமார்த்திகம் காலியாகிவிடலாம் என்று முதலிலேயே பயப்படுவதற்குக் காரணம் இருந்தது. இத்தகைய லட்சியங்கள் எவ்வளவு தொன்மையாக இருந்தபோதிலும் மிக ஆபாசமான தேசீய உணர்வுகளுக்கு அவை இசைவாகப் பயன்படக் கூடிய அபாயம் உண்மையானது என்பதை நாம் நன்கறிவோம். அத்தகைய பல நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறோம். ஆனால், கலகலத்துப் போன நிலைமை மாறி, இந்திய பாமர மக்கள் மனிதர்கள் என்ற வகையில் ஒன்றுபட வேண்டுமாயின், தமது சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்குள் அத்தகைய தேசீய ஒற்றுமையை அவர்கள் சுவைக்கச் செய்வது தவிர்க்க முடியாதது.

ஒன்றின் மூலந்தான் மற்றொன்றை அடைய முடியும். அதே சமயத்தில், தேசீயத்தைவிட பிரபஞ்ச மார்க்கந்தான் எனக்குப் பிடித்தமாக இருக்கும். அது அதிகச் சிரமம் நிறைந்தது, நேரடியானது தேசீய உணர்வு பெற்றவர்கள் பலர் அதைத் தாண்டிச் செல்வது அரிதாகிவிடும் நிலையை நான் நன்கு அறிவேன்.. லட்சியத்தை நோக்கிச் செல்லும் மார்க்கத்தில் தமது நம்பிக்கையையும், அன்பையும் அவர்கள் விரயம் செய்துவிடுகிறார்கள். ஆனால் அப்படி நடக்க வேண்டுமென்பது விவேகானந்தரின் நோக்கமல்ல.

மனித சமூகத்துக்கு இந்தியா சேவை புரியவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்தியாவின் விழிப்புக்குத் துணை புரிய வேண்டுமென்ற ஒரே சிந்தனைதான், காந்தியைப் போல் விவேகானந்தருக்கும் இருந்தது. ஆனால் காந்தியைவிட விவேகானந்தர் சற்று அதிகமான முன்ஜாக்கிரதை உள்ளவர். அரசியல் துறை நடவடிக்கையில் ஆன்மிக உணர்வு எடுப்பாக இருக்க வேண்டுமென்று காந்தி மூர்த்தண்யமாகப் பாடுபட்டார். அது சரிப்படாது என்று விவேகானந்தர் சொல்லியிருப்பார்.

அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதங்கள் ஒவ்வொன்றிலும் அவர் சுட்டிக் காட்டியிருப்பதுபோல், தமக்கும் அரசியல் வாழ்வுக்குமிடையே அவர் ஓர் உறைவாளைக் குறுக்கே வைத்திருந்தார். 'அபத்தமான அரசியல் விவகாரத்துடன் எனக்கு எவ்வித சம்பந்தமும் இராது' என்று அவர் கூறிவிட்டார். ஆனால்

தமது சுபாவத்தையும் தமது உணர்வையும் எப்போதும் மதித்துத்தான் விவேகானந்தரால் செயலாற்ற முடிந்தது.

இந்தியாவை ஜயித்த ஆங்கிலேயனின் முட்டாள்தனமான அவமதிப்புக்களை, நிர்ப்பந்தங்களைச் சகிக்க முடியாமல், பெருமை மிகுந்த இந்தியர்கள் பலாத்காரச் சக்திகளின் மூலம் பதிலடி கொடுத்தனர். தேசீயத்தை விவேகானந்தரது திட நம்பிக்கையானது கண்டனம் செய்தது. ஆனால் அதன் விளைவாகக் கிளர்ந்தெழுந்த அபாயகரமான உணர்ச்சிப் பெருக்கில், இந்தியர்களின் செயல்கள் தம்மையும் அறியாமல், அவரை வலித்துவிட்டிருக்கும்.

1898-ஆம் ஆண்டு அக்டோபரில் ஒரு பெரிய நெருக்கடி வந்துற்றது. அதுவரை அவருடைய மனத்துக்குள் இந்தப் போராட்டம் நீடித்து இருந்து வரவே செய்தது. காஷ்மீரில் தனிமையில் ஒரு காளிகோயிலில், வாழ்க்கையில் இந்தியாவின் எண்ணற்ற துயரங்களும், அன்னையின் ஆலயங்கள் அழிக்கப் பட்டிருந்த கொடுமையுமாகச் சேர்ந்து அவரை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தின. அந்த ஆலயத்திலிருந்து வெளி வருகையில் அவர் மாறுபட்ட மனிதராகக் காணப்பெற்றார். சகோதரி நிவேதிதாவிடம் அவர் கூறினார்: "எனது தேசபக்தி அனைத்தும் போய்விட்டது. நான் தவறாக நடந்துகொண்டு விட்டேன். 'நமது சமயத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் எனது ஆலயங்களில் பிரவேசித்து, எனது திருவுருவங்களை அவமதித்தார்கள் என்றால், அதைப் பொருட்படுத்துவானேன்? உனக்கு அது எம்மாத்திரம்? நீ என்னைப் பாதுகாக்கிறாயா அல்லது நான் உன்னைப் பாதுகாக்கிறேனா?' என்று காளிமாதா என்னிடம் கூறினாள்: எனவே தேசபக்தி என்னிடமிருந்து அகன்றுவிட்டது. நான் ஒரு சின்னஞ் சிறுகுழந்தைதான்."

ஆனால், விவேகானந்தரின் சென்னை உபதேசங்கள் வெள்ளப்பெருக்காக, பேரார்வத்துடன் அருவிகளையொத்த நிலையில் எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தன. எனவே மனிதனது அகம்பாவத்தை அடக்கும் ரீதியில், காளிமாதா கூறிய பேருண்மை படைத்த சொற்கள்; மக்கள் காதில் விழவில்லை. வெள்ளப்பெருக்கின் சீற்றத்தில் அடித்துச் செல்லப்படும் ஆனந்த உணர்வில் மக்கள் மிதந்து சென்றனர்.

அத்தியாயம் 9

# ராமகிருஷ்ண சங்கம்

உண்மையில் மக்களின் தலைவனாக விளங்குபவன் சின்னஞ்சிறிய விவரங்களையும் கவனிக்கத் தவறுவதில்லை. ஒரு லட்சியத்தை அடையக்கூடிய வகையில் மக்களைத் தலைமை வகித்து அழைத்துச் செல்ல வேண்டுமாயின், அவர்களது ஆர்வத்தை ஊக்கிவிட்டால் மட்டும் போதாது என்பதை விவேகானந்தர் அறிந்திருந்தார். ஓர் ஆன்மிக சைனியத்தில் அவர்களைச் சேர்த்தாக வேண்டும். புதிய மனிதன் இப்படித் தான் இருக்க வேண்டுமென்று மக்கள் கண்டறியக் கூடியபடி ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் முன் காண்பிக்க வேண்டும். அவர்கள் அந்நிலையில் காட்சியளிப்பது ஒன்றே அவருடைய ஆசிரமம் சரிவர நடைப்பெறும் என்பதற்குப் போதிய நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கும்.

சென்னையிலும், கல்கத்தாவிலும் அடைந்த வெற்றிகளைத் தொடர்ந்து ஆலம்பஜாரில் நிறுவப் பெற்றிருந்த தமது மடத்தைப்பற்றிய விஷயங்களில் அவர் கவனம் செலுத்தலானார்.

தமது சொந்த சிந்தனைக்கேற்ப, தமது சகோதரத் துறவிகளை (குருபாய்களை) உயர்த்துவது அவருக்குச் சிறிது சிரமமாக இருந்தது. ஒரு பெரிய பறவைபோல் அவர் உலகைச் சிறகடித்துக் கடந்தவர். மிக விசாலமான காட்சிகளைத் தமது பார்வையால் அளந்தவர். ஆனால் அவர்களோ கட்டுப்பெட்டிகளாக மடத்திலேயே இருந்துகொண்டு தமது சமயக் கடமைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். தமது மூத்த சகோதரனை விவேகானந்தரை அவர்கள் பெரிதும் நேசித்தனர். அதனால் அவரைச் சரிவரப் புரிந்துகொள்ள அவர்களால் முடியவில்லை. அவரது மனத்தைப் பெரிதும் ஆட்கொண்ட சமூக-தேசீய சேவை என்ற புதிய லட்சியம் அவர்களுக்குப் புரியாத விஷயமாக இருந்தது. தமது வைதிகப் பொறுப்புக்களை, தமது தனித்தன்மை படைத்த சமய உணர்வுகளை, அமைதியாகத் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் சுதந்தர நிலையைத் தியாகம் செய்வது

அவர்களுக்கு வேதனையை அளித்தது. தமது தீவிரமான அகம்பாவ நிலைக்குப் புனிதமான காரணங்களை அவர்கள் உண்மையுணர்வுடன் தெரிவித்தனர். ராமகிருஷ்ணரது உதாரணத்தை எடுத்துக் காட்டினர். உலக விஷயங்களில் பற்றற்ற நிலையில் அவர் இருந்ததைச் சுட்டிக்காட்டிப் பேசினர். ஆனால், ராமகிருஷ்ணரது மிக ஆழ்ந்த சிந்தனைகளை உண்மையாக விளக்கக்கூடிய உரிமை தமக்குத்தான் உண்டு என்று விவேகானந்தர் கூறினர். சென்னையிலும் கல்கத்தாவிலும் தாம் ஆற்றிய தலைசிறந்த உபதேசங்களில் அவர் இடையருது ராமகிருஷ்ணரின் பெயரால்தான் பேசினர். "என் குருநாதன், எனது லட்சிய புருஷன், நான் போற்றிப் புகழும் வீரன், இந்த வாழ்க்கையில் என் கடவுள்" என்று அவரைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். பரமஹம்சரது குரலே தம் மூலம் ஒலிப்பதாகச் சொன்னர். தாமே வலுவில் எந்த நடவடிக்கையிலும் இருக்கவில்லை, எந்தப் புதிய சிந்தனையிலும் ஆழ்ந்து போகவில்லை, தமது குருநாதனின் கட்டளைகளை விசுவாசத்துடன் நிறைவேற்றி வைக்கும் பணியாளனகவே தாம் இருந்து வருவதாகக் கூறினர்.

"*சிந்தனை, சொல், செயல் வகைகளில் நான் எதையாவது சாதித்திருக்கிறேன் என்றால், இவ்வுலகில் எவருக்கேனும் உபகாரமாக இருக்கக்கூடிய ஒரு வார்த்தை எப்போதேனும் என்னல் சொல்லப்பட்டிருக்குமாயின், அது என்னிடமிருந்து வந்தது அல்ல. எல்லாம் அவருடைய அருள். பலக்குறைவுள்ள அனைத்தும் என்னல் விளைந்தவை. உயிரூட்டி, வலிமை தந்து, தூய்மையாக, புனிதமாகக் காணப்படும் அனைத்துமே அவரால் ஊக்குவிக்கப்பட்டவை. அவரது சொற்கள், அவர் தாம் பேசுகிறார் என்று கருத வேண்டும்.*"

தாம் விட்டுச் சென்ற சீடர்களைப் பற்றிய சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த ராமகிருஷ்ணர் ஒருவர், தமது மகத்தான சீடரின் மூலம் உலகம் அனைத்தையும் ஆட்கொண்ட ராமகிருஷ்ணர் வேறு ஒருவர். இவ்விரண்டு ராமகிருஷ்ணர்களுக்குமிடையே மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஆனல் வெற்றி கைகூடுவதைப்பற்றி எப்போதுமே சந்தேகம் இருந்ததில்லை. அது முன்கூட்டியே நிர்ணயமான விஷயம். இளம் வெற்றி வீரராகிய விவேகானந்தர் அடைந்திருந்த உயர்நிலைதான் இதற்குக் காரணம். மேலும் அவரது மேதையின் மென்மை, இந்தியா அளித்த ஆதரவின் விளைவாகக் கிடைத்த அந்தஸ்து, உயர்வு ஆகியவை மட்டுமின்றி, அவரது சகோதரர்களும் ராமகிருஷ்ண

ரும் காட்டிய அன்பும் இந்த வெற்றியை உறுதி செய்தன. அவர்தாம் குருநாதரால் வரிக்கப்பட்ட வாரிசாக நியமனம் பெற்றவர்.

எனவே, சோதரத் துறவிகள் விவேகானந்தர் கூறிய அனைத்தையும் இதயபூர்வமாக ஒப்புக்கொள்ளாவிடினும், விவேகானந்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தனர். ஐரோப்பியச் சந்நியாசிகளைத் தமது துறவிக் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி தம் சகோதரர்களை அவர் நிர்ப்பந்தித்தார். சேவை புரிந்து சமுதாயத்துக்கு உதவி அளிக்கும் பணியை மேற்கொள்ளச் செய்தார். தம்மைப் பற்றியும், தமது சொந்த மோட்சத்தைப்பற்றியும் மட்டும் இனி சிந்தித்துக் கொண்டிருக்கலாகாது என்று தடை செய்தார்.

ஒரு புதிய சந்நியாசிகளின் திருக்கூட்டத்தைத் தோற்றுவிக்கவே தாம் வந்திருப்பதாகக் கூறினர். பிறரைக் காப்பாற்றுவதற்காக நரகத்துக்கும் செல்வதற்குத் தயாரான மனநிலை உள்ளவர்களாக அவர்கள் இருக்க வேண்டும் என்றார். தனிமையில் பயனற்ற பிரார்த்தனைகளைச் செய்துவந்தது போதும் என்று கூறினர். உயிர் வாழும் கடவுளை, இனி வரப்போகும் கடவுளை, எல்லா ஆன்மாக்களிலும் உறையும் விராடபுருஷனைப் பூசிக்க வேண்டும் என்றார். ஒவ்வொரு மனிதனது இதயத்திலும் உறங்கிக்கொண் டிருக்கும் சிங்கமாகிய பரப்பிரம்மம், தமது முழக்கத்தைக் கேட்டு, விழித்தெழும்படி செய்ய வேண்டும் என்றார்.

இளம் குருநாதரின் கட்டளைகளில் தோரணையும், அவசர உணர்வும் எடுப்பாகக் காணப்பெற்றன. அவரது துறவிச் சோதரர்களில் பலர் அவரைவிட மூத்தவர்கள். அவர் சொல்லுவதையெல்லாம் நம்பாவிடினும் கீழ்ப்படிந்தனர். பன்னிரண்டு வருஷ காலத்தில் ஒரு நாள் கூட மடத்தை விட்டு வெளியே சென்றறியாத ஒரு துறவி, பணியாற்றுவதற்காக முதலில் வெளியே சென்று வழிகாட்டினர். அவர்தாம் ராமகிருஷ்ணனந்தா. அவர் சென்னைக்குச் சென்று தென்னிந்தியாவில் வேதாந்த தத்துவங்களைப் பிரசாரம் செய்வதற்கான ஒரு கேந்திரத்தை நிறுவினர். சேவா உணர்ச்சி மனத்தில் மிக ஆழமாக ஊடுருவி நின்ற அகண்டானந்தா (கங்காதரர்) அவரைப் பின்தொடர்ந்தார். பஞ்சம் கடுமையாக வாட்டிக்கொண்டிருந்த மூர்ஷிதாபாத்துக்குச் சென்று, மக்களின் கஷ்ட நிவாரணத்தில் அவர் ஈடுபட்டார்.

மகத்தான இந்திய சமூகத்துக்குச் சேவை புரியும் பல்வேறு வழிகள் முதலில் ஏனோதானோ என்று வகுத்துக்கொள்ளப் பட்டன.

ஆனால் சாசுவதமாக அமலாகக் கூடிய வகையில் ஓர் ஒழுக்கும் திட்டமும் ஏற்பட்டாக வேண்டுமென்ற கவலை விவேகானந்தருக்கு இருந்தது. ஒரு நாளைக்கூட வீணடிக்கலாகாது. இந்தியாவுக்குத் திரும்பியபின் முதல் சில மாதங்களை மக்கள் மனத்தைக் கிளர்ந்தெழச் செய்வதில் அவர் தமது சக்தி அனைத்தையும் அசாதாரணமான வகையில் விரயம் செய்துவிட்டார். எனவே, கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அவ்வாண்டு வசந்த காலத்தில் இருமுறை ஓய்வு பெறுவதற்காக மலைகளுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முதல் தடவை டார்ஜிலிங் சென்று பல வாரங்களைக் கழித்தார். மே 6-ஆம் தேதி முதல் ஜூலை முடிய, இரண்டாவது தடவையாக அல்மோரா வில் அவர் இரண்டரை மாத காலம் தாமதித்தார்.

இவ்விரண்டு மலைவாசங்களின் விளைவாக, ராமகிருஷ்ண மிஷன் என்ற புதிய துறவித் திருக்கூட்டத்தைத் தோற்றுவிப் பதற்கு வேண்டிய சக்தி அவருக்குக் கிடைத்தது. அந்த ஸ்தாபனம் இன்றுவரை அவரது பணிகளை நன்றாக, ஜீவ களையுடன்கூட நடத்தி வருகின்றது.

1897 மே முதல் தேதியன்று ராமகிருஷ்ணரது சீடர்கள் எல்லோரும், துறவிகளும், துறவிகளல்லாதவரும், கல்கத்தாவில் பலராம் என்ற ஒரு சீடரின் வீட்டுக்கு அழைக்கப்பட்டனர். குருநாதன் என்ற முறையில் விவேகானந்தர் உரை நிகழ்த்தினார். கண்டிப்பாகச் செயலாற்றக்கூடிய ஸ்தாபனம் இல்லாமல் நிலைத்திருக்கக் கூடிய எதையும் செய்ய முடியாது என்று அவர் கூறினார்.

ஒவ்வொருவருக்கும் சம உரிமையும், மெஜாரிட்டி வோட் டின் மூலம் முடிவு காணும் விதியும் உள்ள குடியரசு முறையைப் பின்பற்றி, அத்தகைய ஸ்தாபனத்தைத் தொடங்கு வது இந்தியா போன்ற நாட்டில் விவேகமுள்ள ஏற்பாடு அல்ல வென்று அவர் கருதினார். தமது சுயநலங்களையும் குறிப்பிட்ட விருப்பு-வெறுப்புக்களையும் விட, பொது நன்மையே சிறந்தது என்று கருதி உழைப்பதற்கான தகுதியை அங்கத்தினர்கள் அடையும்போதுதான் அந்த நடைமுறையைக் கையாளலாம். இப்போதைக்குத் தேவைப்படுவது ஒரு சர்வாதிகாரி. தவிர

எல்லாருக்கும் பொதுப்படையான குருநாதராகிய ராமகிருஷ்ணரின் சேவகன் என்ற முறையில்தான் தாமே செயலாற்றுவதாக அவர் தெரிவித்தார்.

அவர் கூறியபடி பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

(1) ராமகிருஷ்ண மிஷன் என்ற பெயரில் ஒரு சங்கத்தை நிறுவ வேண்டும்.

(2) மனிதவர்க்கத்தின் நன்மைக்காக ராமகிருஷ்ணர் உபதேசித்துத் தமது சொந்த வாழ்க்கையில் அனுஷ்டித்து வந்த உண்மைகளைப் பிரசாரம் செய்து, தமது மன-மெய்-மொழிகளின் வளர்ச்சியில் அவற்றை அனுஷ்டிப்பதற்குப் பிறருக்குத் துணைபுரிவது அதன் நோக்கம்.

(3) பல்வேறு மதங்களும் அழிவற்ற சாசுவதமான ஒரே மதத்தின் பல்வேறு தோற்றங்கள்தாம் என்பதைத் தெளிந்தறிந்து, வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுவோரிடையே 'தோழமையை ஏற்படுத்துவதற்காக', ராமகிருஷ்ணர் தொடங்கி வைத்த இந்த இயக்கத்தின் நடவடிக்கைகளைத் தக்க முறையில் நிர்வகித்து வழிகாட்டுவது அதன் கடமையாக இருக்கும்.

(4) அதன் செயல்முறைகள் பின்வருமாறு:

(i) 'பாமர மக்களின் இகபர க்ஷேமத்துக்கு உகப்பான ஞானத்தையும், விஞ்ஞானங்களையும் போதிப்பதற்குத் தகுதியுள்ள மக்களைப் பயிற்சியளித்துத் தயாரிப்பது.'

(ii) 'கலைகளையும், தொழில்களையும் ஊக்குவித்து வளர்ப்பது.'

(iii) 'ராமகிருஷ்ணரது வாழ்க்கையில் தெளிவுபெற்ற பிரகாரம் வேதாந்தக் கருத்துக்களையும், மக்களிடையே அறிமுகப்படுத்திப் பரப்புவது.'

(5) இரண்டு கிளைகளாக ஸ்தாபனம் செயலாற்றும்:

முதல் கிளை இந்தியாவில் பணியாற்றும் ஸ்தாபனம். மடங்களும் ஆசிரமங்களும் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் நிறுவப் பெறவேண்டும். சந்நியாசிகளையும், பிறரது போதனைக்காகத் தம் வாழ்வை அர்ப்பணம் செய்துகொள்வதற்கு இணங்கும் கிருகஸ்தர்களையும், கல்வி-கேள்விகளில் பக்குவப்படுத்துவதற்காக இவை பாடுபடும்.

இரண்டாவது கிளை, அயல்நாடுகளில் பணியாற்றும் கடமையுடையது. ராமகிருஷ்ண மடத்துத் துறவிகளை இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடுகளுக்கு அனுப்பிப் பாரமார்த்திக கேந்திரங்களை நிறுவுவது. ''அந்நியக் கேந்திரங்களுக்கும், இந்திய கேந்திரங்களுக்குமிடையே நெருங்கிய உறவு முறையை அமைத்துக் கொடுத்து, அவை பரஸ்பரம் அனுதாபத்துடன் உதவிக்கொள்ளும் உணர்வைத் தோற்றுவிப்பது.''

(6) ''மிஷனின் நோக்கங்களும் லட்சியங்களும் ஆன்மிகத் தன்மை வாய்ந்தவை, மனிதாபிமானத் தன்மை படைத்தவை. எனவே, மிஷனுக்கும், அரசியலுக்கும் எவ்விதத் தொடர்பும் இராது.''

விவேகானந்தர் ஸ்தாபித்த மிஷன் சமுதாய நலனுக்காக, மனிதாபிமானத்துடன், மனித வர்க்கம் அனைத்துமே உய்யக் கூடிய வகையில் தருமப் பிரசாரம் செய்யும் தன்மையுள்ளது என்பது தெளிவு. தெய்வ நம்பிக்கையானது பகுத்தறிவு வாதத்துக்கு எதிரிடையானது என்று சொல்லி, பெரும்பாலான மதங்கள் நவீன வாழ்வின் அவசியத்தையும் நிர்ப்பந்தங்களையும் ஆட்சேபிக்கின்றன. ஆனால் அதற்கு நேர்மாறாக விஞ்ஞானத்துடன்கூட முன்னணியில் இடம் பிடித்துக்கொண்டு இந்த மிஷன் பாடுபடும்; ஆன்மிகத் துறையிலும், பொருள் வளர்ச்சித் துறையிலும் முற்போக்கினருடன் ஒத்துழைக்கும்; கலைகளையும் தொழில்களையும் ஊக்குவிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் உண்மையான நோக்கம் பாமர மக்களின் நன்மைதான். பல்வேறு மதத்தினரிடையே சகோதர பாவத்தை ஏற்படுத்துவதுதான் தெய்வ நம்பிக்கையின் மூலாதாரமான அம்சம் என்பது அதன் நியதி. பல்வேறு மதங்கள் சௌஜன்யமாக வாழ்ந்து வருவதுதான் சனாதன தர்மம் என்பது. எல்லாமே ராமகிருஷ்ணரது அருள்நோக்கின்கீழ் இயங்குவதாக இருக்க வேண்டும். அவரது விசாலமான இதயம் தனது அன்பினால் மனித வர்க்கம் அனைத்தையுமே அணைத்துக்கொண்டது.

'புனிதமான அன்னப்பறவை பறந்தோடி விட்டது. இறக்கைகள் முதலில் சிறகடித்தபோதே விரிவு கண்டு உலகம் முழுதையுமே அது தன்னுள் அடக்கிக்கொண்டது. இயக்கத்தைத் தோற்றுவித்தவருடைய மெய்யுணர்வுடன்கூட, முழு வேகப் பாய்ச்சலாகிய இந்தக் கனவை வாசகர்கள் புரிந்து கொள்ள விரும்பும் பட்சத்தில், விவேகானந்தரும் சரத்சந்திர சக்கரவர்த்தியும் கற்பனையில் கண்ட பேட்டி விசேஷமாகப் பயன்படும்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்த விஷயம் தலைவரைத் தேர்ந்தெடுப்பது. கல்கத்தா கேந்திரத்தின் தலைவராகப் பிரம்மானந்தரையும், உப-தலைவராக யோகானந்தரையும், பொதுத் தலைவர் என்ற வகையில் விவேகானந்தர் நியமித்தார். அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பலராமின் இல்லத்தில் கூட வேண்டும். பொதுநலச் சேவை, வேதாந்தப் பிரசாரம் என்ற இருவகைப் பணிகளையும் மேலும் தாமதமின்றி விவேகானந்தர் துவக்கி வைத்தார்.

துறவிகள் அவருக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனால் அவரைப் பின்பற்றுவது அவர்களுக்குச் சிரமமாக இருந்தது. சில சமயம் மிக ருசிகரமான சர்ச்சைகள் அவர்களிடையே நிகழ்வது உண்டு. ஆனால் எப்போதுமே இவை சோதரப் பான்மையில் நடைபெறும். விவேகானந்தரது ஆர்வமும் மனப்பான்மையும் எப்போதுமே ஒரு கட்டுத்திட்டத்தில் இருந்தன என்று சொல்வதற்கில்லை. உடலை உள்ளூற அரித்துக்கொண்டிருந்த வியாதியின் காரணமாக இவை இரண்டுமே பரபரப்பான நிலையில்தான் இருந்துவந்தன. அவரை எதிர்த்துப் பேசியவர்களைச் சில சமயம் அவர் பிடுங்கி எடுத்துவிடுவார். ஆனால் எல்லோருமே நல்லெண்ணத்துடன்கூட, அவர் சொல்வதை ஏற்றுக்கொள்வர். இவையெல்லாம், கட்டளைப்படி நிகழ்கின்ற நாடகந்தானே? இருதரப்பினரிடையேயும் பரஸ்பர பக்தி சிரத்தை உறுதியாக அமைந்திருந்தன.

தியானத்தில் ஆழ்ந்த அவர் நடத்திவந்த வாழ்க்கையின் ஆர்வம் சில சமயம் அவர்களைப் பற்றிக்கொண்டு விடும். பரமானந்த சொரூபியாகிய ராமகிருஷ்ணர் அவர்களுடைய மனத்தில் குடிகொண்டு விடுவார். ராமகிருஷ்ண மிஷனை ஆலயவழிபாட்டு முறைக்கிசைவாக மாற்றி, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்து செயலாற்றும் நிலைக்கு ஏன் திருப்பிவிடலாகாது என்று அவர்கள் நினைத்தது உண்டு. ஆனால் இந்தக் கனவையெல்லாம் விவேகானந்தர் தமது முரட்டுத்தனமான வழியால் தகர்ந்தெறிந்துவிட்டார்.

"உங்கள் வரம்புகளுக்குள் ராமகிருஷ்ணரைச் சிறைப்படுத்தித் தாளிட விரும்புகிறீர்களா? ராமகிருஷ்ணரை அவரது சீடர்கள் எந்த அளவு புரிந்துகொண்டிருக்கிறார்களோ, அதைவிட அவர் மிக மிகப் பெருமை படைத்தவர். அவர் முடிவற்ற ஆன்மிகக் கருத்துக்களின் உருவமாக அமைந்தவர். அந்தக் கருத்துக்கள் எண்ணற்ற வழிகளில் வளர்ச்சி காணும் தகுதி

படைத்தவை. அவரது அருட்பார்வை சிறிது நோக்கினுல் போதும், ஒரு க்ஷணத்தில் ஒரு லட்சம் விவேகானந்தர்களை அதனுல் சிருஷ்டித்துவிட முடியும். அவரது கருத்துக்களை நான் உலகெங்கும் பரப்புவேன்'' என்ருர்.

மனிதன் என்ற வகையில் ராமகிருஷ்ணர் விவேகானந்தருக்கு மிகவும் பிடித்தமானவராக இருந்தார். ஆனுல் அவரை விட அவரது உபதேசங்கள் இன்னும் மதிப்பு வாய்ந்தவை என்று அவர் கருதினுர். ஒரு புதிய கடவுளுக்கு ஆலயம் ஒன்றை எழுப்பும் உத்தேசம் தமக்கு இல்லையென்ருர். ஆனுல் மனித சமூகத்தின் மீது அவரது சிந்தனையாகிய அருளை மழையாகச் சொரிய வேண்டுமென்று அவர் விரும்பினுர். எல்லாவற்றுக்கும் மேலாகச் செயலில் அவரது பெருமையைக் காண்பிக்க வேண்டும் என்ருர். ''மதமானது உண்மையான சமயமாக இருக்க வேண்டுமாயின், அது நடைமுறைக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.'' உயிர்வாழும் மக்களிடம், முக்கியமாக ஏழைகளிடம், சிவனது பிம்பத்தைக் காண்பதற்கான திருஷ்டியை எந்த மதம் தருகிறதோ, அதுவே மதங்களில் மிகச் சிறந்தது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொருவரும் பசியால் வாடும் நாராயணனை ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது நொண்டியாகவுள்ள நாராயணனுக்குத் துணைபுரிய வேண்டும்; பார்வையற்ற நாராயணனுக்கு உதவியளிக்க வேண்டும். அரை டஜன் அல்லது ஒரு டஜன் நாராயணர்களைத் தமது சக்திக்கேற்பத் தமது வீடுகளில் ஏற்றுக்கொண்டு, அன்னமிட்டு, ஆலயத்தில் சிவனையோ, விஷ்ணுவையோ பூசிப்பது போல், அவர்களைப் பூசிக்க வேண்டும்.

அஞ்ஞானத்தினின்று எழும் வெறும் உணர்ச்சிப் பெருக்கு எவ்வகையிலும் தமது பணியில் புகுந்துவிடக்கூடாது என்பதை உறுதி செய்வதில், அவர் விசேஷக் கவலை கொண்டார். எல்லாவகை உணர்ச்சிப் பெருக்கையும் அவர் வெறுத்தார். வங்காளத்தில் உணர்ச்சி வசப்பட்டுச் செயலாற்றும் மனப்பான்மை மிகுதியாகக் காணப்பட்டது. அது ஆண்மையை அழிப்பதாக இருந்தது. இவ்விஷயத்தில் விவேகானந்தர் மிகப் பிடிவாதமாக இருந்தார். பின்வரும் காட்சி இதற்குப் பரிதாபகரமான ஓர் அத்தாட்சி. தமது பணியைத் தொடங்குவதற்கு முன் தம்மையும் பிறரையும் அவர் பெரிதும் வருத்திக்கொள்ள நேரிட்டது.

ராமகிருஷ்ணரின் அங்கீகாரத்தைப் பெற்றிராத ஸ்தாபன அமைப்புகளின் கருத்துக்கள், செய்கை, சேவை ஆகியவற்றை

ஆனந்த பரவசமான அவரது போதனைக்குள் விவேகானந்தர் புகுத்தி விடுவதாக, ஒரு நாள் சகோதரத் துறவிகளில் ஒருவர் அவரைக் கடிந்துகொண்டார். விவேகானந்தர் வேடிக்கையும் நிந்தனையும் கலந்த பாணியில் முதலில் சற்றுக் கடுமையாகவே பதில் கொடுத்தார். தம்மை எதிர்த்தவரையும், கேட்டுக் கொண்ட பிறரையும் அவர் தாக்கியதாகவே புலப்பட்டது. வெளிப்படையாகச் சொல்லப்பட்டதை மற்றவர்கள் அநுதாபத்துடன் ஆதரித்ததாகவே அவருக்குத் தென்பட்டது.

"உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் அறியாமை நிறைந்தவர்கள். வங்காளி அரிச்சுவடியின் முதல் எழுத்தாகிய 'க'வைக் கண்ட பிரகலாதனைப் போல் உங்கள் படிப்பு முடிவு பெற்றுவிட்டது. 'க'வைப் பார்த்ததும் பிரகலாதனுக்குக் கிருஷ்ணரது நினைவு வந்துவிட்டது. கண்களில் நீர் தாரைதாரையாகப் பொழிய ஆரம்பித்துவிட்டது. மேற்கொண்டு படிக்க முடியாது போயிற்று. நீங்கள் எல்லோரும் உணர்ச்சிப் பெருக்கிற்கு அடிமைகளாகிவிட்ட முட்டாள்கள். சமயத்தைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? கைகளைக் கட்டிக்கொண்டு, 'ஓ, ஆண்டவனே, உனது நாசி எவ்வளவு அழகாக இருக்கிறது! உனது கண்கள் எவ்வளவு இனிமையாக உள்ளன!' என்பன போன்ற அபத்தங்களைச் சொல்லிப் பிரார்த்தனை செய்வதற்குத் தான் உங்களுக்குத் தெரியும். அதன்மூலம் உங்களது மோட்சம் உறுதியாகி விட்டதாக நினைக்கிறீர்கள். இறுதிப் பிரயாண சமயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வந்து உங்களைக் கரம்பற்றி மிக உயர்ந்த மோட்ச நிலைக்கு அழைத்துச் சென்று விடுவார் என்று நினைக்கிறீர்களா? கவனமான, ஆழ்ந்த படிப்பு, பொது மக்களிடையே பிரசாரம், மனிதர்களிடம் கருணையுடன் பணியாற்றுவது ஆகியவை உங்களுக்கு மாயையாகத் தென்படலாம். கடவுளை முதலில் தேடிக் கண்டுபிடியுங்கள். 'உலகில் நன்மை செய்கிறோம் என்று நினைப்பது நாமாகவே செய்துகொண்ட ஒரு கற்பனை' என்று யாரிடமோ அவர் கூறியதால் அப்படி நினைக்கிறீர்களா? கடவுள் அவ்வளவு சுலபமாக அடைந்து விடக் கூடியவர் அல்லர். நெஞ்சில் உரமில்லாதவர்களின் கைப்பாவையாகி விடுவதற்குக் கடவுள் அவ்வளவு முட்டாள் அல்ல."

திடீரென, பின்னர் அவர் தொடர்ந்து கூறினார்: "என்னைவிட ராமகிருஷ்ணரை நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டதாக நீங்கள் நினைக்கிறீர்கள். வறண்ட பாலைவனப் பாதையில் சென்று அடையக்கூடிய, பசையற்ற அறிவுதான் ஞானம் என்று

நினைக்கிறீர்கள். இதயத்தின் மிக மென்மையான துடிப்புக்களை அழித்துவிட்டு அவ்வாறு கருதுகிறீர்கள். உங்களது பக்தியானது உணர்ச்சிப் பெருக்குடன் கூடிய அபத்தம். அது மக்களைச் சக்தியற்றவர்களாக்கிவிடும். நீங்கள் புரிந்துகொண்டது மாதிரி ராமகிருஷ்ணரது உபதேசத்தைப் பிரசாரம் செய்ய விரும்புகிறீர்கள். அது மிக மிகச் சின்னப் பணி. நீங்கள் விலகி நில்லுங்கள். உங்களில் ராமகிருஷ்ணரைப்பற்றிக் கவலைப்படுகிறவர்கள் யார் ? உங்கள் பக்தியையும் முக்தியையும் பற்றிக் கவலைப்படுகிறவர்கள் யார்? உங்கள் வேதங்கள் என்ன சொல்லுகின்றன என்ற கவலை யாருக்கு? இருளில் ஆழ்ந்து கிடக்கும் என் நாட்டு மக்கள் விழிப்புற்று எழுந்து, நெஞ்சில் உரத்துடன், தைரியமாக நின்று, கர்மயோக உணர்வினால் ஊக்குவிக்கப்படும் மக்களாகும்படி செய்ய முடியுமானால், நான் மகிழ்ச்சியுடன்கூட ஆயிரம் நரகங்களுக்குச் செல்லத் தயாராயிருக்கிறேன். நான் ராமகிருஷ்ணருக்கோ அல்லது வேறு எவருக்கோ சேவகன் அல்ல. பிறருக்குச் சேவை புரிந்து துணை செய்பவர்களின் சேவகன் நான். பக்தியையும் முக்தியையும் பற்றிக் கவலைப்படாமல் அவ்வாறு உழைப்போரின் சேவகன் நான்.''

அவரது முகம் ஒரே தீப்பிழம்பாக இருந்தது என்று நேரில் கண்ட ஒருவர் கூறியுள்ளார். அவரது கண்கள் ஜொலித்தன; அவரது குரல் திணறியது. உடல் அசைவுற்று நடுங்கியது. திடீரெனத் தமது சொந்த அறைக்கு அவர் ஓடிவிட்டார். அடியோடு நிலைகுலைந்துபோன நிலையில் மற்றவர்கள் மௌனத்தில் ஆழ்ந்தனர்.

சில நிமிஷங்கள் கழித்து, அவர்களில் ஒன்றிரண்டு பேர் சென்று அவரது அறைக்குள் எட்டிப் பார்த்தனர். விவேகானந்தர் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டிருந்தார். அவர்கள் மௌனமாகக் காத்திருந்தனர். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு திரும்பிவந்தார். அவரது மனத்தைப் பிடித்து உலுக்கிய கடுமையான சூறாவளியின் சின்னங்கள் இன்னும் அவரது திருமேனியில் காணப்பெற்றன. ஆனால் பழைய சக்தியை அவர் மீண்டும் பெற்றுவிட்டார். அமைதியாகச் சொன்னார்:

''ஒருவன் பக்தி பரவசமாகிவிட்டால் அவனது இதயமும் நரம்புகளும் மென்மையடைந்து மிகத் துல்லியமாகிவிடுகின்றன. ஒரு புஷ்பம் விழுந்தால்கூடச் சகிக்க முடியாத அளவுக்கு அந்த மென்மை இருக்கின்றது. இந்தக் காலத்தில் நான் ஒரு நாவலைப் படிக்க முடியாதவனாகிவிட்டேன் என்பதை நீங்கள் அறிவீர்களா? உணர்ச்சி வசப்படாமல் ஸ்ரீராமகிருஷ்ணரைப்

பற்றி என்னால் நெடுநேரம் சிந்திக்கவோ, பேசவோ முடியாது. எனவே, என்னுள் ஊற்றுப் பெருக்கெடுத்து மேலெழுந்து வரும் பக்தியின் வேகத்தை அடக்குவதற்குச் சதா முயன்றுகொண்டே யிருக்கிறேன். ஞானம் என்கின்ற இரும்புச் சங்கிலியால் என்னை மேலும் மேலும் பிணைத்துக்கொள்கிறேன். தாய் நாட்டிற்காக நான் செய்யவேண்டிய பணி இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது. உலகிற்கு நான் தரவேண்டிய செய்தியை இனிமேல்தான் சொல்லியாக வேண்டும். எனவே, பக்தி மேலிட்டு, என்னைக் கவிழ்த்துவிட முயலும்போது, அந்த உணர்வை நான் அடித்து நொறுக்குகின்றேன். மிகக் கடின மான ஞானத்தை முன்னுக்குக் கொணர்ந்து, உறுதியாகவும் விடாப்பிடியாகவும் இருக்க முயல்கிறேன். நான் செய்ய வேண்டிய பணி காத்திருக்கிறது. நான் ராமகிருஷ்ணரது அடிமை. தமது வேலையை நான் செய்யவேண்டுமென விட்டுப் போயிருக்கிறார். அதைச் செய்து முடிக்கும்வரை எனக்கு மன அமைதி இராது. அவர் என்னிடம் அவ்வளவு அன்பு காட்டினார்.''

உணர்ச்சிப் பெருக்கினால் மேற்கொண்டு பேச அவரால் முடியாது போயிற்று. அதன்பேரில் தம் சிந்தனைகளை வேறு திசையில் திருப்பிவிட முயன்றார். புதிதாக ஓர் உணர்ச்சிப் பெருக்கு வந்துவிடுமோ என்று அவர்கள் பயந்தனர்.

அன்றைத் தினத்திலிருந்து விவேகானந்தரது வழிமுறை களை ஆட்சேபித்து ஒரு வார்த்தைகூட எவரும் கூறியதில்லை. அவரே ஏற்கனவே சிந்தித்துப் பார்த்திராத எதைத்தான் அவர்கள் சுட்டிக் காட்டி ஆட்சேபிக்க இயலும்? வேதனையில் உழன்றுகொண்டிருந்த அவரது ஆன்மாவின் ஆழத்தை அவர் கள் நிதானித்துவிட்டார்கள்.

ஒவ்வோர் அறப்பணியுமே நாடக பாணியில் நிகழ்கின்றது. அதனால் நன்மை அடைகின்றவன் கை தாழ்ந்துவிடுகிறது. அவனது தன்மையில், அமைதியில், ஆரோக்கியத்தில், ஆழ்ந்த அபிலாஷைகளில் ஒரு பகுதி அதனால் பங்கப்படுகிறது. கடவுளைப் பற்றித் தமது தேச மக்கள் கொண்டிருந்த மனோ பாவந்தான் விவேகானந்தருடையதும், வாழ்க்கையினின்றும் விலகி, உலகைத் துறந்து சந்நியாசிகளாகச் சஞ்சரிப்பதன் அவசியம், தியானத்தில் ஆராய்ச்சியில், அன்பின் ஆனந்தானு பவத்தில் திளைத்து, பற்றற்ற ஆன்மானுபவத்தின் மூலம் நிலையற்ற இவ்வுலகிலிருந்து பறந்தோடி, பரப்பிரம்மத்துடன்

ஒரு க்ஷணநேரமும் தடைப்படாத தொடர்பு நிலையை எய்த வேண்டும். என்ற மெய்யுணர்வில் அவர்களுக்கு இருந்த நாட்டம் அவருக்கும் உண்டு. அவரை நெருங்கிக் கவனித்தவர்கள் அவரது ஆயாசத்தைக் கண்டறிந்தனர். அவரது இதயத்தினுள்ளிருந்து அடிக்கடி வருத்தம் வெளிப்படும்.

ஆனால் தமது வாழ்க்கை வழியை அவராக வகுத்துக் கொண்டதல்ல. அறப்பணியே அவரை வரித்துக்கொண்டு விட்டது.

"எனக்கு ஓய்வு என்பது கிடையாது. காளி என்று ராம கிருஷ்ணர் யாரை அழைத்தாரோ, அவர் எனது ஆத்மாவையும், சரீரத்தையும் அவர் உயிர்விடுவதற்கு மூன்று நான்கு நாட்களுக்கு முன்னதாகவே தம் வசப்படுத்திக் கொண்டுவிட்டார். அதன் விளைவாக நான் உழைத்துப் பாடுபட்டாக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது. எனது சொந்தத் தேவைகள் விஷயத்தில் அக்கறை காட்ட ஒருக்காலும் அவர் என்னை அனுமதிப்பதில்லை."

தம்மையும், தமது ஆசைகளையும், தமது க்ஷேமநலனையும் ஆரோக்கியத்தையும், பிறரது நன்மைக்காக அவர் மறந்துவிடும் படி அது செய்தது.

தமது துறவிப் படையினர் மனத்தில் அதே விதமான நம்பிக்கையை அவர் உண்டுபண்ண வேண்டியிருந்தது. செயலாற்றும் சக்தி அவர்களிடம் கிளர்ந்தெழச் செய்வதன் மூலமாக மட்டுமே அது சாத்தியப்படும். உணர்ச்சிப் பெருக்கில் மதிமயங்கிப் போய், வேறு எதையும் ஜீரணிக்க முடியாத நிலையில் இருந்த ஒரு தேசத்துக்கு அவர் தொண்டு புரிய வேண்டியிருந்தது. ஆகையால் தான் தமது ஆன்மிகப் படையினரின் மனது உறுதிப்படும்படி செய்வதற்காக அவர் சில சமயம் மிகக் கடுமையாகவும் பேசி நடந்துகொண்டார். வீர உணர்ச்சி மேம்படச் செய்வதற் கேற்றவாறு ஆன்மா எல்லாத் துறைகளிலும் உயர்வு காண வேண்டும்; அதற்கேற்ப விழிப்புற வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆன்மிகத் துறைப் பணி, சொந்த உழைப்பு, விஞ்ஞான ஆராய்ச்சி, மனிதனுக்குச் சேவை புரிவது ஆகியவை மூலம் இது கைகூட வேண்டும். வேதாந்தப் பிரசாரத்துக்கு அவர் விசேஷ முக்கியத்துவம் கொடுத்தார் என்றால், அதற்குக் காரணம் அது எல்லாவற்றையும்விட மேம்பாடுடைய ஒரு சஞ்சீவியாக இருந்ததுதான். "வேத மந்திரங்களின் இடிமுழக்கத்தின் மூலம் நாட்டில் புது வாழ்வு மலரச் செய்ய வேண்டும்."

பிறரது இதயங்களைப் புண்படுத்தியதுடன் நில்லாமல் தமது சொந்த இதயத்தையும் அவர் வெறுத்துக்கொண்டார். இதயம் தெய்வத்தின் ஊற்றுக்கால் என்பதை அவர் அறிவார். மக்களின் தலைவர் என்ற வகையில் அதை அடக்கி ஒடுக்க அவர் விரும்பவில்லை. ஆனால் அதை ஒழுங்கு செய்து வகைப் படுத்தவே ஆசைப்பட்டார். இதயம் மேலுக்குப் போய்க் கொண்டிருக்குமானால், அதை அவர் கீழே இறக்கிவிடுவார். அது கீழ்நிலையில் இருக்கும்போது அதற்கு ஏற்றம் தருவார். உள்ளுறைச் சக்திகள் சமநிலையில் இயங்க வேண்டுமென்று அவர் விரும்பினார். மிக மிக அவசரமாகச் செய்யவேண்டிய பணி மனித வர்க்கத்திற்குச் சேவை புரிவதுதான். அதற்காக அத்தகைய மனப்பான்மை தேவை. அறியாமை, துயரம், மிடிமை ஆகியவற்றை ஒழிக்கின்ற பணி காத்திருக்க முடியாது.

சமநிலை என்பது ஸ்திர நிலையாக இருக்க முடியாது என்பது உண்மையே. அதை அடைவது மிகமிகச் சிரமம். அதை அடைந்த பின் நிலைநிறுத்தி வைப்பது இன்னும் சிரமம். உணர்ச்சிப் பெருக்கின் விளைவாக ஆனந்தாநுபவத்தில் ஆழ்ந் திருக்கும் இனங்கள் நேரெதிர் நிலைக்குத் தாவி, ஆசை என்கிற உயிரற்ற சாம்பலில் குதித்துவிடுவது சகஜம். நம்பிக்கை, விஞ்ஞானம், கலை, வெற்றி விளைக்கும் உணர்ச்சிப் பெருக்குச் செய்கை போன்ற ஒன்றுக்கொன்று முரணான பல்வேறு நிலை களிடையே சிக்கி உழன்றுகொண்டிருந்த விவேகானந்தரைப் போன்ற ஒருவர் விஷயத்தில் அது இன்னும் சிரமம் நிறைந்தது. இரண்டு துருவங்களுக்கு மிடையே ஒரு சமநிலையில் கடைசி வரை அவர் இருந்துவந்தார் என்பது அற்புதமான நிகழ்ச்சி களில் ஒன்று.

ஒரு துருவநிலை, அத்வைத பரமான தீவிர அன்பு. மற் றொன்று துயரத்தில் ஆழ்ந்திருந்த மனித சமூகத்துக்குத் தொண் டாற்றும் பணி தவிர்க்க முடியாததாக இருந்த நிலை. சமநிலையைக் காப்பாற்றுவது சாத்தியமல்லவென்று தோன்றிய தருணங்களில், இரண்டில் ஒன்றை ஏற்கவேண்டிய அவசியம் வந்துற்றபோது, மனித சேவையை அவர் வரித்துக்கொண்டார். அதுதான் அவரிடம் நமது மதிப்பைப் பெரிதும் உயர்த்துகிறது. கருணை என்ற தத்துவத்துக்கு அவர் பிற அனைத்தையும் தியாகம் செய்தார். பீதோவன் என்ற அவரது ஐரோப்பியச் சகோதரர் கூறியதுபோல், கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த, ஏழைகள் நிறைந்த மனித சமூகத்துக்காக அந்தத் தியாகங்களை ஏற்றார்.

கிரீசரைப் பற்றிய அழகுமிக்க சம்பவம் உள்ளத்தைத் தொடக்கூடிய ஓர் உதாரணம். ராமகிருஷ்ணரது இந்தச் சீடர் புகழ் பெற்ற வங்க நாடகாசிரியர், எழுத்தாளர், ஹாஸ்ய நடிகர். அவர் சிற்றின்பத்தில் திளைக்கும் வாழ்க்கையை நெடுநாள் நடத்தி வந்தவர். சகிப்புத் தன்மையும் சிறிது விஷமமும் நிறைந்த ராமகிருஷ்ணர் அவரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டது முதல் மிகத் தீவிரமான, உண்மையுணர்வு மிகுந்த சீடராக மாறி விட்டார். அன்பு என்கிற பக்தி யோகத்தின் மூலம் தெய்வ நம்பிக்கையை இடையருது பரப்பி வருவதில் அவர் தம் வாழ் நாளைக் கழித்தார். ஆனால் அவர் தமது பேச்சுச் சுதந்தரத்தைக் கைவிடவில்லை. குருநாதரது நினைவுக்காக வேண்டிய, ராம கிருஷ்ணரது சீடர்கள் அவரிடம் விசேஷ மரியாதை காட்டி வந்தனர்.

ஒரு நாள் ஒரு சீடருடன் விவேகானந்தர் தூய தத்துவ வாதத்தில் ஈடுபட்டிருந்தபோது கிரீசர் உள்ளே வந்தார். உடனே விவேகானந்தர் பேச்சை நிறுத்திவிட்டு, பிரியம் ததும்புவது போன்ற போலிக் குரலில், "கிரீசரே, இவற்றை யெல்லாம் ஆராய்ந்தறியும் அக்கறை உமக்கில்லை. நீரோ கிருஷ்ணரையும், விஷ்ணுவையும் வைத்துக்கொண்டு காலத் தைக் கழித்துவிட்டீர்" என்று அவரிடம் சொன்னார்.

கிரீசர் பதில் விடுத்தார்: "நரேன், உங்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். வேதங்களையும், வேதாந்தங்களையும் நீங்கள் நிறையப் படித்திருக்கிறீர்கள். மக்களின் துயரக் குரலை, இந்தப் பசியால் வாடுவோரின் வாழ்க்கையை, இந்த அருவருக்கத்தக்க பாபங்களையும், ஒவ்வொரு நாளும் நம் கண்ணெதிரே தென்படும் வேறு பல கேடுகளையும், மிடிமைகளையும் அகற்று வதற்கு அவற்றில் என்ன பரிகாரம் சொல்லப்பட்டிருக்கிறது? அதோ, அந்த வீட்டின் தாய் ஒரு காலத்தில் தினம் ஐம்பது பேருக்கு அன்னமிட்டு வந்தவள், இப்போது மூன்று தினங் களாகத் தனக்கும் தன் குழந்தைகளுக்கும் கூடச் சமைக்க முடியாத நிலையில் இருக்கிருள். அதோ அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைப் போக்கிரிகள் கெடுத்து, ஹிம்சை செய்து கொன்றுவிட்டனர். அந்த இளம் விதவையோ தனது வெட்கத்தை மறைப்பதற்காக வேண்டி, கருவைச் சிதைக்க முற்பட்டு உயிரிழந்துவிட்டாள். நரேன், நான் உங்களைக் கேட்கிறேன். இந்தக் கேடுகள் வராமல் தடுக்க வேதங்களில் எதையாவது கண்டீர்களா?"

இந்தத் தோரணையில் தமது நிந்தனை அம்புகளைக் கிரீசர் தொடர்ந்து விடுத்தார். சமூகத்தில் இருள் படர்ந்த அருவருப்பான பகுதிகளை விவரமாக விண்டு காட்டினார். அப்போது விவேகானந்தர் பேச்சு மூச்சின்றிப் பெரிதும் உணர்ச்சிவசப் பட்டவராக ஆகிவிட்டார். உலகின் வேதனையையும் மிடிமை யையும் பற்றி நினைக்க நினைக்க அவரது கண்களில், நீர் பெருகியது. தமது உணர்ச்சியை மறைப்பதற்காக வேண்டி அறையிலிருந்து அவர் வெளியேறிவிட்டார்.

சீடரிடம் கிரீசர் கூறினார்: "உங்கள் குரு எவ்வளவு விசால இதயம் படைத்தவர் என்பதை இப்போது நீங்கள் கண்ணாரக் கண்டீர்கள். அவர் ஒரு பெரிய அறிவாளியாக இருக்கின்றார். மதிநுட்பம் மிகுந்தவர் என்பதற்காக நான் அவரிடம் மதிப்பு வைக்கவில்லை. மனித சமூகத்தின் மிடிமை யைக் கேட்டுக் கண்ணீர் சொரிந்தவண்ணம் அவர் வெளி யேறிச் சென்றாரே, அந்தப் பரந்த உள்ளத்துக்காகத்தான் நான் அவரைப் பெரிதும் மதிப்பது. அவரது புலமை, கல்வி, ஞானம் ஒரு கணத்திற்கு முன்னர்தான் பிரமாதமாக வெளிப் போந்து கொண்டிருந்தது. நான் சொன்னதைக் கேட்ட வுடன், அவற்றையெல்லாம் தூர ஒதுக்கிவிட்டு, தமது உடல் முழுவதும் கருணையும் அன்பும் சேர்ந்த ஒரு பிரவாகமாக அவர் மாறிவிட்டார். உங்கள் சுவாமி தெய்வபக்தியும், மனிதாபி மானமும் உள்ள ஒரு ஞானி, ஒரு பண்டிதர்."

விவேகானந்தர் திரும்பி வந்தார். தம் நாட்டு மக்களின் வறுமையையும், துயரையும் கண்டு தமது இதயம் இற்றுப் போகும் வேதனையை அநுபவித்ததாகவும், ஒரு சிறிய கஷ்ட நிவாரண கேந்திரத்தையாவது ஆரம்பித்து வைத்து, ஏதாவது பணியை நடத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண் டார். கிரீசரைப் பார்த்துச் சொன்னார்: "ஏ கிரீஷ், உலகின் துயரைத் துடைப்பதற்காக ஓர் ஆயிரம் முறை நான் மறுபிறப்பை ஏற்கவேண்டி நேரிடினும் தயார். ஒரேயொரு நபரின் கஷ்டத்தைச் சிறிதாவது அகற்றுவதற்காகக் கூட நான் உற்சாகத்துடன் அதை மேற்கொள்வேன்."

கருணையே வடிவான அவரது இதயத்தின் தாராள உணர் வானது சகோதரர்களையும், சீடர்களையும் ஒருசேர ஆட்கொண் டது. அவர்கள் எல்லாருமே அவர் எடுத்துக் காட்டிய வகை யில் பல்வேறு வழிகளில் மனித சமூகத்தின் சேவைக்காகத் தம்மைப் பணித்துக்கொண்டார்கள்.

1897 வேனிற்காலத்தில் விவேகானந்தர் அனுப்பிய இரண்டு சீடர்களின் உதவியுடன் அகண்டானந்தர், நான் கைந்து மாதங்களுக்கு வங்காளத்தில் மூர்ஷிதாபாத் ஜில்லாவில் பஞ்சத்தினுல் பரிதவித்த நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு அன்னமிட்டுப் பணிவிடை புரிந்தார். கைவிடப்பட்ட குழந்தைகளைத் தேடிப் பிடித்து மொகூலாவில் ஓர் அநாதை ஆசிரமத்தை நிறுவினுர். பின்னர் அது சர்காசிக்கு மாற்றப்பட்டது. இடையருத கொடுமைகளிடையே, அன்புடன் ஜாதி மத வேற்றுமைகளைப் பாராமல் இந்த ஏழைக் குழந்தைகளின் கல்வியில் அகண்டானந்தர் மூழ்கி ஈடுபாடு கொண்டார். 1899-இல் அவர்களுக்கு அவர் நெசவு, தையல், தச்சு வேலை, பட்டுத் தயாரிப்பு, எழுத்து எண், படிப்பு, ஆங்கிலம் ஆகியவற்றைப் போதித்தார்.

1897-இல் தினஜ்பூரில் ஒரு பஞ்ச நிவாரண கேந்திரத்தை திரிகுணுதீதா ஆரம்பித்தார். இரண்டு மாத காலத்தில் 84 கிராமங்களுக்கு அவர் உதவியளித்தார். தேவகர், தக்ஷிணேசுவர், கல்கத்தா போன்ற இடங்களில் வேறு பல கேந்திரங்கள் நிறுவப்பட்டன.

1898 ஏப்ரல்-மே மாதங்களில் ராமகிருஷ்ண மிஷன் தனது முழுச் சக்தியையும் திரட்டி, கல்கத்தாவை அப்போது வாட்டிக் கொண்டிருந்த பிளேக்நோயைச் சமாளிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. விவேகானந்தர் தேகநலம் அற்றவராக இருந்தும், ஹிமாலயத்திலிருந்து திரும்பிவந்து கஷ்ட நிவாரண வேலையைத் தமது பொறுப்பில் மேற்கொண்டார். பணம் இல்லை. கையில் இருந்ததையெல்லாம் ஒரு பெரிய மடத்தை நிறுவுவதற்கான ஜாகையை வாங்குவதற்குச் செலவழித்துவிட்டார்கள். ஒரு கணங்கூட விவேகானந்தர் தயங்கவில்லை.

"அவசியமாயின் அதை விற்றுவிடுங்கள். நாம் சந்நியாசிகள். மரங்களின்கீழ் தங்கி, அன்ருடம் பிக்ஷை எடுத்துக் காலக்ஷேபம் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டியவர்கள்" என்ருர்.

ஒரு பெரிய மைதானத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் சுகாதார வசதியுள்ள முகாம்களை அமைத்தார்கள். ஏழை மக்கள் வசித்து வந்த ஒரு பகுதியில் விவேகானந்தர் குடியேறினுர். அங்கிருந்த மக்களுக்கு நம்பிக்கையை உண்டு பண்ணுவதே அதன் நோக்கம். சக ஊழியர்களுக்கும் இதன் விளைவாக உற்சாகம் ஏற்பட்டது. கஷ்ட நிவாரணப் பணியின் நிர்வாகப் பொறுப்பு சகோதரி நிவேதிதாவிடம் ஒப்படைக்கப்

பட்டது. அவர் அண்மையில்தான் ஐரோப்பாவிலிருந்து வந்திருந்தார். சுவாமி சதானந்தர், சிவானந்தர் ஆகிய பலர், உதவியாளர்களுடன்கூட நிவாரணப் பணியில் இறங்கினர்.

கல்கத்தாவில் ஏழைகள் வசிக்கும் நான்கு பிரதான பகுதிகளைச் சுத்தம் செய்து, அங்கே நோய்கள் தலைதூக்காதபடி மருந்துகளையெல்லாம் அடிக்கும் வேலையை அவர்கள் மேற்பார்த்தனர். மாணவர்களை ஒரு கூட்டத்துக்கு விவேகானந்தர் அழைத்தார் (ஏப்ரல், 1899). இம்மாதிரி துயரங்கள் வந்துவிடுங் காலையில் மாணவர்களது கடமையை நினைவூட்டினார். அவர்கள் சிறு சிறு குழுக்களாக அமைந்து, ஏழைகளின் வீடுகளைப் பார்வையிட்டு, சுகாதாரத்தைப் பற்றிய பிரசுரங்களை வினியோகித்து, கக்கூசுகளைச் சரிவர சுத்தி செய்வது எப்படி என்பதைச் செய்து காட்டினர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்கள் ராமகிருஷ்ண மடத்தில் நடைபெற்ற கூட்டங்களுக்கு வந்து, சகோதரி நிவேதிதாவிடம் தமது பணியைப் பற்றிய விவரங்களைச் சொன்னார்கள்.

ராமகிருஷ்ணரது சிராத்த தினத்தை ஏழைகளின் விழாவாகக் கொண்டாடுவது என்ற புனிதமான வழக்கம் ஏற்பாடாயிற்று. அன்று எல்லா ராமகிருஷ்ண கேந்திரங்களிலும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னமிடுவார்கள்.

எனவே, ஒரு புதிய ஒற்றுமையுணர்வும், சுதந்தரப் பான்மையுடன் கூடிய தோழமையும் தேசத்தில் எல்லா வகுப்பினர்களுக்குமிடையே உருப்பெறலாயிற்று.

சமூகநலத் துறையில் பரஸ்பர உதவி அளித்துக்கொள்ளும் இந்த வேலை நடந்துகொண்டிருந்தபோதே, கூடவே கல்வியும், வேதாந்தப் பிரசாரமும் தொடர்ந்து நடைபெற்றன. "இந்தியாவுக்குத் தேவைப்படுவது, 'இஸ்லாமிய உடலும், வேதாந்த இதயமுந்தான்" என்று விவேகானந்தர் கூறினார்.

1897-இல் சென்னையிலும், சுற்றுப்புறத்திலும் உரைகளை நிகழ்த்திவந்த ராமகிருஷ்ணானந்தர், நகரின் பல்வேறு பகுதிகளில் 11 வகுப்புகளை ஆரம்பித்தார். கல்வி போதனையுடன் கூடப் பட்டினி கிடப்போருக்கு உதவியளிக்கும் பணியையும் கூடவே அவர் நடத்திவந்தார். அவ்வருஷ மத்தியில் சிவானந்தரை இலங்கைக்கு அனுப்பி, அங்கே வேதாந்தப் பிரசாரம் நடைபெறுவதற்கு விவேகானந்தர் ஏற்பாடு செய்தார். அங்குள்ள கல்விமான்களுக்கு ஒரு புனிதமான ஆர்வம்

ஏற்பட்டது. "இந்த இளம் பெண்கள் எனக்குப் பகவதியாகக் காட்சியளிக்கின்றனர். எனவே, அவர்களைப் பூசிக்கிறேன்; எனக்கு வேறு எவ்விதமான பூசனையும் தெரியாது" என்று இளம் பெண்களுக்கான ஒரு பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியர் சொன்னதைக் கேட்டு, விவேகானந்தர் ஆனந்தப் பரவசமடைந்தார்.

ராமகிருஷ்ண மடம் அமைந்த பிறகு, அல்மோராவில் பல வாரம் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக வேண்டித் தமது சொந்த வேலைகளை விவேகானந்தர் நிறுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. "இயக்கம் தொடங்கிவிட்டது. அது ஒருக்காலும் நிற்காது" (ஜூலை, 1897) என்று அவர் எழுதினார்.

"எனது மூளையில் ஒரே எண்ணந்தான் இடையறாது சுடர் விட்டெரிந்து கொண்டிருக்கிறது. இந்தியப் பாமர மக்கள் மேம்பாடு அடையச் செய்வதற்கான ஸ்தாபன வசதிகளை, ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். அதற்கு வழி செய்வதில் ஓரளவு நான் வெற்றியடைந்திருக்கிறேன். பஞ்சம், பிணி, மிடிமை முதலியவற்றினிடையே எனது சீடர்கள் உழைத்து வருவதைப் பார்த்து என் மனம் மகிழ்ச்சி அடைகிறது. காலராவால் பீடிக்கப்பட்டுள்ள பறையர்களின் படுக்கையருகில் இருந்து கவனித்துக் கொள்கிறார்கள். பட்டினி கிடக்கும் சண்டாளர்களுக்கு அன்னமிடுகிறார்கள். எனக்கும் அவர்கள் அனைவருக்கும் ஆண்டவன் படியளக்கிறான்.

"நான் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இருந்தபோது உணர்ந்தறிந்தது போல், இங்கேயும் ஆண்டவனைக் காண்கிறேன். இந்தியாவில் யாரும் அறியாமல் இடம் இடமாகத் திரிந்துகொண்டிருந்த நிலையில், அவர் என்னுடன் கூடவே இருக்கத்தான் செய்தார். என் பணி முடிந்துவிட்டது. இன்னும் மூன்று அல்லது நான்கு வருஷ காலந்தான் நான் பிழைத்திருப்பேன். நான் மோட்சம் அடையவேண்டுமென்ற எண்ணமே போய்விட்டது. உலக இன்பங்கள் எனக்கு எப்போதுமே தேவைப்பட்டதில்லை. நான் தோற்றுவித்தஸ்தாபனம் நல்லசக்தி வாய்ந்ததாக இருக்கவேண்டும். மனித சமூகத்தின் நன்மைக்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை இந்தியாவில் தோற்றுவித்தேன். அதை யாரும் பின்னுக்குத் தள்ளிவிட முடியாது என்ற நிச்சயத்துடன், அடுத்தபடி என்னவென்பது பற்றிய கவலை இல்லாமல் உறங்க முடியும். எல்லா ஆன்மாக்களும் ஒன்று சேர்ந்த மொத்த நிலைதான் நான் கடவுளாகக் காண்பது.

அந்தக் கடவுளைப் பூசிப்பதற்காக வேண்டி, எவ்வளவு ஆயிரம் கஷ்டங்களைக் சகிக்க வேண்டி நேரிட்டாலும் மீண்டும் மீண்டும் நான் பிறந்துகொண்டே இருப்பேனாக.''

தமது தேகநிலை சிறிது அநுமதித்தவுடன், முன்னைவிடப் பன்மடங்கு அதிக தீவிரத்துடன் அவர் உழைக்கலானார். 1897 ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை வட இந்தியாவில் பஞ்சாபி லிருந்து காஷ்மீர் வரை ஒரு சண்டமாருதப் பிரசங்க யாத்தி ரையை மேற்கொண்டார். சென்றவிடம் எல்லாம் தமது பணி தொடர்ந்து நடப்பதற்கான வித்தை ஊன்றினார். காஷ்மீரத்தில் ஒரு பெரிய அத்வைத மடத்தைத் தோற்றுவிப்பதன் சாத்தியக் கூறுகளைப் பற்றி மகாராஜாவுடன் விவாதித்தார். லாகூர்க் கல்லூரிகளில் மாணவர்களுக்கு நல்லுரை வழங்கினார். 'மனிதனின் மேம்பாட்டில் சக்தி வாய்ந்த நம்பிக்கை தேவை. அதுவே கடவுளிடம் நம்பிக்கை கொள்வதற்கான பூர்வாங்க முயற்சியாக அமையும்' என்று சொல்லி, மக்களின் கஷ்ட நிவாரணம், சகோதர வாழ்வு, கல்வி வளர்ச்சி ஆகியவற்றிற்கு உழைப்பதற்காக வேண்டி, எல்லாப் பிரிவினரும் சேர்ந்த சங்கம் ஒன்றை மாணவரிடையே ஏற்படுத்தினார்.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் உள்ளுறையும் கடவுளைக் கண்டுகொண்டு, ஏற்றம் காணச் செய்யும் வேலையில் சலிப்பில்லாது ஈடுபட்டார். தெய்வ நம்பிக்கைக்கு உரைகல் செயலாற்றுதலே என்று இடையறாது காட்டிவந்தார். பல்வேறு ஜாதிகளிடையே,உப-ஜாதிகளிடையே கலப்பு மணம் செய்து வைப்பதன்மூலம் சமூக அநீதிகளை அகற்ற முயலலாம் என்று உபதேசித்து வந்தார். அப்படிச் செய்வதன் மூலம் ஒருவரையொருவர் நெருங்கி வந்து, கீழ்நிலையில் உள்ளவர் களின் கஷ்ட நிலையை அறிவதற்குத் துணைபுரிய முடியும் என்று கருதினார்.

திருமணமாகாத பெண்களின் கதி, ஹிந்து விதவைகளின் பிரச்னை முதலியவற்றில் கவனம் செலுத்தினார். தனித்தனியாக இயங்கும் போக்கு எங்கே காணப்பெற்றாலும் அதை எதிர்த் துப் போரிட்டார். வெறும் ஆடம்பரமான சடங்குகளை வெறுத் தார். தீண்டலாகாது என்ற தடைவிதிகளை ஆட்சேபித்தார். அதே சமயத்தில் ஸம்ஸ்கிருதத்தைப் பற்றிய உண்மையான ஞானத்தைப் பரப்பி, ஹிந்து மேதை மீண்டும் பழைய உயர் நிலையை அடைவதற்குத் துணைபுரிந்தார். அத்துடன் கூட, மேலைநாடுகளின் விஞ்ஞானத்தை இணைத்தார். 'பட்டங்களை வழங்கி அதிகாரிகளை தயாரித்துக் கொடுப்பதுடன் நில்லாமல்,

இந்தியச் சர்வகலாசாலைகள் தரமான மனிதர்களை உலகிற்கு அளிக்கவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்.

இங்கிலாந்துக்கு எதிரிடையான எழுச்சி உருவாகி வந்த போதிலும், இந்தியாவின் அரசியல் சுதந்தரத்தைப் பற்றிய எண்ணம் இதில் குறுக்கிடவில்லை. பிரபஞ்சம் அனைத்துமே தம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென அவர் கருதினர். பிரிட்டிஷ் ஒத்துழைப்பையும் நம்பியிருந்தார். அவரது பணி நடைபெறுவதற்கு இங்கிலாந்து பெரிதும் உதவியது. அரசாங்கம் உதவவில்லையாயினும், லண்டனிலும், நியூயார்க்கிலும் இருந்த வெள்ளைக்காரச் சீடர்கள் பக்தி சிரத்தையுடன் சுவாமியை அணுகியதுடன்கூட, பேலூரில் இடம் வாங்கிப் பெரிய மடத்தைக் கட்டுவதற்கு வேண்டிய நிதிகளையும் கொணர்ந்தனர்.

ராமகிருஷ்ண மடம் புதிய முறையில் வேலை செய்வதற்காக வேண்டிய ஏற்பாடுகளில் அவர் முக்கியமாக 1898-இல் கவனம் செலுத்தினர். ராமகிருஷ்ண மிஷனின் கருத்துக்களைப் பரப்புவதற்கான சஞ்சிகைகளையும் விமரிசன ஏடுகளையும் தோற்றுவித்து வந்தார். இந்தியாவுக்குக் கல்வி புகட்டும் சாதனங்களாக அவை பயன்பட்டன.

1898-ஆம் ஆண்டின் மிக முக்கியமான நிகழ்ச்சி, தமது மேலைநாட்டுச் சீடர்களுக்கு விவேகானந்தர் அளித்த சிறப்புப் பயிற்சிதான்.

அவரது வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்கள் எல்லாரும் வந்திருந்தனர். மார்கரெட் நோபிள் ஜனவரி இறுதியில் வந்தார். அவரும் மிஸ் முல்லரும் இந்திய மாதர்களின் கல்விக்கேற்ற ஸ்தாபனங்களை நிறுவினர். ஸ்ரீமதி ஓலே புல், மிஸ். ஜோசபின் மாக்லியாட் ஆகியோர் பிப்ரவரியில் வந்தனர். மார்ச் மாதம் மார்கரெட் நோபிள் பிரம்மசரிய விரதத்தை ஏற்றுக் கொண்டார். இந்தியாவுக்கு, இங்கிலாந்து அளித்த ஒரு தானம் என்று சொல்லி, கல்கத்தா பொதுமக்களுக்கு, மிக உற்சாகமான விதத்தில், அவரை விவேகானந்தர் அறிமுகம் செய்து வைத்தார். தம் நாட்டின் பழக்கவழக்கங்கள், நினைவுகள், விருப்பு வெறுப்புகள் பற்றிய சிந்தனைகளை எல்லாம் அவரது மனத்திலிருந்து அகற்றிவிட விவேகானந்தர் விரும்பினர். எனவே, அவருடன்கூட ஒரு சீடர் குழாத்தையும் சேர்த்துக் கொண்டு, பல மாதகாலம் வரலாற்றுப் புகழ்பெற்ற இந்தியாவை அவர்களுக்குச் சுற்றிக் காண்பித்தார்.

விசித்திரமான ஓர் அநுபவம் ஏற்பட்டது. தமது இனத்தின் சமய உணர்வு எங்கே உறைந்திருக்கின்றது என்பதைக் கண்டறியும் முயற்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டபோது, அப் பெரும்பணியில் அவர் மூழ்கிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். இந்த மாபெரும் அத்வைதி, உருவம், வடிவமற்ற நிர்க்குணப் பிரம்மத்தில் ஆழ்ந்திருந்தவர், திடீரென எல்லாத் தெய்வங்களையும் பேரார்வத்துடன் வழிபடுவதை மக்கள் கண்டனர்.

திவ்ய தம்பதிகளை, அதாவது சிவனையும் தேவியையும், உற்சாகத்துடன் பூசிக்கலானார். இவ்வாறு அவர் செய்தது தமது குருநாதர் ராமகிருஷ்ணர் காட்டிய வழிதான். அவரது இதயத்தில் உருவமற்ற கடவுளுக்கு ஓரிடம் உண்டு, உருவ வழிபாட்டிற்கும் இடம் உண்டு. அழகே உருவான தேவியின் சந்நிதானத்தில் பல வருஷகாலம் ஆனந்தாநுபவம் பெற்றவர் ராமகிருஷ்ணர். ஆனால் விவேகானந்தர் தேவியை அம்மாதிரி அடைந்தது நிர்க்குணப் பிரம்மத்தைக் கண்டு தெளிந்த பிறகுதான்; அதற்கு முன்னால் அல்ல. ராமகிருஷ்ணரது ஆனந்தமயமான மென்மை காளிக்கு ஒரு சொருபத்தைக் கொடுத்திருந்தது. விவேகானந்தர் தமக்கே உரிய ஆர்வத்துடன், வேறு விதத்தில், முற்றும் மாறுபட்ட சூழ்நிலையில், கடவுளை—முக்கியமாகக் காளியைக் கண்டு பூசித்தார்.

அல்மோராவில் சிறிது காலம் அவர் தங்கினார். ஏற்கெனவே அங்கே சேவியர் தம்பதிகள் வந்திருந்தனர். அத்வைத ஆசிரமம் நிறுவப்பெறும் தருவாயில் இருந்தது. ஸ்ரீநகர் பள்ளத்தாக்கு வழியாக நதியில் மூன்று படகுகளில் யாத்திரை சென்றார். 1898 ஜூலையில் விவேகானந்தர் நிவேதிதாவுடன் மேற்கு ஹிமாலயத்தில் பனி ஆற்றுக்கரையில் இருக்கும் அமரநாத் குகைகளுக்கு யாத்திரிகராகச் சென்றார். இரண்டு அல்லது மூன்று ஆயிரம் மக்கள் அங்கே திரண்டு வந்தனர். தங்கும் இடங்கள் எல்லாம் டேராக்களாலான நகரங்களாகக் காட்சியளித்தன. கூட்டத்தோடு கூட்டமாக அவர்கள் ஒன்றி விட்டனர். அவரது சுபாவத்தில் திடீரென ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்ததை நிவேதிதா கண்டார். யாத்திரிகர்கள் வழக்கப்படி பின்பற்றியாக வேண்டிய, மிக எளிய நடைமுறைகளை எல்லாம் அவர் அனுஷ்டித்தார்.

அமரநாத் குகைகளை அடையவேண்டுமாயின் நாட் கணக்கில் செங்குத்தான பாறைகளின் மீது ஏறவேண்டும். அபாயகரமான பாறைகள், பல மைல் நீளத்திற்குப் பனியாற்

றைக் கடந்துசெல்ல வேண்டும். குளிரைப் பொருட்படுத்தாமல் புனிதமான ஆறுகளில் நீராடவேண்டும். ஆகஸ்டு இரண்டாம் தேதி அமரநாத்தில் வருஷா வருஷம் நிகழும் திருவிழா வந்தது. குகை வாயிலுக்கு அவர்கள் வந்துவிட்டனர். ஒரு பிரம் மாண்டமான தேவாலயத்தையே தன்னுள் அடக்கிக்கொள்ளக் கூடியதாக அது அவ்வளவு பெரிதாயிருந்தது. அதன் பின் புறத்தில் பனியினாலான லிங்கம் பிரம்மாதமாகக் காணப்பட்டது.

எல்லோரும் தமது உடல் நிறைய விபூதி அணிந்துகொண்டு ஆண்டவன் படைத்த நிலையில் அக்குகைக்குள் செல்ல வேண் டும். மற்றவர்கள் பின்னால், உணர்ச்சி வசப்படும் நிலையில், அநேகமாக மயங்கிவிழும் தேக நிலவரத்தில் விவேகானந்தர் அதற்குள் நுழைந்தார். அங்கே இருள் படர்ந்த அந்தக் குகையில் பல நூறு குரல்கள் இசையுடன் துதி பாடும் நிலையில் அவர் நெடுஞ்சாணாக விழுந்து தண்டனிட்டார். அப்போது அவரது கண்கள் ஓர் அற்புதக் காட்சியைக் கண்டன. சிவபெரு மான் அவர் கண்முன் தென்பட்டார். தாம் கண்டதையும் கேட்டதையும் பற்றி யாரிடமும் அவர் ஒன்றும் சொல்ல வில்லை. ஆனால், சிவபெருமானது தரிசனத்தின் விளைவாக அவரது நரம்புகள் முறுக்கேறி, அநேகமாக உயிரற்ற நிலையை அவர் அடைந்துவிட்டார். அவர் அந்தக் குகையிலிருந்து வெளிவந்தபோது, இடது கண்ணில் ரத்தம் கசிந்து கட்டி யிருந்தது அவரது இதயம் விரிந்து காணப்பட்டது. மீண்டும் அவர் சகஜநிலையை அடையவே இல்லை. அதற்குப் பின் பல நாட்கள் வரை சிவனைத் தவிர, வேறு எதையும் அவர் பேசவில்லை. எல்லா இடங்களிலும் சிவனையே கண்டார். முழுக்க முழுக்கச் சிவனில் ஆழ்ந்துவிட்டார். பனி உறையும் ஹிமாலயம், தமது சிம்மாசனத்தின் மீது அமர்ந்த சிவனாகவே அவருக்குக் காட்சியளித்தது.

ஒரு மாதம் கழித்து, விட்டு விட்டு அவர்மீது காளியின் ஆவேசம் வந்தது. அவளது தெய்விகத் தன்மை எங்கும் பரந்து கிடந்ததைக் கண்டார். நான்கு வயதுச் சிறுமியிடமும் காளியின் சொரூபமே அவருக்குத் தென்பட்டது. ஆனால் சாந்தமான உருவத்தில்தான் காளி அவருக்குத் தோற்றம் அளித்தாள் என்பதில்லை. அவரது தீவிரமான தியானத்தின் காரணமாகக் காளியின் கருமேகமும் தென்பட்டது. பயங்கர மான ஒரு தோற்றம். வாழ்க்கை என்ற மாயத் திரையின் பின்னால் ஒளிந்திருக்கும் சக்திவாய்ந்த நாசகாரியைக் கண்டார். உயிர் வாழ்பவர்கள் அருகில் திரள் திரளாகச் சென்றதால்

எழுந்த தூசு மண்டலம் அவளது உருவத்தை மறைத்திருந்தது. ஒரு நாள் மாலையில் ஜுர வேகத்துடன் காகிதம் பென்சில் எடுத்து எழுதலானார். 'அன்னை காளி' என்ற பிரசித்தி பெற்ற கவிதையைப் புனைந்தார். பின்னர் களைத்துப் போய்விட்டார்.

விண்மீன்கள் மறைந்துபட
முகில்மீது முகில் அடுக்க
இருள் குலுங்கிப் பரந்தொலிக்க
காற்றெங்கும் சுழன்று அதிர,
எண்ணற்ற பித்தர்கள் சிறைதப்பிக்
கூத்தாடும் வெறியாட்டம் காண்!
திமு திமென மரங்கள் வேர் சாய
அனைத்துமே நெடுக வாரிவீச
துறைதனில் கலந்தது கடலும்
மலைமலையாய் அலைவரிசை கடைந்தேறிக்
காரிருளாம் வான்மீது விம்மி மோத
மையிருட்டில் படர்கின்ற மின்வெட்டில்
ஆயிரமாயிரம் வகை நிழலாட்டம்,
கரு மரணம், காலன் கருணைதனில்
இடரும் துயரும் சிதறிட
ஆனந்தக் கூத்து ஆடுதல் பார்.

வா! வா! அன்னாய்! வா!
பயங்கரம் என்ற திருப்பெயராய்!
சாவே நினது மென்மூச்சு.
அதிர்ந்து வைக்கும் அடியொன்று
உலகை மீளாது ஆழ்த்திவிடும்.
அனைத்தையும் அழிக்கும் காலதேவி!
வா! வா! அன்னாய் வா!
மிடிமை ஏற்கும் துணிவோனே,
சாவை அணைக்கும் பெரியோனே,
அழிக்கும் ஊழிக் கூத்தோனே—
அன்னை வருவாள் அவனிடமே.

நிவேதிதாவிடம் கூறினார்: "இனிமையிலும் மகிழ்ச்சியிலும் போலவே தீமை, பயங்கரம், துக்கம், அறிவு ஆகியவற்றிலும் அன்னையைச் சுயமாகக் கண்டறிவதற்குத் தெரிந்துகொள். உன் கழுத்தில் மலர்மாலையை அணிவிப்பவர்கள் முட்டாள்கள். அன்னையே, அப்படி அணிவித்துவிட்டுப் பயத்துடன், கிலியுடன் பின்னோக்கிச் சென்று உன்னைக் கருணையே

உருவானவள் என்கிறார்கள். மரணத்தைப் பற்றித் தியானம் செய்து பாருங்கள். பயங்கரமானதைப் பூசை செய்யுங்கள். பயங்கரமாக இருப்பதைத் தொழுவதன் மூலமாகத்தான் அதன் பயங்கரத்தை அகற்றி அமரநிலையை எய்த முடியும். சித்திர ஹிம்சையில்கூட ஆனந்தம் இருக்க முடியும். அன்னையே பரப்பிரம்மம். அவளது சாபமும் நல்லாசியே. அகங்காரம், சுயநலம், ஆசை ஆகிய அனைத்துமே இதயம் என்ற இடு காட்டில் சுட்டெரிக்கப்பட வேண்டியவை. அப்போதுதான் அன்னை காட்சியளிப்பாள்.''

இந்தச் சூறாவளி அந்த ஆங்கில மாதைப் பிடித்து உலுக்கி விட்டது. பேயறைந்த நிலையை உண்டுபண்ணியது. தமது மேற்றிசை மதத்தில் காணப்பெற்ற ஒழுங்கு முறையும் நிம்மதியும், இந்த இந்திய தீர்க்கதரிசி புலப்படுத்திய புயலில் மறைந்து கொண்டிருப்பதைக் கண்டார். அவர் எழுதினார் :

''பூஜையின் அடிப்படையில் உறையும் அகங்காரமானது, அன்பு நிறைந்த கடவுளிடம், தெய்வத்திடம், ஆறுதல் தரும் பகவானிடம் காட்டுகின்ற பக்தியாகப் புத்துருப் பெறுகிறது. ஆனால் பூகம்பம், எரிமலை ஆகியவற்றிலும் தென்படும் கடவுள் பால் அந்த இதயம் ஈடுபாடு கொள்வதில்லை. இதை அவர் கூறியது எங்களைப் பூராவாக ஆட்கொண்டுவிட்டது. இத்தகைய பூஜையானது வெளித்தோற்றத்தையே கருத்தில் கொண்டது என்று ஹிந்துக்கள் கூறுகிறார்கள். ஆனால் நல்லதின் மூலம் மட்டுமின்றி, தீமையின் மூலமும் கடவுள் பிரகாசிக்கின்றார் என்ற போதனையின் உண்மையை அறியும் மனப்பான்மைதான் அதிக தைரியம் உடையது. மனப்பாங்கும், மனோபீஷ்டமும் உருவத்தைக் கண்டு பிரமிப்பதாக இருக்கலாகாது. அது உண்மை நிலையில் காணப்படவேண்டுமாயின், சுவாமி விவேகானந்தர் கண்டிப்பாகக் கூறியபடி, நெஞ்சில் உறுதியுடன்கூட நாட வேண்டியது வாழ்வு அல்ல, சாவுதான். கத்தி முனைமீது குதித்துப் பாய்ந்து சாசுவதமாக அந்தப் பயங்கரச் சொருபத்துடன் ஒன்றிவிடுவதுதான்.''

மீண்டும் இந்த ஆவேசநிலையை, வீரமே எடுப்பாக இருக்கவேண்டுமென்ற மன உறுதியைக் காண்கிறோம். விவேகானந்தர் கூறியபடி அதுவே செயலாற்றலின் கேந்திரம், இறுதியான உண்மை. அதன் பயங்கரம் அனைத்திலும் தென்படவேண்டும். மனசு பலவீனப்படும்படி விடலாகாது. நம்பிக்கை என்பது பிரதியுபகாரமாக எதையும் கோருவது

இல்லை. அது வரம்பின்றித்தானே கொடுக்கின்றது. 'கொடுப்பது திரும்பப் பெறுவதற்காக' என்று பேரம் பேசும் மனப்பான்மையை அது வெறுக்கிறது. வாக்களிக்கப் பெறும் சுவர்க்கத்தையும் அது புறக்கணிக்கிறது. அதிலிருந்து வெளிவரும் சக்தியானது செவ்விரும்பைச் சம்மட்டியால் அடித்து உருவாக்கும் உருக்குப் போன்ற உறுதி படைத்தது.

சக்தி வாய்ந்த இந்த இன்ப அநுபவத்தை மாபெரும் கிறித்துவத் தவசிகள் அநுபவித்துள்ளனர், இன்னும் சுவைத்து வருகின்றனர். பாஸ்கலுக்குக் கூட இந்த அநுபவம் ஏற்பட்டது. ஆனால் செயலாற்றுவதினின்றும் விலகி நிற்கும், பற்றற்ற மனப்பான்மையில் அது கொண்டுபோய்விடவில்லை. விவேகானந்தரை அது செயலில் ஊக்குவித்தது. முன்னைவிடப் பதின்மடங்கு அதிகமான புத்துரம் பெற்று, பேரார்வத்துடன் கூட, உருக்குப் போன்ற உறுதியுடன் போராட்டத்தில் அவர் குதித்தார்.

உலகத்தின் துயர்கள் அனைத்தையும் நீக்குவது தமது பணி என நினைத்து அவர் உழைத்தார். "உலகில் யாருக்காக எங்கேனும் அதிர்ச்சி வந்துறுமாயின், அது எங்கள் குருநாதனின் இதயத்தைத் தொடாமல் இருக்காது. எந்த வலியாக இருந்தபோதிலும், மரணநிலையாக இருந்தபோதிலுங்கூட அவரிடமிருந்து அன்பும் ஆசியுமே கிடைக்கும்" என்று நிவேதிதா எழுதினர்.

"நான் மரணத்தின் வடிவத்தைக் கட்டி அணைத்துக்கொண்டேன்" என்று விவேகானந்தர் கூறுகிறார். பல மாத காலம் அது அவரைப் பிடித்துக்கொண்டிருந்தது போன்ற நிலைமை நீடித்தது. அன்னையின் கீர்த்தி தவிர வேறு எதுவும் அவர் காதில் ஒலிக்கவில்லை. இந்நிலை அவரது ஆரோக்கியத்தை மிகக் கடுமையாகப் பாதித்தது. அவர் திரும்பி வந்தபோது ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்ட சகோதரத் துறவிகள் பயந்து போயினர். மிகக் கடுமையான ஏகாக்கிர சித்தத்தில் அவர் ஆழ்ந்து கிடந்தார். பத்துத் தடவை ஒரு கேள்வியைக் கேட்டாலும் அவரிடமிருந்து பதில் வராது. இதற்குக் காரணம் தீவிரமான தவத் தீயே என்பதை அவர் உணர்ந்துகொண்டார்.

"சிவபெருமானே எனது மூளையில் பிரவேசித்துவிட்டார். அவர் விட்டுச் செல்ல மறுக்கிறார்." இம்மாதிரி தெய்வங்கள் நேரடியாக வந்து மக்களை ஆட்கொள்வது என்பது ஐரோப்

பாவில் பகுத்தறிவால் பக்குவப்பட்ட மனத்தினருக்கு வெறுப்பாக இருந்தது. ஒரு வருஷம் கழித்து இந்த அநுபவத்தைப் பற்றித் தமது அன்பர்களுக்கு விவேகானந்தர் விளக்கம் கொடுத்தார். ''மனித ஆன்மாக்கள் மட்டுமின்றி எல்லா வகை ஆன்மாக்களும் ஒன்ருக இணைந்த பரிபூரண நிலைதான் உருவமுள்ள கடவுள். எல்லாம் சேர்ந்த சொருபத்தின் மனோபீஷ்டத்தை யாராலும் எதிர்த்து நிற்க முடியாது. அதுதான் நியதி என்று நாம் அறிந்திருப்பது. சிவன், காளி என்று நாம் சொல்லுகையில், அந்த வார்த்தைகள் தரும் பொருள் அதுவே.''

மிகுந்த சக்தி வாய்ந்த நிலையில் உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடுகையில், விவேகானந்தர் தீ மயமான தமது மகத்தான அநுபவத்திலிருந்து புதுப் புது உருவங்களைச் சமைத்துக் கொடுத்தார். ஆனால் மேலை நாடுகளில் இத்தகைய சூழ்நிலையிலும் பகுத்தறிவாதந்தான் பேசுவர். ஒரு கணங்கூட, அத்வைதத்தில் இருந்த தீவிர நம்பிக்கையானது அசைந்து கொடுக்கவில்லை. அவர் சென்றது ராமகிருஷ்ணரது பாதைக்கு நேர் எதிர்த்திசையில். ஆனால் ராமகிருஷ்ணரைப் போலவே அவரும் பிரபஞ்சம் அனைத்தும் ஒன்றிய காட்சியையே கண்டார். வட்டமும் மையமும் ஒன்றிவிடுவது போன்ற, வியக்கத்தக்க மனித உள்ளத்தின் இசைவு ; எல்லா ஆன்மாக்களும் ஒன்று சேர்ந்த மொத்த சொருபமும் ஜீவாத்மாவின் தனி நிலையும். 'ஓம்' என்ற பிரணவம் இவற்றில் மேலோங்கிய நிலை. இவை அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் அந்தப் பிரணவமானது மீண்டும் சாசுவதமான நாதப் பிரம்மத்தில் ஒன்றிவிடுகிறது. அதுவே ஆதியும் அந்தமும். அந்த நாதப் பிரம்மமே முடிவற்ற இருதிசை இயக்கங்களின் இறுதி லட்சியமும் ஆகும். இந்த க்ஷணத்திலிருந்துதான் விவேகானந்தர் ராமகிருஷ்ணரே என்ற எண்ணம் தெளிவற்ற வகையில் சகோதரத் துறவிகளிடம் தென்படலாயிற்று.

''உங்களுக்கும் ராமகிருஷ்ணருக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா என்ன ?'' என்று பிரேமானந்தா ஒரு தடவை அவரிடம் கேட்டார்.

அவர் புத்தம் புதிதாகப் பேலூரில் நிறுவப் பெற்றிருந்த மடத்துக்குத் திரும்பினுர். 1898 டிசம்பர் 9-ஆம் தேதி அதன் மகாபிஷேகம் நடைபெற்றது. அதற்குச் சிலதினங்கள் முன்னுல் நவம்பர் 12-ஆம் தேதியன்று கல்கத்தாவில் காளியின் திருவிழா நடைபெற்றது. நிவேதிதாவின் பெண்களுக்கான பள்ளி திறக்கப்பட்டது. தேக நிலை நன்ருக இல்லை. அடிக்கடி ஆஸ்துமா

வினல் தாக்குண்டு மூச்சு விட முடியாத நிலை. நீரில் மூழ்கும் தருவாயில் உள்ளவனது முகம் நீலம் பாரித்துக் கிடப்பதைப் போல் ஒரு தோற்றம். ஆனல் எதையும் பொருட்படுத்தாது தமது மிஷனின் நிர்மாண வேலைகளைச் சாரதானந்தரின் துணையுடன் கூடத் தொடர்ந்து கவனித்துவந்தார். தேனீக் கூட்டம் போல் சேர்ந்து எல்லாரும் பணியாற்றினர். ஸம்ஸ்கிருதம், கீழ்த்திசை நாடுகளின் தத்துவம், மேற்றிசை நாடுகளின் தத்துவம், கைவேலை, தியானம் ஆகிய எல்லாமே இங்கே போதிக்கப் பெற்றன. அவரே பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கினர். தத்துவ போதனையை அடுத்துத் தோட்டத்தைப் பண்படுத்தினர். கிணறு வெட்டினர். மாவைப் பக்குவப்படுத்தி ரொட்டி சுட்டார். அவர் வேலையே உருவான, ஜீவசக்தியுள்ள பிரார்த்தனையாக விளங்கினர்.

''பரப்பிரம்மத்தின் சேவைக்கெனத் தம்மைப் பணித்துக் கொண்டுள்ள ஒருவரால்தான், ஒரு பெரிய துறவியால்தான் மாபெரும் ஊழியராக இருக்க முடியும். ஏனெனில், அவருக்குப் பற்று என்பது கிடையாது. புத்தரையும், கிறிஸ்துவையும் விடப் பெரிய ஊழியர்கள் இருந்ததில்லை. எந்தப் பணியுமே மதச் சார்பற்றதாக இருக்க முடியாது. எல்லா வேலையுமே துதி பாடுவதும், பூசனையுமாகத்தான் இருக்க முடியும்.''

வேலையில் மேல் அந்தஸ்து, கீழ் அந்தஸ்து என்ற வேறுபாடு இல்லை. எந்தப் பயனுள்ள பணியும் சிறப்பு வாய்ந்ததுதான்.

''நான் என் வாழ்க்கையில் இன்னும் எஞ்சியுள்ள காலத்தை மடத்தின் சாக்கடைகளைச் சுத்தம் செய்வதில் கழிக்கவேண்டுமென்று எனது குருபாயிக்கள் சொல்லுவார்களானல், நிச்சயமாக அதைச்செய்துகொண்டிருப்பேன். பொது நன்மையை முன்னிட்டு, கீழ்ப்படிந்து நடப்பது எவ்வாறு என்று எவன் அறிகின்றனே, அவன்தான் பெரிய தலைவனுக விளங்க முடியும்.''

முதல் கடமை 'பற்றை' விடுவது.

''பற்றுதலை விடாமல் எந்த மதத்தையும் நிலைத்து நிற்கச் செய்ய முடியாது.'' (ஆழ்ந்த அநுபவத்துக்கு வேறு எதுவும் அஸ்திவாரமாக அமைய முடியாது என்று அவர் கூறியிருக்கலாம்.)

பற்றுதல்களைத் துறந்த மனிதன், அதாவது சந்நியாசி மறைகளின் உச்சியின் நிற்கிறான் என்று வேதங்களே கூறுகின்றன. பிரிவுகள், சித்தாந்தங்கள் ஆகியவற்றிடமிருந்தும், ஞானிகளிடமிருந்தும் அவன் விடுபடுகிறான். ஆண்டவனிடம் மட்டுமே உறைகின்றான். ஆண்டவன் அவனிடம் உறைகின்றான். இந்த நம்பிக்கை மட்டும் அவனுக்கு ஏற்பட வேண்டும்.

''சுயநம்பிக்கை படைத்த ஒரு சில மக்களின் சரித்திரந்தான் உலகத்தின் வரலாறு. அந்த நம்பிக்கை பலவிதமாக அமைய வேண்டுமாயின், உள்ளே உறையும் தெய்வாம்சம் துணைபுரிய வேண்டும். நீ எதை வேண்டுமானாலும் செய்யலாம்; ஆனால் வரம்பற்ற அந்தச் சக்தி வெளிப்படும்படி செயலாற்றுவதற்குப் போதியவாறு நீ முயலாவிடில் தோல்விதான் கிட்டும். ஒரு மனிதன் அல்லது ஒரு தேசம் தன்னம்பிக்கையை இழந்து விட்டால் மரணம் நிகழ்கின்றது. முதலில் உங்களிடம் நீங்கள் நம்பிக்கை வைத்துக்கொள்ளுங்கள். பிறகு, கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். மனோதிடம் படைத்த ஒரு சிலர் இந்த உலகத்தையே ஆட்டிவைத்துவிடக் கூடும்.

''தைரியமாக இருங்கள். தைரியமே நற்குணங்களில் முதன்மையானது. எப்பொழுதுமே முழு உண்மையைப் பேசும் துணிவு இருக்கட்டும். பாகுபாடின்றி, ஒளிவு மறைவின்றி, அச்சமின்றி, அடிப்படையை விட்டுக்கொடாமல், எப்போதும் எல்லாரிடமும் உண்மை பேசுங்கள். பணக்காரர்களையும் பெரிய மனிதர்களையும் பற்றிப் சிரமப்படாதீர்கள். பணக்காரர்களுடன் சந்நியாசி எவ்வித உறவும் கொள்ளலாகாது. பணக்காரனுக்கும் மரியாதை செய்து, ஆதரவை நாடி அவனிடம் தொங்கிக் கொண்டிருப்பது வேசியின் நடத்தைக்கு ஒப்பானது. சந்நியாசியின் கடமை ஏழைகளுக்கு உழைப்பதே. ஏழைகளிடம் அன்புடன் கூடிய பரிவு காட்ட வேண்டும். தனது முழுச் சக்தியையும் ஈடுபடுத்திச் சந்தோஷத்துடன் அவர்களுக்குச் சேவை புரியவேண்டும்.

''உங்கள் சொந்த மோட்சத்தை நீங்கள் நாடுவீர்களானால், அது நரகத்தில்தான் கொண்டுபோய் விடும். மற்றவர்களுடையமோட்சந்தான் நீங்கள் நாடுவதாக இருக்கவேண்டும். மற்றவர்களுக்காக உழைப்பதன் காரணமாய், நீங்கள் நரகத்திற்குப் போக நேரிடினும், அது சொந்த மோட்சத்தை நாடிச் சென்று அடைவதைவிட எவ்வளவோ மடங்கு சிலாக்கியமானது. ராமகிருஷ்ணர், தாம் அவதரித்த உலகுக்

காகத் தம் உயிரையே அர்ப்பித்துக் கொண்டார் என்றால் நானும் . என் உயிரைத் தியாகம் செய்வேன். நீங்களும் உங்களில் ஒவ்வொருவரும் அதேமாதிரி செய்யவேண்டும். இந்தப் பணிகள் அனைத்துமே ஆரம்ப நிலை-வேலைகள் தாம். நான் சொல்லுவதை நம்புங்கள். நாம் சிந்தும் ரத்தத்திலிருந்து இப் பிரம்மாண்டமான, வீரதீரம் படைத்த கடவுளின் ஊழியர் திருக் கூட்டம் ஒன்று எழும். அது உலகம் அனைத்தையுமே புரட்சி கரமாக மாற்றிவிடும்.''

அவரது சொற்கள் சிறந்த இசை போன்றவை. பீதாவானது பாணியில் சொற்றொடர்கள் உதிரும். பலர் சேர்ந்து பாடுகின்ற ஹாண்டல் பிரார்த்தனைபோல் அதன் சந்தம் மனத்தைத் தன் வயப்படுத்தும்.

முப்பது வருஷங்களுக்கு முன்னர் அவர் திருவாய் மலர்ந் தருளியவற்றை, நான் இன்று புத்தகங்கள் மூலம் படிக்கை யில்கூட ஒரு மின் அதிர்ச்சி என் உடல் வழியே ஊடுருவிச் செல்லுவதைக் காண்கிறேன். இந்த வீரரின் வாயிலிருந்து சுடச் சுட வந்த வார்த்தைகளை, மேலும் அவற்றைக் கேட்டவர் களுடைய அநுபவம் எவ்வாறு இருந்திருக்க வேண்டும்.

மரணம் நெருங்கிவிட்டதாக அவர் உணர்ந்தார். ஆனால், ''வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். போராடிய வண்ணமே நான் மடிவேன். இரண்டு வருஷம் என் உடல் பட்ட கஷ்டத் தினால் எனது வாழ்க்கை இருபது வருஷம் சுருங்கிவிட்டது. ஆனால் ஆன்மா மாறுதல் அடையாமல் இருக்கிறது. அது எப்போதுமே இங்கே இருக்கிறது. அந்த ஆன்மா அதே பழைய முட்டாள்தான். ஒரு தனிக் கருத்துக்கூட இல்லாத முட்டாள்தான் அந்த ஆன்மா.''

அத்தியாயம் 10

# மேலை நாடுகளுக்கு இரண்டாவது யாத்திரை

தாம் தோற்றுவித்திருந்த பணிகளைத் தணிக்கைபார்க்கவும், தொண்டர்களுக்கு உற்சாகமூட்டவும் மேலை நாடுகளுக்கு இரண்டாவது யாத்திரையை விவேகானந்தர் மேற்கொண்டார். இந்தச் சமயம் மேல்ஜாதியினரும், மிகச் சீரிய வாழ்க்கை நடத்தி வந்தவரும், ஸம்ஸ்கிருதத்தில் புலமை மிக்கவருமான துரீயானந்தா என்ற சோதர ஞானி ஒருவரைத் தம்முடன் அவர் அழைத்துச் சென்றார்.

"சென்ற தடவை அவர்கள் ஒரு க்ஷத்திரியரைக் கண்டனர்; இப்போது அவர்களுக்கு ஒரு பிராம்மணனைக் காட்ட விரும்புகிறேன்" என்று அவர் கூறினர்.

தாம் மேலை நாடுகளிலிருந்து திரும்பி வந்த காலத்தில் இருந்த நிலைமைகளுக்கு முற்றும் மாறுபட்ட சூழ்நிலையில் அவர் சென்றார். அவருடைய தேகம் மிகவும் இளைத்திருந்தது. எனினும் அது சக்தி மயமாக இருந்தது. செயலும் போராட்டமுமே அவரது மூச்சு. தமது மக்கள், ஜீவனற்று, எதிலும் அக்கறை இல்லாத ஒரு நிலைமையில் இருந்ததால் விளைந்திருந்த ஆயாசத்தில், கார்சிகா தீவைக் கப்பலிலிருந்து பார்த்தவுடன், யுத்த மேதையான நெப்போலியனது நினைவு வரவே, அவனைக் கொண்டாட முற்பட்டார்.

அறவழியின் பெயரால் கோழைகளாக இருப்பதை அவர் அடியோடு வெறுத்தார். அதைவிட விறுவிறுப்புடன் இருந்து குற்றமிழைப்பதே மேல் என்று கருதினர். மேலை நாடுகளும் கீழை நாடுகளும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக இயங்க வேண்டுமென்ற நம்பிக்கை, போகப் போக, அவரது மனத்தில் ஆழப் பதிந்தது. இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், இளமையின் முழு மிடுக்குடன் இரண்டு ஜீவசக்தியுள்ள பிரகிருதிகள் இருந்து வந்தன. இவை இரண்டும் மகத்தான பரீட்சைகள், ஆனல் எந்தப் பரீட்சையும் இன்னும் முழுமை காணவில்லை

என்பதைக் கண்டுகொண்டார். அவை பரஸ்பரம் உதவி யளித்துக் கொள்வதாக இருக்கவேண்டும். அதே சமயத்தில் ஒன்றின் நிர்ப்பந்தமற்ற வளர்ச்சிக்கு மற்ருென்று மதிப்புத் தருவதாக இருக்கவேண்டும். அவற்றின் பலவீனங்களைக் கண்டிக்கும் மனத்தினராக அவர் இருக்கவில்லை. அவை இரண்டுமே நன்றி கெட்ட ஒரு சகாப்தத்தில் உருவாகி வந்தவை. எனவே ஒன்றேடொன்று கைகோத்துக்கொண்டு அவை வளர்ச்சி யடைய வேண்டும்.

பதினெட்டு மாதங்கள் கழித்து இந்தியாவுக்கு அவர் திரும்பியபோது வாழ்க்கையில் அடியோடு பற்றற்ற நிலையில் காணப்பட்டார். அவரது மனத்திலிருந்து பலாத்காரம் அடியோடு அகன்றுவிட்டது. மேற்கத்திய ஏகாதிபத்தியத்தின் உருமயக்கம் கலைந்து, அதன் மிருகத்தனத்தை அவர் கண்ணுற்ருர். அதன் கண்களை அவர் உற்று நோக்கினர். அவற்றில் பேராசையுடன் கூடிய துவேஷம் நிறையக் காணப்பெற்றது. தமது முதல் யாத்திரையின்போது அமெரிக்காவும் ஐரோப்பாவும், சக்தியில், ஸ்தாபன பலத்தில், வெளிப்படையான ஜனநாயக வாழ்வில் சிறப்புற்றிருந்தது அவரை ஈர்த்தது. ஆனல் இந்த யாத்திரையின்போது பணம் ஈட்டுவதில் ஒரு பேரார்வம், பேராசை; பணமே எல்லாம் என்ற உணர்வு, அதிலே உயர்நிலையடைவதற்கான போராட்டத்தின் கடுமை, மிகப் பெரிய அளவில் அதற்கான கூட்டுச் சேரும் போக்கு ஆகியவை இப்போது அவரால் கண்டறியப் பெற்றன. ஒரு மகத்தான சக்தியின் பெருமைக்கு வணக்கம் செலுத்த அவரால் இயலும்.

"ஆனல் ஓநாய்க் கூட்டத்தினிடையே எந்த அழகைக் காண இயலும்?"

"மேலைநாடுகளில் வாழ்க்கை அவருக்கு நரக அநுபவமாக இருந்தது" என்று நேரில் கண்ட ஒருவர் கூறுகிருர்.

மேலைநாடுகள் இவ்வுலகச் சாதனைகளில் மிக எடுப்பாக இருந்த நிலை அவரை இந்தத் தடவை வஞ்சிக்கவில்லை. சக்தியை நிர்ப்பந்தமாக விணடிப்பதால் ஏற்படும் அயர்ச்சி, மேலே காணப்படும் தெம்பு என்ற முகமூடிக்குள் ஆழ்ந்து சோகம் வதியும் நிலை — வெளிக்குத் தென்படாத இந்தத் துன்பியல் நிலையை அவர் கண்டுகொண்டார்.

நிவேதிதாவிடம் கூறினர்: "மேலைநாடுகளில் சமுதாய வாழ்வு வாய்விட்டுச் சிரிப்பதுபோல இருக்கிறது. ஆனல்

அந்தச் சிரிப்பின் பின்னால் ஒளிந்திருப்பது ஒரு புலம்பல். அது தேம்பித் தேம்பி அழும் அநுபவத்தில் முடிகிறது. வேடிக்கை, கேளிக்கை எல்லாம் மேல்பூச்சு விவகாரங்கள். உண்மையில் தீவிரமான துன்பியல் அநுபவந்தான் நிறைந்து காணப்படுகிறது. இங்கு (இந்தியாவில்) மேல்தோற்றம் துயரமும் இருள்படர்ந்த தாகவுமே இருக்கிறது. ஆனால் அதன் கீழே கவலையற்ற நிலையும் மகிழ்ச்சியும் உறைகின்றன.''

இந்தத் தீர்க்க தரிசனம் அவருக்கு எவ்வாறு ஏற்பட்டது? மரத்தின் மேல்பட்டையை உரித்து உள்ளே அதைத் துளைத்துப் பாழ்படுத்தி வரும் வியாதிபோல் வெளிப்பார்வைக்கு மேலை நாடுகள் எவ்வளவு கீர்த்தி வாய்ந்தவையாக இருந்தபோதிலும், அவரது தூரதிருஷ்டியானது, கண்ணுரைக் கண்டதை ஊடுருவிப் பார்த்து, துவேஷமும், வேதனையும், யுத்தமும், புரட்சியும் நிறைந்த ஆண்டுகளின் வருகையை எவ்வாறு முன்கூட்டியே கண்டுகொண்டது என்பது யாருக்குமே தெரியாது. அவரது இந்த யாத்திரையின் விவரங்களை முறைப்படி யாரும் எழுதி வைக்கவில்லை. இங்குமங்குமாகச் சில தகவல்களே கிடைத்துள்ளன. இந்தத் தடவை இந்தப் பணியைச் செய்வதற்கு அவருடன் கூடக் குட்வின் இருக்கவில்லை. ஒன்றிரண்டு தனிக் கடிதங்கள் வந்தன. அவை தவிர, அவரது சஞ்சாரங்களைப் பற்றியும், தூதின் வெற்றியைப் பற்றியும் தகவல் எதுவும் எழுதி வைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லத் தான் வேண்டும். அப்படி வந்த கடிதங்களில் ஆலமீடாவி லிருந்து மிஸ் மாக்லியாடுக்கு அவர் எழுதிய லிகிதம் மிக ரம்மியமானது.

லண்டனில் சிறிது தாமதித்துவிட்டு அவர் அமெரிக்கா சென்றார். அங்கு ஏறக்குறைய ஒரு வருஷம் தங்கியிருந்தார். அபேதானந்தர் தமது வேதாந்தப் பணியை முழுமுச்சுடன் செய்துகொண் டிருந்ததை அங்கே பார்த்தார். நியூயார்க் அருகில் மாண்ட்கிளேர் என்ற இடத்தில் துரியானந்தாவை ஓர் ஆசிரமத் தில் அமர்த்தினார். தேகம் உரமடைவதற்குக் காலிபோர்னியா உகந்த இடமாகையால், அங்கே தாம் செல்வது என முடிவு செய்தார். அங்கே பல மாதகாலம் ஆரோக்கிய நிலையில் அவரால் இருக்க முடிந்தது. அங்கே பல உரைகளை அவர் நிகழ்த்தினார். சான்பிரான்சிஸ்கோ, போர்ட்லண்ட், ஆலமீடா ஆகிய நகரங்களில் வேதாந்த கேந்திரங்களை நிறுவினார்.

சான்ட்டா கிளாரா ஜில்லாவில் 160 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு பெரிய இடம் தானமாகக் கிடைத்தது. ஆசிரமத்தை அங்கு

நிறுவினர். அங்கிருந்து கொண்டு, தேர்ந்தெடுத்த மாணவர் சிலருக்குத் துறவிகளாக வாழ்வதற்கான பயிற்சியைத் துரீயானந்தர் அளித்தார். அவருடன் சேர்ந்துகொண்ட நிவேதிதா நியூயார்க்கில் பல கூட்டங்களில் பேசினர். ஹிந்துப் பெண்களின் லட்சியங்கள், இந்தியாவின் தொன்மையான கலைகள் முதலியவை குறித்து அவர் பேசினர். நன்ருகக் கவனித்துப் பொறுக்கி யெடுக்கப்பட்ட ராமகிருஷ்ணரின் சிறு குழாம் மிகமிகச் சுறுசுறுப்பாக இருந்தது. வேலை செழிப்பாக வளர்ந்தது. அதன் கருத்துக்கள் பரவின.

ஆனல் அவர்களுடைய தலைவர், அவரில் முக்கால் பங்குக்கு மேல், இவ்வுலகத்திற்கு உரியவராக இருக்கவில்லை. அந்த மரத்தைச் சுற்றி நிழல் படர்ந்துகொண்டிருந்தது. அவை நிழல்தானு? அல்லது வேருெரு ஒளியின் எதிர்நிலைத் தோற்றமா? அவை சூரியனின் கிரணங்கள் விளைவித்த தோற்றங்கள் என்று சொல்வதற்கில்லை.

''எனது பணி சாசுவதமாக நின்றுவிட வேண்டும். எனது ஆன்மா முழுதும் அன்னையின் திருவடியில் ஒன்றிவிட வேண்டும். எனக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். மனநிலை ஆரோக்கியமாகவே இருந்து வருகிறது. சரீரத்தைவிட ஆன்மா அதிக சக்தியுள்ளதாக இருப்பதை நான் உணருகின்றேன். போராட்டங்கள் வெற்றி தோல்வியில் முடிகின்றன. நான் என் பொருள்களையெல்லாம் மூட்டை கட்டிவிட்டேன். விடுதலை அளிக்கும் அந்த மாபெரும் சக்திக்காகக் காத்திருக்கிறேன். சிவபெருமானே, ஓ சிவபெருமானே எனது தோணியை அக்கரை கொண்டு சேருங்கள். தக்ஷிணேசுவரத்தில் ஆலமரத்தின் கீழ் ராமகிருஷ்ணர் கூறிய அற்புதமான உரைகளை, ஆச்சரியத்தில் மூழ்கியவனுக முழுக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த சிறு பையன்தான் நான். அதுதான் என் உண்மைச் சுபாவம். பணிகள், நடவடிக்கைகள், நல்லது செய்வதுபோன்ற எல்லாமே அதன் மூலம் கிட்டிய அநுபவங்கள்தாம். இப்போது மீண்டும் குருநாதரின் குரல் கேட்கிறது. அதே பழைய குரல் எனது ஆன்மாவை பரவசப்படுத்துகிறது. பந்தங்கள் அகல்கின்றன, அன்பு வறண்டு கொண்டிருக்கிறது, வேலை உப்பு சப்பில்லாது போகிறது. வாழ்க்கை பசையற்றதாகிவிட்டது. குருநாதரின் குரல்தான் அழைத்துக் கொண்டிருக்கிறது. 'இறந்தோரை இறந்தோர் புதைத்துக் கொள்ளட்டும். நீ என்னுடன் கூட வா!' நான் வருகிறேன். என் அன்பிற்குரிய பெருமானே, நான் வருகிறேன். என்

முன்னால் நிர்வாண நிலையைக் காண்கிறேன். அதுவே சக்தி மயமான பெருங்கடல். சலனம் அதில் இல்லை, அதில் மூச்சுப் பேச்சில்லை. நான் பிறந்தது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. கஷ்டப்பட்டேன் என்பதும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். தவறுகள் இழைத்ததும் மகிழ்ச்சியே. அதே மகிழ்ச்சியுடன் சாந்தியை நாடுகிறேன். யாரும் என்னால் கட்டுண்ட நிலையில் இருக்கவில்லை. எந்த பந்தத்தையும் நான் எடுத்துச் செல்லவில்லை. பெரியவர் திரும்ப இயலாதவாறு போய்விட்டார். வழிகாட்டி குரு, தலைவர் போய்விட்டார்.''

அந்தப் பிரமிக்கத்தக்க காலநிலையில், கலிபோர்னியாவின் கீர்த்தி வாய்ந்த வெப்பம் தந்த வளத்தினிடையே, வனப்பு மிக்க தாவரச் செழுமையிடையே, அவரது மனோதிடம் சிறிது தளர்ந்தது. அல்லலுற்ற அவரது சரீரம் ஒரு கனவில் ஆழ்ந்தது. உடலும் ஆன்மாவும் தம் போக்கில் போகட்டுமென விட்டு விட்டார்.

''என் கைகளையோ, கால்களையோ ஆட்டும் துணிவு எனக்கு இல்லை. இங்குள்ள அற்புதமான சாந்தியைக் கலைத்து விடுவேனோ என்று பயப்படுகிறேன். இங்கே காணப்பெறும் அமைதி நிச்சயமாகப் பெருமை உடையதுதான் என்ற உணர்வு இருந்து வருகிறது. நான் ஆற்றிய பணியை ஊக்குவித்தது பேரார்வம். நான் காட்டிய அன்பின் பின்னால் இருந்தது எனது மமதை. எனது தூய்மையின் பின்னால் இருந்தது அச்சம். எனக்கு வழிகாட்டியாகப் பின்னால் இருந்தது ஆதிக்க ஆசை. இப்போது அவையெல்லாம் மறைந்து கொண்டிருக்கின்றன. நான் என் வழியில் போய்க்கொண்டிருக்கிறேன்.

''அன்னையே, நான் வருகிறேன். உனது இதயத்தின் அரவணைப்பை நாடி வருகிறேன். நீ என்னை எங்கு வேண்டுமானாலும் இட்டுச்செல். நாவற்ற, விஸ்தாரமான அற்புத உலகிற்கு அழைத்துச் செல்கிறாய். நான் நடிகனாக இருந்த காலம் மாறிவிட்டது. இப்போது நான் நாடகத்தைக் காண்போனாக ஆகிவிட்டேன். ஆனால் இதில்தான் என்ன அமைதி! எனது இதயத்தின் உட்புறத்திலிருந்து, மிகத் தொலைதூரத்திலிருந்து, வரும் முணுமுணுப்பாக அவை கேட்கின்றன. எங்கும் சாந்தி, எல்லாவற்றிலும் சாந்தி. இன்பமயமான சாந்தி. தூங்குவதற்கு முன்னர் சில கணங்கள் ஒருவன் உணர்ந்தறிவது போன்ற சாந்தி. லட்சியமின்றி, அன்பில்லாமல், உணர்ச்சிப் பெருக்கற்ற நிலையில் விஷயங்களைக் கண்டுணரும் மனநிலையே அது. நான் வருகிறேன். ஆண்டவனே, உலகம் இருக்கிறது. ஆனால்

அது அழகாகவும் இல்லை, விகாரமாகவும் இல்லை. உள்ளக் கிளர்ச்சியற்ற உணர்வாகவே அதைக் காண்கிறேன். இதில் தான் என்ன பேரருள்! எல்லாமே நல்லவையாக, அழகாகக் காணப்படுகின்றன. அவற்றின் தாரதம்மியத்தை நான் உணர முடியாமல் இருந்து வருகிறேன். என் சரீரத்தின் விஷயத்தி லேயே முதலில் இத்தகைய அநுபவம். ஓம். அதுதான் வாழ்க்கை.''

அம்பு இன்னும் பாய்ந்துகொண்டிருந்தது. ஆனால் அதன் இயக்கத்துக்குக் காரணம் முதலில் அதற்குத் தரப்பட்ட வேகம் அது பூமியிலே விழுந்தாக வேண்டிய, பயனற்ற கடைநிலையை அடைந்துவிட்டது. தூக்கத்திலாழ்ந்து விடுவதற்கு முந்திய சில கணங்களின் அநுபவத்தைப் போல் அதில்தான் என்ன இனிமை. இந்த வீழ்ச்சியில் என்ன இனிமை! விதியின் கண்டிப்பான இயக்கத்தால் உந்தப்பட்டு ஏற்றம் கண்ட பிறகு சக்தியை இழந்துவிட்ட நிலை. அம்பு காற்றில் மிதக்கிறது. ஆனால் அது வில்லிலும் இல்லை, இலக்கையும் அடையவில்லை.

விவேகானந்தர் என்ற அம்பு தனது பணியின் யாத்தி ரையை முடிக்கும் தருவாயில் இருந்தது. 1900ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதி அவர் கடலைக் கடந்து சென்றார். பாரிஸ் போனார். அங்கு மதங்களின் வரலாற்றைப் பற்றிய ஒரு காங்கிரஸ் நடந்தது. அதில் பேசுமாறு அவரை அழைத்தார்கள். ஒரு சர்வதேசக் கண்காட்சியின் பகுதியாக அதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். இது சிகாகோவில் கூடியது போன்ற ஸர்வமத மகாசபை அல்ல. இங்கே அதிகாரம் செலுத்திய கத்தோலிக்கர் அதை அநுமதிக்க மாட்டார்கள். மதங்களின் வரலாறு, விஞ்ஞானம் மட்டுமே முக்கியமாகக் கவனிக்கப் பெற்ற காங்கிரஸ் இது.

விவேகானந்தர் வாழ்க்கையிலிருந்து விடுபடும் கட் டத்தை அடைந்துவிட்டார். அவரது புத்திக்கு மட்டுமே தெம்பூட்டியது. அவரது ஆர்வமும் உடலும் உண்மையில் அது தளர்ந்துவிட்டன. ''வேதம் புலப்படுத்திய மதம் இயற்கையின் பூசனையின்றித் தோன்றியதுதானா?'' என்ற விஷயத்தை விவாதிக்குமாறு காங்கிரஸின் கமிட்டியார் அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அதைப்பற்றி ஓப்பர்ட் டுடன் அவர் சர்ச்சை செய்தார். வேதங்களைப் பற்றிப் பேசினார். அவையே ஹிந்து மதத்திற்கும் பௌத்த சமயத்துக்கும் பொதுவான அடிப்படை. பௌத்த மதத்துக்கு முந்தியதே

கீதையை அருளிய கிருஷ்ணனது காலம் என்பதை அவர் நிருபணம் செய்தார்.

இந்தியாவின் நாடகம், கலைகள், விஞ்ஞானங்கள் ஆகிய அனைத்துமே கிரேக்க செல்வாக்கின் விளைவாக வளர்ச்சி கண்டவை என்ற வாதத்தை அவர் நிராகரித்தார். தமது நேரத்தில் பெரும்பகுதியைப் பிரெஞ்சுக் கலாசாரத்தைப் புரிந்து கொள்வதில் அவர் செலவழித்தார். கல்வி கேள்விகளிலும் சமூக நல விஷயங்களிலும் பாரிஸ் வகித்துவந்த முக்கியத் துவம் அவருக்குப் பேராச்சரியத்தைக் கொடுத்தது.

'இந்தியா'வுக்கு ஒரு கட்டுரை எழுதி அனுப்பினர். ஐரோப் பியப் பண்பாட்டின் மூலாதாரமாகவும், கேந்திரமாகவும் பாரிஸ் விளங்குகிறது என்று அக்கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருந் தார். மேலை நாடுகளின் அறநெறிகளும், சமுதாய வாழ்வும் அங்கே தான் உருப்பெற்று வந்தன. அதன் சர்வகலாசாலை அமைந்த விதத்தைப் பார்த்துதான் மற்ற ஐரோப்பியச் சர்வகலா சாலைகளை உருவாக்கினர்கள் என்று அவர் கூறினர். "பாரிஸ் சுதந்தரத்தின் தாயகம், ஐரோப்பாவுக்கு அது புது வாழ்வை அளித்திருக்கிறது."

தமது நண்பர் ஸ்ரீமதி ஒலே புல், சகோதரி நிவேதிதா ஆகியோருடன் லான்னியானில் அவர் சிறிது காலம் கழித் தார். செய்ன்ட் மைக்கேல் தினத்தன்று அவரது பெயரைத் தாங்கி நிற்கும் மலைக்குச் சென்றார். ஹிந்து மதத்துக்கும் ரோமன் கத்தோலிக்க சமயத்துக்கும் நிறைய ஒருமைப்பாடுகள் இருந்து வருகின்றன என்ற நம்பிக்கை அவரது மனத்தில் வலுக்கலா யிற்று. ஐரோப்பாவில் ஆசிய ரத்தம் வெவ்வேறு வழிகளில் கலந்து காணப்படுகிறது என்பதையும் கண்டுகொண்டார். ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையே கொள்கையில் அடிப் படையான வேறுபாடு இருப்பதாக அவர் உணரவில்லை. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கு மிடையே ஆழ்ந்த தொடர்பு உண்டு. அதன் விளைவாகக் கட்டாயம் ஐரோப்பாவில் ஒரு மறுமலர்ச்சி வந்தே தீருமென்று அவர் திடமாக நம்பினர். கீழ்த்திசை நாடுகளிலிருந்து பாரமார்த்திகக் கருத்துக்களை எடுத்துக்கொண்டு ஜீவசக்தியுடன்கூட அது புதுமைப் பொலிவு பெறும் என்று அவர் கருதினர்.

பிரெஞ்சு மக்களின் மனநிலையை அறிவதற்காகப் பாரிஸில் அவர் நடத்திய ஆராய்ச்சிகளுக்குத் துணையாகப் பூஜ்யர் ஹயா சிந்தும், ஜீலஸ் பாய்ஸாம் மட்டுமே, இந்தத் தீர்க்கதரிசிக்குக்

கிடைத்தது வருந்தத்தக்கது. மேலை நாடுகளின் அறவாழ்க்கையை அவர் அங்கு ஆராய்ந்துகொண்டிருந்தார்.

வியன்னா, கான்ஸ்டான்டிநோபிள்வழியாகக் கீழ்த்திசையை நோக்கி அக்டோபர் 24ஆம் தேதி அவர் மீண்டும் கிளம்பினார். ஆனால் பாரீசை விட்டுச் சென்ற பிறகு வேறு எந்த நகரமும் அவரது மனத்தை அவ்வாறு ஈர்க்கவில்லை. ஆஸ்ட்ரியா வழியாகச் செல்லும்போது, "துருக்கி ஐரோப்பாவின் நோயாளி மனிதன் என்றால் ஆஸ்ட்ரியா ஐரோப்பாவின் நோயாளிப் பெண்" என்று அவர் கூறினார். ஐரோப்பா அவருக்கு வெறுப்பூட்டியது; அலுப்பையும் தந்தது. யுத்தம் வந்துகொண்டிருப்பதை அவர் நுகர்ந்தார். அதன் துர்நாற்றம் நாற்றிசையிலிருந்தும் எழுந்தது. "ஐரோப்பா ஒரு பெரிய ராணுவ முகாமாக இருந்து வருகிறது" என்று அவர் கூறினார்.

பாஸ்பரஸ் கடலின் கரைப்பகுதியில் சிறிது காலம் தங்கிச் சூபித் துறவிகளை விவேகானந்தர் பேட்டி கண்டார். அவர்கள் கிரீசில் இருந்து வந்தனர். ஏதன்ஸ், எல்யூசிஸ் ஆகியவற்றின் நினைவுகள் மேலெழுந்தன. கெய்ரோ மியூசியத்தில் அவற்றையெல்லாம் அவர் இறுதியாகக் கண்டார். வரவர, தாம் பார்த்தவற்றின் புறத்தோற்றங்கள் அவரைக் கவரவில்லை. அவற்றினின்று விலகிச் சென்று தியானத்தில் ஆழ்ந்தார். மேலை நாடுகளில் தாம் இருந்த கடைசிச் சில மாதங்களில் தம்மைச் சுற்றி நடக்கும் எல்லா விஷயங்களிலும் அவர் சிறிதும் அக்கறையே இல்லாத மனப்பான்மையினராக இருந்தார் என்று நிவேதிதா கூறியுள்ளார். அவரது ஆன்மா இன்னும் விரிவான உலகங்களை நோக்கிச் சிறகடித்துச் சென்றுகொண்டிருந்தது. எகிப்தில் அவர் தமது அநுபவத்தின் இறுதி நிலையை நெருங்கிக் கொண்டிருந்தார்.

திடீரென இந்தியாவுக்குத் திரும்பி வருமாறு கட்டளை கேட்டது. ஒரு நாள்கூடத் தாமதிக்காமல், அடுத்தாற்போல் கிடைத்த முதல் கப்பலில் ஏறி, தனியாக இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். தமது சரீரத்தைச் சிதையில் ஏற்றுவதற்காக வந்தார் என்றே சொல்லவேண்டும்.

# தேக விமுக்தி

விவேகானந்தரது விசுவாசியான பழைய நண்பர் அவருக்கு முன் காலமாகிவிட்டார். ஹிமாலயத்தில் தாம் காட்டிய ஆசிரமத்தில் அக்டோபர் 28ஆம் தேதி சேவியர் காலமானார். இந்தியா வந்தடைந்ததும், விவேகானந்தருக்குச் செய்தி எட்டியது. ஆனால் கப்பல் பயணத்தின் போதே இச் சோக நிகழ்ச்சியின் அறிகுறிகள் அவருக்குத் தென்பட்டன. ஓய்வு எடுப்பதற்காகப் பேலூரில் வசிக்காமல், தாம் மாயாவதி ஆசிர மத்திற்கு வருவதாகத் தந்தி அனுப்பினார்.

ஹிமாலயத்தில் ஏறுவதற்குச் சிரமம் மிகுதியாக விருந்த தருணம் அது. விவேகானந்தரது தேகநிலையில் அது அபாயம் நிறைந்தது. பனியில் நான்கு நாட்கள் பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். அவ்வாண்டு பனி மிகமிகக் கடுமை யாக இருந்தது. கூலிகளையும் சுமைதாங்கிகளையும் அமர்த்து வதற்குக் காத்திராமல், இரண்டு துறவிகளுடன் கூட அவர் கிளம்பிவிட்டார். வழியில் ஆசிரமத்திலிருந்து வந்த ஒரு துணைவர் சேர்ந்துகொண்டார். பனி வீழ்ச்சி, பனி மூட்டம், மேகப்படலங்கள் இவற்றிடையே அவரால் நடக்கக் கூட முடியவில்லை. மூச்சுத் திணறியது. உடன் வந்தவர்கள் கவலை யுடன்கூட மிகவும் சிரமப்பட்டு அவரை மாயாவதி மடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

1901ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் மூன்றும் தேதி அவர் அவ்விடத்தை அடைந்தார். ஸ்ரீமதி சேவியரை மீண்டும் கண்டதில் ஒரு சந்தோஷம். மலைகள் மீது அழகாக அமைந் திருந்த ஆசிரமத்தைப் பார்த்துப் பார்த்து, உணர்ச்சிப் பெருக் குடன் மனம் பூரித்தார். ஆனால் இரண்டு வாரந்தான் அங்கு அவரால் தங்கியிருக்க முடிந்தது. ஆஸ்த்மா அவரை மூச்சுத் திணற அடித்தது. கொஞ்சம் உடலை அலட்டி அசைத்தாலும் களைப்பு ஏற்பட்டது. 'என் சரீரம் போனமாதிரிதான்' என்று சொன்னார். ஜனவரி 13ஆம் தேதி தமது 38ஆவது பிறந்த நாளை அவர் கொண்டாடினார். உடல்நிலை எவ்வாறிருந்த போதிலும், அவரது உணர்வு எப்போதும் விருவிருப்பாகவே இருந்தது.

இந்த அத்வைத ஆசிரமம் அவரது விருப்பத்திற்கேற்ப, பரப்பிரம்மத்தின் தியானத்துக்காக நிறுவப்பட்டது. அதில் ராமகிருஷ்ணரின் தொழுகைக்கு என்று ஒதுக்கியிருந்த ஒரு மண்டபத்தைக் கண்டார். அவர் ராமகிருஷ்ணரது உணர்ச்சிமிக்க சீடர். இந்தக் கடைசி ஆண்டுகளில் தமது குருநாதரிடம் காட்டியது போன்ற முழுபக்தியை அதற்குமுன் அவர் எப்பொழுதும் வெளிப்படுத்தியதில்லை. ஆனால் இந்தத் தனி ஏற்பாடு அந்த இடத்தின் புனிதத்தைக் கெடுத்துவிட்டது என்று அவர் கோபப்பட்டார். அத்வைதம் மிக உயர்ந்த ஆத்மாநுபாவம். அதற்காக என்று அமைந்த ஒரு புனித ஸ்தலத்தில் துவைதத்தின் சாயையுள்ள இந்தப் பலவீனம் இடம் பெறலாகாது என்று தம்மைப் பின்பற்றியோருக்கு அவர் சற்றுக் கடுமையாகவே நினைவூட்டினார்.

எந்த ஜுரவேகம் அங்கு வரும்படி அவரை நிர்ப்பந்தித்ததோ, அதுவே புறப்பட்டுச் செல்லுமாறும் பணித்தது. போகாதிருக்கும்படி எதனாலும் தடை செய்ய இயலவில்லை, ஜனவரி 18ஆம் தேதி மாயாவதியிடமிருந்து விடை பெற்றுச் சென்றார். நான்கு நாட்கள் சறுக்கும் மலைச்சாரல்களில், கடுமையான பனி பெய்துகொண்டிருக்கையில், பயணம் செய்து 24-ஆம் தேதி பேலூர் மடத்தை மீண்டும் அடைந்தார்.

கிழக்கு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் உள்ள புனித ஸ்தலங்களுக்கும், டாக்காவுக்கும், ஷில்லாங்குக்கும் தமது அன்னையுடன் கடைசியாகச் சென்ற ஒரு யாத்திரையைத் தவிர பேலூரை விட்டு வெளியே வாரணாசியில் மட்டுமே 1902 இன் தொடக்கத்தில் சிறிது காலம் அவர் தங்கியிருந்தார். அவரது வாழ்க்கையின் மாபெரும் யாத்திரை முடிவுற்றது.

''அதனால் என்ன? 1500 ஆண்டுகளுக்குப் போதுமானதை நான் செய்திருக்கிறேன்'' என்று அவர் பெருமையுடன் கூறினார். தமது மடத்தில் காற்றோட்டமுள்ள ஒரு பெரிய முதல் மாடி அறையில் அவர் வசித்தார். அதற்கு மூன்று கதவுகளும் நான்கு ஜன்னல்களும் உண்டு.

''முன்புறம் கங்கை அகண்ட நதியாகச் சூரிய ஒளியில் நர்த்தனமாடிய வண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. சாந்தி நிலவியது. அபூர்வமாக ஒரு படகின் துடுப்பொலி அதைச் சிறிது கலைத்தது. எங்கே பார்த்தாலும் எல்லாம் பசுமையும் பொன்னுந்தான். வெல்வெட்டுப் போலப் புல் மெத்தென இருந்தது.''

விரதங்களைக் கண்டிப்பாக அனுஷ்டிக்கும் துறவியாக நாட்டுப்புற வாழ்க்கையில் அவர் ஈடுபட்டார். தோட்டத்திலும் குதிரை லாயங்களிலும் வேலை செய்தார். சாகுந்தல நாடகத்தில் வரும் துறவிகளைப்போல ஆசிரமத்தில் அன்புடன் வளர்த்த மிருகங்கள் அவரைச் சூழ்ந்திருந்தன. 'பாகா' என்ற நாய், 'ஹம்ஸீ' என்ற வெள்ளாடு, 'மாத்ரு' என்ற ஆட்டுக் குட்டி, அதன் கழுத்தில் சிறு மணி வளையம். ஒரு குழந்தையைப் போல் அதனுடன் துள்ளியோடி விளையாடுவார். ஒரு புள்ளிமான், ஒரு கொக்கு, வாத்துக்கள், பிற நீர்ப்பறவைகள் பசுக்கள், ஆடுகள் எல்லாம் இருந்தன. ஆனந்தாநுபவ நிலையில் அவர் நடை போடுவார், அழகான எடுப்பான சாரீரத்தில் பாடுவார். தமக்குப் பிடித்தமான சில மந்திரங்களை ஜபிப்பார் காலம் போனதே தெரியவில்லை.

அதே சமயத்தில் தமது துயரைப் பாராமல், மடத்தின் விவகாரங்களைக் கண்டிப்புடன் மேல் பார்த்து வரும் தலைமைத் துறவியாகவும் உழைத்து வந்தார். மரணம் ஏற்படும் வரையில் ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு வேதாந்த வகுப்புக்களை நடத்திவந்தார். தியானம் செய்வது எப்படி என்று போதித்தார். ஊழியர்களை ஊக்குவித்து, சக்தி வாய்ந்த தன்னம்பிக்கையை அவர்களிடம் வளர்த்தார். ஒழுங்கு முறையும், சுத்தமும் கெடாத படி கண்டிப்புடன் நடந்துகொண்டார். வார நிகழ்ச்சிகளை முன்கூட்டி ஒழுங்கு செய்யும் அட்டவணையைத் தயாரிப்பார். எல்லா நடவடிக்கைகளும் அன்றாடம் ஒழுங்காக நிறைவேறுகின்றனவா என்று கவனித்துவருவார். எதையும் அலட்சியம் செய்து அவரிடமிருந்து தப்பிவிட முடியாது. அவரைச் சுற்றி ஒரே வீரச் சூழ்நிலைதான் இருந்தது. ஆன்மா எப்போதும் சுடர்விட்டுப் பிரகாசமாக இருந்த ஓர் அநுபவம். அதனிடையே கடவுள் எப்போதும் காணப்பட்டார். ஒரு நாள் துறவிகள் பிச்சைக்குச் சென்றனர். அப்போது ஒரு மரத்தடியில் அவர் அமர்ந்திருந்தார். "பிரம்மத்தை நாடி நீங்கள் எங்கே செல்லுகின்றீர்கள்? பிரம்மம் எல்லாவற்றிலும் பரந்து கிடக்கிறது. இங்கே கண்ணுக்கு எதிராகப் பிரம்மத்தைக் காணுங்கள். மெய்யாகவுள்ள பிரம்மத்தை அலட்சியம் செய்துவிட்டு, மற்றவை மீது மனத்தைச் செலுத்துவோர் பார்த்து வெட்கப்பட வேண்டியவர்கள். உள்ளங்கை நெலிக்கனி போல் உங்கள் முன் பிரம்மத்தைக் காண்கிறீர்கள். உங்களால் பார்க்க முடியவில்லையா? இங்கே, இங்கே, இங்கே பிரம்மம் இருக்கிறது' என்றார்.,

அவரது சொற்கள் வீரியம் மிக்கவையாக இருந்தன. ஒவ்வொருவருக்கும் ஒருவகையான அதிர்ச்சி ஏற்பட்டது. கால்மணி நேரம் இருந்தவிடத்திலிருந்து அகலாது அவர்கள் கல்லாகச் சமைந்துவிட்டனர். கடைசியாக அவர்களைப் பார்த்து விவேகானந்தர், ''இப்போது நீங்கள் உஞ்சவிருத்திக்குச் செல்லலாம்'' என்று கூறினர்,

விவேகானந்தரது நோய் வரவர மோசமாயிற்று. நீரிழிவு வலுத்து உடலுக்குள் நீர் தேங்க ஆரம்பித்தது. கால்கள் வீங்கின. உடலின் சில பாகங்கள் மரத்துப் போகலாயின. தூக்கமே வரவில்லை. எவ்விதமான உடல் சிரமமும் கூடாது என்று தடுத்துவிட டாக்டர் விரும்பினர். கடும் பத்தியம் உத்தரவாயிற்று. ஜலமே குடிக்கக்கூடாது. ஒரு ரிஷிக்கு வேண்டிய பெருமையுடன் இந்தக் கட்டளைக்கு அவர் பணிந்தார். 21 நாள் ஒரு துளிநீர்க்கூட உள்ளே செல்லவில்லை. வாயைக் கொப்புளித்தபோதும் ஒரு துளியைக்கூட அவர் விழுங்கவில்லை. ''சரீரம் மனதுக்கு ஒரு முகமூடி. மனம் எதைக் கட்டளையிடுகிறதோ, அதற்குச் சரீரம் கீழ்ப்படிந்தாக வேண்டும். நான் இப்போது நீரைப்பற்றி நினைப்பதுகூட இல்லை. அது இல்லையே என்ற ஏக்கமும் இல்லை, எதை வேண்டுமானுலும் செய்ய என்னுல் முடியும் என்பதைக் காண்கின்றேன்.''

மடத்தின் தலைவர் நோய்வாய்ப்பட்டதால் அதன் பணிகளோ, விழாக்களோ நிற்கவில்லை. விழாக்கள், சம்பிரதாயமான சடங்குகளுடன், முழுமையுடன் நடைப்பெற வேண்டுமென அவர் விரும்பினர். ஆசார சீர்திருத்த விஷயத்தில் யாராவது அவதூறு கூறினுல், அதை அவர் பொருட்படுத்த மாட்டார். ஆனுல் ஆண்டவனிடம் நம்பிக்கையுள்ள எளிய மக்களின் ஜீவசக்தியுள்ள ஆஸ்திகத்தை இடையூருது காப்பாற்றி வந்துள்ள அழகான சடங்குகளின் கவிதா இனிமைக்கு அவர் எப்போதுமே பெருமதிப்புக் கொடுத்தார். வைதிக வெறி கொண்ட சிலரின் மனிதத் தன்மையற்ற போக்கை அவர் கண்டனம் செய்தது இதற்கு இடையூருக இருக்கவில்லை.

1901 அக்டோபரில் அன்னையை வழிபடும் துர்க்கா பூஜை என்ற மகோற்சவம் - வங்காளத்தின் தேசியத் திருவிழா நடைபெற்றது. அது நமது கிறிஸ்துமஸைப் போன்றது. மழைக்காலத்தின் நறுமணம் கலந்த இன்பப் பெருக்கையே அவர் பிரமாதமாகக் கொண்டாடினுர். பழைய விரோதங்களைப்

போக்கிக்கொண்டு, மக்கள் சமரசமாகப்போய்ப் பரிசுகளைப் பரிமாறிக் கொள்வது இந்த விழாக்காலத்தில் வழக்கம்.

மடத்தில் நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு மூன்று நாட்கள் அன்னம் அளிப்பார்கள். 1902 பிப்ரவரியில் ராமகிருஷ்ணரது உற்சவத்திற்கு முப்பது ஆயிரம் யாத்திரிகர்களுக்கு மேல் பேலூருக்கு வந்தனர். ஆனால் விவேகானந்தர் ஜுரத்தால் பீடிக்கப் பட்டிருந்தார். கால்கள் வீங்கியிருந்தன. எனவே அறையை விட்டு நகரவில்லை. தமது ஜன்னல் வழியாக நாட்டியங்களையும் சங்கீத நிகழ்ச்சிகளையும் கண்டார். தமக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த சீடர் கண்ணீர் உகுப்பதைக் கண்டு அவருக்கு ஆறுதல் கூறினார். தக்ஷிணேசுவரத்தில் குருநாதரது திருவடிகளில் தாம் கழித்த நாட்களை நினைவு கூர்ந்து மறுபடியும் அந்த அநுபவங்களை அடைந்தார்.

இன்னும் ஒரேயொரு மகிழ்ச்சி அவருக்குப் பாக்கியாக இருந்தது. ஒக கூரா என்ற புகழ்பெற்ற யாத்திரிகர் அவரைக் காண வந்தார். ஒடா என்ற புத்த மடத்து ஜப்பானியத் தலைவருடன் அவர் வந்தார். மதங்களின் காங்கிரஸ் நடைபெறவிருப்பதாகச் சொல்லி, அதற்கு வருமாறு விவேகானந்தரை அழைத்தார். இந்தச் சந்திப்பில் உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது. இவ்விருவரும் தமது உறவுமுறையைப் பரிமாறிக் கொண்டனர்.

"நாம் மீண்டும் சந்திக்கும் இரு சகோதரர்கள். உலகின் வெவ்வேறு கோடிகளிலிருந்து கிளம்பி வந்து ஒன்று சேர்ந்திருக்கிறோம்" என்று விவேகானந்தர் கூறினார். உலகப் புகழ் பெற்ற புத்த கயாவுக்குத் தம்முடன் வருமாறு விவேகானந்தரை ஒக கூரா கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். பல வார காலம் வெயிலின் கடுமை தணிந்திருந்த காரணத்தால், இந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டு கடைசித் தடவையாக வாரணாசியைக் காணச் சென்றார்.

விவேகானந்தரது வாழ்க்கையின் கடைசி ஆண்டில் அவர் பேசியதை, திட்டமிட்டதை, வெளியிட்ட அபிலாஷைகள் ஆகிய அனைத்தையும் சீடர்கள் விசுவாசத்துடன் குறிப்பெடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு மறுவாழ்வு அளிக்கும் விஷயம் எப்போதுமே அவர் மனத்தை விட்டு அகன்றதே இல்லை. ஆனால் கூடவே அவரது மனத்துக்கு மிகவும் உகப்பான பணிகள் இரண்டு இருந்தன.

ஒன்று, கல்கத்தாவில் ஒரு வேதக் கல்லூரியை நிறுவுவது. அங்கே பெரிய பண்டிதர்கள், தொன்மையான ஆரியப் பண்பாட்டையும், ஸம்ஸ்கிருதத்தையும் போதிக்க வேண்டும்; மற்றொன்று, பேலூரில் கங்கைக் கரையில் அமைந்திருப்பது போன்ற ஒரு மடத்தைப் பெண்களுக்காக என்று தனியாக நிறுவவேண்டும். அது ராமகிருஷ்ணரது மனைவியான தெய்வீக அன்னையின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும். இவை தாம் அவ்விரண்டு திட்டங்களும்.

சந்தல் இனத்தவரான சில வேலைக்காரர்களிடம் ஒரு நாள் தமது இதயத்தைத் திறந்து காட்டிக் கூறிய சொற்கள் தாம், உண்மையில் அவரது 'இறுதியான ஆன்மிக உயில்' என்று சொல்ல வேண்டும். அவர்கள் ஏழைகள். மடத்தின் நிலத்தைப் பண்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள். அவர்களை விவேகானந்தர் பெரிதும் நேசித்தார். ஒரு குழுவினருடன் தொடர்பு கொண்டு, அவர்களைப் பேசவைத்தார். தமது சோகம் நிறைந்த வரலாறுகளை அவர்கள் எடுத்துரைத்தபோது அவர் அநுதாபத்துடன் அழுதார். ஒருநாள் அவர்களுக்கு ஒரு நல்ல விருந்து வைத்தார். ''நீங்கள் எல்லோரும் நாராயணர்கள். இன்று நான் நாராயணனுக்கே விருந்து வைத்தேன்'' என்று கூறினார்.

தமது சீடர்களை நோக்கி அவர் மேலும் கூறினார்: ''இந்த எளிய சுபாவம் படைத்த, எழுத்தறிவில்லாத ஏழை மக்களைப் பாருங்கள். இவர்களுடைய மிடிமையை ஓரளவேனும் அகற்ற உங்களால் முடியுமா? இல்லாவிடில், நான் இந்தக் காஷாயத்தைத் தரித்துக்கொண்டு என்ன பிரயோஜனம்? சில சமயம் நானே எனக்குள் நினைப்பதுண்டு. 'மடங்கள் முதலியவற்றைக் கட்டுவதால் என்ன லாபம்? இவற்றையெல்லாம் விற்றுவிட்டு, கிடைக்கும் பணத்தைத் தெருவோர நாராயணர்களான இந்த ஏழைகளிடையே வினியோகிக்கலாமே? நாம் எந்த உறைவிடத்துக்காகக் கவலைப்பட வேண்டும்? மனத்தையே நாம் உறைவிடமாகக் கொள்ளலாம் அல்லவா? நமது நாட்டுமக்களுக்குப் போதிய உணவும் உடையும் கிடைக்க முடியாத நிலையில், நாம் எப்படி நமது வாயில் ஒரு பருக்கைச் சோற்றை மனமாரப் போட்டுக் கொள்ளலாம்? அன்னையே, இவர்களுடைய கஷ்டத்திற்கு விடிவு இல்லையா? மேலை நாடுகளில் சமயப் பிரசாரம் செய்வதற்கு நான் சென்ற நோக்கங்களில் ஒன்று, எந்த வகையிலாவது என் நாட்டைச் சேர்ந்த இந்த மக்களுக்கு வழி செய்ய வேண்டுமென்பது தான். இதை நீ அறிவாய். அவர்களுடைய வறுமையையும் வேதனைகளையும் கண்டு சில சமயம் நான் எண்ணமிடுகிறேன்:

'பூசைக்குரிய இந்த விரிவான சாதன வசதிகளையெல்லாம் தூக்கியெறிந்து விடுவோம். சங்கு ஊதி, மணியடித்து, தெய்வ உருவத்தின் முன் தூபதீபம் காட்டுவதை விலக்கிவிடுவோம். வித்தையினுல், சாஸ்திரம் கற்றதால், சாதனைகள் புரிந்ததால், மோட்சத்துக்குரியனவற்றைச் செய்ததால் விளைந்த அகந்தை அனைத்தையும் தூக்கியெறிந்து விடுவோம். கிராமம் கிராமமாகச் சென்று ஏழை மக்களின் சேவைக்காகப் பணித்துக் கொள்ளுவோம். பாமர மக்களின்பால் உள்ள கடமையைச் செல்வர்களுக்கு உணர்த்தி நம்பிக்கையை அவர்களிடம் உண்டு பண்ணுவோம். நமது ஒழுக்கத்தினுலும் ஆன்மபலத்தினுலும் தியாக வாழ்க்கையாலும் பணத்தைத் திரட்டி ஏழைகளுக்கும், மிடிமையில் ஆழ்ந்திருப்போருக்கும் சேவை புரிவதற்கான சாதனங்களையெல்லாம் பெறுவோம்.'

"அந்தோ, நம் நாட்டில் ஏழை எளியவரைப் பற்றிச் சிந்திப்போர் இல்லை. இவர்கள்தாம் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். இவர்களுடைய உழைப்பின்மூலந்தான் உணவு உற்பத்தியாகிறது. இவர்கள் ஒருநாள் வேலை செய்யாது நின்று விட்டால், நகரத்தில் பெரிய கூக்குரல் எழுகிறது. இவர்களிடம் அநுதாபம் காட்டும் நபர் நம்நாட்டில் எங்கே இருக்கிருர்? இவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கு பற்றுவோர் எங்கே?"

ஹிந்துக்கள் அநுதாபம் காட்டாததன் காரணமாக, ஆயிரக்கணக்கானபறையர்கள் சென்னை ராஜ்யத்தில் கிறிஸ்துவர்களாக மாறிவருகிருர்கள். பசிக்கொடுமையால் மட்டும் அவர்கள் மதம் மாறுகிருர்கள் என்று நினைக்க வேண்டாம். உங்களுடைய அனுதாபம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. 'என்னைத் தொடாதீர்கள்' என்று இடையருது அவர்களிடம் நீங்கள் கூறி வருகிறீர்கள். 'இதைத் தொடாதே, அதைத் தொடாதே' என்கிறீர்கள். நம் நாட்டில் சகோதர உணர்வு, தர்ம உணர்வு இன்னும் எஞ்சியிருக்கிறதா? இப்போது இருப்பதெல்லாம் தீண்டாமைதான். இந்த மானக்கேடான பழக்கவழக்கங்களையெல்லாம் உதைத்து விரட்டுங்கள். இந்தத் தீண்டாமைத் தடைகளை நான் தகர்த்தெறிய விரும்புகிறேன். அவர்கள் எல்லாரையும் ஒன்றாகத் திரட்டுவோம். ஏழைகளும், அநாதைகளுமாகவுள்ள எல்லாரும் வாருங்கள். வீழ்ச்சியுற்றிருப்போரும் மிதித்து நசுக்கப்பட்டோரும் வாருங்கள். ராமகிருஷ்ணரது பெயரால் கூறுகின்றேன்: 'நாம் அனைவரும் ஒன்றே, அவர்கள் ஏற்றம் காண வேண்டும் இல்லாவிடில் இந்திய மாதா ஒரு நாளும் விழிப்படைய மாட்

டாள். அவர்களுடைய உணவுக்கும் உடைக்கும் வேண்டிய வசதிகளைச் செய்துதர நம்மால் முடியவில்லையென்றால், நான் இருந்து என்ன நன்மை? அந்தோ, உலகத்தின் வழிவகையை அவர்கள் அறியமாட்டார்கள். எனவே, இரவு பகலாக உழைத்து உழைத்துப் பிழைப்பை நடத்துகிறார்கள். உங்கள் சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி, அவர்களுடைய கண்களுக்கு இட்டிருக்கும் திரையை அகற்றுங்கள். ஒரே பிரம்மந்தான் ஒரே சக்திதான் என்னிடமும் இருக்கின்றது. அவர்களிடமும் உறைகின்றது. அது எந்த அளவு அங்கு இடம் பெற்றிருக்கின்றது என்பதில் தான் வேறுபாடு. அவ்வளவுதான். தேசீய இரத்த ஓட்டமானது சமுதாயம் முழுவதிலும் ஒரே சீராக இல்லாத எந்தத் தேசமாவது வளர்ந்தோங்கியதாக உலக வரலாற்றில் நீங்கள் கண்டதுண்டா? கேட்டதுண்டா? இதை நிச்சயமாகத் தெளிந்தறியுங்கள். ஓர் உறுப்பு பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்ட உடலினால், பெரிய வேலை எதையும் செய்யமுடியாது.''

இந்தியாவில் ஒற்றுமையையும் சௌஜன்யத்தையும் நிலை நிறுத்துவதிலுள்ள சிரமங்களைத் துறவியல்லாத ஒரு சீடர் விவேகானந்தருக்கு எடுத்துக்காட்டினார். அவர் ஆத்திரம் அடைந்தார் ''எந்தப் பணியும் அதிகச் சிரமமானது என்று நினைப்பீர்களானால், இங்கு இனிமேல் நீங்கள் வர வேண்டாம். ஆண்டவன் அருளால் எல்லாமே சுலபமாகக் கைகூடிவிடுகின்றன. ஏழைகளுக்கும் துயரில் ஆழ்ந்திருப்போருக்கும் ஜாதிமத வித்தியாசம் இல்லாமல் சேவை செய்வதுதான் உங்கள் கடமை. உங்கள் செயலின் பயனைப்பற்றி யோசிக்க உங்களுக்கு அதிகாரம் ஏது? தொடர்ந்து செயலாற்றிக் கொண்டே போவதுதான் உங்கள் கடமை. காலக்கிரமத்தில் எல்லாம் சரியாகி நல்லபடியாக வேலை நடந்துவிடும். நீங்கள் எல்லோரும் புத்திசாலிகள். எனது சீடர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள். நீங்கள் செய்திருப்பது என்னவென்று எனக்குச் சொல்லுங்கள். மற்றவர்களுக்காக ஓர் உயிரை உங்களால் கொடுக்க இயலாதா? வேதாந்த விசாரத்தையும், தியானத்தையும் அடுத்த ஜன்மத்துக்கு ஒத்திப் போடுங்கள். இந்த சரீரம் பிறரது சேவைக்காகப் பயன்படட்டும். அப்போதுதான் நீங்கள் என்னிடம் வந்தது வீண்போகவில்லை என்பதை நான் கண்டுகொள்வேன்'' என்று எரிச்சலுடன் அவர் பதில் அளித்தார்.

சற்றுப் பின்னர் அவர் கூறினர்: ''இவ்வளவு தவத்திற்குப் பிறகு மிக உயர்ந்த உண்மை இதுதான் என்று நான் கண்டு

கொண்டேன்: கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் இருக்கின்றார். இந்த ஜீவன்கள் அனைத்துமே கடவுளின் எண்ணற்ற வடிவங்கள். வேறு எந்தக் கடவுளரையும் நாடிப் போகவேண்டியதில்லை. எல்லா ஜீவன்களுக்கும் சேவை செய்கிறவன்தான் கடவுளைத் தொழுதவனாகின்றான்.

''அன்புமிக்க இந்த மாபெரும் சிந்தனை சுயமாக ஜொலிக்கிறது. அஸ்தமிக்கும் சூரியன் அடிவானில் வர்ணஜால விஸ்தாரத்துடன் மறைவதற்கு முன்பு மேகங்களை ஊடுருவிப் பிரகாசிக்கிறான். மக்கள் எல்லாரும் ஒரே கடவுளின் புதல்வர்கள். எனவே, சமநிலையில் இருப்பவர்கள். வேறு கடவுள் கிடையாது. கடவுளுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று விரும்புகிறவன் மனிதனுக்குச் சேவை செய்ய வேண்டும். அதிலும் அடித்தளத்தில், ஏழ்மையில் இழிநிலையில் இருப்பவர்களுக்குத் தொண்டுபுரிய வேண்டும். தளைகளை எல்லாம் தகர்த்தெறியுங்கள். தீண்டாமை மனிதத்தன்மையற்றது. இந்தியாவில் அதன் குரூரம் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் அது இந்நாட்டிற்கு மட்டுமே உரித்தானது என்று நினைக்க வேண்டாம். பகல்வேஷ ஐரோப்பாவிலும் பறையர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்களிடமிருந்து சமூகம் விலகி ஓடுகிறது. சகோதரர்களே, கைகொடுத்து அவர்களைத் தூக்கிவிடுங்கள்.

விவேகானந்தரது சீடர்கள் அவரது சங்கநாதத்துக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்துள்ளனர். ஏழைகளுக்கும் தீண்டாதோருக்கும் உதவியளிப்பதில் ராமகிருஷ்ணரது மிஷன் சிறிதும் சலிப்புக் காட்டுவதேயில்லை. சந்தல் இனத்தவரை மிஷன் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று தமது மரணப்படுக்கையில் விவேகானந்தர் கூறிவிட்டுப் போனார். எனவே அவர்கள் விஷயத்தில் அது விசேஷக் கவனம் செலுத்தி வருகிறது.

''ஏழைகளே, உரிமை மறுக்கப்பட்டவர்களே, காலடியில் மிதிக்கப்படுகிறவர்களே, எல்லோரும் வாருங்கள். நாம் அனைவரும் ஒன்றே'' என்று கோஷித்தவரது கரத்திலிருந்து, தொடர்ந்து அப்பணியை நடத்தி வைக்கும் பொறுப்பை வேறொருவர் மேற்கொண்டார். தீண்டப்படாதவர்களுக்கு அவரது உரிமைகளையும், கண்ணியத்தையும் மீண்டும் அளிக்கும் புனிதமான போராட்டத்தைக் காந்திஜி ஏற்றுக்கொண்டுள்ளார்.

மரணம் நெருங்கி வரும் சமயத்தில் கர்வம் என்பது அடியோடு வீணான உணர்வு என்பதை விவேகானந்தரது

கர்வ சுபாவமே கண்டு கொண்டது. உண்மையான மகத்துவம் சின்னஞ்சிறு விஷயங்களில்தான் பொதிந்து கிடக்கிறது. 'எளிமையான, வீரச்செறிவுள்ள வாழ்க்கையில்' இருக்கிறது என்பதை அவர் கண்டுகொண்டார்.

''எனக்கு வயதாக ஆகச் சின்னஞ்சிறு விஷயங்களில் மகத்துவத்தை நான் வர வர அதிகமாகக் காண்கிறேன்'' என்று சகோதரி நிவேதிதாவிடம் அவர் கூறினார். ''பெரிய அந்தஸ்தில் இருக்கும் எவராலும் பெரிய மனிதராக இருக்க முடியும். புகழின் பிரகாசத்தில் கோழையும் தைரியம் அடைந்து விடுவான். உலகம் காத்துக்கொண்டே இருக்கிறது. யாரும் அறியாத சாமானிய மக்கள் தமது கடமைகளைச் சந்தடியின்றி, இடையறுது தொடர்ந்து ஆற்றி வருவதில்தான் உண்மையான பெருமை இருக்கிறது என்பதை நான் வரவர அதிகமாக உணருகின்றேன்.''

மரணத்தை அச்சமின்றி நேருக்கு நேராக அவர் பார்த்தார். அது நெருங்கி வந்துகொண்டிருந்தது. எல்லாச் சீடர்களையும் நினைத்துக் கொண்டார். கடல் கடந்த நாடுகளில் இருப்பவர்களையும் நினைவுகூர்ந்தார். அவரது சாந்தமான தோற்றம் அவர்களை ஏமாற்றிவிட்டது. இன்னும் மூன்று அல்லது நான்கு வருஷ காலம் பிழைத்திருப்பார் என்று அவர்கள் நினைத்தனர். ஆனால் இறுதிப் பயணம் வந்துவிட்டதாக அவர் உணர்ந்திருந்தார். தமது பணியைப் பிறர் கையில் ஒப்படைத்துப் போவதைப் பற்றி அவர் வருத்தப்படவில்லை.

''சீடர்களுடன் எப்போதுமே இருந்துகொண்டு அவர்களை வளரவொட்டாமல் பாழடித்து விட்டிருக்கும் குருமார் எவ்வளவோ இடங்களில் உள்ளனர்'' என்று கூறினார்.

தாம் அவர்களிடமிருந்து போய்விட வேண்டும், அப்போதுதான் அவர்கள் சுயமாக வளர்ச்சி காண இயலும் என்றார். நடைமுதல் பிரச்னைகளைப் பற்றி எவ்வித அபிப்ராயமும் கூற அவர் மறுத்துவிட்டார். ''வெளிவிவகாரங்களில் என்னால் இனிப் பிரவேசிக்க முடியாது. நான் போய்க்கொண்டிருக்கிறேன்.''

மகாயாத்திரைதினமாகிய 1902 ஜூலை 4ஆம் தேதி வெள்ளிக் கிழமை. பல வருஷங்களாக இல்லாத ஒரு தெம்பும் ஆனந்தமும் அவரிடம் காணப்பட்டன. விடியற்காலையிலேயே துயிலெழுந்தார். வழக்கத்துக்கு விரோதமாக அந்நேரத்தில் ஆலயத்துக்குச் சென்று அன்றைய பணியைத் துவக்கினார். ஜன்னல்களைச்

சார்த்திக் கதவுகளைத் தாளிட்டார். காலையில் 8 மணி முதல் 11 மணி வரையில் தனிமையில் தியானம் செய்தார். காளி மீது அழகான பிரார்த்தனை கீதம் பாடினார். தாழ்வாரத்துக்கு அவர் வந்தபோது முற்றும் மாறுபட்டவராகத் தென்பட்டார். நன்றாகப் பசித்த நிலையில் சீடர்களுடன்கூட அமர்ந்து சாப்பிட்டார். புதிய மாணவர்களுக்கு மூன்று மணி நேரம் நகைச்சுவை ததும்ப, விருவிருப்புடன்கூடிய ஸமஸ்கிருத பாடபோதனையை நடத்தினார். பிரேமானந்தருடன் பேலூர் ரோடில் இரண்டு மைல் தூரம் நடந்து போனார். வேதத்துக்கு என்று ஒரு தனிக் கல்லூரி நிறுவுவது பற்றியும், வேத அத்யயனம் பற்றியும் தமது மனத்திலிருந்த திட்டத்தை விவரித்தார். "அது மூடநம்பிக்கைகளைக் கொன்றுவிடும்" என்று சொன்னார்.

மாலைநேரம் வந்தது. தமது சகோதரத் துறவிகளுக்குக் கடைசியாக நேசம் மிக்க பேட்டியை அளித்தார். சமுதாயங்களின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் பற்றிப் பேசினார். அவர் கூறினார்: "ஆண்டவனைத் தேடி அடையும் தன் வழியில் இந்தியா தொடர்ந்து செல்லுமாயின், அது அழிவற்றிருக்கும். ஆனால், அரசியலிலும் சமுதாயப் போராட்டங்களிலும் அது ஆழ்ந்துவிடுமாயின் அழிந்துவிடும்."

மாலை ஏழு மணி. பூஜா காலம் என்பதை மடத்து மணியோசை அறிவித்தது. தமது அறைக்குள் சென்று கங்கையை எட்டிப் பார்த்தார். தம்முடன்கூட இருந்த மாணவனை அனுப்பி விட்டார். தமது தியானம் கலையலாகாது என்ற விருப்பத்தைத் தெரிவித்தார். நாற்பத்தைந்து நிமிஷங்களுக்குப் பிறகு துறவியை அழைத்து எல்லா ஜன்னல்களையும் திறக்கச் சொன்னார். தரையில் அமைதியாக இடதுபுறம் திரும்பி அசைவற்றுப் படுத்துக் கொண்டார். அவர் தியானத்தில் இருப்பதுபோல் தோன்றியது. ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வலதுபுறம் திரும்பி ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். பிறகு பல விநாடி நேரம் அமைதி நிலவியது. கண்கள் இமைகளிடையே குத்திட்டு நின்றன. இரண்டாவது தடவையாகப் பெருமூச்சு... பிறகு சாசுவதமான மௌனம்.

சுவாமியின் சீடர்களில் ஒருவர் கூறினார்: "அவரது நாசித் துவாரங்களில், வாய் ஓரம், கண்களில் கொஞ்சம் ரத்தம் கசிந்திருந்தது.

தாமே சொந்தமாக முயன்று குண்டலினி சக்தியை வெளிப்படுத்தி, பரமானந்தமான இறுதிநிலையை எய்தி அவர்

உயிர் நீத்தார் என்று தோன்றுகிறது. தமது பணி முடிவுறுங் காலையில், அதைப் புலப்படுத்துவதாக ராமகிருஷ்ணர் அவருக்கு வாக்களித்தது உண்டு.

அவருக்கு வயது 39. மறுநாள், ராமகிருஷ்ணரைப் போலவே அவரது சடலத்தையும் சந்நியாசிகள் தோள் கொடுத்து எடுத்துச் சென்றனர். சகோதரத் துறவிகளும், சீடர்களும் ஜயகோஷம் செய்தனர்.

ராமநாதபுரத்தில் வெற்றிவீரராக மிடுக்குடன் அவர் சென்றதை நான் என் சிந்தனையின் மூலம் காண முடியும். கடைசிப் போராட்டம் முடிவுற்ற நிலையில் இந்த மாவீரனது இறுதி யாத்திரை, அதைப் போலவே இருந்தது.

முற்றும்





நவ இந்தியாவின் மகத்தான சிற்பிகளுள் ஒருவர் சுவாமி விவேகானந்தர். ஞானியும் கர்மவீரருமான அவர் தம் நாட்டினரை ஆன்மிக, தார்மிக, அறிவியல் உறக்கத்தினின்று எழுப்பினார். மனிதருள் உறையும் தெய்வீகச் சிறப்பை வலியுறுத்தும் அவரது உபதேசமோ மனித இனத்திற்குப் பொதுவானது. நோபல் பரிசு பெற்ற, புகழ் வாய்ந்த, பிரெஞ்சு நாவலாசிரியர் ரோமான் ரோலாண்டு கூறுகிறார்: 'உடலில் மின்அதிர்ச்சி பாய்வது போன்ற அனுபவம் இன்றி ஸ்வாமிஜியின் உபதேசங் களை என்னாலேயே படிக்க முடியாது என்றால், அன்னார் திருவாக்கை நேருக்கு நேர் கேட்கும் பேறு பெற்றோர் அனுபவம் எப்படி இருந்திருக்கும்!' விவேகானந்தரால் கவரப்பெற்ற இந்தப் பேராசிரியர் அவரது வரலாற்றை எழுதினார் - பெருவாழ்வு வாழ்ந்த மகானின் வாழ்வு புகழ் வாய்ந்த ஆசிரியரால் இயற்றப் பெற்றது.

ரோமான் ரோலாண்டு இயற்றிய இந்த வரலாற்றை சுவாமி விவேகானந்தரின் ஜனன நூற்றாண்டு விழாவில், சாகித்திய அகாதெமியால் வெளியிடப்பட்ட இந்நூல் மூன்றாம் பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

*Vivekanandar*- The Life of Vivekananda (Tamil)
Rs. 60

ISBN-81-260-1247-1